




# இன்றைய உலகில் நாம்




அன்ரன் மத்தாயஸ்






# இன்றைய உலகில் நாம்

*பாதுகாவலன்* வார இதழில் வெளிவந்த
ஆசிரியர் தலையங்கங்களிற் சில
(1979 – '86, 1996 – '97)

அருள்திரு அன்ரன் மத்தாயஸ்

யாழ்ப்பாணம் 1999

அச்சிடலாம் -

+ தோமஸ் சவுந்தரநாயகம் (யாழ் ஆயர்)


மத்தாயஸ், அன்ரன்
இன்றைய உலகில் நாம், அன்ரன் மத்தாயஸ-யாழ்ப்பாணம்
ஆசிரியர், 1999
ப. 258: ச.மீ. 21

ISBN 955-95495-1-0 விலை ரூ.150
i. 089 4811 டி.டி.சி 21 ii. தலைப்பு
1. கட்டுரைகள், தமிழ்

அட்டைப்படம் - திரு.ம. இராமச்சந்திரன் (தினக்குரல்)
அட்டைப்பட நிழற்படங்கள் - பேபி போட்டோ (திருநெல்வேலி)
- அன்ரன் மத்தாயஸ்
கணனி அச்சுக்கோப்பு - ஜெற் பிறின்டிங்ஸ், கொழும்பு-6
அச்சிட்டோர் - யுனைற்றட் மேர்சன்ஸ், கொழும்பு-13

பிரசுரிப்பவர் -



அருள்திரு அன்ரன் மத்தாயஸ
தலைவர், கிறிஸ்தவ-இஸ்லாமிய நாகரிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம், இலங்கை

**Rev. Dr. Anton Matthias**
Head, Dept. of Christian & Islamic Civilizations
University of Jaffna
Jaffna, Sri Lanka



My sincere thanks to **The Institute of Missiology MISSIO** for their financial support towards the printing of this book.

முதற் பிரசுரம் - நவம்பர் 1999
**ISBN 955-95495-1-0**

# இன்றைய உலகில் நாம்

*பாதுகாவலன்* வார இதழில் வெளிவந்த
ஆசிரியர் தலையங்கங்களிற் சில
(1979 – `86, 1996 – `97)

அருள்திரு அன்ரன் மத்தாயஸ்

யாழ்ப்பாணம் 1999

*அச்சிடலாம் -*

*+ தோமஸ் சவுந்தரநாயகம் (யாழ் ஆயர்)*

மத்தாயஸ், அன்ரன்
இன்றைய உலகில் நாம், அன்ரன் மத்தாயஸ-யாழ்ப்பாணம்
ஆசிரியர், 1999
ப. 258: ச.மீ. 21

ISBN 955-95495-1-0 விலை ரூ.150
i. 089 4811 டி.டி.சி 21 ii. தலைப்பு
1. கட்டுரைகள், தமிழ்

*அட்டைப்படம் - திரு.ம. இராமச்சந்திரன் (தினக்குரல்)*
*அட்டைப்பட நிழற்படங்கள் - பேபி போட்டோ (திருநெல்வேலி)*
*- அன்ரன் மத்தாயஸ்*
*கணனி அச்சுக்கோப்பு - ஜெற் பிறின்டிங்ஸ், கொழும்பு-6*
*அச்சிட்டோர் - யுனைற்றட் மேர்சன்ஸ், கொழும்பு-13*

*பிரசுரிப்பவர் -*

அருள்திரு அன்ரன் மத்தாயஸ
தலைவர், கிறிஸ்தவ-இஸ்லாமிய நாகரிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம், இலங்கை

**Rev. Dr. Anton Matthias**
Head, Dept. of Christian & Islamic Civilizations
University of Jaffna
Jaffna, Sri Lanka

My sincere thanks to **The Institute of Missiology MISSIO** for their financial support towards the printing of this book.

முதற் பிரசுரம் - நவம்பர் 1999
**ISBN 955-95495-1-0**

# என் கருத்து

நாம் வாழும் சூழமைவுகள் காலத்துக்குக் காலம் மாற்றமடையும்போது, எமது இறை நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவற்றை எதிர்நோக்கவும், அதற்கிணங்க நாம் வாழவும், மாறவும், பணிசெய்யவும் அழைக்கப்படுகின்றோம். நாம் வெறுமனே வரலாற்றினாற் படைக்கப்பட்டவர்களாக இராது, வரலாறு படைக்கும்போதே எமது வாழ்வின் நோக்கை நிறைவு செய்கின்றவர்களாவோம்.

எமது கடந்த இரு தசாப்த கால வாழ்விற் புதிய பல நிகழ்வுகளைச் சந்தித்துள்ளோம். அன்று அவற்றைச் சந்திக்கும்போது எமக்கிருந்த மனநிலைகளுக்கும், இன்று பல்வேறு அநுபவங்களோடு அவற்றைப் பின்நோக்கிப் பார்க்கும்போது ஏற்படும் மனநிலைகளுக்குமிடையே பாரிய வேறுபாடுகள் இருக்கலாம். காலத்தின் குறிகளை உய்த்துணர்ந்து, இறை அனுபவத்தின் பின்னணியில், சமூகமாக வாழ முற்படுவதே எங்கள் ஒவ்வொருவருடையவும், சமூகத்தினுடையவும் இலட்சியமாயுள்ளது. யாழ் திருச்சபையின் அங்கத்தவராக இப்பணியைச் செய்வதோடு, மற்றவர்களின் பாதைக்கும் சிறிதளவேனும் ஒளியேற்ற மேற்கொண்ட முயற்சிகளின் வெளிப்பாடுகளே பாதுகாவலனில் வெளிவந்த எம் கருத்துக்கள (ஆசிரியர் தலையங்கங்கள்). 1979 செப்ரெம்பர் தொடக்கம் 1986 ஓகஸ்ற் வரையிலான காலத்திலும், வலிகாம இடம்பெயர்வுக்குப் பின் 1996 யூன் தொடக்கம் 1997 மார்ச் வரையிலான காலத்திலும் நான் பாதுகாவலனின் ஆசிரியராகப் பணியாற்றியபோது எழுதப்பட்ட கருத்துக்களின் ஒரு தொகுதியே, இலக்கண-எழுத்துப் பிழைகள் திருத்தி, இந்நூலிற் பிரசுரமாயுள்ளன.

பல்வேறுவிதமான பாரிய, திடீர் மாற்றங்களையும் கண்ட இந்தக் காலப் பகுதிகளில் எழுதிய இவற்றை உங்கள் சிந்தனைக்கும், விமர்சனத்துக்கும், செயற்பாடுகளுக்கும் விதைகளாகத் தெளிக்கின்றேன். இவை முப்பது, அறுபது, நூறாகப் பலன் கொடுக்க வேண்டுமென்பதே என் அவா. அத்துடன் பல்வேறுபட்ட நிகழ்வுகள் மத்தியில் யாழ் திருச்சபை விழித்திருந்து செயற்பட்டுப் பயணம் செய்ய முற்பட்டது என்பதற்கும் இக்கருத்துக்கள் ஆதா ரமாக அமையுமெனவும் நம்புகிறேன். அத்துடன் இம்முயற்சியின் வெளிப்பாடான இக்கருத்துக்கள் எந்தளவு தூரநோக்குக் கொண்டவை என்பதனைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் நீங்களே.

'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்'. பல்வேறுபட்ட அநுபவங்களினூடாகச் சென்றபோது, அந்தந்தச் சூழலிற் சில கருத்துக்களைக் (சத்தியத்தை என்றுகூற எனக்குத் துணிவு இல்லை!) கூறவேண்டும் என்ற ஆர்வத்தின் எழுத்து வடிவமே இவை. எவரையோ குறை கூறவோ, அன்றேல் தாக்கவோ இவை எழுதப்பட்டவை என்று கருதுவதைவிட, ஊக் குவிக்கவும், புதிய பாதைகளைத் தேடவுமே இச்சிந்தனைகள் துணைபுரிய வேண்டுமென்பதே இங்கு மேலோங்கி நிற்கின்றது.

அன்று, பாதுகாவலனின் ஆசிரியராக இக்கருத்துக்களை எழுதிய போதும், இன்று இந்நூல் உங்கள் கையில் தவழ்வதற்கும் எனக்கு எல்லா வழிகளிலும் துணைசெய்த மிக்க அன்புக்குரிய ஆசிரியர் அ. யோண்பிள்ளைக்கு என் உளங்கனிந்த நன்றிகள். அச்சிடும் பணிகள் கொழும்பில் நடைபெற்றபோது அதற்கான அனைத்து வேலைகளையும் அன்போடு அவரே செய்தார். அவருடன் இணைந்து இப்பணிகளை ஆர்வத்தோடும் இளமைத் துடிப்போடும் செய்த அருட்சகோதரன் எஸ்.ஏ. றொஷானுக்கும் எனது நன்றிகள். அத்தோடு அன்றும் இன்றும் எனக்கு பக்கபலமாக இருந்து துணைசெய்யும் ஆசிரியர் ம. விக்ரருக்கும் (யாழ் ஜெயம்) என் அன்பு நன்றிகள்.

முதுபெரும் பத்திரிகையான பாதுகாவலனின் ஆசிரியராக என்னை நியமித்து, ஊக்கம் தந்த யாழ் முன்னாள், இன்றைய மதிப்புக்குரிய எமது ஆயர்களான வ. தியோகுப்பிள்ளைக்கும், தோமஸ் சவுந்தரநாயத்திற்கும் நான் என்றுமே கடமைப்பட்டுள்ளேன்.

இன்னும் எனது வாழ்விலும் பணியிலும் தமது பாசத்தாலும், வழிநடத்தல்களாலும், திருத்தங்களாலும் எனக்கு என்றுமே உறுதுணையாயிருக்கும் என் அருமைப் பெற்றோர், சகோதரர் - குடும்பங்களுக்கும், உற்ற நண்பர்கள், யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், எமது பங்கு மக்களுக்கும் எனது இதய நன்றிகள்.

அத்தோடு, அன்று பாதுகாவலன் பத்திரிகையை அச்சிடுவதில் எனக்குத் துணையாயிருந்த யாழ் புனித வளனார் அச்சக ஊழியருக்கும், இந்நூலைக் கணனி முறையில் எழுத்துக்கோத்த ஜெட் பிறின்டிங்ஸ் உரிமையாளர் - ஊழியர்களுக்கும நன்றி கூறுகிறேன்.

அன்ரன் மத்தாயஸ்

11 நவம்பர் 1999

புனித ஆசீர்வாதப்பர் ஆலயம்
நல்லூர், யாழ்ப்பாணம்
இலங்கை.

# அணிந்துரை

'*இன்றைய உலகில் நாம*', பாதுகாவலன் வார இதழில், 1979-86, 1996-97 கால எல்லைக்குள் வரையப்பட்ட ஆசிரியத் தலைப்புக்களை உள்ளடக்கிய ஒரு வெளியீடாகும்.

காலத்தின் அறிகுறிகளை ஊடுருவிப்பார்த்து, மானிடர் கற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு ஏற்பத் தங்கள் வாழ்வை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பது இயேசுவின் பணிப்பாகும் (மத். 16: 3).

"காலத்தின் அறிகுறிகளைத் துளாவி அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் காலகட்டங்களிலும் விளக்கி உரைப்பது திருச்சபையின் கடமை", என்று கூறுகிறது இரண்டாம் வத்திக்கான் சங்கம் (இ.உ.தி. 4)

ஆக, இயேசுவின் பணிப்பிற்குப் பணிந்து, திருச்சபையின் படிப்பினைகளின் வழிநின்று, இவ்வெளியீட்டின் கண்ணமைந்த ஆசிரியத் தலைப்புக்கள், மேற்கண்ட காலகட்டத்தின் சமய-சமூக சூழலினமைவை, அரசியல் நிலைப்பாட்டை, கலாசாரப் புரள்வுகளை நாடிபிடித்துக் காட்டுகின்றன.

ஆசிரியத் தலைப்புக்கள், பொதுப் பார்வையில், சமூகத்தின் களையெடுக்கும் கருவிகள்; பல்வேறு நிலையினர் மத்தியில் விழிப்புணர்வைத் தூண்டும் ஊக்கிகள்; ஆக்கமான செயற்பாட்டுக்கு அறைகூவல்விடும் முரசுகள். *இன்றைய உலகில் நாம்* தரும் தலைப்புக்கள் அனைத்தும் இவற்றுக்குத் தகுந்த எடுத்துக் காட்டுக்களாகும்.

இத்தலைப்புக்கள், கிறிஸ்தவ வாழ்வு, அரசியல், சமூகம் என முப் பிரிவுகளுக்குள் வரையறுக்கப்பட்டு, பின்வரும் செய்திகளைக் கோடிட்டுக் காட்டுகின்றன: 1. இறைவனோடு உறவுகொண்டோர், நானும் என் கடவுளும் என வாழும் வாழ்க்கை பொய் வாழ்வு. 2. கிறிஸ்தவன் தான் வாழும் சமுதாயத்தின் நிகழ்வுகளிலிருந்தும், வரலாற்றுப் பாதையிலிருந்தும் நழுவி விடுகிறான். 3. வேறுபட்ட சமூக சூழலமைவில் வாழுகின்ற திருச்சபை மக்களின் வாழ்க்கை அனுபவ அடிப்படையில், கலாசாரப் பின்னணியில், மாறும்

சூழலமைவுக்குப் பொருந்த ஏற்ற தீர்வுகளைக் காண்பது அவசியம். 4. பாரம்பரிய திருச்சபையின் படிப்பினைகளின் வழிநின்று எல்லாருக்கும் அடிப்படையான, சமயச்சார்பு அற்ற நிலையில், ஏனைய சமயத்தவரும் சமூக மேம்பாட்டுக்கு, மானிட வளர்ச்சிக்கு ஈடுபடுவது காலத்தின் கட்டாயம். 5. மனித மாண்பு பாதுகாக்கப்படல் வேண்டும் என்பது மனித அடிப்படை உரிமையாகும். அதனை 'எழுதப்பட்ட சட்டத்துக்குள்' சிறைப்படுத்துவது மனிதனை முதன்மைப்படுத்தும் செயலாகாது. 6. சமூக ஈடுபாடும், இறையன்பும் வாழ்க்கை நாணயத்தின் இரு பக்கங்களாகும்.

இக்கருத்துக்களை வாழ்விக்க, 'இறையரசு' கண்டிட, சமூகத்தில் திருச்சபையின் பல்வேறு நிலையிலுள்ளோர் ஒருங்கிணைந்து பாலங்களாக வாழ்ந்திட, நடுநின்று பரிவுணர்வுடன் பணிபுரிந்திட, தம்மவர் கடமையை அறிந்துணர்ந்து ஈடுபாடு கொண்டிட இவ்வாசிரிய தலைப்புக்கள் அழைப்பு விடுக்கின்றன.

சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலகட்டத்துக்குள் நின்று, இறைவாக்கினர் போக்கில். சமுதாயத்திற் களையெடுக்க, சனநாயகத்தைத் தூய்மைப் படுத்த, மானிட உயிரின் பெறுமானம் உணர்ந்திட ஒவ்வொருவர் மனச்சாட்சிக்கும் அறைகூவல் விடப்படுகின்றது.

புதிய ஆயிரத்தாண்டின் விடியலில் இவ்வெளியீடு பயனுள்ள ஓர் ஏடாக அமையும் என்பது நம்பிக்கை. இன்றைய சமூக சூழலமைவில் பத்திரிகையின் ஆசிரியத் தலைப்புக்கள் எப்படி அமையலாம் என்பதற்கு இது வழிகாட்டலாம். மனமாற்றத்துடன், இதய சுத்தியுடன் சமூக ஈடுபாடுகொண்டு முன் நடக்க, புனித சமுதாயம் காணவும் இவ்வெளியீடு துணைதரலாம்.

அருள்திரு ஜெராட் றொசாயிரோ, அ.ம.தி.

புனித மசனட் குருமடம், மக்கோன
10 ஒக்ரோபர் 1999

## அர்ப்பணம்

தம்மை முற்றாக அர்ப்பணித்து

எமது மறைமாவட்டத்திற் பணியாற்றிய

அனைத்துப் பணியாளர்களுக்கும்

நன்றியுணர்வோடு

இந்நூல் சமர்ப்பணம்.

# பொருளடக்கம்


<u>பகுதி 1 - கிறிஸ்தவ வாழ்வு</u>

| | |
|---|---|
| உள்ளக் கதவைத் திறக்க ... | 1 |
| நாமே திருச்சபை | 3 |
| மக்களுக்காகத் திருச்சபை | 4 |
| கிறிஸ்தவ சகவாழ்வு | 5 |
| ஒன்றுபட்ட புத்துணர்வு | 6 |
| திருச்சபையின் முழு மனித வாழ்வு | 7 |
| உள்ளத்தைக் கிள்ளும் கிறிஸ்மஸ் | 9 |
| கிறிஸ்தவ பங்கு வாழ்வு | 11 |
| ஒளியை நோக்கி உறவுப் பாலங்களை அமைப்போம் | 12 |
| அன்பு உறவுக்கு ஆலயம் | 14 |
| நீங்களே 'மெசியா'க்கள் ! | 16 |
| எமது துன்பங்கள் வெறுமையானவை அல்ல | 17 |
| ஒன்றிணைந்த செயற்றிட்டம் | 19 |
| இனமும் மதமும் ஒன்றல்ல | 21 |
| மறை மக்களை மயக்கும் மதுவா? | 23 |
| போலிக் கிறிஸ்தவம் | 24 |
| சட்டங்கள் மனிதனுக்கே | 26 |
| மகிழ்ச்சியூட்டும் செய்தி | 28 |
| புதிய மேய்ப்பர்கள் | 29 |
| மற்றுமொரு தலத்திருச்சபை | 31 |
| இவை தேசிய ஆணைக் குழுக்களா? | 32 |
| மன்னார் வழிகாட்டுகிறது | 34 |
| தடைச்சுவர்கள் தகர்க்கப்படுக! | 36 |
| ஒளியில் ஒன்றுபடுவோம் | 37 |
| வழிபாடு | 39 |
| நற்கருணை, ஒன்றிப்பின் சின்னம் | 41 |
| ஒப்புரவு செய்தல் | 42 |
| வழிபாட்டிற்கா? இரசனைக்கா? | 44 |
| அருள் - சாதனத்தில் ஒப்புரவு | 46 |
| ஆடம்பரம் இன்றி அருள் பெருக்குக | 48 |

புனிதர்களும் நாமும் 49
அன்னையின் பக்தி 52
இவையா திருவிழாக்கள்? 53
யாத்திரைத் தலங்கள் 55
பொது நிலையினரே, நீங்கள் இறை மக்கள்! 56
சேனையின் சேவை 58
கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்பு 59
சமயத் தலைவர்கள் பணி 61
திருத்தந்தை முதலாம் அருள் சின்னப்பர் 62
அன்னை தெரேசா 64
எண்ணித் துணிக கருமம் 66
குருக்கள் பணி 68
உறவுடன் பணிபுரிதல் 70
ஏழு ஆண்டுகள் ஏன்? 72
துறவறத்தாரின் இன்றைய பணிகள் 74
துறவோடு கலந்த உறவு 76
பணியாளர் பெருக 77
உந்து சக்திகள் உருவாகுமா? 78
குருக்களும் பணியும் பெருக ... 80
அவர்களை ஏற்றுக்கொள்வோம் 82
அரசியலும் திருச்சபையும் 84
கிறிஸ்தவ அமைச்சா? 86
கிறிஸ்தவ இலக்கியங்கள் 88
வீழ்ச்சி - அதுவே உயர்ச்சிக்கு வித்து! 90

## பகுதி 2 - அரசியல்

கை கூடுமா? 92
பாடசாலைகளில் அரசியல் இல்லையாம்! 93
வேலியே பயிரை மேய்ந்தது 95
விடிவு எப்போது ..? 96
வருமுன் காப்போமா..? 99

| | |
|---|---|
| எது ஜனநாயகம்? | 101 |
| வழி காட்ட . . . | 103 |
| வினை விதைக்கிறார்கள் | 105 |
| தமிழ் மக்களும் ஜனாதிபதித் தேர்தலும் | 108 |
| சர்வஜன வாக்கெடுப்பு பொதுத் தேர்தலாகுமா? | 110 |
| சட்டங்களை இட்டப்படி மாற்றுதல் | 113 |
| ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு | 114 |
| அநீதியான பயங்கரவாதத் தடைச் சட்டம் | 116 |
| ஜனநாயகத்தைப் பாதுகாக்க | 119 |
| துப்பாக்கி, தீர்வு தருமா? | 121 |
| ஜனநாயகம் எங்கே? | 123 |
| எங்கே போகிறோம் நாம்? | 125 |
| தமிழர் பிரச்சினை தீருமா? | 128 |
| தற்கொலை முயற்சி | 131 |
| மானிட உயிரின் பெறுமதி | 133 |
| விடுதலை மனம் | 136 |
| கொலை செய்யாதே | 135 |
| தற்கொலை முயற்சியினை நிறுத்துவோம் | 137 |
| தேசிய பந்தோபஸ்து | 139 |
| எங்கே போகிறோம்? | 141 |
| ஆளுக்கொரு நீதி | 143 |
| "பனையால் விழுந்தவனை . . ." | 145 |
| சட்டத்தை மதிப்போம் | 146 |
| வடக்கும் கிழக்கும் வானாந்தரமாகின்றன | 147 |
| சமாதானம் | 148 |
| இந்த மக்களையும் நினையுங்கள் | 149 |
| "ஆயுதங்களைக் கீழே வையுங்கள்" | 150 |
| திட்டமிட்ட செயல் | 152 |
| பொறுப்பு வாய்ந்த கடமை | 153 |
| மலையகத் தமிழர் பிரஜாவுரிமைச் சட்டம் | 155 |
| ஆடு நனைகிறதென்று . . . | 157 |
| உலகம் சிரியாதோ? | 159 |

| | |
|---|---|
| புதிய வாழ்வின் உதயம் | 161 |
| போராட்டம் எதற்கு? | 163 |
| சட்டத்தை மதிப்போம் | 164 |
| தெய்வமே துணை | 165 |
| ஒற்றுமையாக இறங்குவோமாக | 167 |
| படுகுழிதான் முடிவா? | 169 |
| அழிவில் இலாபம் தேடலாமா? | 170 |
| திம்புவின் பின்னரும் நம்புவோம்! | 172 |
| வேண்டப்படாதவர்களல்லர் | 174 |


<u>பகுதி 3 - சமூகம்</u>


| | |
|---|---|
| சமூகப் பண்பு | 176 |
| பாலையிற் பால் வார்ப்போம் | 178 |
| கடமையைச் சேவையாக்க | 179 |
| வாழ்ந்து காட்டுவோம்! | 181 |
| 'நிறைகுடம் தளம்பாது' | 183 |
| கிறிஸ்தவ அரச பணியாளர் மனச்சாட்சிக்கு | 184 |
| வெற்றிக்கு வழி | 186 |
| புத்தாண்டு மலர்க! | 188 |
| கிறிஸ்தவ பண்பு | 189 |
| மனித உரிமைகள் | 191 |
| தொழிலாளர் தினம் | 194 |
| காணி நிலம் வேண்டும் | 196 |
| இது பகிர்தலா? | 198 |
| குடும்பம் | 201 |
| குடும்பக் கட்டுப்பாடு | 202 |
| ஆக்கத்துக்கு உழைப்போம் | 205 |
| புத்தகம் வாசித்தல் | 207 |
| நல்லன செய்யும் இளைஞர் | 209 |
| அழியவிடுதல் ஆகாது | 211 |
| பல்கலைக்கழக மாணவர் | 213 |
| வாழ்க்கைக்கு உகந்த கல்வி | 214 |
| கண்ணின் மணியே | 216 |

| | |
|---|---|
| 'விடுதலை விடுதலை. . .' | 218 |
| வாழ்ந்து காட்டும் ஆசிரியர் | 221 |
| விமர்சனம் வேண்டாமா? | 222 |
| எங்கள் பாதுகாவலன் | 224 |
| சமூகத் தொடர்புச் சாதனங்களும் நாமும் | 226 |
| அழிவுக்கா? ஆக்கத்துக்கா? | 228 |
| உண்மைதானா? | 230 |
| சமூகத்தொடர்புச் சாதனங்கள் | 232 |
| 'சிறிய எம் சகோதரர்' | 234 |
| அகதிகள் புனர்வாழ்வு | 236 |
| நோயாளர் | 238 |
| பனையை வளர்ப்போம் | 240 |
| புதிய அழிவுப் பாதை | 242 |
| வெளிநாடு செல்லும் வேகம் | 243 |
| 'ஹர்த்தால்' | 245 |
| வாந்திபேதி | 247 |
| இலஞ்சமும் ஊழலும் | 249 |
| கோவில் இன்றியே வழிபடுவோம் | 251 |
| பொதுச்சொத்து | 252 |
| காலம் மாறிப் போச்சு | 254 |
| சர்வஜன வாக்குரிமைப் பொன்விழா | 255 |
| ஊனமுற்ற சிறுவர் ஆண்டு | 257 |

************************

# உள்ளக் கதவைத் திறக்க...

எங்கும் ஒரே சத்தம் -
வீதியில் வாகனங்களின் இரைச்சல்:
வானொலியில் உண்மைக்கு மாறான செய்திகள்:
தொலைக்காட்சியிலும் அதே கதைதான்.
எல்லோரும் பேசுகிறார்கள் - அரசியல்வாதியின் புழுகுகள்
இளைஞரின் மாற்றுத் திட்டங்கள்
பெரியோரின் கொள்கை விளக்கங்கள்
குருக்களின் பொருத்தமற்ற பிரசங்கங்கள்
பிள்ளைகளின் நிலைமை அறியாத கூக்குரல்கள்
காக்கிச் சீருடைக்காரரின் அட்டூழியங்கள்.
இவை மட்டுமா? -

அப்பாவி மக்களை அரக்கத்தனமாகக் கொன்றுவிட்டு
"பயங்கரவாதிகள்" என்று ஊருக்கும்
உலகுக்கும் கதையளத்தல்.
"பாதுகாப்பு வலயம் பண்ணுகிறோம்"
என்று பாட்டாளி மீனவர்கள்
பல்லாயிரவரின் வயிற்றிலடிக்கும்
பாதகமான புழுகுகள்.
குடும்பச் சண்டைகள், குழந்தைகளின் பசியின் ஓலங்கள்
நோயாளியின் அனுங்கல்கள்
வயோதிபரின் முணுமுணுப்புக்கள்!
இறைவா!
இவற்றையெல்லாம் கேட்டுக் கேட்டு
எமது காதுகள் செவிடாகிவிட்டன.
உண்மையும் பொய்யும் இனம் புரியவில்லை.

சகோதரனின் துன்பங்கள் என்னை உறுத்தவில்லை!
அவை மட்டுமா?
இறைவா, உமது குரலையும் உமது வார்த்தைகளையும்,
அன்பு வழிகாட்டுதலையும், உண்மைச் செய்தியையும்
என்னாற் கேட்க முடிவதில்லை.
என் காதுகள் அடைத்துவிட்டன!
கிறிஸ்துவ சமூகமே செயலிழந்து விட்டதா?

ஆயினும், தெய்வமே,
இவ்வளவு சத்தம், சந்தடியின் மத்தியிலும்
உம் வார்த்தைகளுக்குச் செவிமடுக்க
எனக்குக் கற்பியும்.
என் காதுகளைச் செவிடுபடுத்தும்.
எல்லாச் சத்தங்களிலிருந்தும், அவற்றினூடாகவும்
நீர் பேசுவதைக் கேட்க எனக்குக் கற்பியும்.
சிறப்பாக எம்மால் அடிமையாக்கப்பட்டவரின் அபயக்குரலில்
துன்புறுவோரின் அழுகையில்
பசியாயிருப்போரின் கெஞ்சலில்
துப்பாக்கிக்குப் பலியானவர் வீட்டாரின் பிரலாபத்தில்
பசிக் கொடுமையினால்
தம்மையே விலை பேசுவோரின் கசப்பான வாழ்வில்
உம்மைக் காண,
உமது குரலைக் கேட்க, உம்மைச் சந்திக்க
என் காதுகளை மட்டுமல்ல
என் உள்ளத்தையே திறந்து விடும்.

அன்புத் தெய்வமே,
உம்முடைய குரலைக் கேளாது
எனது உள்ளக்கதவு அடைபட்டிருப்பின்
நான் செயலற்ற சடமாவேன்.

27.04.1984

**************

*1995 இடம் பெயர்வின் பின்னர் திரும்பவும் மக்கள் வலிகாமத்தில் குடியமர்ந்த வேளையில்......*

# நாமே திருச்சபை

ஆதித் திருச்சபையிற் பலரும் பல்வேறு ஆற்றல்களைப் பரிசுத்த ஆவியிடமிருந்து பெற்றுப் "பொது நன்மைக்காகவே"(1கொரி.12:7) அவற்றைப் பயன்படுத்தினர். திருச்சபை வளர்ச்சியுற அவர்களின் பணிகள் இன்றியமையாதவையாக இருந்தன. திருச்சபையின் அங் கத்தினர் பெருகத் தேவைக்கேற்பப் பலவிதமான தலைமைத்துவப் பணிகள் வளர்ச்சியடைந்து, காலப்போக்கில் "அவர்களே திருச்சபை" என்று கூறும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றனர். ஏனையோர் "பொது" நிலையினராகக் கணிக்கப்பட்டனர். அவர்கள் தமது நிலையை மட்டுமன்று செயலாற்றலையும் இழந்தனர். இந் நிலையை மாற்றியமைத்தது இரண்டாம் வத்திக்கான் சங்கம். ஏன்? எமது நாட்டில் நடைபெற்ற தேசிய, மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடுகள் கூட இதையே வலியுறுத்தின.

ஆயினும், இவை எல்லாம் ஏட்டளவில் மட்டும் வாளா இருப்பதை எல்லோரும் நன்குணர்வர். எமது சகோதரத் திருச்சபைகள் பலவற்றிற் பொது நிலையினர் தாமாகச் செயற்படுவதையும், குருக்கள் இல்லாத குறையைப் பாரிய அளவு நிவிர்த்தி செய்வதையும் காணும்போது, ஏன் எம்மவர்களின் செயற்பாடுகள் செழிக்கவில்லை என்ற வினா எழாதிருக்க முடியாது. இன்றைய இடம்பெயர்வுகளாற் குருக்கள் துறவியரின் பணிகளும் வெகுவாகக் குறைந்துள்ளன என்று பலரும் கவலை அடைவதற்கான காரணங்களை இனங்கண்டு நிவிர்த்தி செய்ய வழிசமைக்க வேண்டும்.

இ∴து ஒரு புறமிருக்க, மறுபுறத்தில், பல்வேறு சிக்கல்களும் துன்பநிலைகளும் மலிந்துகிடக்கும் எமது சமுதாயத்தில், திருப்பலியும் திருவிழாக்களும் மட்டும் நடத்தும் திருச்சபையாக-பங்குகளாக நாம் மாறாது, அனைத்து அனுபவங்களினூடாகவும் இறை-சகோதர உறவில் வாழும்-வளரும் குழுமங்களாக நாம் மாறவும், பொது நிலையினரின் பங்களிப்பு இன்று அவசியம் என்பது உணரப்பட வேண்டும். இவை செயல் வடிவம் பெறத் திட்டங்களும் தீட்டப்பட வேண்டும்.

காலாகாலமாக இருந்து வந்த பங்குச் செயற்பாடுகளையே இன்றும் குறிக்கோளாகக் கொள்ளாது, பரந்த நோக்கிற் சிந்தித்துச் செயற்படுவது இன்று அவசியம் என்பதை உணர வேண்டும். இப்படி யான புதிய, அர்த்தமுள்ள வழிமுறைகள் மலரப் பொது நிலையினரே தமது அறிவையும், அனுபவங்களையும் பகிர்ந்து, சமூக வாழ்வை மேம்படுத்தக்கூடிய அனைத்துத் துறைகளிலும் ஈடுபட முன்வருவது இன்றியமையாதது.

வறுமைகள், இடம்பெயர்வுகள், வேலையில்லாத் திண்டாட்டம், உடல்-உள நோய்கள், காணாமற்போதல், இளைஞர் உருவாக்கம், தொழிற் பயிற்சிகள், திருமணப் பேச்சுவார்த்தைகள்-ஆயத்தங்கள், குடும்ப பொருளாதார சிக்கல்கள், கல்வி, குடி-போதைவஸ்துக்களால் ஏற்படும் தாக்கங்கள், வழிபாட்டுப் பணிகள், அரசியல் போன்ற துறைகளை இவர்கள் ஈடுபடவேண்டியவற்றுக்கு எடுத்துக்காட்டுகளாகத் தரலாம்.

பொது நிலையினரும், அவர்களுக்குப் பணிசெய்ய அழைக்கப் பட்டோரும், எப்போது ஒன்றிணைந்து, 'நாமே திருச்சபை' என்று கூறக்கூடிய அளவுக்குச் சிந்தனை-சொல்-செயல்களில் வளர்ச்சி பெறுவார்களோ அப்போதுதான் திருச்சபை உயிரூட்டமும், அர்த்தமுள்ளதாகவும விளங்கும் என்பது திண்ணம். இதுவே இன்றைய திருச்சபை எதிர்நோக்கும் சவால்களுள முக்கியமானதொன்று என்பதை ஏற்றுக்கொள்வோமா?

20.09.1996

**********

## மக்களுக்காகத் திருச்சபை

...தலத் திருச்சபைகள் அந்தந்த மக்கள் சமூகத்தோடு எந்த அளவுக்கு அவர்களது கலாசாரம், பண்பாடு, மரபுமுறைகள், வரலாற்றுப் பின்னணிகளுடன் இரண்டறக் கலந்து செயற்படுகின்றனவோ அந்த அளவுக்கு அவை மக்களின் இதயங்களைக் கவர்ந்து இறை அன்பின் அடையாளமாகத் திகழுமென்பது உண்மை.

ஆயருடன் ஒன்றித்துள்ள தலத் திருச்சபை, மக்களின் விசுவாசம், வாழ்க்கை, அன்றாட அனுபவங்களினூடே அவர்களை இடறலின்றி அழைத்துச் செல்லும் தூய ஆவியின் பிம்பமாக விளங்குகிறது. இச் சிந்தனைகள் மறைமாவட்டம் என்ற அளவில் மட்டுமன்றி, வெவ்வேறு குழுக்களுக்கும் துறவற சபைகளுக்கும்கூடப் பொருந்தும். இறக்குமதிச் சரக்குகளைவிட நல்ல உள்நாட்டுப் பொருள்கள் பல வழிகளில் மேலானவையும் பொருத்தமானவையும் என்பதனை மறக்கலாகாது.

15.11.1985

# கிறிஸ்தவ சகவாழ்வு

முன்பு ஒரு தடவை நாம் இந்தப் பந்திகளில் எழுதியிருந்தது போல இந்நாட்டில் வாழும் பௌத்தர்கள் சிங்கள இனத்தவராகவும், இந்துக்கள் தமிழராகவும், இஸ்லாமியர் முஸ்லிம்களாகவும் அமைந்துள்ளனர். ஆனால், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களில் பல இனத்தவர்களுமுள்ளனர். மேலும் அந்நியர் ஆட்சிக் காலத்தில் இருந்த வாய்ப்புக்களினால் கிறிஸ்தவ மக்களும் கல்வி கேள்விகளிலும் பலவித உயர் பதவிகளிலும் நீண்ட காலம் பயிற்றப்பட்டவர்களாக விளங்கும் வாய்ப்பையும் பெற்றிருந்தனர்.

இன்னும் மதக் கோட்பாடுகளுக்கும் மனப்பாங்குகளுக்கும் இயைய கிறிஸ்தவ மக்கள் விசுவாசம் - நம்பிக்கை, இறையன்பு - பிறரன்பு, கிறிஸ்தவ சமாதானம் - சகவாழ்வு முதலியவற்றில் ஆழமான பற்றும் உறுதிப்பாடும் உடையோராயும் விளங்கினர். உலகளாவிய கிறிஸ்தவ பாரம்பரியங்களுக்குத்தக, சமாதான சகவாழ்வில் எடுத்துக்காட்டான சமூகத்தினராகவும், தம்முயிரினும் மேலாகவே சமயக் கொள்கைகளுக்குத் தம்மை அர்ப்பணித்தோராகவும் வாழ்க்கை நெறி முறைகளை அமைத்துக் கொண்டிருந்தனர்.

ஆழமான கிறிஸ்தவ விசுவாசமும் வாழ்க்கை நெறி முறைகளும், இனப்பற்று மொழிப்பற்று என்பவற்றின் முன்னால் கைநெகிழப்பட்ட வெறும் வாய் வேதாந்தங்களாகிவிட்டமை கிறிஸ்தவர்களும் ஏனையோரும் கண்டுணர்ந்து தலைகுனியும் அளவுக்குச் சென்று விட்டன. கிறிஸ்தவ விசுவாச வாழ்விற் பற்றுறுதி குறைந்த சாதாரண மக்களுக்கு முன்மாதிரிகையாக இருந்து வாழ்ந்துகாட்டி அவர்களை வழிப்படுத்திச் செல்லும் கடமை-பொறுப்புக்களில் தம்மை அர்ப் பணித்துக் கொண்டவர்களே, இன - மொழி அபிமானத்துக்குட் சிக்குண்டு, உணர்ச்சிவசப்பட்டு, நிதானமிழந்து, பொறுமையுடன் மற்றவர்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்காமல், தம் போக்கிலேயே கருமமாற்றியமையை எல்லா மக்களும் கண்டுகொண்டனர்.

பற்பல துறைப்பட்ட சுயநலன்களும், ஆட்சியாளரை அதிருப்திப்படுத்தி விடக்கூடாதே என்ற அச்சமும், "மக்களின் உணர்வை மறுக்க முடியாது" என்ற புதுவித போலியான ஜனநாயகப் போக்கும் "பெரியவர்களை"யே திசை மாற்றிவிட்டமையை அவர்களுடைய பகிரங்கக் கடிதங்களும், பத்திரிகை அறிக்கைகளும், பேச்சு வார்த்தைகளும் வெளிக்காட்டிவிட்டன.

தமக்குள்ளேயே கிறிஸ்தவ சமாதான சக வாழ்வை நிலைநிறுத்த வலுவற்றுப் போனவர்கள், நடந்துவிட்ட தப்பபிப்பிராயங்களுக்கான விடயங்களைப் புனராய்வு செய்து வழிப்படுத்திக்கொள்ள இன்னும் மனம் கொள்ளாதவர்கள், பிறமதச் சகோதரரிடையே ஒருவரை யொருவர் புரிந்து-விட்டுக்கொடுத்து ஒற்றுமைப்பட்டு வாழும் நிலையை உருவாக்கக் கூடியவர்களாயிருக்க முடியுமா? அம்பிட்டியா குருமடத்தில் ஒருகாலத்தில் வெளிநாட்டு மாணவர்களும் வந்து, சிங்கள-தமிழ் குருமாணவர்களுடன் இணைந்து கல்வி கற்கும் நிலை இருந்தது. இப்போது இந்த நாட்டுக்குள்ளே இருக்கும் வெவ்வேறு மொழி-இன குருமாணவர்களே ஒன்றாக அமர்ந்து குருப்பயிற்சி பெறமுடியாத அளவுக்கு நமது கிறிஸ்தவ உள்ளங்கள் சிறுத்துப் போய்விட்டனவா என்று பொதுமக்கள் கேட்கக்கூடிய நிலை உருவாகியுள்ளதாகத் தெரிகிறது. எதிர்காலக் குருக்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் மும்மொழியிலும் வல்லவர்களாகவும், இன-மொழி வேறுபாடின்றி, கிறிஸ்துவின் நற்செய்தியை எங்கும் எடுத்துச் செல்லக் கூடியவர்களாகவும் விளங்குமாறு அவர்களை உருவாக்குவதில் திருச்சபைத் தலைவர்கள் தோல்வி கண்டனரா என்று மக்கள் வருந்துவர். இந்நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் கிறிஸ்தவ மக்களும் அவர்களுடைய தலைவர்களும் ஒன்றுபட்டு முயற்சிக்க ஒரு "மனமாற்றம்" அவசியம் தேவை.

9.09.1983

**********

## ஒன்றுபட்ட புத்துணர்வு

...திருச்சங்கம் முடிந்தவுடன் அச்சங்கத்தின் எதிரொலி பாரெங்கும் கேட்டது. பலர் இதன் குரலை ஆர்வத்துடன் வரவேற்றனர். ஆனால் காலப்போக்கில் விறுவிறுப்புக் குறைந்தது. புத்துணர்ச்சி மிக்க போக்குகள் பழையனவாயின. குடும்பத்திலும், பங்கிலும், மறைமாவட்டத்திலும் மறை மறுமலர்ச்சி போதியளவு நடைபெறவில்லை. கூட்டங்களும், கருத்தரங்குகளும் அதிகரித்தன. ஆலோசனை, ஆய்வுகள் அனேகம் இடம் பெற்றன. ஆனால்,இன்றைய கிறிஸ்தவர்களை இன்னும் அதிகமாக இறைவனோடும், மக்களோடும் ஒன்றுசேர்க்கும் சாதனங்களாக இம்மாற்றங்கள் விளங்கவில்லை. இதற்கோர் முக்கிய காரணம்: திருச்சபையின் எல்லா நிலையினரதும் ஈடுபாடும் ஒத்துழைப்பும் போதிய அளவு இல்லாமல் போனதாகும்.....

14.09.1979

# திருச்சபையின் முழு மனித வாழ்வு

பல்லாண்டு காலமாகத் திருச்சபை அரசியலுடன் பின்னிப் பிணைந்திருந்து அத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. திருச்சபையின் மேய்ப்புப் பணி அரசியல் மூலமே செயற் படுத்தப்பட்டது. இம்முறை காலப்போக்கில் மறைந்து திருச்சபை 'ஆன்மா'வுக்குரியவைகளில் மட்டுமே அக்கறை காட்டத் தொடங்கியது. இவ்வுலகில் மனிதன் எவ்விதம் வாழ்ந்தாலும் பரவாயில்லை; அவன் ஆன்மாவை மட்டும் மோட்சம் சேர்த்தால் போதும் என்ற மனப்போக்கு நிலவியது. இச்சிந்தனையும் நாளடைவில் மாறவேண்டியதொன்றானது.

எம் திருத்தந்தை சென்ற வாரம் அயர்லாந்து, ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டபோது 'ஆன்மா' வின் மீட்பைப் பற்றி மட்டும் பேசவில்லை; தமது உரைகள் மூலம் இன்றைய சமுதாயத்தில் கிறிஸ்தவ கொள்கையுடன் வாழ வழிகாட்டினார். இவ்விதமான உரைகள் எம் நூற்றாண்டின் திருத்தந்தையரைப் பொறுத்தமட்டில் புதியவையல்ல. 12ஆம் பத்திநாதர், 23ஆம் அருளப்பர், 6ஆம் சின்னப்பர் பாப்புகளும் இன்றைய சூழலின் ஊழல்களைச் சுட்டிக்காட்டி, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவன் எவ்வித மனப்பாங்குடன் வாழவேண்டுமெனச் சுற்றுநிருபங்கள் மூலமும் உலகிற்கு எடுத்துரைத்தனர்.

இவை அனைத்திலும் நாம் ஒன்றை அவதானிக்கலாம்: திருத்தந்தையர்கள் ஏதாவது ஓர் அரசியல் அமைப்பையோ, ஒரு கட்சியையோ, தனிப்பட்டவர்களையோ தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை. மனிதனின் முழு நலனைக் கருதும் திருச்சபை எந்த ஓர் அமைப்பு முறைக்கும் அடிமையாகாது, எல்லா அமைப்பு முறைகளிலும், அரசியற் போக்குகளிலுமுள்ள நல்லதைப் பாராட்டியும், குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டிக் கண்டித்துமுள்ளது. இம்முறை எமக்கும் வழிகாட்ட வேண்டும். 'ஆன்மா' வோடு மட்டும் நில்லாது, முழுமனித முன்னேற்றத்திற்காகப் பாடுபட அழைக்கப்பட்ட நாமும் சுதந்திரத்தோடு செயற்பட இம்முறை எமக்குத் துணை நிற்கும்.

ஒரு சூழலில் ஒரு சாராரின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டோம் என்பதற்காக, அது கொள்கைகளிற் பிறழும்போது பேசாதிருப்பது நீதியன்று.

ஒருவரைத் தலைவராக்கத் துணைபுரிந்தோம் என்பதால் அவர் வழிதவறும்போது அதைச் சுட்டிக்காட்டத் தயங்கினால் எம் கடமையில் தவறுகிறோம். நாம் யார் மத்தியில் பணிபுரிகின்றோமோ, அவர்கள் ஒரு முறையை ஏற்கின்றனர் என்பதற்காக நாமும் அதைக் கண்மூடித்தனமாய் ஏற்க வேண்டியதில்லை. ஒரு சில நன்மைகளைப் பெற்றுவிட்டோம் (நன்மை எம் உரிமை!) என்பதற்காக, எந்த ஒரு 'குழு' எடுக்கும் பிழையான தீர்மானங்களையும் ஆதரிப்பது உண்மைக்கு மாறானது. இவ்விதம் உதாரணப் பட்டியலைப் லை பெருக்கிக்கொண்டே போகலாம்.

கிறிஸ்துவை எம் மீட்பராக ஏற்றுக்கொண்ட நாம் மனித முன் னேற்றத்திற்காக எம்மிடமுள்ள எல்லாச் சக்திகளையும் பயன்படுத்த வேண்டும். உலகின் எந்த ஓர் அமைப்பு முறைக்குள்ளும் மூழ்கி விடாது, அவற்றிற்கு அடிமையாகாது, பிழையானவற்றைத் திருத்தி, கிறிஸ்துமயமாக்கி வழிகாட்டுவதே திருச்சபையினதும், அதன் அங்கத்தினராகிய எமதும் கடமையாகும்.

இவ்விதம் இயங்கும்போது பிரச்சினைகளும், புரியாத் தன்மைகளும், துன்பதுயரங்களும் எம் வழி வரும் என்பதையும் மறக்கலாகாது.

12.10.1979

**********

*கிறிஸ்மஸ் விழாவின்போது....*

# உள்ளத்தைக் கிள்ளும் கிறிஸ்மஸ்

திரும்பவும் ஒரு கிறிஸ்து பிறப்பு விழா: மகிழ்ச்சிக் கடலிற் சிலர்: வியாபாரிகளுக்குக் கொண்டாட்டம்: சிறுபிள்ளைகளுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான எதிர்பார்ப்பு. ஆனால், எம்மவரிற் பலருக்கு: 'ஏன் இவ்விழா வருகிறது' என்றவிதமான அங்கலாய்ப்பு. அன்புக் குரியவர்களையும், அனைத்தையும் இழந்து தவிக்கும் - அகதிகள் உட்பட, பலருக்கு இது ஒரு வெளியரங்க விழாவாக மட்டுமே உள்ளது. சமூக எதிர்பார்ப்புக்களைச் சமாளிக்க முடியாத நிலையில், சிலவேளை இவ்விழா வேதனைக்குரியதாகவும் மாறலாம்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது இன்றைய சூழலிலும்கூட மெசியாவின் பிறப்பின் நினைவு ஒரு செய்தியையும், வாழ்விற்கு ஒரு புதிய ஊக்கத்தையும் தரவேண்டுமே. அன்றேல் புகழுக்கும் பெருமைக்கும் சிலர் நடாத்தும் விழாக்கள் போலாகி விடும்.

உரோமை அரசியல் அதிகாரத்திற்குட்பட்டோர்க்கும், யூத சட்ட, சடங்கு-முறை அமைப்புக்களால் இறை உறவில் நிறைவுகாண முடியாதிருந்தோர்க்கும், பிணிகளினாலும் சாத்தானின் பிடியினாலும் பாவத்தினதும் சுயநலத்தினதும் கொடூரத்தினாலும் வருந்தியோர்க்கும் அன்று மெசியாவின் வருகை விடுதலையின் பாதையைத் திறந்ததோடு, அவ்விடுதலை வாழ்வைச் சகோதர அன்புறவில் வளர்க்க வழிகோலியது அதேபோல், இன்றும் கிறிஸ்துவின் விடுதலைப் போராட்டத்தையும், வாழ்க்கைத் தத்துவங்களையும் எமதாக்கிக் கொண்ட நாம், இவற்றைச் செயற்படுத்தும்போதே கிறிஸ்து-மெசியா எம்மோடே வாழ்கிறார்-செயற்படுகிறார், என்பதற்குச் சாட்சிகளாவோம். அதனால், நத்தார் விழாவும் எமக்கும் ஏனையோர்க்கும் நம்பிக்கை நல்கும் விழாவாகலாம்.

ஆனால், அன்று அரசியல் அதிகாரத்திலுள்ளோரும், மறைத் தலைவர்களும், சட்ட வல்லுனரும், பணத்திலும் பொருளிலும் நம்பிக்கை வைத்தோரும் மெசியாவைக் 'கொல்கொதா' வுக்குரிய சமூக-மறைக் கலகக்காரனாகவே கண்டனர். அவரின் சிலுவைப் பயணம் அவர்களுக்கு ஒரு காட்சியாக இருந்ததுபோல், இன்றும் இவ்விதமான மனப்பான்மையுள்ளோரும் கிறிஸ்துவின் பிறப்புவிழாவில் மனமாற்றம் தேடாதிருப்பது விந்தையானதன்று.

எனினும் நாம்....

“வாருங்கள், போய்ப் பார்ப்போம்” எனக் கூறிய ஏழை இடையர்களின் திறந்த மனம் உள்ளோராயிருந்தால்

-- கூரையைப் பிரித்து, கிறிஸ்துவின் பாதத்தண்டை இறக்கப்பட்ட திமிர்வாதக்காரனின் விசுவாசம் எமக்கிருந்தால்
-- அவருடைய ஆடையையாகிலும் தொட்டாற் குணம் பெறுவேன்' என்ற பெண்ணின் நம்பிக்கை எமது வாழ்விற்கு உரமிடுமானால
-- குற்றம் புரிந்ததை ஏற்று, 'என்னைப் பரகதியில் நினைவு கூரும்' என்ற நல்ல கள்வனைப் போல மனம் வருந்தி, மீட்பை ஆவலோடு எதிர்பார்ப்போமானால்
-- கிறிஸ்துவைச் சந்தித்தபோது, தான் செய்த அநியாயங்களுககுப் பரிகாரமாகத் தன் உடைமையைப் பகிர்ந்த சக்கேயுவின மனநிலை எமக்கு இருப்பின்
-- தன்னை வெறுப்பவனை அரவணைத்து, அவனுக்குப் பணி விடை புரிந்த நல்ல சமாரித்தனின் துணிவு எம்மை வழிநடத்துமானால்
-- அன்புக் கடவுளின் வார்த்தையானவர் தன்னுதரத்திலே மனிதனாக வளர்வதைப் பெருமையாகக் கொள்ளாது உறவினள் எலிசபேத்துக்குப் பணிவிடை செய்ய விரைந்த மரியாளின் அன்புள்ளம் எமக்கிருப்பின்
-- அதிகார நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி, தான்தோன்றித் தனமாக வாழ்ந்த ஏரோது அரசனையே கடிந்துகொண்ட திருமுழுக்கு அருளப்பரைப் போன்று நீதிக்காகப் போராடும் மனவலிமை எமக்கிருப்பின்

நாளாந்தம் வாழ்விலே பல்வேறு, நிகழ்ச்சிகளினூடாகவும் 'சின்னஞ்சிறிய சகோதரராகவும்' எம்மைச் சந்திக்கும் மெசியாவை இனங்கண்டு கொள்வோம். எம்மையே அவரோடு - அவர்களோடு பகிர்வதன் மூலம் கிறிஸ்து இம்முறையும் பலரின் உள்ளங்களிலும், இல்லங்களிலும், அமைப்புக்களிலும், குழுக்களிலும், எமது நாட்டிலும் பிறப்பார் - எமக்கு நம்பிக்கை தருவார். எம் அனைவரின் வாழ்வும் நிறைவு எய்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

20.12.1985

**********

# கிறிஸ்தவ பங்கு வாழ்வு

ஆதிக் கிறிஸ்தவர்கள் "அப்போஸ்தலர்களின் படிப்பினையைக் கேட்பதிலும், நட்புடன் உறவாடுவதிலும், அப்பம் பிட்குதலிலும், செபிப்பதிலும் நிலைத்திருந்தார்கள்" (அப். பணி 2:42). மேற்படி வாக்கியம் கிறிஸ்தவர்களின் அடிப்படைக் கடமைப்பாடுகளை நமக்கு எடுத்துக் கூறுகின்றது.

கிறிஸ்துவின் விருப்பத்தின்படியும் ஆணையின் பிரகாரமும் கிறிஸ்தவமும் கிறிஸ்தவர்களும் உலகெங்கணும் பலுகிப் பெருகிய போது மக்களின் சமூக-சமுதாய நிலைகளுக்கேற்ப பெரியவையும் சிறியவையுமான நிருவாக அமைப்பு முறைகள் - மறைமாவட்டங்களும் பங்குகளும் - உருவாயின.

ஆதிக் கிறிஸ்தவர்களிலிருந்து நாம் காலத்தாலும் வாழும் இடத்தாலும் எவ்வளவு தூரத்தில் இருப்பினும், அடிப்படைக் கிறிஸ்தவ வாழ்வு, பகிர்தல், ஒருமைப்பாடு, இறையருளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்களை நாடுதல் முதலாம் கிறிஸ்தவ குணங்களிலிருந்து விதிவிலக்குப் பெற முடியாது.

ஒரு பங்குத்தளத்தில் பொது நிலையினர், துறவியர், குரு ஆகிய உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். பங்குக் குருவானவர் 'தந்தை' என்ற முறையில் வழிகாட்டும் பணியை ஏற்கிறார். எமது நாட்டில் கிறிஸ்தவ சமயம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்ப காலத்தில் மக்களுடைய விசுவாச நிலைப்பாட்டைப் பொறுத்தும், சமூக-சமுதாய -அரசியல் மற்றும் காரணிகளைப் பொறுத்தவரையிலும் பங்குத் தந்தையின் தலைமைத்துவம் மிக்க பலம் வாய்ந்ததாகவும் இறுதியானதாகவும் விளங்கிற்று. எனினும், இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் சிந்தனைகள்-முடிவுகளின் பின்னால், கிறிஸ்துவின் முப்பணியில் தாம் பெற்ற ஆவியின் கொடைகளுக்கேற்பப் பங்குபற்றி, பங்குவாழ்வு உயிரோட்டமுள்ள அன்பு வாழ்வாகத் திகழ வழிகோலவேண்டியது பங்கிலுள்ள அனைவரினதும் அடிப்படையான கடமையாகும். பங்குச்சபை, பக்திச் சபைகளுக்குச் சிறப்பான பணிகளிருப்பினும், இவ்வடிப்படைக் குறிக்கோள்களிலிருந்து எள்ளளவேனும் விலக முடியாது.

இன்று, கிறிஸ்தவ மக்கள் மற்றவர்களைப் போலவே பல்வேறுபட்ட வாழ்க்கை முறைகளினால் பரந்துபட்டு வாழும் நிலையில்,

பங்குகளின் அமைப்பு முறைகளிலும் செயல் முறைகளிலும் மாற்றங்கள் பல இடம் பெறுதல் அவசியமாகிவிட்டது. பெருமை-உரிமை வரம்புகளில் பங்குத்தளங்கள் கட்டுப்பட்டு நிற்காது, வாழும் பிரதேச எல்லைகளே பங்குகளினது செயற்பாட்டிற்கு உரியவையாக மலர்ந்துள்ளன. அதனால், குறித்த எல்லைப் பிரதேசத்துள் வாழும் மக்கள் அனைவருமே பங்குகளின் பணிகளுக்குப் பொறுப்பு வகிக்க வேண்டியவர்களாயுள்ளனர்.

சந்தர்ப்பவாதம், சுயகௌரவம், வேண்டாத உரிமைக் கோரிக்கைகள், முரட்டுத்தனங்கள், சுயநலம் முதலியன கிறிஸ்தவ வாழ்வினை மையமாகக் கொண்ட பங்கில் இடம் பெறுதல் காலத்துக்கு ஒவ்வாத விடயங்களாகும். உடன் வாழுகின்ற மக்கள் அனைவரையும் கிறிஸ்தவ கண்ணோட்டத்துடன் நோக்கி, பங்குப் பணிகள் சம்பந்தமான எல்லாக் கடமைகளிலும் உரிமைகளிலும் சகோதரத்துவ மனப்பாங்குடன் நடந்து கொள்ளுதலே இனிவரும் காலத்துக்கேற்ற வழிமுறைகளாகும் எனத் துணிந்து கூறலாம்.

5.07.1985

**********

*ஈஸ்ரர் சிறப்பு மலரில்......*

# ஒளியை நோக்கி உறவுப் பாலங்களை அமைப்போம்

இறை அன்பை வெளிப்படுத்த வந்த கிறிஸ்து அனைத்து அடிமைத் தளைகளிலுமிருந்து - பாவத்திலிருந்து, சுயநலத்திலிருந்து, வரட்டுத் தத்துவங்களிலிருந்து, அர்த்தமற்ற சடங்குகளிலிருந்து, சுயநல நோக்குடைய தலைவர்களிடமிருந்து - மக்களை விடுவித்தார். சிறப்பாக அவர் பணி வெவ்வேறு காரணங்களால் ஏழைகளாக் கப்பட்டோர் மட்டில் அன்பின் ஊற்றாக வெளிப்பட்டது. இப்பணிகளுக்காகச் சிலுவை மரணத்தைத் தழுவினார். எனினும் அவரின் அர்ப்பணத்தை முன்னிட்டு இறைத் தந்தை அவரை உயிர்ப்பித்தார். 'வாழ்வுதரும் ஆவி'யாக அவர் எம்மத்தியில் இன்று வாழ்கிறார் - செயலாற்றுகிறார்.

- ஏற்றத் தாழ்வுகளை மறந்து உறவுகளைப் புதுப்பிப்போம்.
- அன்புப் பாலங்களைக் கட்டியெழுப்புவோம்.
- ஒன்றிப்பிற் செயற்பட முற்படுவோம்.
- ஒளியை நோக்கி விரைந்து செல்வோம்.
- நாமும் ஒளியின் - உயிர்ப்பின் மக்களாய்த் திகழ்ந்து கிறிஸ்துவின் உயிர்ப்புக்குச் சான்று பகர்வோம்.

**********

இன்றும் நாம் பல்வேறு அடிமைத்தனங்களில் அகப்பட்டு அல்லற் படுகிறோம்.

* பெரும்பான்மையினர் - மொழியால், மதத்தால், பணத்தால்- ஏனையோரை அடக்கியாள்கின்றனர்.
* அதிகாரத்திலுள்ளோர் - அரசியல், சமூக, கட்சி அடிப்படையில் - தம் அதிகாரத்தை முரட்டுத்தனமாகவும் காட்டப் பின்நிற் பதில்லை.
* சிறுபான்மையினருக்குப் படிக்கவும், தொழில் செய்யவும், சுயமாகச சிந்திக்கவும், தம் சிந்தனையை நெறிப்படுத்தவும், தம் எதிர்ப்பை வெளிப்படுத்தவும் சுதந்திரமில்லை.
* சுயநலமும் பாவமும் எம்மை அடிமைகளாக்குகின்றன.

இந்நிலையில் வாழும் எமக்குக் கிறிஸ்துவின் உயிர்ப்புச் செய்தி

* நம்பிக்கையைத் தருகின்றது.
* பாவத்திலிருந்து விடுபடத் தூண்டுகின்றது.
* அடிமைத் தளைகளைத் துணிவோடு களைந்தெறிய வலிமையைத் தருகின்றது.
* தனித்து அன்று, சமூகமாக, குழுவாக, பங்காக, மறைமாவட்டமாக, திருச்சபையாகச் செயற்பட அழைப்பு விடுக்கின்றது.

5.04.1985

# அன்பு உறவுக்கு ஆலயம்

''கோயில் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம்.'' தமிழ் மூதறிஞர்கள் தந்த கட்டளை இது. இறை வழிபாட்டினை முதன்மையாகக் கொண்ட மக்களுடைய சேமநல வாழ்வினைத் தமிழ் மக்கள் கண்ணெனப் போற்றி வாழ்ந்தார்கள். அவ்விதமே தொடர்ந்து காலந்தோறும் வாழவேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். ஊர்கள் தோறும் மிகப் பொருத்தமான உயர்ந்த சிறந்த இடத்திலே இறைவனுக்கு ஆலயம் அமைத்து வழிபாடுகள் நடத்தி, தம் நாளாந்த வாழ்விலே கோவில் கொண்ட தெய்வத்துக்கு முதன்மையும் மேன்மையும் அளித்து, யாவரும் வாழ்வாங்கு வாழத் திரிகரண சுத்தியுடன் முயற்சித்தார்கள் அவர்கள்.

இறைவன் - நாம் - நம் ஊர்மக்கள் என்ற பரந்த அடிப்படையில், நமது இக-பர கடமைகள் செம்மையுடன் நடைபெற வேண்டு மென்பது சான்றோரர் இலட்சியம்.

மக்களின் ஒற்றுமைக்கும் சமாதான சகவாழ்வுக்கும் கண்கண்ட இலச்சினைகளாகவும், செயற்பாட்டு நடுநிலையங்களாகவும் விளங்கி வந்த கோவில்கள், எப்போது மக்களின் பிரிவினைகளுக்கும் பகைமை-சச்சரவுகளுக்கும் அழிவுகளுக்கும் மூலகாரணங் களாக்கப்பட்டனவோ அப்போதே ஊரினதும் உலகத்தினதும் கேடுகள் பிறந்தன என்பதில் ஐயமில்லை. இறைவனதும் மக்களதும் பூசைக்கும் சேவைக்கும் கருவூலங்களாக விளங்க வேண்டிய கோவில்கள் சுயநலம், சுரண்டல், பதவிப்பித்து, பொய், களவு, இடாம்பீகம், ஏமாற்று முதலியவற்றின் உறைவிடங்களாக மனிதரால் மாற்றப்பட்டபோது, அவர்களின் சுயவிருப்பத்துக்குத்தக இறைவனும் மாறிவிடமாட்டார் எனச் சம்பந்தப்பட்டவர்கள் சிந்தித்துப் பார்க்க முடியாத அகங்காரிகளாகி விட்டனர்.

"என்வீடு எல்லா இனத்தாருக்கும் செபவீடு எனப்படும் என்று எழுதியிருக்கிறதல்லவா? நீங்களோ அதைக் கள்வர் குகையாக்கிவிட்டீர்கள்" (மாற்கு 12: 17) என்று இறைமகன் பன்னூற்றுக் கணக்கானவர்கள் மத்தியில் அன்று சினந்து கூறியது அவர்களுக்காக மட்டுந்தானா?

தனித்தும் குடும்பமாகவும் இறைவழிபாடு செய்யும் நாம், நமது தினாந்த வாழ்க்கைக் கடமைகளிலே-தொழிலிலே கிறிஸ்துவைக் கொண்டிருக்க வேண்டிய நாம், வாரந்தோறும் சந்தர்ப்பங்களிலும் எமது கோவில்களிலே சமூகமாக - பொது நோக்கோடு திரு வழிபாடுகளிற் பங்குபெற ஒன்று கூடுகிறோம். அங்கே நமது இன்ப-துன்பங்கள், தேவைகள் முதலியவற்றை நன்கு அறிந்துள்ள பங்குத் தந்தையின் தலைமையில் ஒன்றுகூடி, பலராயிருக்கிற நாம் கிறிஸ்துவில் ஒருடலாகி முன்னேறிச் செல்ல முயலுதல் முறை.

ஆனால் நமது சுயநலம், பணச்செருக்கு, பதவி, குலப்பெருமை - சிறுமை, விளம்பரம் செய்யும் நோக்கம் முதலியன ஆலயங்களிலே தான் தலைதூக்க விடுதல் முறையாகுமா? மற்றெல்லாவற்றிலும் முன்னுக்கு நின்று முதன்மை தேடமுயற்சிக்கும் பெரும் புள்ளிகள வேறு சிலர் ஆலயத்தோடு சம்பந்தப்பட்ட விடயங்களில் மட்டும் 'கோவில் முகம் காணாத' அந்நியர்களாக நடந்து கொள்ளுவது இறைவனுக்குக் காட்டும் நன்றியுடைமையாகாது. இறைவனால் நமக்குத் தரப்பட்ட கொடைகளைப்பற்றி நாம் பெருமை பாராட்டிக் கொண்டு கொடுத்தவரை மறந்து விடுதல் அறிவுடைமையும் அன்று. ஒரு சில இடங்களிலே செல்வத்தையும் வேறு கொடைகளையும் நிறைவாக வழங்கிவிட்டிருக்கும் இறைவன், அவர்கள் முன்னாலேயே ஏழைகள், அறிவற்றோர் முதலிய "சிறியவர்களை"யும் விட்டு வைத்திருக்கிறார். பகிர்ந்து வாழும் பாங்கு எப்படி என்று பார்க்கிறாரோ என்று நாம் எண்ணிப் பார்த்தல் பயனுடைய செயல். நாம் பகிர்ந்து கொடுக்க வேண்டிய பாத்திரம் எது என்பது எம்மைவிட எமது பங்குத்தந்தைக்குத் தெரிந்திருக்கும்! கோவில்கள் அந்த வகையிலும் சேவை புரிய வேண்டும் என்பதை நாம் மறந்து விடுதல் முறையன்று...

6.04.1984

**********

*நத்தார் சிறப்பு மலரில்....*

# நீங்களே "மெசியா"க்கள் !

மனிதனுக்கு விடுதலை கொடுக்க - அனைத்து அடிமைத் தளைகளிலிருந்தும், தனி-சமூக பாவத்திலிருந்தும், அமைப்புக் களிலிருந்தும் விடுவிக்க - இறைவன் மானிடனானார்.

இச்செய்தி இன்று....?!

துன்ப துயரங்கள் -

உயிர் - பொருள் அழிவுகள் மலிந்த வேளையில் - பசி பட்டினி பாதுகாப்பின்மை நிறைந்த சூழலில், தொடர்புச் சாதனங்களில் உண்மைக்கு மாறானவைகளையே பிரசாரம் பண்ணும் இச் சந்தர்ப்பத்தில் ...

கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூர்வது அர்த்தமற்றது என்றுதானும் கூறத் தோன்றுகின்றது. அந்நிகழ்ச்சி தமிழ் மக்களின் நிலையைப் பொறுத்தமட்டில்....?

யூத மக்கள் அரச - மெசியாவை எதிர்பார்த்ததால் ஏழ்மையிற் பிறந்த மெசியாவை இனங்காணவில்லை. அதுபோல வெளியிலிருந்தும் - மேலிருந்தும் அந்த 'புதுமைகள் செய்யும்' ஒரு மெசியாவை, விடுதலை வீரரை நாம் எதிர்பார்த்தால், அந்த எதிர்பார்ப்பு ஒரு மடைமையானதே!

நமது மக்களின் மீட்பர் நம் ஒவ்வொருவருள்ளேயும், நமது சொந்தக் குடும்பத்திலும் பிறக்க வேண்டும்.

'இறைவனின் ஆவி' எம்மேல் பொழியப்பட்டுள்ளமை நாமும் 'கிறிஸ்துக்களாக' செயற்படுவதற்கே. அதனால், கிறிஸ்தவர்களாகிய நாமும் எம் மக்களுக்கு 'மெசியா'க்களாகப் பிறக்க வேண்டும். எம் உறவில், எம் ஒருமைப்பாட்டில், எமது பகிர்தலில், எம் அர்ப்பணத்தில், நாம் அனைவரையும் சமமாக ஏற்றுக் கொள்வதில், பிறர் வாழ்வதைக் கண்ணுற்று இன்புறும் நிலையில் மக்களின் விடுதலை அண்மித்துள்ளது என அனைவரும் உணரவேண்டும்.

எம் விடுதலை இலகுவாக-சமாதானமாக-துன்பமற்ற வழியில் கிடைக்குமென்று எதிர்பார்ப்பது கிறிஸ்து காட்டிய நெறிக்கு முரணானதாகும்.

எந்தவொரு செயல் முறையும், திட்டமும் திருச்சபையில் 'தலைவர்கள்' பணியை ஏற்றோரிடமிருந்தே வரவேண்டும் என எதிர்பார்க்க முடியாது. கிறிஸ்தவ மக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். புதிய ஒரு வாழ்க்கை முறைக்கு எம்மையே நாம் தயார் செய்ய வேண்டும். எம் விசுவாசம் எல்லோரும் இன்புற்றிருக்கும் வாழ்க்கை - வழி காட்டலில் நிறைவு எய்தட்டும். துன்புறும் மக்களுக்கு கிறிஸ்துக்களாகப் பிறந்து, மெசியாக்களாக வாழ்வோம் - வாழ்வு கொடுப்போம். கிறிஸ்துவின் பிறப்பு விழா காலத்தின் குறிகளுக்கேற்ப அர்த்தமுள்ளதாகட்டும்: எம் அனைவர்க்கும் ஒளி ஊட்டி வழிகாட்டட்டும்.

25.12.1984

**********

# எமது துன்பங்கள் வெறுமையானவை அல்ல

பாடுகள்-மரணம்-உயிர்ப்பு இயேசுவின் பாஸ்கா அனுபவமாகும். பாடுகள் - மரணம் - கல்லறை அடக்கம் என்பவற்றோடு இயேசுவின் கதை முடிந்துவிடும் என்றுதான் யூதர்கள் நம்பினார்கள். அது அடக்கமன்று: உயிர்ப்பு, முடிவு அன்று: ஆரம்பம், அழிவு அன்று: அத்திவாரம் என அவர்கள் அறியவில்லை.

"கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண் டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே" (கொரி 15:17). உயிர்ப்பிலேதான் அனைத்தும் கட்டி எழுப்பப்பட்டன. சாவின் கட்டுக்கள் நொறுங்கின. சத்தியத்தின் ஒளி பரவியது. வையத்துள் வாழ்வு வளம் பெற்றது. பாஸ்கா ஒரு "முடிந்த" அனுபவமன்று: "முடிவில்லாத" அனுபவம்.

பாடுகள் இல்லை என்றால் உயிர்ப்பு இல்லை. உயிர்ப்பு இல்லை என்றால் பாடுகளில் அர்த்தம் இல்லை. இரண்டும் இணைந்து ஒன்றை ஒன்று நிறைவு செய்கின்றன. ஒன்று இல்லை என்றால் மற்றது அர்த்தமற்றதாகி விடுகிறது.

நாம் மிக நீண்ட காலமாகப் பயந்த, பாதுகாப்பற்ற, நிரந்தரமற்ற, நிம்மதியற்ற, துன்பதுயரங்கள் நிறைந்த வாழ்வையே வாழ்கிறோம். இழப்புக்களையும், இடம் பெயர்வுகளையும், இறப்புக்களையுமே எமது அனுபவங்களாக்கியுள்ளோம். எலும்புக்கூடுகளையும் மண்டை ஓடுகளையும்தான் எமது ஏறக்குறைய நாற்பது ஆண்டுக்கால சரித்திரச் சொத்துக்களாகச் சேர்த்து வைத்திருக்கிறோம்.

எங்களின் இந்த நிலைபோன்ற இன்னும் பலரின் நிலையையே திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் 1997ஆம் ஆண்டுக்கான தவக்காலச் செய்தியிற் படம் பிடித்துக் காட்டுகிறார். தங்கு மிடமற்றவர்கள், போரினாற் பாதிக்கப்பட்டோர், இடம் பெயர்ந்தோர், இயற்கை அனர்த்தங்களால் அல்லலுறுவோர், பொருளாதாரக் காரணங்களுக்காகப் பெயர்த்தெடுக்கப்பட்டோர் எல்லோரையும் நாம் நினைக்கிறோம் - செபிக்கிறோம் என்று ஆறுதல் தருகிறார்...

எமது துன்பங்களும் துயரங்களும் வேதனைகளும் "வெறுமை யானவை" அல்ல. அவை "முழுமையானவை" ஆக மாற்றம்பெறும். ஆண்டவரின் பாஸ்கா அனுபவம் முடிவில்லாத அனுபவமாக எம்மில் தொடர்கிறது. இயேசுவும் எம்மோடு துன்பப்படுகிறார். எமது துன்பத்தில் துணிவும், பலமும் தருவதற்காக, இயேசு பாடுகள்-மரணம் வழியாக உயிர்ப்பும் உத்தானமும் அடைந்தார். நாமும் எமது பாடுகள் வழியாக உயிர்ப்பு அடைவோம்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு இதையே எமக்கு அழுத்திச் சொல்கிறது. இந்த எண்ணங்களுடனேதான் நாம் 1997ம் ஆண்டுக்கான 'ஈஸ்ரர் வாழ்த்துக்களை' உங்களுக்குத் தெரிவிக்கின்றோம்:

ஆண்டவர் யேசுவை உயிர்த்தெழச் செய்த கடவுளே எங்களையும் அவரோடு உயிர்த்தெழச் செய்து அவர் திருமுன் நிறுத்துவார் (2 கொரி 4:14).

14.03.1997

**********

# ஒன்றிணைந்த செயற்றிட்டம்

...உலகம் பல்வேறு துறைகளிலும் எத்துணை வேகமாக முன்னேறி வருகிறது என்பதை நாமறிவோம். அந்த வேகத்துக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் நாமும் எமது இலக்குகளை அடைவதற்கான பணிகளைத் திட்டமிட்டு ஒருமுகப்படுத்திச் செயற்படாவிடிற் கடமையில் தவறியவர்களாகலாம்.

பொறுப்பான பதவிகளில் உள்ள படித்த பெரியவர்கள் இன்றைய இளைஞர்களைப் பார்த்து ''சரியான இலக்கின்றி, திட்டமின்றி அவர்கள் செயற்படுவதனால் தமக்கும் சமூகத்துக்கும் அழிவைத் தேடித்தரப் போகிறார்கள்'' என அங்கலாய்க்கிறார்கள். அந்தப் பெரியவர்கள் தமக்குள் ஒருமைப்பாடும் இலக்கும் திட்டமும் உடையவர்களா என்று பார்த்தால் விடை எதிர்மறையாகவே காணப்படுகின்றது. கூடிப் பேசி இணக்கம் கண்டு திட்டமிட்டுச் செயற்பட வகையற்றவர்களாகவே அனைவரும் இருப்பின் முடிவு என்னவாகும் என்பதை மீண்டும் சொல்லிக்காட்ட வேண்டியதில்லை.

இந்த நாட்டில் எமது தமிழ்த் திருச்சபையையே எடுத்துக் கொண்டாலும், மக்கள் (பொதுநிலையினர்), துறவியர், குருக்கள், ஆயர்கள் யாவரும் ஒன்றிணைந்து பொது வேலைத்திட்டம் தயாரித்துக் கொண்டு காலத்துக் கேற்பத் தேவைகளையும் இலக்குகளையும் முன்வைத்து ஒருமுகப்படப் பணிகளில் ஈடுபட்டுழைத்து வருகிறார்கள் என்று சொல்லமுடியுமா? வேகமாக மற்றத் துறைகளில் ஏற்பட்டுவரும் காலமாற்றத்துக்குத் தக, புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப, புதிய புதிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முறையாக, மக்கள் நம்மிடம் இன்று எதிர்பார்த்திருக்கும் முன் மாதிரிகைகளை நிறைவேற்றி வைக்கும்படியாக நம்மிடம் என்ன திட்டங்கள் உள? அவ்வப்போது நம்மை வந்து தொடும் பிரச்சினை களுக்கு மாத்திரம் தற்காலிக முடிவுகளை அவரவர் போக்கிற் செய்துகொண்டே காலத்தைப் போக்கிக் கொண்டு போவது போதுமானது என்று திருப்திப்பட முடியாது.

இக்காலத்து மக்கள் தம் வாழ்வில், இன்றைய சூழ்நிலையில் இறைவனைச் சந்திக்க எம் தமிழ்த் திருச்சபை மீட்பின் அருட்சாதனமாக விளங்க வழிவகைகள்-திட்டங்கள் ஒருமுகமாகத் தீட்டப்பட்டு ஒரு நோக்கோடு செயற்படுதல் அவசியம். இத்திட்ட மிடுதலில் மக்கள்-துறவியர்-குருக்கள்-ஆயர்களின் பங்குகள் தெளிவு

படுத்தப்படுதல் பயனளிக்கும். இடத்துக்கிடம் - காலத்துக்குக் காலம் பணியாளர்கள் மாறிவரினும் பணிகள் தொடர்ந்து திட்டமிட்ட இலக்குக்கு ஏற்பத் தொடருதல் வேண்டும். பணியாளர்களின் தனித்தனி விருப்பு-வெறுப்புக்களுக்கேற்ப இலக்குகளும் திட்டங்களும் வேறுபடுமாயின் குழப்ப நிலை உருவாக வழியாகும். யாழ்ப்பாணம், திருமலை-மட்டுநகர், மன்னார் மறைமாவட்டங்களில் ஒருங்கிணைந்த பொது வேலைத்திட்டங்கள் வகுக்கப்படின் தமிழ்க் கிறிஸ்தவர்கள் விழிப்பும் உற்சாகமும் பெற்றுத் தம் விசுவாசத்தின் ஊடாக விடுதலை பெறுவதற்கு வழியுண்டாகும். பொதுவான நோக்கங்களுக்கியையத் திருவிழாக்கள், கருத்தரங்குகள், சமூகசேவைப் பணிகள் முதலியன அமைவதினாற் பணியாளர்களின் தனிப்பட்ட விருப்பு-வெறுப்புக்களினாற் பொது இலட்சியங்கள் சேதமுறாமற் பணிகள் தொடர்ந்து நடைபெற வாய்ப்புண்டாகும்.

இக்காலச் சூழ்நிலையில் அநீதிகளிலிருந்தும் அடக்குமுறைகளிலிருந்தும் மக்கள் விடுதலைபெற, மக்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைகளாகவுள்ள சமூக, கலாசார, பொருளாதார, அரசியல் சதிகளிலிருந்து அவர்கள் விடுதலைபெற, மறைமாவட்டங்களின் ஒன்றிணைந்த செயற்றிட்டங்கள் வழிகாட்ட வேண்டும்.

இலத்தீன் அமெரிக்க நாடுகளின் ஆயர்கள் மன்றத்தில் 1968ம் ஆண்டு 'மெடலின் செயற்றிட்டம்' மிகுந்த உபயோகமாக விளங்கியமையும், அச்செயற்றிட்டம் 1979 இல் புஎபிளா (மெக்சிகோ) வில் புனரமைக்கப்பட்டுப் புத்தூக்கஞ் செய்யப்பட்டமையும் நமது சிந்தனைக்குரியன. இன்று பிலிப்பைன்ஸ் நாட்டிற் கிறிஸ்தவர்களின் ஒன்றுபட்ட செயற்றிட்டங்கள் உலகறிந்தவை. ''விடுதலையின் இறையியல்'' தோன்றி நற்பயன் விளைவிக்க இந்த ஒன்றுபட்ட செயற்றிட்டங்கள்தான் ஊற்றுக்கண்களாக விளங்கின.

இந்நாட்டிலும் எம் தமிழ்த் திருச்சபை அத்தகைய ஒன்றுபட்ட செயற்றிட்டத்தின் மூலம் ஊக்கம்பெறும் காலம் எப்போது?

24.08.1984

**************

# இனமும் மதமும் ஒன்றல்ல

காலம் மாறிவிட்டது, கருத்துக்கள் மாறிவிட்டன, எமது மதமே உயர்ந்தது என்ற எண்ணம் தளர்ந்துவிட்டது. அடுத்தவர் மதத்தை மதிக்க, அறிந்து கொள்ள ஆர்வங் காட்டப்படுகின்றது.

அந்தந்த இனத்துக்கு, மொழிக்குரிய பண்பாடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற படிப்பினைகள் படிப்படியாகச் செயலுருப் பெற்றுக் கொண்டு வருகின்றன. வத்திக்கான் சங்கத்தின் வழிகாட்டுதல் யாவும் புரட்சிகரமாகத்தான் செயற்படத் தொடங்கியுள்ளன. ஆனால் .....

இந்த மாற்றங்கள், பண்பாடுகளை ஏற்றுக்கொள்ளும்படியான படிப்பினைகள் விசுவாசத்தையும் விட்டுக் கொடுங்கள் என்று கூறவில்லையே. இனமும் மதமும் ஒன்றல்ல. ஓர் இனத்துள் பல சமயத்தவர்கள் - ஒரு சமயத்தில் பல இனத்தவர்கள். எனவே ஒவ்வொன்றிற்கும் உள்ள தனித்துவங்களும் வேறுபட்டவை.

கிறிஸ்தவர்கள் பொங்கல் விழாவிற் கலந்துகொள்ளுகிறோம்: அது உழவர் விழா, நன்றி விழா, தமிழர் விழா என்பதால்.

தொழிலாளர் தினமாம் மேதினத்தைக் கொண்டாடுகின்றோம். ஆனால் 'கம்யூனிச'த்தை ஏற்றுக் கொண்டவர்களாகவன்று; தொழிலை, தொழிலாளர்களைக் கொண்டாடும் உலக விழாவாக. இலங்கையின் சுதந்திர தினத்தையும் கொண்டாடுகின்றோம்: அரசாங்க மதம், பௌத்தத்தை, நாமும் ஏற்றுக்கொண்டதாலன்று. இதே நிலைமை, மனப்பக்குவம் ஏனைய தமிழர் பண்பாடுகளை, கலைகளை நாம் பின்பற்றுவதிலும் பயிலுவதிலும் கிறிஸ்தவ தமிழ்ச் சகோதரர்கள் தவறுவது வேதனை தரக்கூடிய செயல்களே.

தமிழன் தமிழனுக்கு உரிய பண்பாடுகளைக் கிறித்தவத்தோடு இரண்டறக் கலப்பது தவறில்லை, வரவேற்கக் கூடியதே. அதற்காகக் கிறிஸ்தவன் பண்பாடுகள் என்ற போர்வையில் விசுவாசத்துக்கு ஊறு விளைவிக்கக் கூடிய விதத்தில், மற்றவர்களின் விசுவாசத்திற்கு இடறல் தரக்கூடிய விதத்தில் நடந்து கொள்வது வரவேற்கக் கூடியதன்று.

கலைமகளையும் நடராசரையும் இந்துக்கள் கொண்டாடுவதும்,

அவர்களுக்கு வணக்கம் செலுத்துவதும் நியாயமானதே. அவர்கள் தமது தெய்வங்களுக்குக் காட்டும் பக்தியையும் பரவசத்தையும் நாம் பாராட்டலாம் - மதிக்கலாம்.

ஆனால் கிறிஸ்தவர்கள் பகிரங்கமாகப் பொது வைபவங்களிலும், அரங்கேற்றங்களிலும் பலர் முன்னிலையில் அக்காரியங்களில் ஈடுபடும்போது, ஏனைய கிறிஸ்தவர்களுக்கு நாம் இடறல்களாக இருக்கின்றோம். ஏனைய பிறமதச் சகோதரர்கள் கிறிஸ்தவம், கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை இழந்து வருகின்றது, கிறிஸ்தவர் களால் நிராகரிக்கப்படுகின்றது என்ற எண்ணத்துக்கு வித்திடுகின்றது. அத்தோடு அவரது விசுவாச வாழ்வுக்கும் களங்கம் விளை விக்கின்றது. சிலரைத் திருப்திப்படுத்தச் செய்யும் இக் காரியம் தமது சுயவிசுவாசத்தின் கழுத்தறுப்பாகக் கணிக்கப்படவும் கூடியதே.

எனவே, இந்த நிலை இனியும் நீடிக்குமா? நீடிக்கவிடுதல் முறையா? இதனைக் கிறிஸ்தவர்கள் - கிறிஸ்தவக் கலைஞர்கள் சிந்திக்க வேண்டும்.

இனமும், மதமும் ஒன்றல்ல. இந்த நிலையில் கிறிஸ்தவக் கலைஞர்கள் எமது விசுவாசத்துக்கு இடறல் தரக்கூடிய விடயங்களில் ஈடுபடலாமா? எனவே, கலை பயிலும் மாணவர்கள் தமது அரங்கேற்றங்களின்போது கைக்கொள்ளக்கூடிய மாற்றுத்திட்டங்கள் எவை என்பதுபற்றி ஆராயவேண்டும்.

இதில் அறிவும், திறமையும் மிக்க கலைஞர்கள் தாங்கள் முன்மாதிரியாகக் கலை நிகழ்ச்சிகளை, அரங்கேற்றங்களை நடத்த வேண்டும்.

நாம் கிறிஸ்துவை முழுமையாக ஏற்றுக் கொண்டவர்கள் என்றால், எந்தச் சந்தர்ப்பத்திலும், எவர் முன்னிலையிலும் அவருக்கே முதலிடம் கொடுக்கவேண்டும்.

1.02.1980

*****************

# மறை மக்களை மயக்கும் மதுவா?

அண்மையிற் பாகிஸ்தானில் சர்வஜன வாக்கெடுப்பினூடாக இஸ்லாமிய மறைக் கொள்கையும், வாழ்க்கை முறையும் பலப்படுத்தப்பட வேண்டும் என்ற போர்வையிற் சர்வாதிகார-ஜனாதிபதி சீயா உல்ஹக் மேலும் ஐந்து வருடங்களுக்குத் தனது ஆட்சியதிகாரத்தை நீடித்துக் கொண்டுள்ளார்.

எம் நாட்டிலும் பெரும்பான்மையினரின் மறையான பௌத்தத்தைப் பேணிக் காப்பதாக அரசு உறுதிபூண்டு செயற்படுவது வரவேற்கத்தக்கது. ஆனால், எந்தவொரு மறையும் மற்றவர்களின் கல்லறையில் தனது வளர்ச்சியைக் காண முற்பட்டால் அது மக்களுக்கு வழிகாட்டும் மறையாக இருக்கமுடியாது.

எம் நாட்டின் தற்போதைய சூழலில் எம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண மறைகளின் பங்கு நிச்சயம் கிடைக்குமென்று எதிர்பார்த்த அனைவரும் ஏமாற்றமடைந்துள்ளனர். அது மட்டுமன்று, பிரச்சினைகள் தீவிரமடையவும், மக்கள் மத்தியில் வெறுப்புணர்வும், விரக்தியும் வளரவும் 'மதம்' துணைக்கருவியாக உபயோகிக்கப்படுவதைப் பார்க்கும்போது அது மனிதனை மயக்கும் ஒன்றாகிவிட்டது என அஞ்சவேண்டியுள்ளது. மக்களை அமைதிப்படுத்தி ஒற்றுமைகாண வழிசமைக்க வேண்டிய மதம், வேறு சில காரணிகளைப் போலப் பிரிவினைக்கும் பகைமைக்கும் காரணியாக்கப்படுதல் எத்துணை பேதைமை!

மறைகள் அன்பையும், சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும், மன்னிப்பையும் போதிக்கும்போது, இன்று சமய அமைப்புக்களும், தலைமைத்துவங்களும் அரசியற் செல்வாக்குகளும் அதிகார மோகங்களும் வேற்றுமைகளை வளர்ப்பதற்கு மறையை முன் கொண்டுவருமானால் இத்தகைய மறைகளைப் பின்பற்றுவதாற் மக்களுக்கு எப்பயனுமில்லை. இந்நிலை இன்று, எம் நாட்டில் கிறிஸ்தவத்திலும் ஊடுருவியுள்ளதா? நாம் ஒவ்வொருவருமே இதற்குப் பதில் கூறவேண்டும்.

மனிதனுக்கு வாழ்வும் விடுதலையும் கொடுக்க வந்த கிறிஸ்துவைப் பின்பற்ற உறுதி பூண்ட நாம், அவர் பணியைத் தொடர எம்மை

அர்ப்பணித்த நாம், சட்டங்களை எடுத்தாளுவதிலும் வாழ்வோடு தொடர்பற்ற சடங்குகளில் மட்டும் நிறைவு காண்பதிலும் திருப்தியுற்றால், கிறிஸ்தவமும் மனிதனை மயக்கும் மதுவாகவே கருதப்படும். கடந்த கிறிஸ்மஸ் திருநாட்களில் வறுமையிலும், இழப்புக்களிலும், பசியிலும் வாடி வதங்கிநின்ற நம் சகோதரர்களில் கிறிஸ்துவைக்காண நம் உள்ளத்தை உயர்த்தாமல், கல்லிலும், மண்ணிலும் செய்யப்பட்ட 'கிறிஸ்து'வை முத்தி செய்திருந்தோமானால் கிறிஸ்தவத்தை நாம் சுயநலப் பொருளாக மாற்றிவிட்டோம் என்பதில் தவறில்லை.

நம்பிக்கையிழந்து உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டு மக்கள் வாடும் இன்றைய நிலையில் வழக்கமான வழிபாட்டுச் சம்பிரதாயங்களில் மட்டும் காலத்தைக் கழித்துத் துப்பாக்கிமுனைக்கு அஞ்சி உரிமைக்குரல் எழுப்ப அஞ்சியிருந்தோமென்றால், அல்லது மற்றைய சகோதரர் எமக்காகக் குரல் கொடுக்கவில்லையென்று கூறும் அதேவேளை கிறிஸ்துக்களாகிய எம் சொந்தச் சகோதரர்களுக்கு உரிமையும், சமத்துவமும் கொடுக்க மறுத்தோமென்றால், அதுவும் கிறிஸ்தவ அமைப்புக்களின் பெயரால் மறுத்தோமானால், உண்மையாகவே கிறிஸ்தவத்தையும் நாம் 'மக்களை மயக்குப் மது' ஆக்கிவிட்டோம்.

4.01.1985

**********

# போலிக் கிறிஸ்தவம்

பரம்பொருளாகிய இறைவனை நாம் நமது சக்திக் கெட்டியவரை அறிந்து அன்பு செய்வதாலும், சகமனிதர்கள் மட்டிலும் அதே அன்பை வளர்ப்பதனாலும் நாமும் இறைவனுடன் இணைகின்றோம். இறைவனுடனும் மக்களுடனும் நாம் கொள்ளும் இந்த அன்புறவும் வாழ்வும் உண்மையான இறை வழிபாடாக அமைகின்றன.

கிறிஸ்தவ மறை அன்புறவு என்ற அடித்தளத்திற் கட்டப்பட்டது. கிறிஸ்து தமது இவ்வுலக வாழ்வில் இதனையே நமக்குப் படிப்பித்தார். சட்டம், அச்சம், போலித்தனம் என்பன உண்மையான கிறிஸ்தவ அன்புறவு, வழிபாடு, வாழ்வு என்பவற்றின்முன் பொருளற்றவையாகின.

உண்மைக் கிறிஸ்தவ வாழ்விலும் வழிபாட்டிலும் அச்சத்துக்கும், இலாப நோக்குடன் கூடிய (கொடுத்தல்-வாங்கல்) பேரம் பேசும்

வியாபாரப் போக்குக்கும் இடம் இல்லை.

நம் நாட்டில் கிறிஸ்தவம் வந்தபோது மக்கள் வேறு மறைகளைத் தழுவியவர்களாகவும், சரியான முறையிலோ பிழையான-மூட உணர்வும் இல்லாததால், சில அனுட்டானங்களைச் செய்வதே இறைவழிபாடெனக் கருதும் பிறசமயச் சகோதரருடன் கலந்து வாழ்ந்து வருவதும் இதற்குக் காரணமாகலாம். கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிள்ளையாகப் பிறந்தமையாற் கிறிஸ்தவராகி ஆரம்ப வகுப்புக்களிற் படித்த சில செபங்களையும் பழக்கங்களையுமே கிறிஸ்தவ வாழ்வு என்று கருதுவோர் இன்றும் பலர் இருக்கின்றனர்.

'சங்கிலிச்செபம்' எழுதி அனுப்புகிறவர்களும், அதனைச் செய்யாவிட்டால் தெய்வ தண்டனை வந்துவிடும் என்று அஞ்சுகிறவர்களும் கிறிஸ்தவ வாழ்வின் உட்பொருளை உணர்ந்தவர்களென்று கூறமுடியாது. "சங்கிலிச் செபம் இத்தனை பேருக்கு எழுத வேண்டும், எழுதினால் இன்ன நன்மை வரும்-எழுதாவிட்டால் இன்ன தண்டனை வரும்" என்று குறிப்பிட்டுவரும் கடிதங்களைக் கிழித்தெறிந்து விடுவதும், மற்றவர்களுக்கும் அப்படியே செய்யுமாறு அறிவுறுத்துவதும் உண்மையான கிறிஸ்தவ அறிவுக்குரிய செயல்களாகும்.

போலித்தனமான குருட்டுப்பக்தி நடவடிக்கைகளுடன் கூடிய 'கிறிஸ்தவ' அனுட்டானங்களுக்குப் பற்பலப் உதாரணங்களைக் கூறலாம். ஞாயிற்றுக்கிழமை பூசைக்குப் போகாமல் களவு, கொள்ளை அடிதடி வாழ்க்கை நடத்துகிற கூட்டத்தார், தவக்கால 6ம் வெள்ளிக்கிழமை தவறாமலற் கஞ்சி காய்ச்சி வார்க்கிறார்கள். பெற்றோரைப் பட்டினி போட்டு இம்சித்துச் சாகடித்தவர்கள், '31ம் நாள் நினைவஞ்சலி' பாட்டுப்பூசை, தானதருமம் செய்கிறார்கள். கோயில் திருநாளையொட்டிய நவநாள் தியானங்கள் மற்றும் ஆன்மீகக் கடமைகள் எதிலும் அக்கறை காட்டாதவர்கள், திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துக்கு வீதி சோடித்துச் சரம்சரமாக வெடி கொளுத்துகிறார்கள்.

தமக்கு ஒரு நன்மை கிடைக்கவேண்டுமென ஒருவன் நேர்த்தியும் மன்றாட்டும் செய்வதை ஏற்றுக்கொள்ளலாம். அடுத்தவனுக்கு இன்னதீமை - தண்டனை வரவேண்டுமென்று நேர்த்தி செய்கிற வர்களை என்னென்பது? புனிதர் ஒருவரின் மேல் இயற்றப்பட்ட குறித்த ஒரு செபத்தைச் "சங்கிலிச் செபம்" பரப்பும் அடிப்படையில் கத்தோலிக்க பத்திரிகை பிரசுரம் செய்வதும் நகைப்புக்கிடமானது.

இதயசுத்தயான இறையன்பு - பிறரன்பு கொண்ட கிறிஸ்தவ வாழ்வு வாழுவதுதான் அவசியமேயொழியப் போலிக் குருட்டுபபக்தி அனுட்டானங்கள் நமக்கு ஈடேற்றம் தரமாட்டா.

**************

8.06.1984

*திருச்சபையிற் புதிய சட்டக்கோவை அமுலுக்கு வந்தபோது....*

# சட்டங்கள் மனிதனுக்கே

"சட்டங்கள் மனிதனுக்காக ஆக்கப்பட்டுள்ளனவேயல்லாமல், மனிதன் சட்டங்களுக்காக இருக்கவில்லை" என்பது யாவருமறிந்த கருத்து.

பழைய ஏற்பாட்டில் இறைமக்களுக்குக் கட்டளைகளும் சட்டங்களும் கொடுக்கப்பட்டமை பற்றிய சம்பவங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. சட்டங்களை விதித்து, அவை மக்களாற் சரிவர அனுசரிக்கப் படுகின்றனவா எனக் கண் காணிப்பவராக இறைவன் காண்பிக்கப் பட்டுள்ளமையைக் காண்கிறோம். சட்டங்களை நுணுக்கமாக அனுசரிப்பதிலே மக்கள் மன நிறைவு கண்டனர்.

காலம் கடந்தது; சட்டங்களை நிறைவாக்கவும், சட்டங்கள் வழங்கப்பட்ட அடிப்படை நோக்கிலே அவற்றை முழுமைப்படுத்தவும் மீட்பர் கிறிஸ்து வந்தார்; அன்பினால் ஆட்சிபுரிய வந்தார்.

"கடவுளின் ஆவியால் யார் இயக்கப்படுகிறார்களோ, அவர்களே கடவுளின் மக்கள். நீங்கள் பெற்றுக்கொண்டது திரும்பவும் அச்சத்துக்குள்ளாகும் அடிமையுள்ளம் அன்று. பிள்ளைகளாக்கும் தேவ ஆவியையே பெற்றுக் கொண்டீர்கள்" (உரோ. 8:14). "ஆவியின் வழியாகக் கடவுளின் அன்பு நம் உள்ளங்களிற் பொழியப்பட்டுள்ளது" (உரோ. 5:5). "அன்பு தீமை செய்யாது; ஆகவே, திருச் சட்டங்களின் நிறைவு அன்பே" (உரோ. 13:10). "உன் கடவுளாகிய ஆண்டவருக்கு...அன்பு செய்வாயாக. உன்மீது நீ அன்பு காட்டுவது போல உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக. இவற்றை விடப் பெரிய கட்டளை வேறில்லை" (மாற்கு 12:30-31). எனவே இந்நிலையிலும் திருச்சபையிற் சட்டங்கள் வேண்டுமா என்ற கேள்வி எழலாம்.

கிறிஸ்தவத்தை ஒருவர் தனித்து வாழமுடியாது. இயல்பிலேயே சமூகப்பிராணியான மனிதன் திருச்சபையின் அமைப்பிலேயும் சமூகமாகவே வாழ்கிறான். அந்தச் சமூக அமைப்பிலேயே கிறிஸ்வின் புதிய சட்டமாகிய "அன்பு" முழுமை பெற்று நிறைவேறுகிறது. ஆயினும், மனித இயல்பிலே, சீரான சமூக அமைப்புக்கும், சமாதான சகவாழ்வுக்கும் சுதந்தரத்திற்கும் சட்டங்கள் அவசியம். எனவே,

கிறிஸ்தவ விசுவாசங்கொண்ட இறை மக்களது சமூகத்துக்கும் ஒழுங்குகள் - சட்டங்கள் தேவை.

ஆயினும், சட்டங்கள் எனப்பட்டவை, சட்டங்களுக்காக மக்கள் என்ற மனப்பான்மை அடியோடு கைவிடப்பட்டு, கிறிஸ்துவ வாழ்வையும், திருச்சபையின் பணிகளையும் நன்கு செழித்தோங்கப் பண்ணுவதற்கு வழி காட்டிகளாகக் கொள்ளப்பட வேண்டியவையாகும். ஏனெனில், சட்டங்களின் நோக்கம் அதுவே.

கிறிஸ்து சட்டவல்லுனர்களைப் பலதடவை கண்டனஞ் செய்தமை பற்றி நற்செய்தியில் அறிகிறோம். சுமக்க முடியாத சுமையை ஏற்றி, மக்கள் சமயத்தை அனுசரிப்பதைக் கடினமாக்குவதுபற்றிக் கிறிஸ்து கண்டனஞ் செய்தார்.

இஃது, இன்றும் செல்லுபடியானதாகவே தோன்றுகிறது. கடந்த காலத்தில், திருச்சபைச் சட்டக்கோவைகள் இலத்தீன் மொழியிலேயே இருந்தன. ஆயின் இவ்வாண்டு புதுக்கி வெளியிடப்படும் சட்டக்கோவை வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படுவதால் இலத்தீன் மொழிவல்லுனர்களைவிட மற்றவர்களும் படித்தறியக் கூடியதாக இருப்பது முன்னேற்றமான விடயமாகும்.

விசுவாசிகளுக்குச் சட்டத்தின் மூலம் கடமைகள் மட்டுமல்லாமல் உரிமைகளும் வகுப்பட்டுள்ளன என்பதை நாம் மறக்கலாகாது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் 'திருச்சபை, அதன் பணிகள்' பற்றி முன்வைத்த கருத்துக்கள் திருப்திகரமாக நிறைவேற்றப்படுவதற்குச் சட்டங்கள் துணைபுரிய வேண்டும்.

குறிப்பாகப் பொது நிலையினர் திருச்சபைப் பணிகளில் தம் பங்கினைச் சரிவர அறிந்து, உணர்ந்து கூடிய பயனுள்ள பங்கு பெற்றுப் பணியாற்றத் திருச்சட்டங்களின் நோக்கம், உட்பொருள் என்பன தெளிவுபடுத்தப்படுதல் அவசியம்.

25.11.1983

****************

*யாழ் மறைமாவட்டத்தின் ஒரு பகுதி மன்னார் மறை மாவட்டமாக திருத்தந்தையினால் பிரகடனம் செய்யப்பட்டு,*
*புதிய ஆயர் நியமிக்கப்பட்டபோது .....*

## மகிழ்ச்சியூட்டும் செய்தி

சில வருடங்களாக எதிர்பார்த்த புதிய மறை மாவட்டம் - மன்னார் மறை மாவட்டம்- கனவு நனவாகிறது. இறைவா இதற்கு நன்றி !!

அதற்கு, இறைவனால் தரப்பட்ட முதல் ஆயர்: அருட்திரு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் அடிகள்.

புதிய மறைமாவட்டம் உருவாக வேண்டும் என்று கோரிக்கை விடுத்த நாள் தொடக்கம் யார் ஆயராவார் என்ற கேள்வி பலரின் பல்வேறு விருப்பு வெறுப்புக்கள் - சுயநல, பொதுநலப் போக்கோடும் எதிர்பார்ப்புக்கள்....

ஒரு காலத்தில் இலங்கையில் இரண்டு மறை மாவட்டங்கள் மட்டுமே இருந்தன. காலப்போக்கிற் கிறிஸ்தவர்கள் தொகையும் அவர்களின் தேவைகளும் அதிகரித்தமையால் பல புதிய மறை மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இன்று மன்னார், வவுனியா அரசு மாவட்டங்களை உள்ளடக்கிய புதிய மறை மாவட்டத்தின் உருவாக்கம் அம்மக்களின் நலனைச் சிறப்பாகக் கருதி நடைபெறுகிறது. எனவே, அந்த மறை மாவட்ட மக்கள் அனைவரும், தமது விருப்பு வெறுப்புகளையும், வேற்றுமைகளையுங் களைந்துவிட்டு, அப்போஸ்தலர் வழி வரும் புதிய ஆயரின் தலைமையில் ஒன்றுசேர்ந்து இறை அரசைப் பரப்ப முன்வர வேண்டும். இப்பணி, குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவர்க்கும் உரியதொன்றாகும்.

வேதசாட்சிகளின் இரத்தத்தாற் புனிதமாக்கப்பட்ட புதிய மறைமாவட்டம் தன் ஒன்றிப்பிலும், பணிகளிலும், முன்னேற்றத்திலும் ஏனையோர்க்கு முன்மாதிரிகையாகத் திகழட்டும் !

வளர்க புதிய மறைமாவட்டம்!
வாழ்க அதன் புதிய ஆயர்!!
மகிழ்க அதன் மக்கள்!!!

29.05.1981

**********

*கண்டி, திருமலை–மட்டுநகர் மறைமாவட்டங்களுக்குப் புதிய ஆயர்கள் நியமிக்கப்பட்டபோது ...*

# புதிய மேய்ப்பர்கள்

கண்டி, திருமலை - மட்டுநகர் ஆகிய இரு மறை மாவட்டங்களுக்குப் புதிய ஆயர்கள் நியமனம் நடைபெற்றுள்ளது. பதுளை மறைமாவட்டம் ஓர் ஆயரை எதிர்நோக்கியிருக்கின்றது. சமீபகாலத்தில் மன்னார், அனுராதபுரம், காலி ஆகிய மறை மாநிலங்களுக்கு ஆயர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்த நாட்டிலே திருச்சபை வேரூன்றித் தழைத்தோங்கித் தன்னைத்தானே நிர்வகித்துக் கொள்ளும் அளவுக்குப் பலப்பட்டுவிட்டது என்பதற்கு இந்த ஆயர் நியமனங்களும் புதிய மறைமாநில ஆக்கங்களும் சான்றுகளாகும்.

ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஆகிய திருச்சபையின் உறுப்பினர் அனைவரும் இந்த நாட்டிலே இறையரசை மேன்மேலும் வலுப்படுத்தி வளமுறச் செய்வதற்கு எப்போதும் மற்றவர்களையே எதிர் நோக்கி இருக்காமல் சுயமாக உழைப்பதற்குக் காலம் வந்துவிட்டது. பணிப்புரைகளுக்கும் பணத்துக்கும் உரோமாபுரியையும் ஏனைய இடங்களையும் எதிர்பார்த்திருப்பதும், கிடைக்கப்பெற்ற பணிப்புரைகளைச் சரிவர நிறைவேற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து நிர்வாகம் பண்ணுவதும், வருட வட்டத்தின்படி திருச்சடங்குகள், திருவருட் சாதனங்களை நிறைவேற்றுவதும்தான் "எமது பணி"என்றிருந்த அந்தக்காலத்தை இனிமேலும் முன்மாதிரியாகக் கொண்டு கருமமாற்ற முடியாது.

பொதுத் திருச்சபையின் தளர்வுறாத ஒற்றுமையிலே, தலத் திருச் சபையை மக்களின் பண்பாடு கலாசாரங்களைப் பேணி நிர்வகித் தலும், அரசியல், பொருளாதாரம், இனம், மொழி முதலியவற்றின் தாக்கங்களை உணர்ந்து ஒற்றுமையைப் பேணி மக்களை வழிநடத்துதலும், பிற இன-மத-கொள்கையாளரிடையே வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டு நிதானத்துடன் அரவணைத்துச் செல்லுதலுமாகிய காலத்துக்கேற்ற மாற்றமுடைய தவிர்க்கமுடியாத பல பொறுப்புக்கள் மேய்ப்பர்களை எதிர் நோக்கியுள்ளன. பொது நிலையினரையும் ஏனைய படிகளிலுள்ள திருச்சபையின் உறுப்பினர்களையும் தந்தைக்குரிய பரிவு, கடப்பாட்டு உணர்வு

களுடன் அன்புப் பிடியில் அழைத்துச் செல்லுதல் மேய்ப்பர்களின் தனித்துவமான செயற்பாடாகக் கருதப்படுகிறது. யாவற்றுக்கும் மேலாக இறைபணி - மக்கள் பணி என்பன எங்கிருந்து பிறக்கின்றன வென்பது காலமாற்றத்துக்குரிய பொருளாகியுள்ளது. தூய ஆவியின் அருளும் ஏவுதலும் தனியொருவருக்கு மட்டும் இறைவனால் அருளப்படுவனவல்ல. விவேகம், அறிவுத்திறன், சாதுரியம் என்பனவும் கூட எந்த மட்டத்திலுள்ளவர்களிடமும் கிடைக்கலாம். "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு". ஒரு முகப்படுத்தப்பட்ட செயற்குழுக்கள் வழியாகப் பயனுறும் வகையில் நடைமுறைப் படுத்தப்படல் அவசியம். ஆயரின் விருப்பம், பங்குத் தந்தையின் போக்கு, அந்தந்த நிருவாகிகளின் ஆதிக்கம், பொது நிலையினரின் வழக்கம் என்பனவாக, இறைபணி - மக்கள் பணி என்பன தனி ஆட்களினதும், காலக் கூறுகளினதும் இழுப்புக்குப் பலியாகிவிடாமற் பார்த்துக் கொள்வது மிகுந்த பயனுடைத்து, காலப் போக்கிற்கும் தேவைகளுக்கும் ஏற்ப, பொதுக் கருத்துக்களை அவ்வப் போது மையக் கருப்பொருள்களாக வைத்துச் சுயநலம் களைந்து பொது நோக்கோடு ஒன்றுபட்டுழைத்தல் வெற்றிதரும்.

"என் விருப்பம், என் கருத்து முன்வைக்கப்படாவிடில் எனது உழைப்புத் தரப்படமாட்டாது" என்பது போன்ற வக்கிர நிலை இறையரசை வளப்படுத்த ஏற்படுத்தப்பட்டவரிடையே இருத்தலாகாது. நல்ல கருத்தை இறைச் சித்தமாக ஏற்று, எல்லா மட்டங்களிலுமுள்ள வர்கள் ஒன்றுபட்டுக் கடினமாக உழைத்தலே வழி. மக்கள் ஆதரவு என்னும் அபாரசக்தியைத் தமதாக்கிக் கொண்டு இறைபணியாற்ற முயற்சிக்கும் மேய்ப்பர்களுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு நல்குதல் அவசியம்.

மேய்ப்புப்பணி ஏற்கவிருக்கும் புதிய ஆயர்களுக்கு எமது செப வேண்டுதல்களும் நல்வாழ்த்துக்களும் உரியனவாகுக.

8.04.1983

***********

*அநுராதபுரம் புதிய மறைமாவட்டம்.*
*அதற்கென ஆயரும் நியமிக்கப்பட்டபோது......*

# மற்றுமொரு தலத்திருச்சபை

அநுராதபுரம், பொலநறுவை ஆகிய அரச நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதாக மற்றுமோர் தலத்திருச்சபை அனுராதபுரம் மறை மாவட்டமாக உதயமாகியுள்ளது. அதன் முதலாவது புதிய ஆயராக மேதகு ஹென்றி குணவர்தன ஆண்டகை நாளை திருநிலைப் படுத்தப்படவுள்ளார்.

மருதமும் முல்லையும் கலந்துறவாடும் இயற்கை வளம் கொண்ட இந்த மறை மாவட்டம் சிங்களப் பௌத்த மக்களை மிகப் பெரும்பான்மையாகக் கொண்டது. மேலும் பழைய சிங்கள - தமிழ் மன்னர்களின் இராஜதானிகளாகிய அனுராதபுரமும் பொலநறு வையும் உள்ளடங்க, பூர்வ சமய, அரசியல், வரலாற்றுப் பின்னணி களையும், சின்னங்களையும் ஏராளமாகத் தன்னகத்தே கொண்டதாக இம் மறை மாவட்டம் விளங்குகிறது. சரித்திர காலம் தொட்டே வாழ்ந்து வரும் பழங்குடி மக்களையும், நாட்டின் பல இடங்களிலுமிருந்து வந்து காடுவெட்டிக் கழனியாக்கும் புதிய குடியேற்றவாசிகளையும் பரவலாகக் கொண்டதுமாக இப்பிரதேசம் இருக்கிறது. மிகப் பூர்வமான குளங்களையும் நீர்ப்பாசனத் திட்டங்களையுமுடைய இப்பகுதியில், புதிய மகாவலி திசை திருப்புத் திட்டத்துளடங்கிய நவீன வடிகால்களும், கிராம எழுச்சித் திட்டங்களும், பிறவும் இப்போதுண்டு. இடத்துக்கிடம் பரந்து வாழும் பழைய - புதிய கிராம மக்களில் இரண்டு சத வீதத்தினர் மட்டுமே கத்தோலிக்கராக இருக்கின்றனர்.

மேற்கூறிய விபரங்கள் அனுராதபுர மறை மாவட்டத்தின் தனித்தன்மையை விளக்குவதோடு புதிய ஆயருடையவும், அவரது துணைவர்களுடையவும் பணிகளின் தனி இயல்பையும் ஓரளவு உணர்த்த உதவும். புதிய அனுராதபுர ஆயர் தெரிவுச்செய்தி கிடைத்தவுடனேயே ஆயர் அவர்கள் பௌத்த மதபீடத் தலைமைக் குருக்களைச் சென்று தரிசித்தமை அவரது ஆர்வமுள்ள பணியின் எதிர் காலச் சிறப்புக்களைக் கட்டியங் கூறுவதாக இருக்கிறது.

வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த விவசாயப் பெருமக்களின் கலை, கலாசாரம், பாரம்பரியங்களுக்கு ஏற்பப் புதிய தலத் திருச்சபையின்

ஆக்கமும் வளர்ச்சியும் நற்செய்திப் பணியும் சிறந்தோங்க வாழ்த்துகிறோம். அப்போஸ்தலர்களின் மற்றொரு வாரிசான புதிய ஆயர் ஹென்றி குணவர்தன அவர்கள் தூய ஆவியின் நிறைவினால் இன-மத ஒற்றுமையைப் . பேணி, நற்பணி புரிந்து அமோக விளைச்சலைப் பெற இறையருளை இறைஞ்சுகின்றோம்.

9.07.1982

**********

# இவை தேசிய ஆணைக் குழுக்களா ?

எந்தவொரு நாட்டிலும், சமுதாயத்திலும் சிறுபான்மையினரானோர் இன்னல்கள் பல அனுபவிப்பது சகஜம். அமெரிக்காவிற் கறுப்பு நிறத்தோர், வடஅயர்லாந்திற் கத்தோலிக்கர், இங்கிலாந்தில் நிறத்தவர்கள் படும் அவதியை யாம் அறிவோம். எமது நாட்டிலும் பற்பல வழிகளில் அவர்கள் படும் துன்பம் எமக்குத் தெரியாமலில்லை. மொழிப் பிரச்சனையால் அபிவிருத்தி மட்டுமன்று, வழிபாட்டு வாய்ப்புக்களும், மறையுரையும் கிடைக்காமற் போகின்றன. சில இடங்களில் வசிப்போருக்குத் திருப்பலி, திருவருட்சாதனங்கள் தானும் கிடைப்பதில்லை. இன்னும் நிதி ஒதுக்கீடுகளிலும் குறைகளுண்டு. சாதிப்பிரச்சனையால் நடைபெறும் தீமைகளை மறுக்க முடியாது.

எம் ஈழத்துத் திருச்சபை சிறுபான்மையினர் மட்டிற் காண்பிக்கும் அக்கறை போதாமலிருப்பது கவலைக்குரியதே.

தேசிய ஆணைக்குழுக்கள் என்று தம்மை அழைத்துக் கொள்பவை, தேசிய நலனுக்காகத் தம் பணியைச் செய்வதற்காக ஏராளமான உதவிகளையும் பெற்றுக்கொண்டு மொழிவாரியாகப் பெரும்பான்மையினருக்கே அநேகமாகத் தம் பணியைச் செய்து வருவது வேதனைக்குரிய விடயம். திருவழிபாட்டுக்குழு, மறைக்கல்விக்குழு, மறை அறிவிப்புக்குழு, சமூகத் தொடர்புகள் குழு போன்றவைகளைப் பற்றியே சிறப்பாக இங்கு குறிப்பிடுகின்றோம்.

சில வாரங்களுக்கு முன் மறை அறிவிப்புக்குழு கிறிஸ்து பிறப்பு விழாவையொட்டிப் பல செயற்றிட்டங்களைத் தீட்டி, அவற்றை ஆங்கில, சிங்கள பத்திரிகைகளில் வெளியிட்டது. அந்த விபரங்களை எமது பத்திரிகைக்கு அனுப்ப அக்குழு தவறிவிட்டது. அக்

கூட்டத்திலேயே தமிழ்ப் பத்திரிகைக்கு மேற்படி செய்தியை அனுப்ப வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டபோதிலும், அதனைப் பராமுகம் செய்ததை என்னவென்று கூறுவது?

யாழ் மறைக்கல்வி நிலையம் சிறப்பாகவும் விழிப்புடனும் இயங்குவதாற் பல சந்தர்ப்பங்களில் மாணவர்களும் பெரியோரும் பெற வேண்டிய நன்மைகளைப் பெற்றுள்ளனர்.

சமூகத் தொடர்புக் குழுக்களில் நியமிக்கப்படுவோரில் மிகச் சிலரே தமிழர். சினிமாப்படப் பயிற்சிகளும், விமர்சனங்களும் தமிழ் மக்கள் மத்தியில் அதிகம் இடம் பெற்றதாகத் தெரியவில்லை.

தேசிய இயக்கங்கள் பற்பல உதவிகள் பெற்று ஒரு சாராருக்கு மட்டுமே பயன்படுத்தப்பட, ஏனைய மறைமாவட்ட ஆணைக் குழுக்கள் எவ்வளவோ கஷ்டங்களுக்குள்ளாகி, இந்நிலையைத் தீர்க்க அரும்பாடுபட வேண்டுமா? இந்நிலைக்கு விடிவு வருமா?

தேசிய வழிபாட்டுக்குழு அதிகமாகச் சிங்கள மொழியில் வழிபாடுகளைப்பற்றி ஆராய வேண்டியிருக்கலாம். அதேபோன்று ஏனைய குழுக்களும் இயங்கவேண்டும் என்று பலர் கூறலாம். அப்படியாயின மொழி வாரியாக இரு தேசிய ஆணைக்குழுக்கள் இயங்கினால் என்ன? இது அதிக நன்மை பயக்குமானால், ஆயர் குழு இதைப்பற்றிக் கூடுதலாகச் சிந்திக்க வேண்டும் எனக் கருதுகின்றோம். கனடா, பெல்ஜியம் போன்ற நாடுகளில் இவ்விதமான குழுக்கள் பயன்தரக்கூடிய முறையிற் செயற்படுவதை யாம் அறிவோம். இந்த நோக்கோடு தமிழ் ஆயர்கள் தமிழ் மக்களின் நலன் கருதித் தனிக் குழுவாக இயங்க வேண்டும் என்ற பிரேரணையை குருக்களும் மக்களும் ஆயர்கள்முன் வைத்தபோது "அது நன்மையாயிருப்பினும், இன்றைய நிலைக்கு உகந்ததன்று" என்ற ஆயர் மன்றத்தின் தீர்வை அவர்கள் புனராலோசனை செய்வது இலங்கைவாழ் எல்லா மக்களும் கிறிஸ்தவ வாழ்வில் முன்னேறி, ஏனையோருக்கு முன்மாதிரிகையாகத் திகழ வழி வகுக்கும் என்பது எமது கருத்து.

12.12.1980

**********

# மன்னார் வழிகாட்டுகிறது

கிறிஸ்தவ விசுவாச ஒளி இந்நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு ஐந்து நூற்றாண்டுகள் நிறைவுறும் காலம் நெருங்குகிறது. போத்துக்கேயருக்குப் பின்னால் ஒல்லாந்தர் ஆட்சியில் நடைபெற்ற சமயத் துவேஷ நடவடிக்கைகள் வரலாற்று ஏடுகளில் உள்ளன. சங்கிலியரசன் முதலிய சுதேச மன்னர்களின் கெடுபிடிகள் வேறு. சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆட்சியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் சமய சுதந்திரம் அளித்திருந்தனராயினும் கத்தோலிக்க சமயம் நல்லமைப்புப் பெற்று ஓரளவு சீராக இயங்கத் தொடங்கவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கூறாகி விட்டது. மறை மாவட்டங்களும் பொறுப்பான ஆயர்களும் கிறிஸ்தவ நற்செய்தியறிவிப்புக்கு உழைக்குமளவுக்கு மேலாகவே நிர்வாக-நிருமாண விடயங்களில் ஈடுபடவேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாததாக இருந்திருக்கலாம்.

அக்காலத்தில், பரந்தவையும் பல்வேறு வசதிக்குறைவுகள் நிறைந்தவையுமான மறைமாவட்டங்களின் சீரமைப்புக்குப் புதியன செய்யவேண்டிய சந்தர்ப்பங்கள் வரும்போதெல்லாம் 'மேலுள்ளவர்கள் என்ன கட்டளையிடுகிறார்கள், சட்டம் என்ன சொல்லுகிறது' என்று பார்த்துச் செய்ய வேண்டிய நிலையிருந்தது. பிற நாடுகளிலிருந்து இங்கு வந்து தொண்டாற்றிய மறை போதகர்கள் பற்றாக்குறை நிலையில், விருத்தி பெறாத பொது நிலையினரின் மத்தியில் அப்படித்தான் ஆரம்ப கால நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருந்ததெனக் கொள்ளவேண்டும். ...

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்னால் விரிவுபடுத்தி வழங்கப்பட்டிருக்கும் சிந்தனைகளும் செயல் முறைகளும் நாடுகள் தோறும், இனங்கள் தோறும் ஒரு சுயாதீனமான மனமுவந்த ஒத்துழைப்பை வலுப்படுத்தியுள்ளன.

இதன் விளைவுகளுள் ஒன்றுதான் அண்மையில் மலர்ந்த மன்னார் மறை மாவட்டமும், அதன் புதிய ஆயர் பெருந்தகையும். மன்னார் ஆயர் அவர்கள் தமது மறை மாவட்டத்து விசுவாசிகளுக்கு விடுத்துள்ள முதலாவது திருமடல் இந்த இதழிற் பிரசுரமாகியுள்ளது. புதிய மன்னார் மறை மாவட்டத்தின் செயற்பாடுகளைத் திட்டமிட்டுத்

திறம்படச் செயலாற்றுவதற்காகக் குருக்கள், துறவிகள், பொது நிலையினர் அனைவரையும் உள்ளடக்கிய ஆய்வரங்கு ஒன்றினை நடத்துவதற்குத் திருமடலில் ஆயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். ஆய்வரங்கு பயனுள்ள வகையில் நடைபெறுவதற்குச் செய்யப் பட வேண்டிய முன்னாயத்தங்களையும் திருமடலில் விளக்கியுள் ளார்கள். ஆயர் அவர்களின் போற்றத்தக்க நன்முயற்சி அவர்கள் எதிர்பார்க்கும் சிறந்த பயன்களை நல்க எமது வேண்டுதல்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக....

கடினமான முயற்சியாகத் தோற்றினாலும் அதனை மிக உற்சாகமும் பயனுமுள்ள பணியாக மாற்றும் பொறுப்பு மக்கள் கையில் உள்ளது. எங்களுக்கு - எங்கள் பங்குக்கு - எங்கள் பிரதேசத்துக்கு - இன்ன தொழிலாளருக்கு என்பன போன்ற சுயநலச் சிந்தனைகளை இந்த அரும்பெரும் முயற்சியிலும் புகுத்தி விடாமல், எங்கள் புதிய மறை மாவட்டம் ஆயருடன் இணைந்து நற்செய்திப் பணியினை இறையரசுக்குகந்த முறையிற் சிறப்புடன் ஆற்றுவதற்கு நாம் ஒவ்வொருவரும் தனித்தும் ஒருமித்தும் அளிக்கும் பங்களிப்பென்ன என்று தூய ஆவியின் அருளுடன் சிந்தித்து - பேசி - திட்டமிடுதல் அவசியம். மறை மாவட்டத்தின் புனிதமான ஆய்வரங்கினை வேறு வகையான கூட்டங்களின் நிலைக்குத் தள்ளிவிடாமல், நாம் கருத்துணர்ந்து கடவுளின் அருளுடன் செயற்படின் எண்ணிய இலக்கையடைவதில் இடர் உண்டாகாது. வளர்க மன்னார் மறை மாவட்டம்.!

20.11.1981

**********

# தடைச்சுவர்கள் தகர்க்கப்படுக !

"எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக" (அரு.17:21). இது இயேசுவின் இறுதி வேண்டுதல்களில் ஒன்று. தம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பது அவர் விருப்பம்.

ஆனால், கிறிஸ்தவர்களின் கடந்த கால வாழ்க்கையைப் பின்நோக்கிப் பார்க்கும்பொழுது பிற மறையினர் எள்ளி நகையாடக்கூடிய வகையிற் பிரிவுகள் பிளவுகள் ஏற்பட்டிருப்பது மனவேதனைக் குரியனவே.

இவ்வேற்றுமைகளைத் தகர்த்தெறிய வேண்டும், ஒற்றுமைப் பாலத்தை இணைக்க வேண்டும் என்பது வத்திக்கான் சங்க அமர்வுகளின் பொழுது கூடிய திருத்தந்தையர், ஆயர்களின் விருப்பம். இதன்பயனாக மலர்ந்தது 'கிறிஸ்தவ ஒன்றிப்பு' என்ற தலைப்பில் ஓர் அறிக்கை.

கிறிஸ்துவின் விருப்பமும் இவ்விதம் அமையும் பொழுது 'கிறிஸ் தவர்கள்' என்று தங்களை அழைப்போர் பிரிவினையை வளர்ப்பது விந்தையானதே. நம்மைப் பிரிக்கும் கருத்துக்கள் கொள்கைகள் பற்றிய விவாதங்களில் நேரத்தை விரயம் செய்யாமல் நம்மை ஒன்றுபடுத்தும் விடயங்கள் பற்றிப் பேச வேண்டும். நம்மைப் பிளவுபடுத்தி நம்மையே அழிக்கும் சிந்தனைகள் முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.

கலந்துரையாடலிற் கலந்து கொள்ளும்பொழுது கிறிஸ்தவ சபைகள் எச்சபையினது கொள்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தேவையற்ற பிரச்சினையை விடுத்துக், கிறிஸ்துவின் மனநிலை கொண்டு கிறிஸ்தவக் கொள்கைகளைத் தேடவேண்டும். சுயநலம் தற்பெருமை நம் ஒற்றுமைப் பாதையைப் பலவீனப்படுத்தும்.

அண்மைய காலத்திற் கத்தோலிக்கத் திருச்சபைகள் வேறு மறையினர் ஒன்றுபட்டுச் செபிப்பதும் செயற்பட்டு வருவதும் வரவேற்கத்தக்கன. 1977 ஆவணித் திங்களில் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்ட பொழுது, மதம் கடந்த நிலையில் பணிபுரிந்தமையை வரலாறு மறந்துவிடாது. இப்பணிகளிற் கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்.

இவ்விதம் செயற்படும்பொழுது பொய்ப்பிரசாரம் செய்து மக்களைத் திசை திருப்ப முயலும் கடவுளை ஏற்காத பொதுவுடைமை வாதிகளின் பிரசாரத்திற்கு ஆப்பு வைக்க முடியும்.

நம்முடைய ஒற்றுமைப் பயணம் கிறிஸ்தவ ஒற்றுமை வாரத்திலும் காலங்களிலும் நிகழ்சிகளிலும் தங்கியிராமல் எந்நேரமும் தொடரவேண்டும். இம் முயற்சி நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

மறைகள் பற்றிய ஒற்றுமை பற்றிச் சிந்திக்கும்பொழுது எமது மறைகள், சாதியால், வர்க்க பேதத்தால், பிரதேசத்தால் ஏற்படும், உருவாக்கப்பட்டுவரும் பிரிவுகள் பற்றி நாம் மறக்கமுடியாது. இப்பிரிவுகள் நம் மதத்தை மட்டுமன்று, மனித சமுதாயத்தையே அழிக்கும் நஞ்சு.

பிரிவுகளை அகற்ற, ஒற்றுமையை வளர்க்கத் தடைச்சுவர்களைத் தகர்த்தெறிந்து பாலங்களை இணைக்கத் தேவையானது கூட்டங்கள் கலந்துரையாடல்கள் கருத்தரங்குகள் மட்டுமல்ல, அவசியத் தேவை மன மாற்றமே. ஒன்றுபடுத்தும் தூய ஆவியானவர் ஒன்றிப்பிற்கான மனமாற்றத்தைத் தருவார்.

25.01.1980

**********

*பல்வேறு திருச்சபைகள் ஒன்றிணைந்து*
*விவிலியத்தின் புதிய மொழிபெயர்ப்பினை வெளியிட்ட போது.....*

## ஒளியில் ஒன்றுபடுவோம்

நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த வேதாகமத்தின் புதிய பொது மொழிபெயர்ப்புக் கடந்த ஆண்டு நவம்பரில் 'திருவிவிலியம்' என்ற பெயரில் வெளியிடப்பட்டது. பல்வேறு இன்னல்கள் மத்தியிலும் இப் புதிய திருவிவிலியத்தின் பிரதிகள் எமது மறை மாவட்டங் களுக்கும் படிப்படியாக வந்து சேர்கின்றன.

இரண்டாம் வத்திக்கான சங்கத்தின் ஊக்குவிப்பின் பயனாக (இறை வெளிப்பாடு, 22) பல்வேறு கிறிஸ்தவ சபைகளுடன் இணைந்து, புரிதல் - விட்டுக்கொடுத்தல் - உண்மைக்கே முதலிடம் போன்ற பண்புகளை மனத்திற் கொண்டு செய்யப்பட்ட இம்மாபெரும் முயற்சியை நாம் பாராட்டுகிறோம்.

எனினும், இப்புதிய முயற்சி எதற்காக? அத்துடன், வெவ்வேறு கிறிஸ்தவ சபைகளுடன் இணைந்து செயற்பட்டதன் பயனாக எமது பாரம்பரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டுமா என்ற கேள்வி எழுப்புவோர் இல்லாமலில்லை. புதியன எப்போதும் சிக்கல்களை உருவாக்கலாம். விவிலியத்தைப் பொறுத்தளவிலும் புதிய மொழிபெயர்ப்புக்கள் ஒருபோதும் உடனடியாகவும், முழுமையாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை. ஆனால், அவை காலப்போக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டன: திருவிவிலியமும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பது எமது நம்பிக்கை.

"நான் கூறிய வார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன" என்றார் இயேசு (யோவான் 6:63), "எந்த ஆவியால் திருவிவிலியம் எழுதப்பட்டதோ, அதே ஆவியானவரின் துணை கொண்டு, அதை நாம் படிக்கவும் அதற்குப் பொருள் விளக்கம் செய்யவும் வேண்டும்" (இறைவெளிப்பாடு, 12). இன்றைய மனிதன் வாழ்வதற்கு ஏற்ப இறை வார்த்தையைப் புரிவதற்கு ஏதுவாக இப்புதிய மொழிபெயர்ப்புத் துணைசெய்வது, ஆவியானவரின் தொடர்ச்சியான செயற்பாட்டுக்குச் சாட்சியம் பகர்கின்றது என்று நாம் துணிவோடு கூறலாம்.

"என் ஆண்டவராம் இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம்" (பிலி. 3:8). இவ்வார்த்தை இன்று ஒவ்வொருவரினதும் "பாதைக்கு ஒளியாகத் திகழ" வேண்டும் (திருப்பாடல் 119:105) என்ற உயரிய நோக்கத்துடனேயே, இத்தனை விவிலிய - மொழியியல் அறிஞர்களும், ஏனையோரும் பல ஆண்டுகளாகப் பணியாற்றியுள்ளனர்.

எமைச் சூழ வாழும் கிறிஸ்தவ சகோதரருடன் இணைந்து இத்திருவிவிலியத்தைப் பயன்படுத்தும்போது, போர்களும் நம்பிக்கையீனங்களும் நிறைந்த எமது சூழலிலே 'ஒன்றுபட்டு' இறை அன்புக்கு நாம் சாட்சிகளாக இருப்போம் என்பதில் ஐயமில்லை.

இப்புதிய திருவிவிலியம் வெறும் அழகுப் பொருளாக மாறாது, தனித்தும், குடும்பமாகவும், குழுமங்களாகவும், பங்காகவும் அடிக்கடி வாசித்து, படித்து, தியானித்து, செபித்து அதன் ஒளியில் ஒன்றுபட்டு வாழ்வதே கிறிஸ்தவ வாழ்வு என்பதை உணர்ந்து, திருவிவிலியத்தை நாம் அனைவரும் பல்வேறு வழிகளிற் பயன்படுத்த எம் ஆசிகள்.

26.07.1996

**********

# வழிபாடு

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது"; "இறைவனடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர், சேராதார் நீந்தார்" என்று வள்ளுவப் பெருந்தகை சுருங்கக் கூறுகிறார். எந்த மனிதனும் இறைவனை வழிபடாவிட்டால் இவ்வுலக, மறுஉலக வாழ்வு அனைத்தும் துன்பமயமாகிவிடும்.

எனவேதான், எந்த மதத்தவரும் ஊர்தோறும் கோவில்களைக் கட்டிவைத்து இறை வழிபாட்டுக்கு மக்களை அழைக்கின்றனர். "கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம" என்றும் கூறிவைத்துள்ளனர்.

கிறிஸ்தவர்களாகிய நாமும் கோயிலுக்குப் போகிறோம். இறைவழிபாட்டுக்காகத்தான் போகிறோமா என்று நம்மை நாமே மனதாரக் கேட்டல் அவசியம். கற்பனையை அனுசரித்துவிட்டோம் என்று மனத்தைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல், பழகிவிட்டபடி கோவிலுக்குப் போதல், நமது நவீன ஆடை ஆபரணங்களை அணிந்து வெளியே நாலுபேர் மத்தியிற் போய்வருவதற்குச் சந்தர்ப்பத்தை உபயோகித்தல், சந்திக்க வேண்டியவர்களைச் சந்திப்பதற்குச் செல்லுதல், மற்றவர்கள் நம்மை நல்லவர், நாணயமானவர் என்று மதிக்கவைத்தல் முதலான வேறுபல உடன் காரணங்களுக்காகவும் கோவிலுக்குப் போகிறோமா என்று நம் உள்ளத்தைக் கபடின்றிக் கேட்டுப்பார்த்தல் நன்மை தரும்.

கோவிலுக்கு எப்படிப் போகிறோம்? எதற்குப் போகிறோம்? எமது உள்ளத்தில் முன்னாயத்தம் ஏதும் உண்டா? சந்தைக்குப் போகும்போது என்ன பொருள்கள் வாங்க வேண்டும், போதிய பணம் உண்டா? பொருள்களைக் கொண்டுவருவதற்கு - கூடை. சாக்கு - என்ன வேண்டும் என்றெல்லாம் சிந்திப்போம். இவ்விதமே எந்த அலுவலுக்குப் புறப்பட்டாலும் அதற்குரிய சிந்தனையுடனும் முன்னாயத்தத்துடனும் புறப்படுவோம். திருவழிபாட்டிற்காகக் குறிப்பாக ஞாயிறுவாரம் திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்காகக் கோவிலுக்குப் புறப்பட்டுச் செல்கையில், உள்ளத்திற் செயலினில் என்ன முன்னாயத்தத்துடன் போகிறோம் என்று எண்ணிப்பார்ப்பது எமது தலையாய கடமை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. திருவழிபாட்டில் தலைமை வகிக்கும் குருவானவருடன் இணைந்து கொள்வதற்கு எமது கையில் ஒன்றுமே இல்லையானால் அதன் காரணம் என்னவென்று சிந்தித்தல் அவசியமாகும்.

ஆலயங்கள் இடவசதி நிறைந்தனவாகவும் பக்தியுணர்வைத் தூண்டத்தக்கனவாகவும் அமைக்கப்பட்டிருக்க, கோவிலுக்கு வெளியே நின்று நண்பர்களுடன் உரையாடிக் கொண்டும் வேடிக்கை பார்த்துக் கொண்டும் நேரம் போக்குவோமானால் நமது கிறிஸ்தவ சகோதரத்துவ மனப்பான்மை பாழாகிவிடும். கோவிலுக்குள்ளே வந்தாலும் ஏனையவர்களுக்குக் குழப்பம் உண்டாகும் வகையிலும், இறைவன் சன்னிதானம் என்ற சிந்தனையின்றியும் குரலெழுப்பிக் கதைத்துச் சிரித்து வேடிக்கை பண்ணுகிறவர்கள் வழிபடத்தான் வந்திருக்கிறார்களென்று கூறமுடியவில்லை.

உள்நாட்டு வெளிநாட்டு அலங்கோல ஆடைகளை அணிந்துகொண்டு ஏனையவர்களுக்குப் பராக்குக்கு வழியாகவும், பலருக்கு இடறலாகவும் வந்திருக்கும் பெண்களுக்கு வழிபாட்டில் ஈடுபடும் நோக்கமில்லாவிடினும், அவர்கள் கோவிலைக் 'கார்ணிவல் கூடமாக்குகிறார்களென்றே கூறலாம்.

இறை வழிபாட்டில் ஈடுபாடின்றிக் கோவிலுக்கு வந்து நேரத்தை வீணடிப்பவர்கள் கோவிலுக்கு வராமலே வீட்டில் இருந்து விடுவார்களாயின் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நலமாயிருக் குமென்று அனுபவஸ்தர்கள் பலர் மனம்நொந்து கூறிக்கொள்வதை நாம் பலமுறை கேட்டுள்ளோம்.

கோவில் வழிபாட்டு வேளையிற் குருவோடிணைந்து சாதாரண செபங்களிலேயே பங்குபற்றுவதற்கு வாய்திறக்க விருப்பமில்லாத வர்கள், பாடல்களிலே பங்குபற்றுவார்களென்று எப்படி எதிர் பார்க்கமுடியும். ஒரு சிறுகுழுவினர் பாடல்களைப் பாட, நாம் இரசிகர்களாக மட்டும் கோவிலிலே இருந்துவிட்டால் வழிபாட்டில் பங்குபற்றுகிறோமென்று கருத முடியாது. கோவில்களிலே பாடல்களை இணைந்து பாடி இறைவனைப் புகழ வெட்கப்படும் காரணம் வழிபாட்டில் உள்ளார்ந்தமான பற்றின்மையே. ஏனைய கிறிஸ்தவ சகோதரர்கள் இந்த விடயத்தில் நமது முன் மாதிரிகைக்குரியவர்களென்று வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவர்கள் தனிவழிபாடு செய்வதற்குச் சரியாகவே பொது வழிபாடுகளிலும் பங்குபற்றும் மரபுமுறை உடையவர்கள். இறையுணர்வில் வளரவும், இறைவனின் முன்னால் நாமனைவரும் சமத்துவமுள்ள இறை மக்கள் என்ற உண்மையை வலுப்படுத்தவும் பொது வழிபாடுகள் உதவுகின்றன. ஆண்கள் பெண்கள் இளைஞர்கள் சிறுவர்கள் அனைவரும் தமது பெருமை சிறுமைகளை மறந்து இறைவழிபாட்டில் தனிப்படவும் பொதுப்படவும் மனமொன்றி ஈடுபடச் சிறுவயதிலிருந்தே பயிற்சியளிக்கப்படுதற்குப் புனிதமான முறைகள் கையாளப்படவேண்டும்.

28.01.1983

**************

# நற்கருணை, ஒன்றிப்பின் சின்னம்

நற்கருணை ஏற்படுத்தப்பட்ட இரவின் சூழலையும், அங்கு நிலவிய மனநிலையையும், கிறிஸ்துவின் நோக்கங்களையும் நற்செய்தியாளர்கள் மிகவும் அழகாக எமக்கு எழுதிவைத்துள்ளனர். நற்கருணை ஒரு விருந்து மட்டுமன்று, அது கிறிஸ்துவின் பலியை நினைவூட்டுவதாகவும் அமைகின்றது. இரவு உணவு வேளையிலே ஆழமாக ஒற்றுமைக்காக கிறிஸ்து மன்றாடினார்: ''தந்தாய் நீர் என்னுள்ளும், நான் உம்முள்ளும் இருப்பது போல், இவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக''.

ஆதிக் கிறிஸ்தவ சமூகமும் ஒன்றுகூடும்போது அப்பத்தைப் பிட்டு உறவைக் கொண்டாடியது. நற்கருணையே கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் மையமும் என நன்கு உணர்ந்திருந்தாலேயே அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது.

ஒன்று சேர்ந்து உண்ணுவது உண்பவர்கள் மத்தியில் எவ்விதம் ஒன்றிப்பின் சின்னமாகவிருக்கின்றதோ அதே போலத்தான் நற்கருணைப் பந்தியிருப்பவர் மத்தியிலும் ஒன்றிப்பு அவசியம். இந்த ஒன்றிப்புக்காகத்தான் கிறிஸ்து செபித்தார். கிறிஸ்துவில் விசுவாசங் கொண்டவர்கள் என்ற மட்டில் கிரேக்கன் - யூதனென்றோ, ஆண் - பெண் என்றோ, அடிமை - விடுதலை பெற்றவனென்றோ வேறுபாடில்லை என்கிறார் புனித சின்னப்பர்.

இன்று கிறிஸ்தவ சமூகங்களிலுள்ள வாழ்வை எடுத்து நோக்கினால், எவ்வளவிற்கு நற்கருணையின் சிறப்பை - ஒன்றிப்பை உணர்ந்துள்ளோம் என்ற கேள்வியே எழுகின்றது. இத்தனை நூற்றாண்டு காலமாக எம் நாட்டில் கிறிஸ்தவம் வளர்ந்துள்ளது என்று பாராட்ட முடியாத நிலையில் நற்கருணையின் அர்த்தமும், அடையாளமும் வாழப்படாமலிருப்பது துன்பமானதே. எந்தெந்த ரீதியில் வேற்றுமைகள் இருக்க முடியுமோ, அந்தந்த வழிகளில் நிறைந்திருக்கின்றன. ஆலயத்தினுள்கூட அவன் வாங்கில், அடுத்தவன் நிலத்தில்; சிலர் மட்டுமே ஆலயப்பணிகளிற் பங்குபெறலாம்; வேறு சிலருக்கு ஆலயத்திலும் உரிமையில்லை; சிலரின் பகட்டான நடை, உடை, பாவனையால் எத்தனையோபேர் ஆலயத்துள் வருவது தடுக்கப்படுகின்றது. வீதிக்கோர் ஆலயம், சந்திக்கொரு கோவில், சாதி அடிப்படையில் இறைவனைப் ....புகழ?? செத்த பிணத்தை அடக்கம் பண்ணுவதிலும் வேற்றுமைகள். இவை அனைத்தையும் ஆதரித்துப், பிரிவினைகளுக்குத் தூபமிட்டுக்

கொள்ளும் அதே வேளையில் நாம் பரம்பரைக் கிறிஸ்தவர்களென்று பெருமை பாராட்டுவது அர்த்தமில்லாதது.

கிறிஸ்தவ வாழ்வுக்குத் திருப்பலி அவசியமானதுடன், அதிற் பங்குகொள்வதிலிருந்தே ஒருவனுடைய கிறிஸ்தவ வாழ்வு இன்றும் சிலவேளைகளில் கணிக்கப்படுகின்றது. நாள்தோறும், அன்றேல் வாரந்தோறும் பங்குபற்றும் திருப்பலிவிருந்து எமது வாழ்வின் மதிப்பீடுகளைச் சரியான வழியில் இன்னும் மாற்றியமைக்கவில்லை யென்றால், அனைத்துமே போலியாகிவிடும். நற்கருணை வாழ்வில்- அன்பு, தியாகம், ஒன்றிப்பு நிறைந்த வாழ்வில் - கட்டியெழுப்பப்பட வேண்டிய திருச்சபை தனது பணியை இவ்வுலகில் தொடர இம்மதிப்பீடுகளை எள்ளளவேனும் இனிமேலும் விட்டுக்கொடுக்க முடியாது. கற்பாறையிற் கட்டப்பட்ட திருச்சபை எவ்வித எதிர்ப்புக்கும் அஞ்சாது, துணிவுடன் இவ்விதம் முன்னேறுமாயின் மக்களும் தம் புதிய வாழ்வில் நிறைவையும் மகிழ்வையும் கண்டவர்களாகவும் இருப்பர். இலகுவானதை அன்றேல் கிறிஸ்துவின் போதனையின் ஒரு பகுதியை மட்டுமே போதித்துச் சான்று பகர்வது முழுமையான உண்மைக்குச் சான்று பகர்வதாகாது.

3.06.1983

**********

## ஒப்புரவு செய்தல்

''பாலைவனத்தில் ஒருவன் கூக்குரல் ஒலிக்கிறது: ஆண்டவர் தம் வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவர் தம் பாதைகளைச் செம்மைப் படுத்துங்கள்; பள்ளத்தாக்குகளெல்லாம் நிரவப்படுக, மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படுக; கோணலானவை நேராகவும் கரடு முரடானவை சமமான வழிகளாகவும் ஆக்கப்படுக'' (லூக் 3:4-5).

நமது வாழ் நாளில் மற்றுமொரு தவக்காலத்தில் காலடி வைக்கைவிருக்கும் இக்கால கட்டத்தில் இசையாஸ் இறைவாக்கினரின் மேற்படி திருச்சொற்கள் நம்மனத்தில் எதிரொலிக்கின்றன.

மேடு பள்ளங்களைச் சமப்படுத்தி, வழி வாய்க்கால் வரம்புகளை நேர்ப்படுத்தி நிலத்தை ஒப்புரவு செய்கிறான் விவசாயி. ஏனென்றால் அவன் தனக்கும் தன் குடும்பத்துக்கும் மட்டுமல்லாமல் ஊர் உலகத்துக்கும் உணவு படைக்க வேண்டும். அவன் விளை நிலத்தை ஒப்புரவு செய்வதன் மூலம் மற்றும் மனிதரோடும் ஒப்புரவு கொள்ளுகிறான். இறைவனால் தனக்கு வழங்கப்பட்டதை மற்ற

மக்களோடும் பகிர்ந்து கொள்ளப் போகிறான். ஊருக்கு நடுவேயுள்ள நன்னீர்க்கிணறு போலவும், நற்கனிதரும் மரம் போலவும் எல்லோருக்கும் உலகோடு ஒட்டி உதவப்போகிறான்.

தவக்காலம் என்றதும் ஒரு சந்தி, உபவாசம் காத்தல், சில திருவருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்ளுதல், சில விசேட தினங்களிற் குறிப்பிட்ட வகையான ஆடைகள் அணிந்து கோவிலுக்குப் போதல், சிலுவைப்பாதை செய்தல் என்பனபோன்ற சில செயற்பாடுகளின் காலம் என்று நம்மக்கள் பெரும்பான்மையினர் கருதுகிறார்கள். அதற்கப்பாற் சிந்திக்கச் செயற்படப் பயின்று கொள்ளவில்லையெனக் கூறலாம். வேறு சிலர், கவலைக்குரிய தவக்காலத்தைத் தாண்டி உயிர்ப்பு ஞாயிற்றின் நினைவுகளுக்கும் கொண்டாட்டங்களுக்கும் மனத்தைச் செலுத்துவதன் மூலம் ஒருபடி உயர்ந்தும் நிற்கிறார்கள்.

இறைவன், நாம், அயலவர் (பிறர்) என்ற முத்திறத்தாரையும் நல்லியக்கமான முறையில் உள்ளடக்கிய கிறிஸ்தவ வாழ்வுக்கு நம்மை மேலும் புதுப்பித்துக் கொள்ளும் காலம் தவக்காலம். நாம் தினமும் வாழக் கடமைப்பட்டுள்ள ''கிறிஸ்தவ வாழ்வு'' மேலும் பொருள் பொதிந்த பயனுள்ள வாழ்வாக அமைவதற்கு நாம் சிந்தனை-சொல்-செயல் யாவற்றாலும் உந்து சக்தி ஏற்றிக்கொள்ளும் காலம் இக்காலம்.

தன்மறுப்பு முயற்சிகள், பரித்தியாகச் செயல்கள், ஒறுத்தல்கள், ஒருசந்தி, உபவாசங்கள், திருவருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்ளுதல், திருச்சிலுவைப்பாதை தியானித்தல் முதலாம் தவக்கால முயற்சிகள் யாவும், மேற்கூறிய ஒப்புரவு நிறைந்த பயனுள்ள நாளாந்த கிறிஸ்தவ வாழ்வில் நம்மை மேலும் வீறுநடைபோடச் செய்வதற்கு உதவியும் அருளும் பெற்றுத்தரும் விடயங்களே.

திருத்தந்தையவர்கள் இவ்வாண்டின் தவக்காலத்தைப்பற்றிய மடலிலே மேற்கூறிய கருத்தினையே வற்புறுத்தியுள்ளார்கள். நமது கண் காணவும், நீண்ட தொலைதூரத்தில் உலகெங்கணும் வாழும் ''நம் அயலவரை''ப் பற்றித் திருத்தந்தையின் மடலில் நன்கு விபரிக்கப்பட்டுள்ளது. மானிடப் பிறவிக்குரிய அடிப்படை வசதி-வாய்ப்புக்கள், உரிமைகள் எதுவுமின்றிச் செத்துக் கொண்டே வாழ்ந்து கொண்டிருக்கும் கோடானுகோடி ''நம் அயலவர்'' பற்றி இத் தவக்காலத்தில் நாம் இறையன்புடன் சிந்தித்து ஆவன செய்ய முற்படவேண்டுமெனக் கேட்டுள்ளார்.

மேலும் இந்த ஆண்டு கிறிஸ்துவின் திருப்பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றின் 19ஆம் நூற்றாண்டு யூபிலி வருடமாக நினைவு கூரப்படுகிறது. எனவே, இத் தவக்காலம் நமது ஒப்புரவினதும், பகிர்ந்து வாழும் செயற்பாடுகளினதும் விசேட சிந்தனைக்கு உரிய ஆண்டு எனத் திருத்தந்தை எடுத்துக்காட்டியுள்ளதைக் கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் கருத்தூன்றிச் சிந்திக்கவேண்டியது தவிர்க்கமுடியாத கடமைப்பாடாகும்.

11.02.1983

**********

# வழிபாட்டிற்கா? இரசனைக்கா?

"ஒருமுறை பாடுதல் இருமுறை செபிப்பதற்குச் சமம்" என்பது புனித அகுஸ்தீனார் வாக்கு. மொழியின் பொருளையும் இறை உணர்வையும் பெருக்கி, புலன்களை வயப்படுத்தி, உள்ளத்தை உயர்த்தி இசைவழிபாடு மனிதனை ஆட்கொள்ளுகிறது என்பது அனுபவம். இதனாலேயே, எம்மதத்தவரும் இறைவழிபாட்டில் இசைக்கு மிக முக்கியத்துவம் அளித்துள்ளனர். குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு இசையால் இறைவனைப் புகழ்தல் பண்டுதொட்டு நிலவி வரும் மரபாகும். புலன்களைச் சிதறவிடாமாலும் சோர்ந்து போகாமலும் இறைவழிபாட்டில் ஈடுபடுவதற்கு இசை பயன்படுகிறது.

ஆனால், இன்று இறைமக்கள் பெருமளவிற் கூடிப் பங்குபற்றும் பெருவிழாக்கள், பொது வழிபாடுகள், விசேட நிகழ்ச்சிகள் வந்துவிட்டால் இசைக் குழுவினருக்கும் அவர்களது பயிற்சி யாளருக்கும் தலைகால்தெரியாத உற்சாகம் பிறந்துவிடுகிறது போலும். மக்களையும் பிறதரிசகர்களையும் திணறடித்து விடுவார்கள். எங்கிருந்தோவெல்லாம் தேடிக் கண்டுபிடித்து, முதல் தொடக்கம் முடிவுவரை புத்தம் புதிய பாடல்களை இசைத்து வழிபாடு முழுவதும் அவர்களுக்கே உரித்தாக்கிக் கொள்ளுவார்கள். மேலும், கோவிலில் உள்ள வழக்கமான வாத்தியக் கருவிகளோடு இனம் இனமான நரம்பு, தோல், ஊதுகுழல், காற்றடைப்புக் கருவிகளையெல்லாம் சோடி சோடியாகக் கொண்டுவந்து, பாடுகிற பாடல்களின் சொல் பொருள் ஒன்றும் மக்களுடைய காதுகளிலே கோளாமல் - புரியாமல் முழக்கமிட்டுக் குதூகலிப்பார்கள். இவற்றுக்காக, பொதுப் பணமும் தனிப்பணமும்கூடத் தாராளமாகச் செலவு செய்வார்கள். ஆனல் இறைமக்களோ ஒரு தாளவாத்திய

இசைக் கச்சேரிக்குப் போனவர்களுடைய நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறார்கள். ஏனென்றால், பாடல் எதிலும் பங்குபற்ற அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. பாடலும் இராகமும் அவர்களுக்கு முற்றும் புதிதாக இருப்பதே முதற் காரணமாகும்.

எனவே, பெருமுயற்சி எடுத்து ஆரவாரம் பண்ணப்பட்ட திருவழிபாடு மக்கள் இணைந்து பங்குபற்றாத ஒன்றாகவும், வீண் முயற்சியாகவும் போய்விடுகிறது. வண்ணக் கடுதாசிகளில் புத்தம் புதிய பாடல்களை அச்சேற்றி வழங்குவதும், தருவிக்கப்பட்ட இசைக் கருவிகள்-வித்துவான்களால் ஆரவாரம் பண்ணப்படுவதும் வெறும் பகட்டுக் குரியவையாய் விடலாம்.

ஆயிரக் கணக்கான இறைமக்கள் பங்குபற்றும் சிறப்பு இறைவழி பாடுகளிற் சந்தர்ப்பத்துக்கு இணங்கிப்போகாத நீளமான பல்லவி, அனுபல்லவியுடன் கூடிய பாடல்களை மீட்டு, மீட்டுப் பாடகர் குழாம் நேரம் எடுத்துப் பாடிக்கொண்டிருப்பதைத் தவிர்ப்பது அவசியம். அதிலும் மக்கள் இணைந்து கொள்ள இயலாத புதுப் பாடல்களை நீளமாகப் பாடிச் சலிப்படைய வைப்பதிற் பொருள் இல்லை.

இவ்விதமான வெளிவேடப் போக்குகளும், முறைகளும் கிறிஸ்தவ வழிகாட்டிகளும், துறவறத்தாரும் முன்நின்று நடாத்தும் வழிபாட்டில் நிறைந்திருப்பதைப் பார்க்குமிடத்து, அர்த்தமுள்ள வழிபாட்டிற்கேற்ற பாடல்கள் பயன்படுத்தும் காலம் வரலாம் என்ற நம்பிக்கையே அற்றுப்போகிறது!

புதிய பாடல்கள் மக்களுக்குப் போதியளவு அறிமுகம்-பழக்கம் செய்யப்பட்ட பின்னரே பெரிய வழிபாடுகளில் இடம்பெறவைப்பது பயனுடையது. எமது கிறிஸ்துவ சகோதரர்களின் ஆராதனை-செபவழிபாடுகளில் முழு உறுப்பினர்களுமே பாடிப் பங்குபற்றும் வகையில் பாடல்களும் செபங்களும் நடைபெறுவதை நாம் முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

16.08.1985

**********

# அருள் - சாதனத்தில் ஒப்புரவு

சமூகத்தில் வாழும் மனிதனின் உறவுகள் பல்வேறு காரணங்களால் முறிவது வழக்கம். வேறுபட்ட குழுக்களிலும், சமூக அமைப்புக்களிலும் வாழும் நாம் உறவு புதுப்பித்து வாழ வேண்டும் என்ற ஆழமான உணர்வு உள்ளத்தில் உருவாகின்றது.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் புனித ஆண்டிலே ஒப்புரவைப் பற்றிப் பல்வேறு மட்டங்களில் நாம் பேசி வருகிறோம். 'ஒப்புரவின் நற்செய்தியைப் போதிப்பதே என்பணி' என்று கூறிய சின்னப்பரின் வழிகாட்டுதலைப் பின்பற்றித் திருச்சபை ஒப்புரவாக்கும் அருட் சாதனத்தின் முறையையும் மக்களின் நலனுக்காகக் காலத்திற்குக் காலம் மாற்றி வந்துள்ளது. ஆனால், இத்திருவருட்சாதனத்தைப் பற்றிய விளக்கம் இன்றும் மிக அரிதாகவும், அர்த்தக் குறை வுள்ளதாகவும் இருப்பது கவலைக்குரியதே. தன்னோடும், சகோதரனோடும், அதன் மூலம் இறைவனோடும் ஒப்புரவாகி, கிறிஸ்தவ சமூகத்தைக் கட்டியெழுப்பவென்று தரப்பட்ட ஒப்புரவின் அருட்சாதனம் பலவழிமுறைகளில் நற்கருணை பெறுவதற்குத் தரப்படும் வழிச்சீட்டுப்போல் அமைவதன் காரணம் அதன் மகத்துவத்தைப் புரிந்து கொள்ளாமையேயாகும். இறைவனின் இரக்கத்தையும், சகோதரனால் ஏற்றுக் கொள்ளப்படுவதையும் கொண்டாடும் திரு - அடையாளம் சந்தர்ப்ப சூழலாலும், போதிய ஆயத்தமின்மையாலும், குருக்களின் நேரமின்மை, கவலையீனம் முதலியவற்றாலும் மகிழ்ச்சியான அனுபவமாக அமையாது விடுவதுடன், சிலவேளை, பயங்கர அனுபவமாகவும் மாறுவதுண்டு. அவசரத்தில், ஆலயவிழாக்களிலும், பாஸ்கா - நத்தார் கொண் டாட்டங்களிலும் "செய்யப்படும்" பாவசங்கீர்த்தனம் நிறைவு தராமல் விடுவது ஆச்சரியமன்று. இன்னும் சிறுவர்கள் எதையோவெல்லாம் சொல்லிவிட்டுப் போவதைப் பார்க்கும் போது, அவர்கள் இத்திருவருட்சாதனத்திற்குப் போகவேண்டுமா? போக அறிவு போதுமானதா? என்ற கேள்விகள் எழுகின்றன.

பல்வேறு விதமான குறைபாடுகள் நிலவுவதாகக் கருதப்பட் டமையால் 1974 ஆம் ஆண்டு இத்திருவருட்சாதனம் அருளப்படும் முறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. திருப்பலியிலும், ஏனைய திருவருட்சாதனங்களை நிறைவேற்றும் முறைகளிலும்

மாற்றங்கள் வந்தபோது, எவ்வளவு ஆர்வத்தோடு அவை செயற்படுத்தப்பட்டனவோ, அதேவித ஆர்வம் இவ்விடயத்திற் காணப் படாமைக்குரிய காரணம் இன்றும் புரியாப் புதிராகவே இருக்கிறது. வழிபாட்டு மாற்றங்களனைத்தும் சிந்தனைப் புரட்சியிலிருந்து வந்தமையால், அவற்றைப் புரியாது வெளி மாற்றங்களை மட்டும் கொண்டுவருவது அர்த்தமற்றதாயுள்ளது.

“பாவத்தின் கனாகனத்தை உணராமையே பெரிய பாவம்” என்று கூறிய மறைந்த திருத்தந்தை ஆறாம் சின்னப்பரின் கூற்று எவ்வளவு உண்மையோ, அதே போலத்தான் அனைத்தையும் பாவம் எனக் கணிக்கும் நிலையும் பாதகமாக அமைகின்றது. பயத்தாலும், பக்தியாலும் அடிக்கடி இத்திருவருட்சாதனத்தைப் பயனற்ற விதமாகப் பெறுவதும் தவிர்க்கப்படவேண்டும். பாவத்தின் கனாகனத்தை உணரமுடியாத சிறுவனுக்கு அன்பிற்கு மேலாக இறைவனின் நீதிக்கு முக்கியத்துவம் கொடுத்து, பயத்தை உள்ளத்தில் விதைப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. சமூகத் தொடர்புச் சாதனங்களின் துரித வளர்ச்சியால் உலகமே ஒரு கிராமமாக மாறிவரும் இந்த யுகத்திற் பெட்டிக்குட் பதுங்கி, இறைவனின் இரக்கத்தைக் கொண்டாடுகிறோம் என்று சொல்வது மிகவும் கடினமாயுள்ளது.

திருஅடையாள ஒப்புரவுக்கு முன் அல்லது அத்தோடு வாழ்வின் உறவுகளில் ஒப்புரவு வரவேண்டும் என்பதற்கு எள்ளளவேனும் சிந்தனை கொடுக்காத அருட்சாதனம் எந்தளவுக்கு அர்த்தமுள்ளது எனக் கேட்கத் தோன்றுகின்றது. வீடுகளிலும், குடும்பங்களிலும், ஊர்களிலும், பங்குகளிலும், துறவறக் குழுக்களிலும் மறைமாவட்டத்திலும், நாட்டிலும் ஒப்புரவுப் பணியைச் செயற் படுத்துவோம். நாம் குறை செய்பவர்கள் - மற்றவர்களையும் ஏற்க வேண்டும். அவர்களோடு ஒன்றித்து வாழவேண்டும், ஒன்றிணைந்து அன்புச் சமுதாயத்தைக் கட்டி யெழுப்பவேண்டும், மற்றவர்களுக்கும் சாட்சிகளாக இருக்க வேண்டும் என்ற மனப்பாங்குடன் வாழ முற்பட வேண்டும். அதே அன்புறவில் இத்திருவருட்சாதனத்தையும் நிறைவேற்ற ஆவன செய்வது இன்று அவசியமாகவுள்ளது.

6.05.1983

**********

# ஆடம்பரம் இன்றி அருள் பெருக்குக

வருட வட்டத்திலே நமது பெரும்பாலான ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறும் காலம் இது. ஊர்கள் தோறும் புனிதர்கள் பலரின் பேரால் ஆலயங்கள் எழுப்பப்பட்டுள்ளன. அந்தந்த ஊர் மக்கள் தத்தம் ஆலயங்களிலும், கோவில் கொண்ட புனிதர் மேலும் மிக்க அபிமானமும் பக்தி நம்பிக்கையுமுடையவர்களாக இருக்கிறார்கள். அதனால் வருடாந்த திருவிழாக்களைத் தம்மாலியன்ற அளவு சிறப்புடன் கொண்டாட ஆர்வம் காட்டுகிறார்கள்.

காலத்தின் கோலத்தால் வெளி ஆடம்பரங்கள், ஊர்வலங்கள் முதலியன இருந்தாலும் இல்லாவிட்டாலும், நமது புனிதர்கள், கோவில் திருவிழாக்கள் சம்பந்தமாக நமது மனப்பாங்கு, உள்நோக்கம், ஆன்மீக நலன்கள் சம்பந்தப்பட்ட வகையில் மாற்றத்துக்கும் குறைச்சலுக்கும் இடம் இருக்க முடியாது.

உலகம் முடியும்வரை திருச்சபையுடன் இருப்பதாக வாக்குப்பண்ணிய கிறிஸ்துவும், திருச்சபையின் இயக்காற்றலைக் கொண்டுள்ளவரான தூய ஆவியானவரும் காலத்துக்கேற்றபடி திருச்சபையையும் மக்களையும் வழிநடத்தி வருகிறார்கள். ஆவியின் அருளால் காலத்துக்குக்காலம் திருச்சபையில் புனிதர்கள் தோன்றி, வாழ்ந்து, சிறப்பான இறைபணிகள் புரிந்து இறையரசை மிளிர்விப்பதில் பெரும் பங்காற்றி வந்துள்ளார்கள். அவர்கள் இறந்த பின்னரும் திருச்சபையால் பீடத்தில் ஏற்றி வணங்கப்படும் புனிதர்கள் வரிசையிற் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து மக்களின் ஆன்மீக இலௌகீக வாழ்க்கையில் கலங்கரை விளக்கங்களாக இருந்து மோட்ச கரைக்குத் திசைகாட்டி நிற்கிறார்கள். இன்றும் இக்காலத்தின் இயல்புக்கேற்ப மக்களுக்கு இறைபணியாற்றுவதற்கு ஆவியினால் இயக்கப்படும் புனிதர்கள் திருச்சபையில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

புனிதர்களின் வரலாறுகளை நாம் படிக்கும் போது அவர்களில் பலர், அவர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் மற்றவர்களுக்கு விசித்திரமானவர்களாகவும், கேள்விக்குரியவர்களாகவும் ஏற்றுக் கொள்ள முடியாத புதுப் போக்குடையவர்களாகவும்கூட விளங்கியதுண்டு. காலங்கடந்துதான் அவர்களுடைய பணியின

மகத்துவம், தொண்டின் சிறப்பு, கொள்கையின் உட்கிடக்கை முதலியன மற்றவர்களுக்குப் புரிந்தது எனக் காண்கிறோம். இலைமறைகாயாக வாழ்ந்தவர்கள் பலர் ஆவியின் அருளால் திருச் சபைக்குக் காலத்துக்கேற்ற அரும் பணியாற்ற முன்வைக்கப்பட்டனர்.

இந்த வகையில் நாமும் - என்ன அந்தஸ்தில் இருப்பினும், ஆவியானவரின் அருளாற் காலத்தின் இயல்பறிந்து வளர்ந்து கொண்டிருக்கும் திருச்சபைக்கும் மக்களுக்கும் ஏற்ற பணிபுரிய அழைக்கப்பட்டுள்ளோம். பிரச்சினைகள் மேலாடித் துன்பங்கள் பெருகுகையில் ஆவியானவரும் தமது அருட்கதிர்களை வாழும் புனிதர்கள் மூலமாக வழங்கத் தவறியதில்லை.

எனவேதான், திருவிழாக் காலம் ஆவியானவரின் அருட் கொடைகளின் காலம் என்றும், திருவிழாக்கள் அடக்கமாக நடைபெறினும் ஆன்மீகச் செல்வங்களுக்குக் குறைவிருக்க முடியாதென்றும், கோவில் கொண்டுள்ள புனிதர்கள் வாயிலாகவும் வாழும் புனிதர் மூலமாகவும் நாம் உண்மைப் பணியாற்ற முயற்சிக்க வேண்டுமெனவும் குறிப்பிடுகின்றோம்.

14.06.1985

**********

# புனிதர்களும் நாமும்

"கோவில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்". இது நம் முன்னோர் சொல்லிவைத்த பொன் மொழி. இறைவழிபாடும், அதனோடு இணைபிரியாது செயற்படவேண்டிய பிறரன்பு, நல்லொழுக்கம் முதலியனவும் மனிதனுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் இன்றியமையாதவை என்பது அதன் உட்பொருள்.

கிறிஸ்தவர்கள் குறிப்பாகக் கத்தோலிக்கர் வாழும் ஊர்களிலே ஒன்றுக்கு மேற்பட்ட கோவில்கள், வெவ்வேறு புனிதர்கள் பேரில் இருப்பதனைக் காணலாம். "ஊருக்குப் பல கோவில்கள் ஏன்?" என்ற கேள்வி ஒரு புறமிருக்க, கத்தோலிக்கர்கள் பொதுவாகத் தாம் சார்ந்த எல்லாக் கோவில்களையுமே அழகுப் பொலிவு, திருவிழாச் சிறப்பு ஆகியவற்றில் குறைவுபடவிடாது ஏட்டிக்குப் போட்டியாகக் கூடப் பேணி வருவர்.

நம் சொந்த ஊர்களிற் கோவில் எடுத்துக் கொண்டாடி வரும் புனிதர்களைப் பொறுத்தவரையிலும், அயலூர்களுக்கும் தூர

இடங்களுக்கும் கிரமம் தவறாது யாத்திரை சென்று வழிபட்டு வரும் புனிதர்களைப் பொறுத்த வரையிலும் நமது மனப்பான்மை என்ன என்று கபடமின்றி ஆராய்ந்து பார்ப்போமானால், பெரும்பாலும் சம்பிரதாயமும், வீண்பெருமையும், குருட்டுப் பத்தியும், பயமும் அங்கே மிஞ்சிநிற்பதையும் காணலாம்.

நமது சரீர சுகம், தொழில் வாய்ப்பு, வாழ்க்கைச் சிறப்பு, படிப்பு-பரீட்சைகள், நேர்த்தி, நன்றிக்கடன் முதலிய ஏதோவொரு நமது உள்ளக் கிடக்கைக்காகப் புனிதர்களை விடாப்பிடியாக வழிபடுகிறோமேயன்றி, புனிதர்களின் வாழ்க்கையைப் பின்பற்றுவது நமது குறிக்கோளாக இருக்கிறதா? என்று உள்நோக்கிப் பார்க்க வேண்டும். "இன்ன நாளிலே இன்ன புனிதருடைய கோவிலுக்குப் போய் இவ்வளவு தொகைக்கு மெழுகுதிரி கொழுத்தி, இன்னதொகை உண்டியலிலே போட்டு, எனது இந்தக் கோரிக்கையைப் புதுப்பித்து விட்டு வரவேண்டும்" என்று பய-பக்தி கொண்டிருக்கிறோமா? அல்லது அந்தப் புனிதருடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்து-கேட்டு-அறிந்து, அவர் தம் வாழ்நாளிற் கடைப்பிடித்து ஒழுகிய இன்ன நற்பழக்க வழக்கங்களைப் புண்ணிய சீலங்களை நானும் என்னால் இயன்ற மட்டும் எனது வாழ்விலும் கைக்கொண்டு நடக்க முயற்சிக்க வேண்டும் என்ற கொள்கை நம்மிடம் உண்டாவென உண்மையுடன் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

"நான் வழமைப்பிரகாரம் இன்ன புனிதரின் கோவிலுக்குப் போய், இன்னின்ன வாடிக்கைக் கருமங்களைச் சரிவரச் செய்துவிட்டேன். ஆதலால், எனக்கொரு குறையும் நேராது, நல்ல உழைப்பு வரும்" என்று மனத் திருப்திப்பட்டுக் கொள்வதில்தான் நமது புனிதர் வழிபாடு அடங்கியுள்ளதா? நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து, நமது வழிமுறைகளைச் சரியான இலக்கில் திருப்பிக் கொள்ளாத விடத்து, குறித்த புனிதர் வழிபாட்டால் பயன் அதிகமுண்டென்று கூறமுடியாது.

சில வருடங்களுக்கு முன்புவரை, தாம் (எப்படியோ) வழிபட்டுவரும் புனிதர்களின் பெயர்களைத் தம் பிள்ளைகளுக்குச் சூட்டி மகிழும் கிறிஸ்தவ பெற்றோர் பலர் இருந்தனர். இப்போதோவெனில், புனிதர் வழிபாட்டுக்கும் பிள்ளைக்குப் பேர் வைத்தலுக்கும் முடிச்சுப்போட வேண்டாமெனப் பெரும்பாலார் தீர்மானித்துவிட்டனர் எனத் தெரிகிறது. ஏனெனில், சினிமா நடிகர்-நடிகையர், தேசத் தலைவர்கள், விளையாட்டு வீரர்கள் முதலியோருடைய பெயர்களைச் சூட்டி, நவீன உச்சரிப்புடன் கூப்பிடும் போலி நாகரிகக் கவர்ச்சி யாவற்றையும் மிஞ்சியதாய்விட்டது. என்ன மொழி? என்ன பொருள்?

என்று புரியாத பெயர்கள் எல்லாம் பிள்ளைகளுக்கு வைத்துக் கூப்பிடுகிறார்கள்! இந்துசமயச் சகோதரர்களில் அறிவறிந்தவர்கள் நல்ல பொருள் பொதிந்த அழகான பெயர்களை ஆராய்ந்து தம் பிள்ளைகளுக்குச் சூட்டுகையில், கிறிஸ்தவர்களில் பலர் மேற்கூறிய போலி நாகரிக மயக்கத்தில் வீழ்ந்துவிட்டார்கள்! புனிதர்கள் என்று நாம் வழிபடுவோர், ஏனைய மனிதர்களைவிட ஏதோ ஒரு தனித்துவமான பிறப்பு - வளர்ப்பு - வாழ்வு - மரணம் அடைந்து மோட்சத்தில் இருப்பவர்கள் என்று எம்மிற் பலர் தெரிந்தும் தெரியாதவர்கள் போற் கருதிக் கொண்டு ஓரளவில் தடுமாற்றம் அடைகிறோம். திருச்சபையிற் போற்றப்படும் புனிதர்களில் மிகப்பலர் எம்மைப் போன்ற சாதாரண குடும்பங்களில் தோன்றி வாழ்ந்து மரித்தவர்களே. சிறுவர்கள் - வளர்ந்தோர், ஏழைகள்-பணக்காரர், படித்தவர்-படியாதவர், இல்லறத்தோர்-துறவியர், ஆண்கள்-பெண்கள் முதலாம் பல திறத்தோர் அவர்களில் உளர். தத்தமக்குரிய இறை அழைப்பை ஏற்று, கிறிஸ்துவுக்காக வாழ்வாங்கு வாழ்ந்து மரணித்தவர்கள் அவர்கள். நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்க்கைப் பிரச்சினைகளில் முன்மாதிரிகையாகக் கொண்டு பின்பற்றத் தகுந்தவர்கள் புனிதர்கள் என்பதை நாம் நினைவில் நிறுத்தவேண்டும்.

நாம் வழிபடும் புனிதர்களுக்கு விடுக்கப்பட்ட இறை அழைப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. புனிதர்கள் ஆனோரைப் போன்று, நாமும் கிறிஸ்துவுக்காக நமது அழைப்பை ஏற்று, புனிதர்களின் வழியில் வாழ்ந்து, அவர்கள் அடைந்த பேரின்பத்தை அடைய முயற்சிப்பதுதான் கண்மூடித்தனமான புனிதர் வழிபாடுகளைவிட அவசியமானதாகும்.

4.11.1983

**********

# அன்னையின் பக்தி

வத்திக்கான் சங்கத்தின் புரட்சிகரத் தீர்மானங்களின் பின்னர், புனிதர்கள் மீது காட்டப்பட்ட பக்தி புறக்கணிக்கப்பட, அவர்களுக்குரிய வணக்க நிலைகள் தூக்கியெறியப்பட்டன என்கின்ற தப்பான எண்ணம் தலைதூக்கியுள்ளதை உணர முடிகின்றது.

ஆனால், உண்மை அதுவன்று. இதற்கு மாறாகத் திருச்சபைச் சங்க ஏடே சான்று பகர்கின்றது. திருச்சபையைப் பற்றிய சங்க ஏட்டில் எட்டாம் அதிகாரம் முழுவதுமே அன்னை மரியாளைப் பற்றியே கூறுவதைக் காணலாம்.

கிறிஸ்துவுக்கும் மரியாளுக்கும் உள்ள தொடர்பு எவ்வளவோ, அந்த அளவு தொடர்பு திருச்சபைக்கும் அவளுக்கும் இடையே உண்டு. கல்வாரிக் குன்றிற் கழுமர நிழலிற் கடவுள் மகனால் மனுக்குலத்துக்கு அவள் அடைக்கல அன்னையாக நியமிக்கப் பட்டவள்.

அதுமட்டுமன்று; கிறிஸ்து விட்டுச்சென்ற பணியை மீண்டும் தொடரவேண்டி, தூய ஆவியானவரின் வருகை வேண்டிச் சீடருடன் சேர்ந்து செபித்தவள். எனவே, ஆவியின் வருகையிலும் அதன்பின் திருச்சபையின் தீவிர வளர்ச்சியிலும் மரியன்னைக்கும் பெரும் பங்குண்டு.

உலகெங்கும் அவள் பெயரால் திருத்தலங்கள்: உலகப் புகழ்பெற்ற லூர்துகெபி, பாத்திமாபதி, வேளாங்கண்ணி மட்டுமல்ல, நமது ஈழத்திலும் மடுத்திருப்பதி, தேவத்தை போன்ற தேவ அன்னையின் யாத்திரைத் தலங்களை நாம் காணக் கூடியதாய் உள்ளது.

மரியன்னையின் பக்தி தேவைக்கு அதிகமாகக் காட்டப்படுவதாக ஒரு கருத்து நிலவுகின்றது. சிறப்பாகச் செபமாலைப் பக்தி முயற்சி இக்கண்டனத்துக்கு இலக்காகி நிற்கின்றது.

ஆனால், செபமாலையின் மேன்மையை உணராதவர்களால் உரைக்கப்படும் குற்றச்சாட்டு அதுவாகும். செபமாலை சாதாரணமான தொன்றல்ல. அதன்மூலம் வேதாகம உண்மைகளே தியானிக்கப் படுகின்றன.
தாயாகவிளங்கும் அவள் தந்தையிடம் பரிந்து பேசும் சக்தியாகவே

கொள்ளப்படுகின்றாள். அன்னைக்கே உரிய அன்பிலும், பண்பிலும் இன்றைய அகில மாந்தருக்கெல்லாம் ஆதரவாக அவள் விளங்குகின்றாள்.

கானாவூர்க் கலியாணவீட்டில் அடுத்தவர் பிரச்சினையை உணர்ந்து, அவர்களாகக் கேட்குமுன்னர் அவர்களுக்கு உதவும்படி பரிந்து பேசிய அன்னை, கையேந்தி நிற்கும் பக்தர்களின் குரலை அசட்டை செய்வாளா?

9.05.1980

**********

# இவையா திருவிழாக்கள் ?

எமது கத்தோலிக்கப் பங்குத் தளங்களிற் குடும்பச் சூழ்நிலை அமைப்பும் உணர்வும் அனைவர்க்கும் உருவாக வேண்டும். திருச்சபையின் திருவழிபாட்டுக் காலச் சக்கரத்திலே பாஸ்கா திருவிழாக் காலம்தான் மையமான இடத்தைப் பெற்றிருப்பினும், எமது நாட்டிலே பங்குக் கோவில் திருவிழாக்களுக்குத்தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவது வழக்கம்.

ஊர்க்கோவில் திருநாள் வந்துவிட்டால் பங்கு மக்களுடைய அக்கறை முழுவதும் கோவிலை நாடித்தான் இருக்கும். தொழிலை நாடிப் பிற ஊர்களிலே வசிப்பவர்கள்கூட ஊருக்கு வந்துவிடுவார்கள். நவதின வழிபாடுகள், திருவுரைகள், திருப்பலி மற்றும் புறவேலைகள் யாவற்றிலும் அனைவரும் தத்தம் பங்கைக் குறைவற நிறைவேற்றுவதில் மன நிறைவு காண்பார்கள். கோவில் திருவிழா நடைபெற்று முடிந்துவிட்டால் தேவ ஆசீர்வாதமும் ஊரில் கோயில் கொண்டிருக்கும் புனிதரின் ஆசியும் தம்மீது மழைமாரியாகப் பொழியப்பட்டுள்ளன என்ற ஒரு மனப்பூரிப்பும், இனசனம் ஒருவருக்கொருவர் அன்புறவைப் புதுப்பித்துக் கொண்ட புதுமைச் சிலிர்ப்பும் வெளிப்படையாகக் காணப்படும்.

மேலும், கோவில் திருநாள் நடந்து முடிந்துவிட்டால் நடந்துபோன 9-10 நாள்களிலே கிறிஸ்துவ அகவாழ்வு புதுப்பிக்கப்பட்டமையின் வெளியடையாளங்களும் காணப்படும். திருவுரைகளைக் கேட்டுணர்ந்தமையாற் சமயக் கல்வியறிவு மட்டத்தில் ஒரு வளர்ச்சியும் நுண்ணிய விளக்கங்களும் உண்டாயிருக்கும்.

காலகதியிற் பல்வேறுபட்ட அகக் காரணங்களாலும் புறத்தாக்கங்களாலும் இந்நிலை படிப்படியாகக் குறைந்து தேய்ந்துவிட்டமையை யாவருமறிவர். கோவில் திருநாளின் உள்ளடக்கமான பெறுமதிகள் குறைந்து போயினமைக்கும், எதிர்பார்க்கப்படும் பயன்கள் எதிர்மாறாகப் போய்க்கொண்டிருப்பதற்கும் நிர்வாக நடைமுறைகளில் மெல்ல மெல்லப் புகுந்துவிட்ட போலி வேலைகளும் காரணமாகும். உ-ம்: கோவில் திருநாள் சம்பந்தமாக ஊர் மக்களுக்கு வழிபாடுகளுடன் சம்பந்தப்பட்ட பாடல்களை நேரகாலத்துடன் பழக்கிவைப்பதற்கு வேண்டிய முன்னாயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின், திருப்பலியில் முழுமையாகப் பங்குபற்றினோம் என்ற பெருமிதமும் இருக்கும். அத்தோடு அந்தப் பயிற்சி அடுத்தவருடம் வரைக்கும் உபயோகமாயிருக்கும். இதனை விடுத்து, கோவில் திருநாளுக்குக் கூலிக்குப் பாடும் பிறவூர்ப் பாடகர்களையும் வாத்தியங்களையும் இறக்குமதி செய்திருப்பின் "யாரோ பாடினார்கள்" என்ற உறவில்லாத உணர்வும் பணச்செலவும்: பின் உபயோகமற்ற வெறுமையுந்தான் திருநாளுக்குப் பிறகு மிஞ்சும்.

மேலும், பங்கு மக்களிடையே உயர்வு - தாழ்வு பார்த்தல், கோவிலுக்கு வெளியேயுள்ள புற அலுவல்களிலேதான் அக்கறையும் நேரப்போக்கும், பங்குத்தந்தையில் குறைகண்டுபிடித்து விமர்சனம் பண்ணும் படித்தவர்களின் பற்றற்ற தன்மை இவை முதலியவற்றால், கோவில் திருநாளின் பின்னே மிஞ்சுவது பலதரப்பட்ட மனவருத்தங்களும் சமாதானக் குறைவுமாயிருத்தலைக் காணக் கூடியதாயிருக்கின்றது.

கோவில் திருநாளின் உச்சக்கட்டமாக அமைவது திருநாள் திருப்பலி. ஆனால், அங்கு பொருளாதார வசதி குறைந்தவர்கள் தலை காட்ட முடியாத அளவுக்கு ஆடம்பர அலங்காரக் களியாட்டச் சூழ்நிலை பிறநாட்டுப் பணத்தாற் கலகலக்கிறது. வேற்றுமைகளும் விரக்தியும் வேதனைகளும் திருநாள் முடிவிற் குடும்பத்தின் உள்ளேயும வெளியேயும் முற்ற முடிந்த பயனாக இருக்குமாயின் அந்தக் கோவில் திருநாளும் ஒன்பது நாள் ஆயத்தமும் எதற்குப் பயன்பட்டன எனக் கேட்கத் தோன்றுகிறது. பங்குத்தந்தையின் அன்புறவுடன் கூடிய தலைமையில் ஊர் மக்கள் அனைவரும் இறையன்பிலும் ஒற்றுமையிலும் சமாதானத்திலும் திளைக்கும்படியான கோவில் திருநாள் வழிபாடுகள் நடைபெற்றுப் பயனடைய ஒவ்வொருவரும் எமது பங்களிப்பினை வழங்குவோமாக.

22.06.1984

**********

# யாத்திரைத் தலங்கள்

உலகெங்கும் பல யாத்திரைத் தலங்கள் உண்டு. நமது நாட்டிலும் பல உண்டு. அன்றும் இன்றும் இத்தலங்களுக்குச் செல்லும் யாத்திரீகர்கள் கூட்டமும் உண்டு.

யாத்திரிகைத் தலங்கள் வளர்ச்சி பெறுகின்ற அளவுக்கு யாத்திரீகர்கள் வளர்ச்சி பெற்றுள்ளனரா? வளர்ச்சி என்று நாம் குறிப்பிடுவது தொகையை அன்று.

முன்னர் புனித தலங்களுக்குச் செல்பவர்கள் தமது பக்தி நிலையில், காடுகள், மலைகள், ஆறுகள் தாண்டிப் பல இன்னல்களுக்கிடையிற் சென்றனர். இவற்றைத் தமது விசுவாச மறுமலர்ச்சிக்காக உவப்புடன் ஏற்றுச் சென்றனர். சென்றவர்களும் உளநிறைவோடும் புத்துணர்வோடும் தம் இடங்களுக்குத் திரும்பினர்.

ஆனால், இன்றைய நிலை? அன்று நிலவிய விசுவாச நிலைமை வீழ்ச்சியுற்று அவை கேளிக்கைப் புரிகளாக மாறி வருகின்றன. பக்தி நிலைமை மாறி பாஷன்'களும், பகட்டுக்களும், பகற்கொள்ளைகளும் மலிந்த சந்தைகளாகக் காட்சி தருகின்றன.

வேறு சிலர், குடித்துக் கும்மாளம் அடிக்கும் இடமாகக் கருதுகின்றனர். குடிப்பவர்களும் வெளி இடங்களிற் குடித்துவிட்டு அங்கு வருவது மல்லாமல் அங்கேயே வைத்துக் குடிப்பதும் வேதனைக்குரியவையாகும்.

பெரும்பாலானோருக்கு வழிபாடுகளிற் பங்குபற்றுவது இரண்டாவது நோக்கமாகவும், ஊர் பார்ப்பதும், உவகை கொண்டாடுவதுமே முதல் நோக்கமாகவும் உள்ளன. வழிபாட்டு வேளைகளில் அறிவிக்கப்படும் நடைமுறை விதிகள் எல்லாம் 'ஏனோதானோ' என்ற வகையிற் புறக்கணிக்கப்படுகின்றன.

இன்னும் கூறப்போனால், இத்தலங்களின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்துக்கு, பரிபாலனத்துக்கு உதவி புரிகின்றோம் என்பதற்காக ஒரு சிலர் அர்த்தமற்ற, பொது நோக்கற்ற உரிமைகளுக்காகப் போர்க்கொடி தூக்குவதையும், அதன் மூலம் தம்மைப் பெரியவர்களாகக் காட்டிக்கொள்ள முனைவதையும் காண்கின்றோம்.

பெருந்தொகையான மக்கள் கூடும் இவ்விடங்களில் ஒழுங்கை

நிலைநாட்டுவதிலும், வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் உள்ள சிரமங்களைப் பாராது குறை கூறிக் கொக்கரிக்கும் கும்பல்களும் இருக்கவே செய்கின்றன. புனிதத் தலங்களில் இந்நிலைமை மேன்மேலும் வளர்ச்சியுற்றுக்கொண்டே போகுமாகிற் புனிதத்தலங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கங்கள் சிதைவுற்றுவிடும். முன்னையவர்கள் யாத்திரைகள் மூலம் பெற்ற நிறைவும் விசுவாசப் புத்துணர்வும் அறவே அழிந்துவிடும்.

எனவே, இதன் நோக்கத்தையும், புனிதத்துவத்தையும் காப்பாற்றிப் பிறசமயத்தவர்களும் வரும் இத்தலங்களிற் கத்தோலிக்கர்கள் ஏனையவர்களுக்கு முன்மாதிரியாயும் விளங்க வேண்டும்.

இங்கு வருகை தரும் யாத்திரீகர்கள் அனுசரிக்க வேண்டிய நடைமுறை விதிகள் பற்றி ஒவ்வொரு பங்குத்தலங்களிலும் அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும். யாத்திரைகள் வெறும் உல்லாசச் சுற்றுலாக்களாக அல்லாமல் அவர்களிலும் விசுவாச மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் பக்திமுயற்சிகளாக அமைய வேண்டும். அதனாலேயே யாத்திரைகள் மேற்கொள்ளும் நோக்கம் நிறைவு பெறும் என்பது எமது நம்பிக்கை.

27.06.1980

**********

# பொது நிலையினரே,
# நீங்கள் இறை மக்கள் !

திருச்சபையைப் பற்றிய சிந்தனையில் ஏற்பட்ட மாற்றமே வத்திக்கான் சங்கம் கொணர்ந்த அடிப்படைப் புரட்சியாகும். படிமுறை அதிகார அமைப்பிற் பொதுநிலையினரைக் கடைக்கூற்றில் வைத்துப் பார்த்த நிலைமாறி, திருச்சபையை "இறை மக்கள் திருக்கூட்டமாக" வத்திக்கான் சங்கம் நோக்கியது. இப்புரட்சிப் போக்குத் திருச்சபையின் எல்லா நிலைகளையும், அமைப்புக்களையும், வழிபாடுகளையும் ஊடுருவித், திருச்சபை புதுப்பொலிவுடன் இயங்க, இன்றைய உலகிற்கு மீட்பின் அருட்சாதனமாக விளங்க வழிகாட்டியுள்ளது.

பழைய ஏற்பாட்டிற் குருக்களுக்கும் மக்களுக்குமிடையேயிருந்த பிரிவு, புதிய ஏற்பாட்டில் நீங்கியது. கிறிஸ்து ஒருவரே பெரிய குரு:

ஏனையோர் அனைவரும் "தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவத் திருக் கூட்டம், பரிசுத்த குலம், இறைவனுக்குச் சொந்தமான மக்கள்" (I இரா 2:9 ). பல்வேறு பணிகள் ஆவியினால் வழங்கப்பட்டு, கிறிஸ்தவ சமூகம் வளர்ந்தது. நாளடைவில் காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ப மக்களிடையேயிருந்து தலைவர்கள் (மூப்பர்களும், கண்காணிப்பாளர்களும்) தோன்றி மக்களை வழி நடாத்தினர். ஆனால், காலப்போக்கில் விசுவாசத்தில் ஒன்றிப்பைக் காக்கவும், பிழையான போதகங்களிலிருந்து தன்னைப் பாதுகாக்கவும் அரசியல் அதிகாரங்களையும் நல்லனவென்று ஏற்று வளர்ந்த திருச்சபையில் தலைவர்கள் - பொதுநிலையினர் என்ற வேறுபாடு ஆழமாக வேரூன்றியமை வருந்துதற்குரியதே. இன்று, திருச்சபையின் இரண்டாந்தரப் பிரசைகளாகவே பொது நிலையினர் இருக்கின்றனர்.

வத்திக்கான் சங்கத்தின் புதிய போக்குக்களுக்கு அமைய, பொதுநிலையினர் திருச்சபையில் தமது உரிமைகளையும் கடமை களையும் ஏற்க, துறவிகள், குருக்கள், ஆயர்கள் இன்னும் போதிய கவனம் எடுக்கவில்லை. அத்துடன், பொது நிலையினரும் தாழ்வு மனப்பான்மையை வளர்த்து, பணிகளில் பின்நிற்கிறார்கள். இவர்கள் என்ன செய்ய வேண்டும்? எவ்விதம் வாழவேண்டும்? என்பதைத் திருச்சபையின் தலைவர்களே நிர்ணயிப்பதும், பங்கு, மறைமாவட்ட அமைப்புக்களில் பொதுநிலையினர் "பயன்படுத்தப்படுவதும்" விரும் புதற்குரியதல்ல.

உலகில், அரசியல், பொருளாதார, சமூக, கல்வித் துறைகளிற் செயற்படுவதே பொதுநிலையினர் தம் அப்போஸ்தலிக்கப் பணி என்பது உணர்த்தப்பட்டு, பொது நிலையினர் தமது வாழ்வுக்கும் பொறுப்புக்களுக்கும் ஏற்ற விதத்தில் தமது (ஞான) கிறிஸ்தவ வாழ்வை வாழ ஊக்குவிப்பது அவசியமே.

எமது மறைமாவட்டத்தைப் பொறுத்த வரையிற் கத்தோலிக்க ஆசிரியர்-மறைஆசிரியர் பணியை நோக்குமிடத்து, பொதுநிலையினர் தம் பணியை ஏற்கப் பழகிவிட்டார்கள் என்று கூடக் கூறத் தோன்றுகின்றது. இயக்குனரின் வழிகாட்டலின்கீழ், அவருடன் ஒன்றிணைந்து மறைக்கல்வி - விவிலிய வழிபாடு சார்ந்த பல்வேறு ஆக்கப் பணிகளில் ஈடுபட்டமை போற்றுதற்குரியதே.

குருக்கள், துறவியர்களுக்கு 5-10 ஆண்டுகள், முழுநேரப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஆனால், பொது நிலையினருக்கு அவ்வித வாய்ப்புக் கிடைப்பதில்லை. எனினும், அவர்கள் உயிரோட்டமுள்ள

அங்கத்தினர்களாகச் செயற்பட வேண்டுமாயின் அவர்களுக்கு வெவ்வேறு பயிற்சிகள் அவசியமென்பதைத் தலைவர்கள் மனத்திற் கொள்ளுதல் வேண்டும். இ∴தின்றி அவர்களைக் குறைகூறுவதிற் பயனில்லை.

எந்த அளவிற்கு எமது பங்குகளிலும், மறை மாவட்டங்களிலும் தலைவர்களோடு தோளோடு தோள் நின்று, திருச்சபையில் தாமும் முக்கிய அங்கத்தினர் என உணர்ந்து, பொதுநிலையினர் செயற்படுகின்றனரோ அந்த அளவே திருச்சபை வளர்ந்து வருகிறது என்பதற்கும் திருச்சபை மக்களுக்காகவே என்பதற்கும் சான்றாக அமையும்.

***********

12.07.1985

## சேனையின் சேவை

யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும், முறையே சென்ற வார இறுதியிலும், இவ்வார இறுதியிலும், இலங்கையில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்ட தங்கயூபிலி விழாவினை மிக்க சிறப்புடன் கொண்டாடுகின்றனர்.

யாழ் நகரில், பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் 1936இல் அமரர் J.A.இராசநாயகம் அ.ம.தி. அடிகளாரால் முதன் முதல் இந்த நாட்டில் மரியாயின் சேனை இயக்கம் தொடக்கி வைக்கப்பட்டது என்பது மிகுந்த நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டிய தொன்றாகும்.

எவ்வித உலகக் கவர்ச்சியுமில்லாததும், செபமும் சேவையுமே இலட்சியமாகக் கொண்டதுமான மரியாயின் சேனை இயக்கம் இலங்கையில் எல்லா மறை மாவட்டங்களிலுமுள்ள பங்குகள் தோறும் கடந்த 50 ஆண்டுகளில் கிளைவிட்டுப் பரவி மக்களால் நன்கு அறியப்பட்டதாகவும், நல்ல உயிரோட்டமுள்ளதாகவும் விளங்கி வருவது அனைவருக்கும் உற்சாகம் அளிக்கும் விடயமே. மரியாயின் சேனையாரின் சேவை மக்களுக்கு இன்றியமையாத தேவையாகவுள்ளது என்பது, அதன் உள்ளர்த்தம் என்பதில் ஐயமில்லை.

பொது நிலையினரின் அப்போஸ்தலிக்கப் பணிக்கு மிக்க வாய்ப்பும் ஊக்கமும் பயனுமுள்ள செயற்பாட்டுக்கு மரியாயின் சேனை முழுதும்

பொருத்தமான நெறியாக அமைந்துவிட்டமையே அதன் காரணம்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மலர்ச்சி பெற்ற சிந்தனைகளினதும் வழிகாட்டுதல்களினதும் முன்னேற்பாடான வெளியுருவாக மரியாயின் சேனை விளங்கி வந்துள்ளமை அதன் பயன்பாட்டை நன்கு பிரதிபலிக்கின்றது.

மரியாயின் சேனை எம் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட காலத்தை விட இன்று திருச்சபையிற் "பொது நிலையினரின்" பங்களிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. ஞானஸ்நானம் பெற்ற அனைவருக்கும் திருச்சபையில் உரிமையும் கடமையும் உண்டு. தத்தம் அழைப்பிற்கேற்பக் கிறிஸ்துவின் பணியில் நாம் அனைவருமே பங்கு கொள்கிறோம். எனவே, இன்று முன்னையைவிட அதிகமாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் வாழும் சூழலில் ஓர் அப்போஸ்தலனாகத் துலங்க வேண்டும்....

07.03.1986

************

# கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்பு

உலகெலாம் இன்று இறைபணி புரியும் துறவற சபைகள் எத்தனை? இது ஆவியானவரே அறியாத விடயம் என்பர் நகைச்சுவையாக.

எண்ணிக்கைகளில் ஏராளம். காலம், இடம், சூழ்நிலைகள், தேவைகள் இவற்றின் அடிப்படையில் இறைவன் பெயரால் உலகில் நடமாடும் கிறிஸ்துக்களாகத் தொண்டாற்றும் நோக்கோடு உண்டாக்கப்பட்டவையே இவை!

இது மகிழ்ச்சிக்குரியதே! பல்வேறு துறவற சபைகளின் சேவைகள் எமக்குக் கிடைத்தமை பெரும்பாக்கியமே! இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

ஆனால், எளிமை, தியாகம், தரித்திரம் சுயநலன் மறுப்பு இவற்றின் அடிப்படையில் இயங்கவேண்டிய இச்சபைகளின் இன்றைய நிலைமைகள் என்ன? ஒவ்வொரு சபைக்கும் உரிய தனித்துவம் பேணப்படுகின்றதா? அதுதான் போகட்டும். எங்கு எது தேவையோ, அங்கு அது சேவை என்ற இலட்சியம் கடைப்பிடிக்கப்படுகிறதா?

'எமது சபைக்கு உரியபணி இதுவன்று' என்ற புறக்கணிப்புக்களினால் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வேண்டிய இவர்கள் அடிப்படைக் கொள்கையில் இருந்து புறமுதுகிட்டு ஓடுவதையும் சில வேளைகளில் அவதானிக்கின்றோம்.
உதாரணத்துக்கு ஒன்றை எடுத்துக் கொள்வோம்: கடந்த காலங்களில் அகதிகள் முகாம்களிற் பணியாற்ற வந்த சில சபைகளைச் சேர்ந்தவர்கள் சில மாதங்களிற் பின்வாங்கி ஓடியதேன்? இங்கு சேவையின் தேவை புறக்கணிக்கப்படவில்லையா?

துறவற சேவை என்பது ஓர் உத்தியோகமன்று: அது வசதிகளையும் வருமானங்களையும் எதிர்பார்த்து இயங்குவதன்று. அன்றேல் குறிப்பிட்ட ஒரு குழுவின் அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சி நடத்துவதன்று, எல்லோருக்கும் ஊழியன் என்ற நிலையில், நினைவில் வாழுவதே!

இந்நிலையிற் பல்வேறு சபைகளின் தலைவர்கள் அடிக்கடி தம் சபைகள் இருக்கும் இடங்களுக்கு விஜயம் மேற்கொள்வதைப் பார்க்கின்றோம். ஆனால், வருபவர் தம் சபையினரைத் தம் பணிக்கு ஊக்குவிக்கும் சக்தியாக வருகிறாரா? அல்லது ஒரு அமைச்சராக வருகிறாரா? என்று சந்தேகிக்கும் அளவுக்கு வரவேற்புக்கள், விருந்துகள், ஆடம்பரங்கள், பிரயாணங்கள், சுற்றுலாக்கள், சந்திப்புக்கள்!

இவற்றின் மூலம் ஓரிடத்தில் இயங்கிவரும் சபை தரித்திரத்தை அனுபவித்துச் சேகரித்தது யாவையும், அவர் ஒருவரே அனுபவிப்பது போன்ற ஓர் உணர்வு ஏற்படவே செய்கின்றது.

எனவே, வருபவர்களை வரவேற்பவர்கள் தமது தனித்துவத்தின் வழி நின்று வரவேற்பதையும், வரும் தலைவர்கள் தமது தனித்துவத்தின் மரபைக் காப்பதில் அக்கறையுடையவர்கள் என்பதைக் காட்டவேண்டியவர் என்பதையும், பல்வேறுபட்ட சமய சுற்றாடல்களில் வாழும் கிறிஸ்தவ சமுதாயம் எதிர்பார்க்கின்றது. இது நியாயமானது என்றே தோன்றுகின்றது. இந்த எதிர்பார்ப்ப நியாயமானதெனில், எதிர் காலத்தில் இது நிறைவேறுமா?

22.02.1980

**********

# சமயத் தலைவர்கள் பணி

...அரசியற் தலைவர்களின் "இராஜதந்திர" வழியிலேயே மதத்தலைவர்களும் செல்லுவதானால் மதங்களின் மாண்பு என்னாகும்?

சமயங்கள் அல்லது மதங்கள் யாவும் அன்பு, அஹிம்சை, பொறுமை, உண்மை, நீதி, தருமம், நற்பண்புகள் முதலியவற்றையே போதிக்கின்றன - போதிக்க வேண்டியன. பழிவாங்குதல், வீம்பு, பேராசை, சுயநலம், வன்செயல்கள் முதலாம் தீமைகளை அவை கொண்டிருக்க முடியாது. மறைகள் அரசியலாருக்கு வழிகாட்ட முடியுமே தவிர அரசியலை ஏற்று நடத்த முற்படுதல் கேடாகும். வரலாற்றிலே சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் காரணம் காட்டிக் கொண்டு சமயத தலைவர்கள் அரசியலில் நேரடிப்பங்கு கொண்டமை பற்றிய சம்பவங்கள் உள. அவை, அவற்றின் சுய இலாபத்துக்கு அவ்வவ்போது சாதகமாக இருந்திருப்பினும், முடிவான பாடம் அரசியலுக்குள் ஆழக்கால் விட்டமை தவறு என்பதாகும்.

இப்போது இந் நாட்டில் பௌத்த மதத் தலைவர்கள் கிடைத்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு 'ஒரு தாய் வயிற்றிற் பிறந்த' இளைய சகோதரர்களுக்கு அடிப்படையான நீதி செய்யப் போகிறார்களா? அல்லது அரசியலாரைப் போலவே "இராச தந்திர" முறைகளை மட்டும் கையாளப் போகிறார்களா? என்பது தமிழ்-முஸ்லிம் மக்களுடையது மாத்திரமன்று, மனச்சாட்சியுள்ள உலகத்தினதும் கேள்விகளாகும். 'பயங்கரவாதிகள் நாடு முழுவதையும் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள்' என்று பொய்ப்பிரசாரம் செய்து ஏனைய பிரச்சனைகளுக்குத் திரையிட்டு மூடும் இராஜதந்திர முறைகளைப் பிறர்நலம் பேணும் சமயத்தலைவர்களும் கைக்கொள்ளாது, உண்மையையும் நீதியையும் அச்சமின்றி இடித்துக் கூறுவார்களாக. அரச செல்வாக்கின் ஆதரவிற் சில காலம் வாழும் பழைய தவறுகளை இனிமேலும் சமயத்தலைவர்கள் செய்யாது, ஒரு தாய் வயிற்றிற் பிறந்த இளைய சகோதரர்களை மூத்த சகோதரர்களோடு சமபங்காளிகள் ஆக்கிவிட முயற்சிப்பார்களாக.

மறைந்த திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் கூறியது என்றும் எம்மை வழிநடத்தட்டும். சமாதானம் வேண்டுமாயின் நீதியை நிலைநாட்ட உழைப்போம்.

4.05.1984

***********

*திருத்தந்தை முதலாம் அருள் சின்னப்பரின் இறப்பின் முதல் ஆண்டு நிறைவில்...*

# திருத்தந்தை முதலாம் அருள் சின்னப்பர்

1978ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 26ஆம் நாள் மறைந்த திருத்தந்தை ஆறாம் சின்னப்பரின் இடத்திற்குப் புதியவரைத் தேர்ந்தெடுக்க 112 கருதினால்மார் வத்திக்கானில் கூடினர். ஆவியினால் வழிகாட்டப் பெற்ற கருதினால்மார் அதே நாளில் எதிர்பாராத விதத்தில் கர்தினால் அல்பீனோ லூசியானியைத் தேர்ந்தெடுத்து உலகைத் திகைப்பிலும், மகிழ்ச்சியிலும் ஆழ்த்தினர்.

திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், திருச்சபையிலே புதிய மாற்றங்களை ஏற்படுத்தி அதைச் சீரியபாதையில் வழிநடத்த ஆயத்தமானார். அவரது அரும்பெரும் சேவைகளை நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்த உலகிற்கு இடி வீழ்ந்தது போல் வந்து கிடைத்தது அவரது மரணச் செய்தி!

திருச்சபையின் பாதையிலே புதிய ஒளியைக் காண, ஆவல் கொண்டிருந்த மக்களை ஆறாத் துயரில் ஆழ்த்திய அந்நாள்-அவர் இறையடிசேர்ந்த அந்நாள்: 1978ஆம் ஆண்டு புரட்டாதி 28ஆம் நாளாகும்.

33 நாள்கள் மட்டுமே பாப்பரசர்! ஆனால், இன்று அவரைத் திருச்சபை நன்றியுணர்வோடு நினைவுகூருகின்றது. எதற்காக? அவர் திருச்சபைக்கு ஆற்றிய சேவை என்ன? எளிமை, வாழ்வில் எளிமை, பேச்சில் எளிமை, போதனையில் எளிமை, சடங்கில் எளிமை, ஆம், அனைத்திலுமே எளிமை. எத்தனையோ நூற்றாண்டுகளாக இருந்துவந்த முடிசூட்டு விழாவுக்கு மூடுவிழா: இறையியல் கற்றவர்கள் மட்டுமே விளங்கக்கூடிய போதனைகள் சிறு பிள்ளையும் விளங்கக் கூடியதொன்றாக மாறியது. ஆயர், மக்களிலிருந்து விலகி நிற்கும் காலம் மாறி, அவர்களோடு தொடர்புவைக்கும் காலம் பிறந்தது.

அவர் வாழ்ந்து காட்டிய பாதையில் முழுத் திருச்சபையும் வழிநடக்குமா? அன்றேல் 15ஆம் நூற்றாண்டில் நடந்ததுபோல் அதிகாரத்தோடும், பணபலத்தோடும் உறவுகொண்டு, மக்களிலிருந்து விலகிச் செல்லுமா? எத்தனையோ நிலைகளில் மாற்றங்கள்

வந்துள்ளன. ஆனால் எங்குமன்று. ஆயர் மாளிகை ''ஆயர் இல்லம்'' என்று அழைக்கப்பட்டால் மட்டும் போதாது. வழிபாட்டிலே சடங்கு முறைக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் நீக்கப்பட்டு, கருத்துக்கும், இறை உறவுக்கும் முதலிடம் கொடுக்கப்படல் வேண்டும். பணக்கார வர்க்கத்தினரால் ஆளப்பட்ட திருச்சபை ஏழைகளின் திருச்சபையாக மாறவேண்டும். நல்ல ஆடை அணிகலன்கள் இல்லாத ஏழைகள் ஆலயத்திற்கு வர வெட்கப்படும் சூழலை ஏற்படுத்தினால் 'ஏழ்மை மனத்தோர் பேறுபெற்றோர்' எனக் கூறிய கிறிஸ்துவின் சீடர் அவ்வாலயத்தில் இல்லை எனக் கூறலாம். இறைபணிக்கெனக் கோவில்களிலே சேகரித்து வைக்கப்படுகின்ற பணம் துன்புறுகின்ற ஏழைகளுக்காகப் பயன்படுத்தப்படாவிட்டால், அப்பணம் பயனற்ற வழிகளிற் பயன்படுத் தப்பட நேரிடலாம். உயிருள்ள கிறிஸ்தவ சமுதாயத்தைக் கட்டியெழுப்பாமல் அழகிய கோவில்களையும், பீடங்களையும் போட்டி மனப்பான்மையோடு தேவையின்றிக் கட்டுவது எளிமைக்கு முரணானது.

ஏழைக்கு ஒருசட்டமும், பணக்காரனுக்கும் செல்வாக்குள்ளவனுக்கும் வேறொரு சட்டமும் நடைமுறைப்படுத்தப்படுதல் கிறிஸ்தவ கோட் பாடுகளுக்கு மாறானது. திருவிழாக்களின் போது, ஆயிரக்கணக்கில் வெடிவாணங்கள், ஒலிபெருக்கிகள், சிகரங்கள், ஒளி அலங்காரங்கள் போன்றவற்றிற்குப் பணத்தைச் செலவிடுதல் அர்த்தமுள்ள இறை பணியாகுமா?

திருத்தந்தை முதலாம் அருள் சின்னப்பர் கிறிஸ்தவ வாழ்வு வாழ அனைத்திலும் எளிமையைக் கடைப்பிடித்தார். கிறிஸ்துவைப் பின் பற்றினார்.

அவரது வாழ்வு எமக்கொரு சவாலாகும்.
நமது திருச்சபையும்,
அதன் அங்கத்தவர்களாகிய நாமும்
அச்சவாலை ஏற்கத் தயாரா?
அவரைப்போல் நாமும் எமது வாழ்வில்
கிறிஸ்துவைப் பின்பற்றுவோமா?

28.09.1979

**********

# அன்னை தெரேசா

பிறர்நலப் பணிகளினால் உலகறிந்த 'அன்னை தெரேசா' நேற்று இலங்கைக்கு வந்துள்ளார். கொழும்புப் பேராயர் அண்மையில் உரோமிலிருந்து நாடு திரும்புகையில் கல்கத்தாவுக்குச் சென்று அன்னையாரைக் கண்டு, கொழும்பில் அவரது சபைச் சகோதரிகளின் கிளைப் பணிமனை ஒன்றை ஆரம்பிக்கும்படி நேரிலும் வேண்டுகோள் விடுத்ததன்பேரில், நாளை புனித மரியன்னையின் பிறந்த பெரு விழாவன்று கொழும்பு, செக்குத்தெருவில் இப்பணிமனை ஆரம்பிக்கப்படவுள்ளது. அன்னை தெரேசாவையும் அவரது பணிகளையும் எல்லா உலக நாட்டு மக்களும் ஒரு மனப்படப் போற்றி வரவேற்பதனையும், ''நோபல் பரிசு'' ஸ்தாபனத்தார் தொடக்கம் வேறு பல நாடுகளும் நிறுவனங்களும் சன்மானித்துக் கௌரவிப்பதனையும் யாவரும் அறிவர்.

கையில் ஐந்து ரூபாயுடனும், நெஞ்சு நிறைந்த ஆர்வத்துடனும், இறை நம்பிக்கை - பிறரன்பு என்பவற்றுடனும், ஆசிரியத் தொழிலையும் பழைய மடத்தையும் விட்டுப் புறப்பட்ட இளம் ஐரோப்பியக் கன்னிகை, தனக்கென்று எவ்வித விளம்பரங்களும் தேடாமற், கல்கத்தாவின் பட்டிதொட்டிகளெல்லாம் புகுந்து பணி செய்யத் தொடங்கினார். ஏழை - எளியவர்களையும் ஒடுக்கப் பட்டவர்களையும் கைவிடப்பட்டவர்களையும் அனாதைகளையும் நல்ல சமாரித்தன் இயல்பிற் கண்டார். இன-மத-சாதி முதலிய எவ்விதமான வேறுபாடுகளையும் ஒதுக்கிவிட்டு, ''அனைத்து மனிதப் பிறவிகளும் எனது உடன் பிறப்புக்கள்'' என்ற தாரகமந்திரத்தை இலட்சியமாகக் கொண்டு, மக்களோடு மனப்பூர்வமாக இரண்டறக் கலந்து தொண்டு செய்தார். அழுக்கும் நாற்றமும், அடிப்படையான வாழ்க்கை வசதிகள் தமக்கே இல்லாது இருப்பதும், தொற்றுநோய் தாக்குமே என்ற மரணப் பயமுங்கூட அவருக்கு இருக்கவில்லை. பயங்கரமான தொழுநோயாளருக்கும் 40 வருடங்கள் மட்டில் நேரடியான பராமரிப்புக்கள் செய்துவரும் அவருக்கு இன்று வயது 74. அன்னையாரது பணி அனைவரும் ஏற்றுக்கொள்ளும் பணி; அவசியமான பணி; பாகுபாடற்ற பணி. பட்டினியால் வாடும் மனிதப்பிறப்பு ஆணா-பெண்ணா, இந்துவா-முஸ்லிமா என்று அவர் பார்ப்பதில்லை.

கழுத்து வியர்க்காமற் கழுவிய வெள்ளை ஆடையில் அழுக்குப் புள்ளிகள் விழுந்துவிடாமல் ''பணி புரியும் அர்ப்பணிப்பாளர்கள்'' சிறப்பாக இவைகளைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பசியால் வாடுகிற தாய்க்கும் பச்சைக் குழந்தைக்கும் உணவு படைத்து, அவர்கள் வயிறு நிறைந்து முகம் மலருவதைப் பார்த்துத் தன் வயிறு பூரிக்கும் அன்னையாரது தொண்டு முறைகளை நாமும் காலம் கடத்தாமல் நமது நடைமுறை விதிகளிற் புகுத்திக் கொள்ளுதல் அவசியம்.

பணியாளர்களாக அர்ப்பணம் செய்யப்படுவதற்குக் குறித்த சிலரைத் தந்திரமாக ஒதுக்கிவிடுவதும், தமது பணியை வழங்குவதற்கு ஒரு சில பகுதியினரையே சிறப்பாக நாடிச் செல்வதும், நாளடைவில் உலகுக்கு வெளிச்சமாகி விடுவதனால் இளைஞர்கள் - யுவதிகள் அர்ப்பண வாழ்வைத் தேர்ந்துகொள்வதில் ஆர்வம் காட்டாதுபோக வழி உண்டு.

நம் சௌகரியத்துக்கும் மனப்போக்குக்கும் தக்கதாக இளக்காரங் களையும் புறநடைகளையும் தாராளமாக அனுபவித்துக்கொண்டு, வசதியான 'அருங்கொடை'களை மட்டும் தமது 'பணிகள்' என்று காட்டிக்கொள்வதும், காலத்தின் தேவைக்கு மாறுபட்டவையாக உலகின் கண்களிற் படுகின்றன.

துறவற சபைகளும், அர்ப்பணிப்பாளர்களும் 'நம்மவர்- பிறர்' என்று காட்டிக்கொள்வதும், காலத்தின் தேவைக்கு மாறுபட்டவையாக உலகின் கண்களிற்படுகின்றன.

துறவற சபைகளும் அர்ப்பணிப்பாளர்களும் 'நம்மவர்- பிறர்' என்று வேறுபாடு காட்டி நடந்து கொள்வதையும், பணவசதி படைத் தவர்களுக்கு 'விசேட பணிகள்' புரிய அவர்கள் முன் செல்வதையும், அன்னை தெரேசாவை ஏத்திப்போற்றி வரவேற்கும் உலகம் ஏற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்க முடியாது.

அன்னை தெரேசாவின் வருகை எமது பணி - துறவறவாழ்வை மீளாய்வு செய்து கொள்ளவும் உதவ வேண்டும்.

7.09.1984

**********

*பதுளை ஆயர் லியோ நாணயக்கார இறையடி சேர்ந்தபோது...*

# எண்ணித் துணிக கருமம்

சென்ற வாரத்தில் மறைந்த பதுளை ஆயர் லீயோ நாணயக்காரா ஆண்டகையினது வாழ்க்கைக் குறிப்புக்கள் நமக்குப் பல வழிகளிலும் உபயோகமானவையும் பார்த்தொழுகத் தக்கவையாகவும் உள்ளன.

படிப்பை முடித்து உத்தியோகம் பார்க்கத் தொடங்கியபின் - வேறு மிகச் சிலரைப் போலக் குருத்துவ அழைத்தலுக்குத் தம்மை அர்ப்பணித்தார். முதிர்ந்த வாலிபனாக முப்பத்து மூன்று வயதில் குருவாகத் திருநிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார். ஆயராக்கப்பட்ட சில ஆண்டுகளுக்குள்ளேயே இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூடியது. மிக்க ஆர்வத்துடனும் ஆழ்ந்த அக்கறையுடனும் வத்திக்கான் சங்கத்திற் பங்குபற்றியதனால் திருச்சபையின் ஆன்மீகப்பணி, நற்செய்தி அறிவிப்புப்பணி, வழிநடத்துகை-ஆளுகைப்பணி முதலியவற்றிற் புதிய நோக்கும் போக்கும் மறுமலர்ச்சி ஆர்வமும் உடையவராக நாடு திரும்பிப் புதிய சிந்தனைகளுடனும் வழிமுறைகளுடனும் செயற்படத் தொடங்கினார். வத்திக்கான் சங்கத்துச் சிந்தனைகள் பணிப்புரைகளை வழிபிறழாமல் தந்து மறை மானிலத்து மக்களது இயல்பு - பண்பு - கலை கலாசாரங்களுக்கும் அபிலாசைகளுக்கும் இணங்கத் திறமையுடன் செயற்படுத்தினார். தான் சரியென வகுத்துக்கொண்ட பாதையில் தளராது வீறு நடை போடுவதற்கு அவர் தயங்கவில்லை. தடைகளைத் தாண்டுவதில் அதிதீவிரம் காண்பியாமலும், அதே வேளையிற் பின்வாங்காமலும் முன்னேறிச் சென்று இறுதி வெற்றி கண்டார். புதிய பதுளை மறை மாவட்டத்து ஆயராகக் குறுகிய காலமே பணிபுரிந்திருப்பினும், ''ஊவா மாகாணத்து மறைத் தலைமைத் தொண்டன்'' என்ற விருதினை மக்கள் இருதயங் களிலிருந்து வாங்கிக்கொண்டார். இனி வர இருப்பவர்களுக்குப் பதுளை மறைமாநிலம் பண்பட்ட நிலமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆன்மீகப்பணி, நற்செய்தி அறிவுப்புப்பணி, ஆளுகைப்பணி இவை களில் ஈடுபட்டுள்ள ஏனையவர்களுக்கு மறைந்த ஆயரது வழி முறைகள் துணைசெய்வனவாக இருக்குமென நம்புகிறோம். பிரச் சினைகளுக்கும் சர்ச்சைகளுக்கும் இடமின்றி அமைதியாக மௌன

மாகச் சகபணியாளரது பொருமல்களுக்கு இடம் வையாமல் காரியம் பார்த்துச் செல்லுதல் என்பது துணிந்து கருமம் ஆற்று தலிலும் இலகுவானது. "காய்க்கிற மரம் கல்லெறிபடும்" என்பது அநுபவப் பழமொழி, நற்செய்தி அறிவிப்பு, திருச்சபை வளர்ச்சி, மக்கள் நலனில் ஆழ்ந்த அக்கறை காட்டுதல் முதலாய விடயங்களில் தத்தமது பிரதேசத்து மக்களின் பண்புகள், கலை-கலாசாரங்கள, தேவைகள்-அபிலாசைகளுக்கு ஏற்ப இதுகாலவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக் கைகள், கண்டுள்ள முன்னேற்றம் என்பவற்றைச் சீர்தூக்கி மதிப்பீடு செய்தல் அவசியம்.

சமய ஆன்மீகப் பணிகளுடன் மட்டும் எமது அக்கறையும் செயற் பாடுகளும் நின்றுவிட்டால் மக்களது தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் நிறைவுபடா. அரசியல், கல்வி, பொருளாதாரம், கலை-கலாசாரம் முதலிய மறுதுறைகளிலும் நமது அக்கறையும் வழிநடத்துதலும் மக்களுக்குத் தேவைப்படுமிடத்து நமது பங்களிப்பினை வழங்கத் தயக்கப்படுதல் ஆகாது, நல்லதைப் போற்றி ஊக்கப்படுத்தவும், தீயதைக் கண்டித்துக் களையவும், நமக்குக் கடமை உண்டு. தகைமை அற்றவர்கள் எல்லாம் தான்தோன்றித்தனமாக நடந்து குட்டை குழப்பும் இக்காலத்தில் தகுதியுள்ளவர்களுக்கு இக்கடமை மேலும் தலையாய கடனாகிறது. அடக்கம், கௌரவம் என்று கருதி மௌனம் சாதித்துக்கொண்டு நீண்ட பொறுமையுடன் இருத்தல் மக்களின் சிக்கல்களையும் பிரச்சினைகளையும் மேலும் வளரவிடுதல் ஆகிவிடலாம். "காலத்தே பயிர் செய்" என்பது பல வழிகளிற் பொருளுடைய முன்னோர் வாக்கு.

மக்கள் உடனே புரிந்து கொள்ளத் தவறினாலும், காலம் வரும்போது தூரநோக்குடைய பெரியோர்களின் அறிவுறுத்தலையும் வழிகாட் டுதலையும் உணர்ந்து நன்றி பாராட்டுவர். தெய்வமும் துணை நின்று அருள்பாலிக்கும்.

நமது திருத்தந்தையுடைய இக்காலத்துப் பிரயாணங்கள், அறை கூவல்கள். ஆலோசனைகள், ஆழ்ந்த மனித நல நாட்டமுடைய அறிக்கைகள், மரபு - பாரம்பரியங்களைத் தாண்டிய அரவணைப் புக்கள் முதலியவை எல்லாம் நம்மனைவருக்கும் முன்மாதிரிகையாக உள்ளன. இவற்றாற் காலத்துக்கும் தேவைக்கும் ஏற்ப மக்கள் பணி செய்தல் எப்படியென்பதை நாம் உணர்ந்து எண்ணித் துணிதல் கடனாகும்.

4.06.1982

*******************

# குருக்கள் பணி

மாபெரும் குருவாகிய இயேசு பேதுரு என்னும் கல்லின் மேல் அழியாத திருச்சபையைக் கட்டி "உலகின் கடை எல்லை வரைக்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்" என்று தமது அப்போஸ்தலர்களுக்குப் பணித்தார். உண்மைக்குச் சான்று பகர்வதே என்பணி என்று இரத்தினச் சுருக்கமாக விளக்கி, தம்வழி நின்று தமது பணியைத் தொடரவிருக்கும் குருமரபினர்க்கும் அவர்களது தலையாய பணி என்னவென்று அறிவுறுத்தினார்.

கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் அந்த நாட்டு மக்களது சூழ்நிலைக்கேற்பத் தமது போதனையாலும் சாதனையாலும் தம்வழி வரவிருப்பவர்கள் எவ்வாறு பணிபுரிய வேண்டும் என்று முன்மாதிரி காட்டியருளினார். "உண்மைக்குச் சான்று பகரும்" அவரது பணி பாடுகளிலும் சிலுவை மரத்திலும் போய் முடிந்து மாட்சிமை மிக்க உயிர்ப்புக்கு வழிகோலிற்று. அவரிடமிருந்து அளவற்ற நன்மைகளை நேரடியாகப் பெற்றுக்கொண்ட மக்களே இயேசுவைப் புறக்கணித்துச் சிலுவையில் அறைந்து கொல்லுமாறு கேட்டனர்.

.....உலகிற்கு ஒளியும் வழியும் உண்மையுமாய் வந்த கிறிஸ்து, தமது திருச்சபை, சிறப்பாகப் போதித்தல், அர்ச்சித்தல், வழிகாட்டுதல் என்னும் முப்பணிகளை ஏற்றுக்கொண்ட குருமரபினர், எல்லா விதத்திலும் உலகிற்கு உண்மையும் வழியும் ஒளியுமாக இருக்க வேண்டுமென்றே சித்தங் கொண்டுள்ளார் என்பது தெளிவு. வளர்ந்து வரும் உலகிற் காலம் இடம் சூழ்நிலைக்கேற்பக் குருக்களின் பணியும் மாறுபட்டுக் கொண்டே வரவேண்டும் என்பது தவிர்க்க முடியாதது. மக்கள் கல்வி கலாசாரம், பண்பாடு, தொழில்கள், பொருளாதார ஏற்றத் தாழ்வு, அரசியல் நிலைமை, இயற்கையின் மாறுபாடுகள் முதலிய பற்பல மாற்றங்களுக்கியையக் காலப் போக்குக்கு அமையக் குருக்களின் பணிகளும் அவற்றின் வழி முறைகளும் மாறுபட வேண்டியது அவசியம் மேலை நாடுகள்,

இலத்தின் அமெரிக்க நாடுகள், பின்தங்கிய ஆபிரிக்க நாடுகள், அகல விரிந்துள்ள பசுபிக்குத் தீவாந்தரங்கள், வளர்ந்துவரும் தென்கிழக்காசிய நாடுகள், ருஷ்ய -சீன நாடுகள், கொந்ததளிக்கும் மத்திய கிழக்கு நாடுகள், பனிபடர்ந்த துருவ நாடுகள் என்று எண்ணிப் பார்க்கும் உலகின் பல்வேறு இடங்களிற் குருக்களின் பணியும் அவற்றுக்குத்தக எத்துணை மாறுபாடு உடையனவாயிருக்கும் என்பது விளங்கும். ஒரு நாட்டுக்குள்ளேயே மொழி, மதம், அரசியற் கொள்கைகள், ஆட்சிமுறைகள், பண்பாடு-கலாசாரம் என்னும் வேறுபாடுகளுக்கிடையேயும் குருக்களின் பணி நடைபெற வேண்டும். இதற்கு எமது நாடு நமக்குப் புரியம் நல்லதொரு எடுத்துக் காட்டாக இன்று விளங்குகிறது. மேலும் கிறிஸ்தவர்கள் பெரும் பான்மையினராக உள்ள இடங்களுக்கும், அவர்கள் மிகச் சிறுபான்மையினராக உள்ள இடங்களுக்குமிடையே குருக்கள் பணி மேலும் சிக்கலும் மாறுபாடும் அடைகிறது. இதனால், காலதேச வர்த்தமானங்களுக்கமைய சிலுவையில் வெற்றிகண்ட கிறிஸ்துவின் சீடர்கள் தம்பணியைத் தொடர வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

சமுதாயத்தின் தேவை என்ன என்பதை உணர்ந்து குருக்கள் தம் பணியை நிறைவேற்ற வேண்டியவர்கள். இனம், மதம், மொழி, ஆட்சிமுறை, பொருளாதாரக் கெடுபிடிகள், சாதிக்கொடுமைகள் முதலாம் தாக்கங்களிடையே சமுதாயம் அல்லற்படுகையில் அவற்றைத் தாண்டி நின்று ஒடுக்கப்படுவோர், அமுக்கப்படுவோர், சுரண்டப்படுவோரது மீட்புக்காகத் தம்மை அர்ப்பணித்துப் பணிபுரியும் கடமையும் குருக்கள் மேற் சுமத்தப்பட்டுள்ளது. உண்மையும் நீதியும் குழிதோண்டிப் புதைக்கப்படுகையில், மக்கள் மாக்களாக மதிக்கப்படுகையில் நீதிக்காகக் குரல் கொடுக்க, சமுதாய நலனை, மீட்டெடுக்க அவர்கள் முன்வருகிறார்கள். அதனைப் பார்த்துக் கொதிப்புக் கொண்டவர்கள். "கிறிஸ்துவின் சீடனைப் பிடித்துச் சிலுவையில் அறை" என்று காரியம் பார்க்க முற்படுவார்களேயானால் கிறிஸ்து வழியே நாமும் சென்று பெருமை காண வேண்டியதுதான்.

ஒவ்வொரு குருவுடைய பணியும் இன்னது என்று மேலேயுள்ளவர் களால் நுட்பமாக வகுத்துக் கொடுக்க முடியாதது, ஆள், இடம், சந்தர்ப்பத்துக்கேற்பப் பணிகள் அமைகின்றன. மேலும், அவற்றை மற்றவர்களுக்குச் சொல்லி விளக்கிப் பறைசாற்றிச் செய்யவும் முடியாமல் இருக்கும். அதனால், குருக்களது குறித்த ஒரு பணி பற்றிச் சில விடயங்கள் நமக்குத் தெரியாவிட்டால், விளங்கப்படுத்தப்படாவிட்டால் அங்கே தவறு நடந்துவிட்டதெனத் தீர்மானிக்க முடியாது. பாவமன்னிப்பு என்னும் திருவருட்சாதனத்தின் பொருள் எவ்வளவு ஆழமும் அந்தரங்கமுமானது. அதன் நிமித்தம் உயிரிழந்த குருக்களின் வரலாறுகள் பல உள. மேலும் தேச சட்டங்களுக்கிணங்கவே குருவின் பணிகள் அமைய வேண்டும் என்று பல துறைகளில் எதிர்பார்க்க முடியாது என்பதை யாமறிவோம். இறைபணியை மக்கள் சட்டத்தினால் வரம்புகட்ட எண்ணுவது மடைமைத்தனம். கடந்த கால, இக்கால வரலாறுகளில் இதற்கு ஆயிரம் உதாரணங்கள் உள.

குருவின் பணியைக் கோவிலுக்குள்ளேயே அடைத்து வைக்கச் சிலர் இன்னும் கருதுகின்றனர். இரண்டாம் வத்திக்கான சங்கமும், இக்காலத்தைய திருத்தந்தையர்களும் குருவைக் கோவிலுக்கு வெளியேவந்து மக்கள் மத்தியிற் பணிபுரியுமாறு அழைப்பதை விருப்பு வெறுப்பின்றிச் சீர்தூக்கிப் பார்க்கின் எம் கருத்து மேலும் தெளிவாகும்.

26.11.1982

************

## உறவுடன் பணிபுரிதல்

... திருவழிபாடுகளை நிறைவேற்றுதல், விசேட நிகழ்ச்சிகளில் பங்குபற்றுதல், ஏகாந்த செப-தபத்தில் வாழுதல் முதலியன தம்மளவில் நற்செயல்களேயாயினும், மக்கள் பணிக்கெனத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களுக்கு அவைமட்டும் கடமை நிறைவைத் தரமாட்டா.

'மக்களைச் சந்திக்க - உறவாட முடியவில்லை' எனச் சொல்லப்படுவதனை சம்பந்தப்பட்ட மக்களே ஏற்றுக்கொள்ளமாட்

டார்கள். மக்களுடைய உள்ளக வாழ்வினை நேரிற் கண்டு-கேட்டு அறியாத ஒரு பணியாளன் திருவழிபாட்டில் தலைமைதாங்கி மக்களை நெருக்கமுறத் தன்னுடன் இட்டுச் சென்று இறையரசை ஸ்தாபித்தல் ஏட்டுச் சுரைக்காய் போலாகலாம். தம் மக்களை ஆழமாக அறியாத பணியாளன் திருவழிபாடுகளில் மட்டும் தலைமை தாங்கும்போது வழிபாடானது மக்களுக்கு மிக அந்நியமானதும் தொடர்பு அற்றதுமான ஒரு சடங்காக மட்டும் மதிக்கப்படும் நிலைமை உண்டாகக்கூடும்.

மக்களுடன் கலந்துறவாடி அவர்கள் உள்ளங்களைக் கவர்ந்து தம் பாதையில் அவர்களை இட்டுச் செல்லும் ஆட்கள் நம் கண்முன்னே வெற்றிகரமாகச் செயற்பட்டு நமக்குச் சவால் விட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. 'எங்கள் வீட்டு முற்றத்திலே - விறாந்தையிலே வந்து, எங்கள் சுக-துக்கங்களைக் கண்டு, கேட்டு அறிபவர்கள்தான் எமது உண்மையான வழிகாட்டிகள்' என்று உளமார நம்பும் சாதாரண மக்கள் பெரும்பான்மையினர் என்பதை இன்று பரக்கக் காணலாம்.

நகர்ப்புறங்களில் பணியாற்றுபவர்கள், 'பெருந்தொகையான மக்களை எப்படிச் சந்தித்து உறவாடுவது?' என்று கூறுவதும், கிராமப் புறங்களில் உள்ளவர்கள், 'மிகப் பரந்துபட்டுள்ள கிராமங்களில் வாழும் மக்களைத் தரிசனை செய்வது எப்படி? என்று கேட்பதும் நீண்ட காலமாகக் கூறப்படும் பதில்களே.

மக்களைக் கண்டு அவர்களை ஆழமாக உணர்ந்து உறவுடன் பணியாற்றுவதற்குப் பங்குத் தந்தையர்கள் மட்டுமே உரியவர்கள் - கடமைப்பட்டவர்கள் என்று கருதுவது எப்போதும் நடைமுறையில் முழுதும் சாத்தியமற்றுப் போகலாம். சமூகப் பணி செய்வதைச் சபையின் இலட்சியங்களாகக் கொண்ட துறவியர்களும் இப் பணிக் குரியவர்களென்பது உறுதி. ஏழை - எளிய மக்களைப் பங்குத் தந்தையுடன் அல்லது அவர் சார்பில் தரிசித்து உறவு கொண்டாடும் பணியினைத் திருப்திகரமாகச் செய்துவருகிறோம் என்று, சம்பந்தப்பட்டவர்கள் மனமாரக் கூறமுடியுமா? மக்களைக் கண்டு உறவுகொள்வதில் உள்ள கஷ்டங்கள்தான் இப்பணியில் உள்ள வெற்றிக் கேடயங்கள் என்று கூறுவது பொருந்தும்.

**23.03.1984**

***************

# ஏழு ஆண்டுகள் ஏன் ?

க.பொ.த. உயர் வகுப்புச் சித்தியெய்திப் பல்கலைக்கழகம் புகுந்த மாணவன் ஒருவன் மூன்று ஆண்டுகளிற் பொதுப் பட்டதாரியாகி விட முடியும். ஐந்து ஆறு ஆண்டுகளில் வைத்திய கலாநிதிப்பட்டம் பெற முடியும். குரு மாணவன் ஒருவன் பெரிய குருமடத்திற் பயிற்சி பெற்றுக் குருப்பணி புரியும் தகுதி பெறுவதற்குக் குறைந்தது ஏழு ஆண்டுகள் வேண்டுமா என்று கேட்கின்றனர்.

இது பலருக்குப் புரியவில்லையோ தெரியவில்லை. குருப்பணி புரிவ தற்குக் கல்வியறிவு மிகவும் அவசியம். ஆனால், நன்கு கற்றுப் பரீட்சைகளிற் சிறந்த மதிப்பீடுகள் பெறும் அறிவும் விவேகமும் திறமையும் மட்டும் குருவாகும் தகுதி பெறுவதற்குப் போதியவை அல்ல.

அர்ப்பணிப்பு வாழ்க்கையில் நிலைநின்று இறைபணியும் மக்கள் பணியும் புரிவதற்கு ஆன்மீக பலம் வேண்டும். அதற்குரிய பக்கு வமும் பயிற்சியும் பெறுதல் வேண்டும். மக்கள் தேவைகளை ஆழ்ந்து அறிந்துணர்ந்து தகுந்த வழியிற் சேவையாற்றத் தந்தைக்குரிய பரிவுணர்ச்சி கொள்ளவேண்டும். அந்தப் பரிவுணர்வினை இறுதிவரை கொண்டிருக்க அமைதியுடன் இணைந்த ஆற்றல் பெறுதல் அவசியம்.

காலத்தின் அறிகுறிகளை உணர்ந்து, கிறிஸ்தவ குருவின் கண்ணோட்டத்துடன் தெளிவுறச் சிந்தித்துச் செயற்படத் தகுதி பெறுதல் வேண்டும்.

கிறிஸ்தவ குருவானவர் ஒருவர் கிறிஸ்துவின் பிரதிநிதியாக இருந்து திருப்பலி நிறைவேற்றவும், திருவருட்சாதனங்களை வழங்கவும், திருச்சபையின் நெறிமுறைகளுக்கிணங்கச் சரியான முறையிற் போதிக்கவும், போதனையின் வழி ஒழுகவும் கடமைப்பட்டவர். கிறிஸ்து என்னும் தலையாய குருவின் இயல்புகளைத் தன்னிலே தாங்கியவராக விளங்குதல் அவசியம். இஃது ஒரு சில வருட கல்விப் போதனையினால் மட்டும் சித்திப்பதில்லை.

குருவானவர் எனப்படுபவர்கள் மக்களின் பாரம்பரியம், கலை, கலாசாரம், பண்பாடுகளினூடே கிறிஸ்துவைக் கண்டுணரவும்,

கிறிஸ்துவை மக்கள் கண்டுணரச் செய்யவும் வேண்டியவர்களாவர். மேலும், அவர்கள் மனுவுருவெடுத்த கிறிஸ்துவைப் போன்று மக்களின் நிலையைப் புரிந்துகொண்டு மக்களுக்காக மக்களுடன் வாழுதலும் வேண்டும். உண்மையைப் பறைசாற்றும் இறைவாக்கினராக, நீதியைச் சுட்டிக்காட்டும் சீடர்களாக, அமைதியைக் காக்கவல்ல அன்பர்களாக, அன்பைப் பகிர்ந்துவாழும் நண்பர்களாக, ஏழைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் நற்செய்தியை அறிவிக்கும் அப்போஸ்தலர்களாக உருவாக்கப்பட ஏழு ஆண்டுகள் போதுமா? என்றே கேட்கவேண்டியுள்ளது.

ஏழு ஆண்டு காலக் கல்வியும் பயிற்சியும் ஏன்? என்பதிலும் பார்க்க, அவர்கள் எத்தகைய பயிற்சி அளிக்கப் பெறுகின்றார்கள் என்பது முக்கியமான கேள்வியாகும். பயிற்சி அளிக்கும் பொறுப்புடையவர்கள் தூர நோக்கும், பரந்த உளப்பாங்கும் உடையவர்களாக, ஒரு சில பழைய வாய்பாடுகளையே மீட்பவர்களாக மட்டுமிருக்காது, காலத்தின் தேவைகளையும் இன்றைய இளைஞர்களின் மனநிலை, ஆன்மீக வாழ்வு, உளவியல்புகளை உணர்ந்தவர்களாகவும், சமூக அரசியல் பொருளாதார மதிப்பீடுகளின் தாக்கங்களை நன்கு புரிந்து கொண்டு, எதிர்கால மக்களின் வருங்காலக் குருக்களை உருப்படுத்துதல் இன்றியமையாததாகும்.

5.10.1984

**********

*திருக்குடும்பச் சபையினரும், கார்மேற் சபையினரும் எமது நாட்டில் பணியை ஆரம்பித்த யூபிலிக் கொண்டாட்டங்களின்போது ...*

# துறவறத்தாரின் இன்றைய பணிகள்

வெவ்வேறு காலங்களிலும், நாடுகளிலும், குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட துறவறச் சபைகள், தம் அருங் கொடைகளைப் பயன்படுத்திச், சூழலுக்கு ஏற்ப வாழவும் பணியாற்றவும் முற்படுகின்றன. இக்காலத்தில் முறையே 175, 75 ஆண்டுகளாக எமது நாட்டிற் பல்வேறு பணிகளை மேற்கொண்ட திருக்குடும்பச் சபையையும், அப்போஸ்தலிக்கக் கார்மேற் சபையையும் வாழ்த்துகிறோம். அவர்களின் பணிகளால் எமது தலத் திருச்சபை வளர்ந்துள்ளது என்பதை அனைவரும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வர்.

இன்றைய எமது அரசியல் - பொருளாதார நிலை பெரிதுஞ் சீர் குலைந்து, நாம் பயணம் செய்யவேண்டிய பாதை பல சந்தர்ப்பங்களிலும் தெளிவில்லாது இருப்பதால் நாம் அங்கலாய்க்கும் சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு. நம்பிக்கையீனங்களும் நிரந்தர மில்லாத நெறிகளும் எம்மை நிலைகுலையச் செய்கின்றன. அமைப்புக்கள் - கட்டடங்களின் சிதைவுகளும்கூட எம்மைத் தடுமாறச் செய்கின்றன.

இவற்றின் காரணமாகத் தனிநபர்கள் மட்டுமல்லர், குழுக்களும், குடும்பங்களும், பங்குகளும், மறைமாவட்டமும்கூட இச்சூழலில் இறையரசின் விழுமியங்களுக்குச் சான்று பகர வழி தெரியாது இடர்ப்படுகின்றன.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின் திருச்சபையின் பல்வேறு முன்னேற்றங்களையும், புதிய அறைகூவல்களையும் எதிர்நோக்கு வதற்காகத் துறவறச் சபைகள் காலத்தின் அறிகுறிகளை உணர்ந்து, தேவைகளுக்கமைய வாழ, பணியாற்ற - செயற்படத் தம்மை மாற்றிக் கொண்டன, திருத்திக்கொண்டன. அவ்விதமாக மாறமுடியாத சில சபைகள் மறைந்து போயின, மற்றும் சில வேறு சபைகளுடன் தம்மை இணைத்துக் கொண்டன.

ஆண்டவரின் ஆவியானவரே தமது திருச்சபையைத் தொடர்ந்து வழிநடத்தி வருகிறார். பல்வேறு காரணங்களால், சிறப்பாகக் குடும்பங்கள் பிளவுண்டு அனைத்தையும் இழந்து, நொந்து, வாழ்க்கைப் பயணத்தில் நொண்டிச் செல்லும் மக்களுக்கு, ஏனைய திருச்சபையின் அங்கத்தினர்போலத் துறவறச் சபைகளும் நம்பிக்கையூட்டுகின்றன. ஆண்டவரின் அன்புக் கரங்களாக அவை அமைகின்றன; ஆதித் திருச்சபை வாழ முற்பட்ட விழுமியங்களுக்கு உருக் கொடுக்கின்றன. இத்தகைய உறவு வாழ்வைச் சூழ வாழ்வோர் கண்டுணர்வது மிக இன்றியமையாக் கடனாகும். பாரிய அமைப்புக்களும், கட்டட வசதிகளும், தொடர்புக் கருவிகளின் முறையான பயன்பாடுகளும் இன்று இறையரசைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபடுத்தப்படுவதற்கேயன்றி வேறெதற்குமன்று.

இன்றைய சமூகத்திலிருக்கும் அற்ப சொற்ப வசதிகளைப் போட்டி மனப்பான்மையுடன், 'நான் பெரியவன்/ள்' என்பதைப் பல்வேறு உலகியற் காரணங்களைக் காட்டித் தட்டிச்செல்ல முற்படும் எமது சமுதாயத்திற்கு, அன்பின் ஒருமிப்பு அவசியம். போட்டி பூசல்களைக் களையும் மனமும், நீதியோடு, சிறப்பாக 'எளியோருக்கு முதலிடம்' என்ற பாணியிற் செயற்படும் பக்குவமுந் தேவை. இறைவனின் கொடைகளை உய்த்துணர்ந்து, அவற்றைப் பொதுநலனுக்காகப் பயன்படுத்தும் ஆர்வம் மிகவும் இன்றியமையாதது. இவ்விதம் குழுவிலும், ஊரிலும், பங்கிலும், தலத்திருச்சபையிலும் முன்னோடி இயக்குனர்களாக இச்சபையினர் திகழும்போது, புதியதொரு சமுதாயம் தொடர்ந்து புனரமைப்புச் செய்யப்படுகிறது. அனைவரும் இதனைத் தெளிவாகக் கண்டறிந்து அவர்கள் முன்மாதிரிகையைப் பின்பற்றுவார்கள் என்பது திண்ணம்.

21.02.1997

***********

*நல்லூர்ச் சுவாமி ஞானப்பிரகாசர் இறைபதமடைந்த 50வது ஆண்டு நிறைவில்....*

# துறவோடு கலந்த உறவு

வன்னிப்பகுதித் தமிழ் மக்களுடைய வாழ்க்கைத் துயரின் மத்தியில், மாமனிதன் ஒருவரது வரலாற்று நினைவைத் தள்ளிவைக்க முடியாத சூழ்நிலையில், சுவாமி ஞானப்பிரகாசர் அமரபதமடைந்த 50 ஆம் ஆண்டு நிறைவை நாம் நினைவுகூருகின்றோம்.

அவர் திருமறைக்கும், தமிழுக்கும் தம் வாணாள் முழுதும் செய்த அரும்பணிகள் அளப்பரியன, அவை மீளாய்வு செய்யப்பட வேண்டிய கருலங்கள்.

நல்லூர்ப்பதியில் தமது மறைப்பணியிற் கால்கொண்ட அடிகளார் 72 ஆண்டு வாழ்வில், தனியொருவராகச் செய்த பணிகள் அறிவு மேதைகள் பலராலும், பல்கலைக் கழகங்கள் பலவற்றாலும் ஒரு மித்துச் சாதிக்க முடியாத உன்னத சாதனைகளாகும்.

மகத்துவம் மிக்க குருத்துவத்தின் புனிதமும், பன்மொழிப் புலமையும், ஆய்வுத் திறமையும், தாய்த்தமிழ்ப் பற்றும். தளராத முயற்சியும், மனத்திடனுமே அவர் பெற்ற அழியாத வெற்றிகளுக்கு அடிநாதங்களாகும்.

வாழும் தலைமுறைக்கு, வழிகாட்டும் ஒளி விளக்குகளாக அவர் நிறுவிய ஆலயங்கள், கலையகங்கள், அறிவு நூல்வரிசைகள், ஆய்வுப் புதையல்கள், செந்தமிழ்ச் செல்வங்கள், சுகிர்தபோதகச் சொத்துக்கள், காலத்தாற் கவரமுடியாதனவாக அவரது மாமனிதப் பண்புக்கு மங்காத சான்றுகளாய் மிளிர்கின்றன.

வார்த்தையில் வாய்மையும், வாழ்க்கையில் தூய்மையும், வற்றாத அன்பில் தாய்மையுங் கடைப்பிடித்த அவர், அடியார்கள், அறிஞர் களை மட்டுமன்றி, அனாதைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் களையும் அணைத்தார். துறவற வாழ்வோடு சமுதாயத்தையும் ஒருங்கிணைத்தார். அரசாங்க முத்திரைகளிற் பொறிக்கப்பட்ட அவரது தூய வதனம், அன்பு நெஞ்சங்களின் நடுவே அரியாசனம் பெற்றுள்ளது.

மெய்ஞ்ஞானியாய், தமிழ் ஒளியாய், மாமேதையாய், ஏழைகள் தோழனாய், பட்டை தீட்டிய வைரமாகப் பிரகாசித்த ஞானத் தலைமகன் காலமாகிவிட்டாரா? இல்லை, காலமாகவே மாறிவிட்டார். அவர் காலத்தை வென்றவர், கல்வாரிப் பீடத்தின் வாடாத காணிக்கை மலர்.

கைம்மாறு கருதாது, தம்மாலியன்றவரை பேருபகாரங்கள் புரிந்த பெருமகனாரது பெயர் என்றும், எங்கும் வாழ நாம் ஆற்றவேண்டிய கடப்பாடுகளோ அனந்தம். எம் உயிர் மூச்சோடு எமது நன்றி மூச்சையும் சுவாசிப்போம். இறவாத புகழுடைய மறவாத செயல்களால் மனமாரப் பரிகாரஞ் செய்ய முன்வருவோமா?

செய்ந்நன்றி மறவாது என்றும் சிந்தை கொள்ளும் சிறந்தபண்பு செந்தமிழ் மக்களின் வரலாறோடு கலந்தது. அந்த அரும் பண்பு அழியாத வண்ணம் உலகம் வாழ உயிர் வாழ்ந்த உத்தமரை நினைவுகூர்வோமாக!!

17.01.1997

**********

## பணியாளர் பெருக

...இந்த நாள்களில் இளைஞர்கள்-யுவதிகள் குருத்துவ-துறவற வாழ்வை என்ன கண்கொண்டு நோக்குகின்றனர்? அவர்களுடைய பெற்றோரின் மனப்பான்மை எப்படிப்பட்டது? பாடசாலைகள் 'அழைத்தல்' வாழ்வுக்கு ஊக்கம் கொடுக்கின்றனவா? குருக்களும் துறவிகளும் தம் சிந்தனை-சொல்-செயல்களால் இளம் உள்ளங்களைக் கவருகின்றனரா? ஆவியால் நிரப்பப்பட்டுப் 'பணி புரியவே வந்தேன்' எனக் கூறி உலக மாந்தர் அனைவர்க்காகவும் தம்மையே பலியாக்கிய கிறிஸ்துவின் வாழ்வு இன்று உண்மையிற் பிரதிபலிக்கின்றதா? பொய்யினாலும் அதிகாரத்தினாலும், அடக்கு முறையினாலும், ஏமாற்று வித்தைகளினாலும் அல்லற்பட்டு அழுது நிற்கும் எம்மவர்க்கு இவர்களின் பிரசன்னம் எடுத்துக்காட்டாகவும், நம்பிக்கையூட்டுவதாகவும் அமைந்துள்ளது என மக்கள் மனமாரக் கருதவேண்டும். உரிமையோடும், பொறுப்போடும் வாழுவதற்குத் தம்முயிரையே தியாகம்பண்ணத் துணிந்து நிற்கும் இளைஞர்கள் 'அழைத்தல்' வாழ்வுக்குக் கவரப்பட நமது செபம்-செயற்பாடு யாவும் உளத் தூய்மையுடன் இணைந்தவையாக அமைதல் அவசியம்...

11.05.1984

*தமிழ்த்தூதுத் தனிநாயகம் அடிகளார் இறையடி சேர்ந்தபோது...*

## உந்து சக்திகள் உருவாகுமா?

தமிழ்த்தூது தனிநாயகம் அமரராகி விட்டார். அவரை அறிந்த அனைத்துலக அறிஞர்களும் இ:.து ஒரு பேரிழப்பு என்றே பெரு மூச்சு விடுகின்றனர். ஆனால், வெளி உலகம் இவரை அறிந்த அளவுக்கு அவரை ஈன்ற பாக்கியம் பெற்ற ஈழநாடு அறிந்திருக்கவில்லை என்பது இன்றைய நிலையில் நாம் வேதனைப்பட வேண்டிய ஒன்றே.

தனிநாயகம் அடிகள் இத்தனை உயர்ச்சியையும் பெற்றது அவரது தனி முயற்சியால்தான் என்பது பலருக்குத் தெரியாது. தீவிர போக்குடைய இவரது செயற்பாடுகள் எதிர்ப்புக்கள் பலவற்றைக் கொண்டு வந்தன: நேரடியாகச் சொல்லுவதானால், தான் பிறந்த நாட்டைவிட்டே விரட்டின. அவரது அந்த வெளியேற்றம் அவரை வேதனைக்குள் ஆழ்த்திவிடவுமில்லை; தோல்விக்குள் துவண்டு விழவைக்கவுமில்லை. அந்தத் தாக்கங்களையே ஏணிப்படிகளாக்கி உலக அறிஞர் வரிசையில் தன்னை உருவாக்கிக் கொண்டார். எம்மிற் பலர் இவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களில் இதுவுமொன்று. தனிப்பட்ட விதத்தில் அவரோடு பழகும் வாய்ப்பினைப் பெற்றவருக்குத் தெரியும், அவர் ஒரு நிறைகுடம். ஆகவே, தளம்பாத தன்மையுடையவர் என்று. எளிமை, தாழ்ச்சி, இரக்கம் அவரது பிறவிக் குணங்களாகும். முன்னுக்கு வர நினைப்பவர்களைத் தட்டிக்கொடுத்து ஊக்குவிக்கும் உதார குணத்தவர். அவரது இறுதி மூச்சுவரை இது விடயத்தில் விடடுக்கொடுத்தவரல்லர்.

'சைவமும் தமிழும்' என்று பேசப்பட்டு வந்த அந்த வாக்கிய வழக்கோடு, நல்லூர் ஞானப்பிரகாச அடிகளைத் தொடர்ந்து 'கந்தோலிக்கமும் தமிழும்' என்று புதுவழக்குத் தோன்ற வழிகோலி விட்டார்.

இதன் பொருட்டுத்தானோ என்னவோ தனிநாயகம் அடிகளாரின் இழப்பைக் கத்தோலிக்க வட்டம் பிரதிபலிக்கும் அளவிற்குப் பிற மத வட்டங்களோ பொதுவாகத் தமிழ் மட்டும் கூறும் வட்டங்களோ பிரதிபலிக்கவில்லை. யார் ஏற்பினும், ஏற்க மறுப்பினும் உலகம்

அவரை அறிஞனாக ஏற்றுக் கொண்டது இலங்கைத் தமிழருக்குப் பெருமையே. இதற்கு உதாரணமாக, எம்மவரை முந்திக் கொண்டு தமிழ்நாட்டில் - மதுரையில் இவருக்குச் சிலையெடுக்கப் போகின்றார்கள் என்ற செய்தி எமக்குக்கிடைத்துள்ளது.

ஞானப்பிரகாசருக்கு, ஜேர்மனி முதலில் முத்திரை வெளியிட்டது, தனிநாயம் அடிகளுக்குத் தமிழ் நாடு முதலிற் சிலை நிறுவுகிறது. ஈழத்தில் தோன்றிய தமிழ் மறை அறிஞர்களைக் கௌரவிப்பதில் பிற நாடுகளே முதலிடம் வகிக்கின்றன. இன்று எம்மிடயே உள்ள குறைகள் இப் பெருமான்கள் இருக்கும் போதே அவர் பெருமைகளை நம்மவர் புரிந்துகொள்ளாமை, புரிந்திருந்தும் தம் ஆதரவுதராமை; அவர்தம் பணியைத் தொடரத் தகுந்த வாரிசுகள் உருவாகாமை!

தடைகளை மீறித் தனிமனிதனாக முன் நின்று தமிழுக்கும் மறைக்கும் தொண்டியற்றக்கூடிய தனிநாயகர்கள் எம்மிடையே இனியும் உருவாகுவார்களா? அப்படித்துணிந்துவளர முயலும் குருத்துக்களுக்குத் தனிநாயகம் அடிகளாருக்கு ஆதரவளிக்க முன்வராத சக்திகள் உந்துசக்திகளாக மாறி உரமூட்ட முன்வருமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

28.11.1980

**********

# குருக்களும் பணியும் பெருக...

கிறிஸ்தவம்' என்பது இறைவனில் விசுவாசம் கொள்ளும் மக்களிடையே நிலவி - வளர்ந்து - செயற்பட்டு வருகின்ற பரஸ்பர அன்பிலும் உறவிலும் நிலைத்துள்ளது என்பதனை யாவரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். அங்ஙனமாயின் அந்த அன்பு-உறவுப் பணிக் கென்றே சிறப்பாகத் தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்துக் கொண் டுள்ள பணியாளர்களாகிய குருக்களுடைய கடமையும் பொறுப்பும் எத்துணை பொருள் பொதிந்தது என்பதைச் சிந்தித்துப் பார்த்தல் அவசியம். இந்தக் கடப்பாடு குருக்கள் முதலாம் சிறப்பு அர்ப்பண நிலையில் உள்ளவர்களுக்கும், பொதுநிலையினராகிய இறை மக்கள் அனைவருக்கும் பொதுவானது....

மக்களுக்கும் மக்களுக்கும் இடையிலும், குருக்களுக்கும் மக்களுக்கும் இடையிலும் அன்பையும் உறவையும் வளர்க்கும் பணியானது இடையில் வந்து புகுந்துவிட்ட மற்றெல்லா நோக்கங்கள் கடமைகளிலும் பார்க்க முதலிடம் பெறவேண்டும். சட்டப் பிரமா ணங்களின் வழிநின்று, பழக்கமும் வழக்கமுமாகிவிட்ட சில அமைப்பு முறைகளைச் சிதையாமல் கட்டிக் காப்பதிலேயே கண்ணும் கருத்து மாக இருந்து, மக்கள் உறவையும், ஏற்றுக்கொண்ட பணியையும் படிப்படியாக மறந்து கைநழுவவிடுதல் போலித்தனமே. கிறிஸ்தவ உறவும் பணியும் பயனளிக்கும் வகையிற் செயற்படவேண்டுமாயின், குரு மக்களையும், மக்கள் குருவையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். பொய், நடிப்பு, வெளிவேடம், போலித்தனம், இரட்டைவேடம் முதலிய ஒளிப்பு - மறைப்புக்கள் ஏதுமின்றி, பிதா-பிள்ளைகள், சகோதர மனப்பாங்கு என்னும் நிலைக்குயர்ந்து. இருசாராரும் ஒருவரை யொருவர் அறிந்து, புரிந்து கொண்டு பணிக்களத்தில் இறங்குவாராயின் 'கிறிஸ்துவின் இராச்சியம்' தங்குதடையின்றி வளர்ச்சியடையும் என்பதைக் கூறவும் வேண்டுமா? ஞாயிற்றுக்கிழமைப் பூசையில் குருவின் போதகக் குரலைக் கேட்பது அல்லது அண்மையிலும் தூரத்திலும் ஒருவரையொருவர் கண்டுகொள்வது என்ற அளவில் மட்டும் 'பணி' முடிந்துவிட்டால் உறவு அழிந்து கிறிஸ்தவ இணைப்புத் துண்டிக்கப்பட்டுவிடும்......

குரு மக்களைத் தரிசிப்பது முதலாய எத்தனையோ வழிகள் உண் மைப் பணி செய்பவர்களுக்குண்டு. இதைப்போலவே மக்களும் குருவை அறிந்து அன்பு செய்து - மதித்து - ஊக்குவித்து - ஒத்

துழைத்து-வழிகாட்டி மன்னித்து கிறிஸ்தவ அன்பில் பிள்ளைகளாக-சகோதரர்களாக - நண்பர்களாகக் கலந்து வாழ முன்வர வேண்டும்.

தோளோடு தோள் நின்று பணியாற்றும் மனப்பாங்கும் செயற்பாடும் நடைமுறைக்கு வருமாயின் குருக்கள் பெருகுவர். 'அழைத்தல்' எனப்படும் அர்ப்பணிப்பு வாழ்க்கைக்கு இளைஞர்கள்-யுவதிகள் கவர்ந்திழுக்கப்படுவர். பெற்றோரும் அந்த 'உன்னத' பணிக்குத் தம் பிள்ளைகளை இயற்கையாகவே ஊக்குவிப்பர்.

நம்மைப் போன்ற மனிதரிடையே இருந்து - எங்கள் குடும்பங்களி லிருந்து அர்ப்பணிப்பு வாழ்க்கைக்கு அழைக்கப்பட்டவர்களிடம் குறை கண்டுபிடித்தல் என்னும் ஒரே 'கழுகுக் கண்'ணாடியை நாம் தூர எறிந்துவிட்டு, குரு தம் பணியைச் செய்ய நமது மனமார்ந்த ஒத்துழைப்பு நல்குதல் குறைகள் நேராது தடுக்கவும் திடமான உபாயமாகும்.

கால மாற்றத்துக்குத்தக நமது வாழ்க்கை முறைகளும் மனப்பாங்கும் மாறுவதுபோலவே, கிறிஸ்தவ அரசை நிறுவும் பணியின் வழிமுறைகளும் மாற்றம் அடைதல் இயல்பே. இறுதி இலட்சியத்தைக் கைவிடாத வகையில் வழிமுறைகள் மாற்றம் அடையவேசெய்யும். மாற்றங்கள் எவை? எப்படி? என்பதிற் குழப்பத்துக்கு இடமில்லாத வகையிற் கூட்டு ஆலோசனைகளும், திட்டங்களும் ஒன்றிணைந்து பரவலாக்கப்படுதல் அவசியம். எதிர்கால அர்ப்பணிப்புப் பணியாளருடைய பயிற்சிக் களங்களிலேயே இவை இன்று புகுத்தப்படுதல் இன்றியமையாத தேவை. விடாப்பிடியாகப் பழமையையே பற்றிப் பிடித்து நிற்றலும், அதிருப்தியை வளர்த்து, அழைத்தல்களைக் குறைக்கும் என்பது அனுபவம். நம்மத்தியில் எல்லா மட்டங்களிலும் உள்ள குடும்பங்களில் இருந்து பணியாளர் பெருக அனைத்து முயற்சிகளும் தூரப் பார்வையுடன் குறுகிய சுயகௌரவ நோக்கங்கள் இன்றி வகுக்கப்படல் வேண்டும்.

13.07.1984

**********

# அவர்களை ஏற்றுக் கொள்வோம்

சில ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிற் குருத்துவ - துறவற அழைத்தல்கள் குறைந்து வந்ததை நாமறிவோம். இதனால், இளைஞர்கள் பலர் ஆசிய-ஆபிரிக்க நாடுகளிலிருந்து அங்கு பணிபுரிய அனுப்பப்பட்டனர். நல்ல அழைத்தல்கள் எம் நாட்டிலும் சீக்கிரம் குறையும் என்ற அச்சம் எம்மிடையேயும் இன்று தோன்றியுள்ளது. மற்றைய நாடுகளில் ஏற்பட்ட வகையான பிரச்சினைகள் எங்களுக்கு வரவில்லை என்று இனி மேலும் பெருமை பாராட்ட முடியாது.

பல பங்குகளிற் குருக்களில்லை. தொடங்கிய பணிகளைத் தொடரத் துறவிகளில்லை. இன்றைய உலகின் தேவைகளுக்கேற்பப் புதிய பணிகளுக்கு வேண்டியவர்கள் இல்லையே என்ற கவலை எங்கு முண்டு. ஆலயங்களுக்குள்ளும், மடங்களுக்குள்ளும் வைத்து நோக்கிய குருக்கள், துறவிகள். இன்று மக்களைத் தேடிச் சென்று மக்கள் மத்தியிலே பணிபுரிவதையே பலரும் விரும்புவர். ஆனால் பல்லாண்டு காலமாக, குருக்கள் துறவிகள் பற்றி எம் மத்தியில் ஏற்பட்டுள்ள மனப்படம் சில வேளைகளில் இதற்கு முட்டுக் கட்டையாகவுள்ளது. அவர்கள் எம்மிலிருந்து பிரிக்கப்பட்டு ஐரோப்பிய வாழ்க்கையை வாழ்கின்றவர்களாகவும், வானிலிருந்து இறங்கிய குற்றமற்றவர்களாகவும், மேலும் அனைத்தும் தெரிந்த மேதைகளாகவும், இறைசித்தத்தை என்றுமே அறிந்து, அறிவித்து வாழும் "புனிதர்களாக"வும் மதிக்கப்பட்டார்கள். இதற்கு மக்களிடமிருந்து அவர்கள் ஓரளவு பிரிந்து வாழ்ந்த வாழ்க்கை முறையும், பெரிய மதில்களுக்குள் மறைவாக வாழ்ந்துவந்தமை முதலியனவும்கூடக் காரணமாயிருந்திருக்கலாம். அவர்களும் "மனிதர்கள்", மனிதரிடையிலிருந்து தேர்ந்துகொள்ளப்பட்டு, பாவங்களுக்காகப் பலிகளையும், காணிக்கைகளையும் செலுத்துவதற்காகக் கடவுளைச் சார்ந்தவற்றிற்கென மனிதரின் சார்பாக ஏற்படுத்தப்பட்டவர்கள். தம் வலுவின்மையின் பொருட்டுத், தமக்காகவும் பாவப் பரிகாரப்பலி ஒப்புக்கொடுக்கின்றவராகவும் உள்ளார்கள் (எ.பி.5:1-3).. இக்கூற்றிலிருந்து அவர்களும் குற்றம் குறை உள்ளவர்கள் என்பது தெளிவு. எவ்விதம் உலகிற் பொதுமக்கள் பல்வேறு தொழில்களைச் செய்தும் வேறுபட்ட வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடித்தும் வாழுகின்றார்களோ, அவ்விதமே குருக்களும், துறவிகளும் பணிசெய்யும் அதேவேளையில், அவர்களும் கிறிஸ்தவ வாழ்வு வாழ முயற்சிக்கின்றனர். அவர்களும் கிறிஸ்தவத்தை வாழப்

பாடுபடுகின்றனர். எனவே இவ்வழியில் அவர்களை ஏற்றுக் கொள்வோம். அவர்களைப் புரிந்து கொள்வோம். அவர்களுக்கு நண்பராகவும், சகோதரர்களாகவும் நின்று ஒன்றிணைந்து கிறிஸ்தவத்தை வாழ்வோம். 'உங்களுக்காக நான் ஆயன்: ஆனால், உங்களோடு நான் கிறிஸ்தவன்' என்ற புனித அகுஸ்தீனாரின் கூற்று இக்கருத்தை மேலும் விளக்கும்.

வேறுபட்ட, புதிய பணிகள் வளர்ந்து கொண்டே வருகின்ற இக்காலத்தில், எதை எவ்விதம் செய்ய வேண்டுமென்று சரியாக அறியாது, உணராது, திண்டாட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. பரீட்சித்துப் பார்த்துச் சரியானதைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ள பணிகளில் ஆரம்பத்திற் பிழைகள் வருவது சகஜம். நாம் எமது அன்பால், வழிகாட்டலால், ஊக்குவிப்பால், ஏற்றுக்கொள்ளலால், அனுபவத்தால், திருத்துவதால், செபத்தால் மக்கள் பணிக்கென்று தம்மையே அர்பணித்தவர்கள் புதிய சூழ்நிலைகளிற் சரியான பணிசெய்ய வழிகோலுவது இன்று அவசியமாயுள்ளது. பொது நிலையினர் தமக்குரிய பணிகளில் சிறந்தோங்க, அவர்களை ஊக்குவிக்கும் சக்தியாகவுள்ள குருக்கள்-துறவிகளை வழிநடத்துவது பொது நிலையினர் பொறுப்பே என்பது வெளிப்படை.

ஆனால், எமது அவசியமற்ற குறைகண்டு பிடிக்கும் மனநிலை, பணியாளர்களைப்பற்றி என்றும் குறையாகப் பேசுதல், சுயநலனுக்காக மக்களைத் தவறாகத் தூண்டிவிடுதல் போன்ற முறையற்ற செயல்கள், குருக்கள் - துறவியர் சிறப்புப் பணிசெய்யும் வாய்ப்பைக் களைந்து விடுவது மட்டுமல்லாமல், எம் மத்தியிலிருந்து இளைஞர்கள் - யுவதிகள் கிறிஸ்துவின் பணியைத் தொடரப் பின்வாங்குவதற்கும் காரணமாய் அமையும்.

இன்றைய சமூக, அரசியற் பிரச்சினைகளும் எமது பணியாளர்களின் வாழ்க்கைப் பாதையைப் பெருமளவு மாற்றிக் கொண்டிருப்பது புலனாகும். யார், எப்பணியை எவ்விதம் செய்வது? என்ன மனநிலைதேயாடு இவற்றை அணுகுவது? மக்கள் நலனுக்காக எவ்வழியை நாடுவது? என்பதெல்லாம் சிலவேளையிற் சிக்கலான புதிராக இன்று உள்ளது. பிறநாடுகளில் மட்டுமன்று, எம் நாட்டிலும் குருக்களும், வேறு பலரும் அநீதியான கொடிய சட்டங்களின் கீழ்க் கைது செய்யப்பட்டுப், பொய்க் குற்றஞ் சாட்டப்படுவது சாதாரணமாகி விட்டது. "ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க வந்த" கிறிஸ்துவின் பணியாளர் எம் சமூகத்தில் யார் யாரால்

ஏழைகளாக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து செயற்படுவதும், அதற்காக எவ்வித துன்பத்தையும் ஏற்று வாழும் வாழ்வும் இலகுவானவாகத் தெரியவில்லை. "யார் யார் ஆவியால் இயக்கப்படுகின்றார்களோ, அவர்களே கடவுளின் மக்கள்" என்ற சின்னப்பரின் போதனைக் கிணங்கக் கிறிஸ்தவ மக்கள் அனைவரும் பணியாளருடன் ஒன்றிணைந்து, ஆவியின் வழிகாட்டுதலை உய்த்துணர்ந்து, இன்றைய திருச்சபையைக் கட்டியெழுப்பும் பணியில் முன்னேறுவோம். இவ்விதமான சூழல் உருவாகும்போது தம்மையே முற்றாக அர்ப்பணித்து, கிறிஸ்துவின் வழிநின்று பணிசெய்யும் குருக்கள்-துறவிகள் தோன்றுவர் என்பதில் ஐயமில்லை. துன்புறும் திருச்சபையிற்றான் அழைத்தல்கள் பெருகுதுவண்டு.

27.05.1983

**********

## அரசியலும் திருச்சபையும்

அடிப்படை மனித உரிமைகள் இன, மத, பிரதேச வேறுபாடின்றி, உலகம் முழுவதிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமென்பது அறிவறிந்த மக்கள் யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். ஆயினும், உலக நாடுகள் பலவற்றில் அடிப்படை மனித சுதந்திரம் ஏதோ ஒரு சில வழிகளில் மறுக்கப்படுவதும், அதனாற் சிறிதும் பெரிதுமான பூசல்கள் ஏற்பட்டு வருவதும் நாமறிந்ததே.

சிறப்பாகப் பின்தங்கிய நாடுகளிலும், வளர்முக நாடுகளிலும் அடிப் படை மனித உரிமைகள் மீறப்படுதல் பெருமளவில் நடைபெறுகிறது. மொழியுரிமை, மதவழிபாடு, கல்வி-வேலை வாய்ப்புக்கள், நில உரிமை, அபிவிருத்தியில் ஓரவஞ்சகம், பொருளாதார வஞ்சனை என்றிவ்வாறு இடத்துக்கிடம் இந்த அத்துமீறல்கள் மாறுபடுகின்றன. எங்கெங்கு இந்த அநீதிகள் நடைபெறுகின்றனவோ அங்கங்கெல்லாம் அமுக்கப்படும் மக்கள் தம் சக்திக்கெட்டியவாறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள். விலைமதிப்பற்ற பல இலட்சம் மனித உயிர்கள் இதனாற் பலியாகியுள்ளன. ஆயினும் போராட்டங்கள் தொடர்ந்தன. இந்தப் போராட்டங்களில் வேறு பல மனித சமுக நலம் பேணும் நிறுவனங்களைப் போலவே, அல்லது அவற்றிலும் மேலான அளவிற் கத்தோலிக்க திருச்சபை முன்னின்று உழைத்து வருவது வரலாற்று உண்மை.

போலாந்து, இலத்தீன் அமெரிக்க நாடுகள், பிலிப்பைன்ஸ், ஆபிரிக்க நாடுகள் முதலியன இன்றுள்ள சிறந்த களங்களாகும். திருச்சபையின்

வரலாற்றிலேயே அநீதிகளுக்கும் அடக்கு முறைகளுக்கும், தனிமனித சுதந்திரங்களுக்குமெதிராக நடந்த போராட்டங்கள் எண்ணிலடங்கா. தனிப்படவும் குழுக்களாகவும் வேத சாட்சிகளாக உயிர்த்தியாகம் செய்தவர்களின் வரலாறுகள் வேறு எவையாக இருக்க முடியும்? திருத்தந்தையர்கள், ஆயர்கள், குருக்கள் காலத்துக்குக் காலம் மிக்க துணிச்சலுடனும் பொருள் நிறைந்த வகையிலும் நீதிக்காகக் குரலெழுப்பி மனித உரிமைகளை வென்றெடுக்கப் பல தியாகங்களைப் புரிந்துள்ளார்கள். எந்த வல்லரசையும் சர்வாதிகாரம் கொண்ட நபர்களையும் நீதிக்கு மேலான சக்தியாகக் கத்தோலிக்கத் திருச்சபை தூக்கிவைத்து மதிப்பீடு செய்யவில்லை.

ஏனெனில், ஆன்ம சரீரத்தோடு படைக்கப்பட்ட மனிதன் சமமான உரிமைகளுடன் பிறக்கிறான் என்பதும், மனித வாழ்வில் எவருக்கும் உரிமைகள் மறுக்கப்படுவது அக்கிரமம் என்பதும் திருச்சபையின் கொள்கைகளாகும். உணவு, உடை, உறையுள், கல்வி, தொழில், மதம், பொருளுரிமை, மக்கட்பேறு, கருத்து வெளிப்பாடு, அரசியல் முதலிய அனைத்துமே மனித வாழ்வினின்று தனியாக ஒதுக்கிவிட முடியாத அம்சங்களாகும். மாண்புடைய முழு மனிதனுக்கு இவையாவற்றிலும் சம உரிமையுண்டு. இவை மறுக்கப்படுமிடத்து நீதிக்குப் போராடும் திருச்சபை அங்கேதோன்றிக் குரலெழுப்புவதும் போராடுவதும் தவிர்க்க முடியாத விடயம்.

இனம், மதம், மொழி, கலாசாரம், அரசியற் கொள்கைகள், பொருளாதாரம் என்பவற்றில் பலவித வேறுபாடுடைய மக்கள் வாழும் இந்த நாட்டிலே பிரச்சினைகள் பல உருவங்களில் தோன்றுவது சகஜமே. இவற்றின் தாக்கங்களினூடே வாழ்க்கை நடாத்தும் பொது நிலையினரை உறுப்பினர்களாகக் கொண்ட கத்தோலிக்க திருச்சபை நம் மக்களுடைய தேவைகளில், அவசரங்களில் காலந் தாழ்த்தாது நீதியை வென்றெடுக்க இங்கு முன்வருகின்றதா என்பது கேள்வி. கட்சி அரசியலிலே பொது நிலையினரான மக்கள் பல நோக்குடையவர்களாக இருக்கலாம். ஆனால், அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதை, நாட்டு மக்களில் ஒரு சாரார் அநீதியான சட்ட திட்டங்களாலும், அவற்றை நடைமுறைப் படுத்துவோருடைய விருப்பு வெறுப்புக்களுக்கு இலக்காகியும் வருந்துவதைக் கத்தோலிக்க திருச்சபை இந்நாட்டில் இடித்துரைக்க முன்வருகின்றதா? நமக்குள்ளேயுள்ள கருத்து வேறுபாடுகளை உலகு அறிந்துவிடும் என்ற தன்மானத்தினாலும், கட்சி அரசியல் ஆட்சியாளரின் வெறுப்புக்கும் கண்டனத்துக்கும் உள்ளாக வேண்டுமே என்ற தயக்கத்தினாலும் நாம் மௌனம் சாதிப்பது முறையன்று.

அர்த்தமற்ற பயங்கரவாதத் தடைச்சட்டம் நாடு முழுவதற்கும் பொதுவானதென்று இயற்றப்பட்டு, ஓர் இனத்தாருக்கு எதிரான முறையில் மட்டும் வரம்புமீறி நடைமுறைப்படுத்தப்படுவதை எம் திருச்சபை எப்போதாவது ஒரு குரலில் எடுத்துக் கூற முன்வர வில்லை. தேர்தற் காலத்தில், தத்தம் அபிப்பிராயங்களை வாக்காளர் மத்தியில் எடுத்துக் கூற எவரும் முயற்சிக்கும் வேளையில், எல்லாவகையிலும் சட்டபூர்வமான முறையில் துண்டுப்பிரசும் வெளியிட்டு விநியோகித்த மாணவர் தலைவனைச் சட்டநெறிகளுக்கு மிகவும் அப்பாற்பட்ட வகையில் விசாரணையின்றிச் சிறைப்படுத்தியிருப்பது பற்றி நமது குரல் வெளிவரவில்லை.

கிறிஸ்துவின் சிலுவையை நமக்கென்று ஏற்றுக்கொண்டு, மக்கள் பணிசெய்ய அர்ப்பணிக்கப்பட்டவர்களும் ஏனையோரும் ஒன்று சேர்ந்து அநீதிக்கு எதிராகப் போராடவும் சலுகை முகத்தாட் சனைகளை எதிர்பார்க்காது, சமூக நீதிக்குக் குரல் கொடுக்கவும் முன்வருவோமாக.

அரசியல் மனித வாழ்வினின்றும் வேறான ஒன்றன்று, உலகிலே திருத்தந்தையும், பல நாடுகளில் உள்ள ஆயர்களும் எத்தனை துணிச்சலுடனும் தக்க நேரத்திலும் குரல் கொடுத்து வருகிறார் களென்பது நமக்கு எடுத்துக்காட்டாக அமையட்டும்.

8.10.1982

***********

## கிறிஸ்தவ அமைச்சா ?

கடந்த மாதம கொழும்பில் நடைபெற்ற இலங்கைக் கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் கூட்டத்தின் போது, கிறிஸ்தவ விவகாரங்களுக் கென அமைச்சர் ஒருவரை நியமிக்குமாறு அரசைக் கோர விரும்புவதாகச் செய்தி பிரசுரமாயுள்ளது. இவ்விதமான ஓர் அமைச்சு உருவாகுமானால் அ..து எமக்கு நன்மை பயக்குமா என்பது ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய விடயமாகும்.

ஆதித் திருச்சபை கலாபனைகளினூடேயே வளர்ந்தது. துன்பங்களுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியில் அவர்கள் விசுவாச பலம் பெற்றுக் கிறிஸ்துவின் செய்தியை ஆர்வத்தோடு பரப்ப முற்பட்டனர். இவ்விதம் துன்புற்ற திருச்சபைக்கு 313 ஆம் ஆண்டில்

கொன்ஸ்ரன்ரைன் சக்கரவத்தியின் கீழ்ச் சுதந்திரம் கிட்டியது. கிறிஸ்தவம் 'அரச ஆதரவு பெற்ற' மதமாக மாறி, எல்லாச் சலுகைகளையும் பெற்று இலகுவாக வளரத் தொடங்கியது. 313 ஆம் ஆண்டில் திருச்சபை அரசனின் துணையும் சலுகையும் அடைந்து 'செல்வாக்கு'ப் பெற்ற மதமாக மாறியதால், அவ்வாண்டு திருச்சபையின் வாழ்வில் 'தனித்தன்மை இழந்த ஆண்டும் என வரலாற்று அறிஞர் கூறுவர். எந்தவொரு மறையும் அதன் அமைப்புக்களும் அரசியற் செல்வாக்கைப் பெற்று வாழவும் வளரவும் முற்படும்போது அதிகமாகத் தன் சொந்த மதிப்பீடுகளை இழந்து ஒரு கட்டுக்கோப்பற்ற அமைப்பாக மாறுவதைக் காணலாம். அத்தோடு அன்பு, இரக்கம், மன்னிப்பு, சமத்துவம், நீதி போன்ற மத போதனைகளை விட, அதிகார அமைப்புக்களைத் தேடித் தனக்குரிய சலுகைகளை வளர்த்துக் கொள்வதோடு, ஏனையோரைத் தமக்குத் தாழ்ந்தோராகக் கருத முற்படுவதும் கவலைக்குரியதே.

அரசின் மிதமிஞ்சிய துணையும், பாதுகாப்பும் மதத்தை அடிமை யாக்கி, அரசியல் நலனுக்காக அதைப் பயன்படுத்தும் நிலையை உருவாக்கும் ஆபத்தைக் கொண்டுவரலாம். அந்நிலையில் எம்மதமும் தன் தனித்தன்மையையும் இலட்சியத்தையம் இழக்க நேரிடும்.

கம்யூனிச சீனாவிலும், வியட்நாமிலும் இப்போது கத்தோலிக்கரில் ஒரு பகுதியினர் அரச ஆதிக்கத்தின் கீழ் "தேசிய திருச்சபையாக" (National Patriotic Church) அகில உலக கத்தோலிக்க திருச் சபையிலிருந்து பிரிந்து வாழ அரசினால் வற்புறுத்தப்படுவதை நாம் பார்க்கிறோம். இத்திருச்சபை அரசின் ஆதிக்கத்தின் கீழேயே செயற்படலாம்: அரசின் பிழையான போக்குகளைக் கடிந்துகொள்ள அதற்கு அதிகாரமில்லை.

இந்நிலை எமது ஸ்ரீலங்கா திருச்சபைக்கும் வந்துவிடுமோ என்று அவதானிகள் பலர் அஞ்சுகின்றனர். கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்குச் சான்று பகர்ந்து, அன்போடும், சகோதரத்துவத்தோடும், நீதியோடும் வாழ முற்படுவதைவிட அரசின் தீர்மானங்களை நிறை வேற்றுவதிலும், அரசைப் பிரியப்படுவதிலும் அக்கறை செலுத்தப்படும் நிலை உருவாதல் வருந்துதற்குரியதே. கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வதற்கும் அரசியல் தீர்வுகளுக்குமிடையே உள்ள வேறுபாட்டை உணரக்கூடாத நிலை உண்டாக இடமளித்தலாகாது. இவ்விதமான செயல்களால் நாம் ஆள்வோரின் கைப்பொம்மைகள் எனக் கொள்ளப்படுவோம்.

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி அணுவாயுத ஏவுகணைக்குச் செனெற் சபையில் ஆதரவைக் கோரியவிடத்து, அந்நாட்டு ஆயர்மன்றம் அதற்கு ஆதரவு நல்கவேண்டாமெனச் செனற் உறுப்பினர்களுக்கு எழுதியது, இதில் அமெரிக்க ஆயர் மன்றத்தின் சுதந்திரமான நிலையைப் பாராட்டாமலிருக்க முடியாது.

எத்தனையோ பொருளாதார-சமூக பிரச்சனைகளினூடே இன்று தள்ளாடிச் செல்லும் எம் மக்களின் வாழ்வில் திருச்சபை சுதந்திரமாகவும், துணிவாகவும் கிறிஸ்து வழிநின்று வழிகாட்ட வேண்டிய இக் காலத்தை நாம் கைநெகிழ விட முடியாது. "காலத்தின் அறிகுறிகளை' அறிந்து செயற்பட வேண்டிய இக்காலகட்டதில், சில சலுகைகளுக்காக அரச அமைப்புக்களுக்கு எம்மை விற்க முற்படுவது அறிவீனம் என்பது எம் கருத்து. அத்தோடு நாம் இன்று எதிர்நோக்கும் இனப்பிரச்சனைகளோடு, மதப்பிரச்சினையும் உண்டாகி வளர வாய்ப்பாகலாம். மேலும் வருங்காலத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றும் அரசியற் கட்சிகள் எப்படிப்பட்டவையாக இருக்கக் கூடுமோ!

3.05.1985

**********

## கிறிஸ்தவ இலக்கியங்கள்

காலத்துக்குக் காலம் படைக்கப்படும் இலக்கியங்கள் படைப் பாளியினதும் அவன் சார்ந்துள்ள சமூகத்தினதும் சிந்தனையையும் சூழ்நிலையையும் பிரதிபலிப்பனவாகவே உள்ளன. அந்த ரீதியிலே இற்றைவரை கிறிஸ்தவ இலக்கியங்கள் பல படைக்கப்பட்டுள்ளன- படைக்கப்பட்டு வருகின்றன.....

வீரமாமுனிவர் காலந் தொட்டு இற்றைவரை படைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ இலக்கியங்கள் ஆயிரக்கணக்கானவை. ஆனால் இவற்றை எந்த அளவுக்கு எம்மவர்கள் பாதுகாத்துப் படித்துப் பயன்பெற்று வருகின்றார்கள் என்ற வினாவுக்குக் கிடைக்கும் விடை வேதனை தரக்கூடியதே.

இலங்கைத் திருச்சபையின் ஆரம்ப கட்டத்திற் கிறிஸ்தவத்தையே வேரோடு அழிக்கக் கிளம்பிய எத்தனையோ சக்திகளைத் தோல்வி

காணவைத்த ஆயுதங்கள் அன்றைய கிறிஸ்தவ இலக்கியங்கள். இன்று அவற்றின் நிலையென்ன? தேடுவாரற்ற நிலையிற் செல்லரித்த சுவடிகளாய் அழிந்தொழிந்து போயின.

எமது இந்த அசட்டையின் விளைவால் நல்லூர்ச் சுவாமி ஞானப்பிரகாசர் தம் பெருமுயற்சியால் எழுதிய, எத்தனையோ அச்சுப்பிரதிகள் மட்டுமல்ல கையெழுத்துப் பிரதிகளும் இருந்த இடமின்றி அழிந்தொழிந்து போனதெல்லாம் ஈடுசெய்ய முடியாத இழப்புக்களாகும்.

கிறிஸ்தவ இலக்கியங்களைக் கிறிஸ்தவர்களே புறக்கணிக்கும் நிலையை, அமரர் தனிநாயகம் அடிகள் இறுதியாக எழுதிய கட்டுரைகளிற் சுட்டிக்காட்டியிருப்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இதே வேளையில், இன்றைய கிறிஸ்தவ இலக்கியங்களின் நிலையென்ன? இலங்கையிற் பிரபலியமான கிறிஸ்தவ எழுத்தாளர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஆனால், கிறிஸ்தவ இலக்கியங்களை அவர்கள் படைக்காத நிலையில், திசை திரும்பிய நிலையிற் செயற்படுகின்றனர். இதற்கு அடிப்படை என்ன என்பதை நாம் உணருதல் அவசியமாகும். இவர்களையும், இவர்கள் படைப்புக்களையும் எமது மறைவட்டாரங்கள் தகுந்த முறையில் ஊக்குவிக்கத் தவறியமையும் ஒரு காரணமாக அமைந்துள்ளது....

எமது கத்தோலிக் இலக்கியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கான தனிநூலகம் ஒன்றினை உருவாக்கி ஆவன செய்யப் பொறுப்பில் உள்ளவர்கள் முன்வரவேண்டும்.

நவீன சிந்தனைகளைக் கொண்ட கிறிஸ்தவ படைப்பாளிகள் இயன்றவரை பலன்கருதாத நிலையில் சமூக நலனை நோக்காய்க் கொண்டு கிறிஸ்தவ இலக்கியங்களைப் படைக்க வேண்டும்.

இந்தப் படைப்பாளிகளுக்குத் தகுந்த ஊக்கம் அளித்து, முடிந்த அளவு பிற நாடுகளில் உள்ளது போல் எழுத்தாளன் தன் எழுத்தால் வாழக்கூடிய நிலைமை எமது நாட்டிலும் உருவாக வேண்டும்.

7.11.1980

**********

*அருள்தந்தையர்கள் மேரி பஸ்ரியனும், ஜெயராஜசிங்கமும் மன்னாரிற் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து......*

## வீழ்ச்சி - அதுவே உயர்ச்சிக்கு வித்து !

இன்றைய சூழலிற் கிறிஸ்துவுக்குச் சான்று பகர அழைக்கப்பட்ட எம் திருச்சபையின் வாழ்விற் புதிய அனுபவங்கள்: கடந்த மார்கழித் திங்கள் 13ஆம் நாள் மெதடிஸ்த சபைக் குரு ஜெயராஜசிங்கம் அவர்கள் ஆயுதப் படையினரால் நடுத்தெருவிற் பட்டப்பகலிற் கொலை செய்யப்பட்டார். இத் தைத் திங்கள் 6ஆம் நாள் வங்காலைப் பங்குக் குரு மேரி பஸ்ரியன் அவர்கள் குருமனையில் வைத்தே நள்ளிரவிற் கொலை செய்யப்பட்டார்.

கடந்த நான்கு நூற்றாண்டுகளுக்கு இஃது ஒரு புதிய அனுபவமானாலும், ஈழத் திருச்சபைக்கு இது பழமையானதே. 1544 ஆம் ஆண்டில் மன்னார்ப் பகுதியிற் கிறிஸ்துவுக்காகத் தம் உயிரைக் கொடுத்துச் சான்று பகர்ந்த 600-700 புதிய கிறிஸ்தவர்களின் - வேதசாட்சிகளின் - இரத்தமே இன்றுள்ள எமது வேரூன்றிய விசுவாசத்தின் வித்தாக அமைந்தது எனத் துணிவோடு கூறலாம். அதே மண்ணிலேயே இவர்களின் இரத்தமும் சிந்தப்பட்டதை என்னவென்றுதான் கூறுவது?

நிகழ்ச்சிகளினூடாக எம்மோடு பேசும் இறைவன் இக் கொடூரமானதும், துன்பம் நிறைந்ததுமான மரணங்களால் எம்முடன் பேசுவதை உணர்கின்றோம். நாம் விசுவசிக்கும் சமூகமாக ஒன்றிணைந்து ஆழமாகச் சிந்திக்கவும், செபிக்கவும், கலந்துரையாடவும் வேண்டும். காலத்தின் அறிகுறிகளை அறிந்து செயற்பட அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை என்றும் இல்லாதவாறு இன்று நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். இவ்விதமான நிகழ்வுகளினதும் உள்ளுணர்வுகளினதும் ஊடாகவே இறைச் சித்தத்தை நாம் புரிந்து கொள்ளலாம்; துணிவோடும் ஆர்வத்தோடும் அதற்கேற்பச் செயற்படலாம்.

அண்மையில் நடைபெற்ற இக் குருக்களின் மரணங்கள் வரலாற்றில் இன்று நடைபெறுகின்ற ஏனையவற்றுடன் ஒன்றிணைத்தே நோக்கப்பட வேண்டியன. நாளாந்தம் எம்மவர்கள் பலியாக்கப்படுகின்றனர்; காணாமற் போகின்றனர்; அநியாயமாகக் கைதுசெய்யப்படுகின்றனர்;

சொத்துக்கள் அனைத்தும் சூறையாடப்படுகின்றன; பல்வேறு துன்பங்களுக்கு மக்கள் உள்ளாகின்றனர். ஆம், துன்புறுத்தப்படும் இம்மக்களினது தலைவர்களும், பணியாளர்களுமான ஜெயராஜ சிங்கத்தினதும், மேரி பஸ்ரியனுடையவும் மரணங்கள் எமது மற்றெல்லாத் துன்பங்களுடனும், இழப்புக்களுடனும் ஒன்றிணைந்து 'பலியின் இரத்தமென வார்க்கப்படுகின்றன' (2 தீமோ. 4:6). கிறிஸ்து வின் பலியைப் போன்றே இவையும் எமக்கு உயிர்ப்பும் வாழ்வும் தருவனவையாயிருக்கும் என்பது திண்ணம். அத்தோடு கொலை ஞர்களுக்கும் எம்மைத் துன்புறுத்துவோருக்கும் இந் நிகழ்ச்சிகள் சவாலாகவும் அமைகின்றன.

இறுதியாக, இன்று நாம் 'கிறிஸ்தவர்களின் ஒன்றிப்பு' வாரத்தை ஆரம்பிக்கிறோம். 'அவர்கள் ஒன்றாய் இருப்பார்களாக' என்ற கிறிஸ்துவின் எதிர்பார்ப்புக்கேற்ப எம் உறவுகளும், சிந்தனை, செயற்பாடுகளும், பணிகளும் அமைவது அவசியம். ஒரே கிறிஸ்து, ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் ... ஒன்றிணைந்து மக்கள் நலனுக்காகச் செயற்படுவோம். எமது மனநிலைகளும் செயல்களும் ஒருமைப்பாட்டை நோக்கியே அமையட்டும். நாம் இழந்த இரு குருக்களின் அரும்பணிகளுக்காவும் இறைவனுக்கு நன்றிகூறி, இறைவனில் அவர்கள் என்றும் மகிழ்ந்திருக்க வேண்டுவோம். இவர்களின் மரணம் எம் தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றிக்கும் நிகழ்ச்சிப் பாலமாக அமையட்டும்.

18.01.1985

**********

குருக்கள் பணி

.....பாதிப்புற்ற மக்களை ஆதரிப்பதிலும், பகிர்தலிலும் சுய பரித்தியாகமும் பொறுமையும் விவேகமும் பன்மடங்கு தேவையாகும்.

நன்றிகொன்றவர்கள், புறங்கூறுகிறவர்கள், தீய கண்ணோட் டத்துடனேயே நோக்குகிறவர்களுடைய சொல்லடிகளும் கல்லடிகளும், கிறிஸ்துவை முன்வைத்துச் சீரிய பாதையில் முன்னேறிச் செல்லுகிறவர்களுக்கு உள்ளார்ந்த இன்பத்தைத் தரும் 'வாழ்த்து மலர்களாக' நோக்கும் உன்னதமான உள்ளம் வேண்டும்...

26.11.1982

# கைகூடுமா ?

1970 - 79
பழைய 10 வருடங்கள் -
எத்தனையோ நிகழ்ச்சிகள்;
பாப்பரசரின் இலங்கை விஜயம்.

1971 கலவரங்கள ...

1972ல் புதிய சுதந்திர அரசாங்கம் -
எரிபொருள் விலை உயர்வு.....விலைவாசி உயர்வு;
உணவுப்பொருள் தட்டுப்பாடு....
பாணுக்குக்கூட 'கியூ' ....
தரப்படுத்தல்.... வேலையில்லாத் திண்டாட்டம்;
உரிமைக் குரல்.....

1977 புதிய தேர்தல், புதிய அரசாங்கம், ஆவணிக் கலவரம் -
மனிதன் மனிதனைக் கொல்லும் மிருகமாகிறான்-
அதுவே விஞ்ஞான முன்னேற்றத்தின் அடையாளம் ?
1958 கலவரத்தின் போது கிறிஸ்தவர்கள் வாழுமிடங்களிற் பிரச்சினை இல்லை" - எம் மொழி பேசுபவனும் சகோதரன்" என்ற உணர்வு;
ஆனால் '77 கலவரத்தில் அவ்வுணர்வுக்கு இடமில்லை.....

1978 புயல் -
நிவாரணப்பணிகள், பல்வேறு நாடுகளின் உதவிகள் -
இவற்றினாற் பயனடைந்தோர் வேறு பலர்;
தொடர்ந்து விலைவாசி உயர்வு;
வேலை வாய்ப்பு - ஒரு சாரார்க்கு மட்டுமே:

அடக்கு முறை உயரிய மட்டத்தில்;
உரிமைக் குரல் சுதந்திரக் குரலாக மாறுகிறது.

1980

புதிய ஆண்டு; புதிய எதிர்பார்ப்புக்கள்; புதிய ஆவல்கள்; விருப்புக்கள்....

ஆனால், பிரச்சினைக்கு முடிவு வருமா? எல்லோரும் சுதந்திரமாக வாழ முடியுமா? அவசியமான உணவு, உடை, உறைவிடம், உரிமை பெற்று வாழ முடியுமா?

பதில் எம்மில்: கிறிஸ்தவர்களாகிய நாம் திரும்பவும் கிறிஸ்துவின் பண்புகளை ஏற்று அதன்படி வாழ முற்பட்டால், அனைவரையும் ஏற்று, மதித்து, உரிமை கொடுத்து வாழ வழி வகுத்தோமானால் சமுதாயத்திற் கட்டாயம் ஒரு திருப்பம் ஏற்படும். நாம் கிறிஸ்தவர்கள்: எம் மொழி பேசினாலும் - ஒன்று சேர்ந்து உழைத்தால் 1980 மகிழ்ச்சியான வருடமாக மாறும்.

இது கைகூடுமா?

11.01.1980

***********

## பாடசாலைகளில் அரசியல் இல்லையாம்!

..... சென்ற நாட்களில் வந்த பத்திரிகைச் செய்திகள் ஒரு நம்பிக்கையூட்டும் செய்தியைத் தந்தன: "பாடசாலைகளில் அரசியலைப் புகுத்தப்படாது - அரசியலில் இருந்து விடுபட்டதாகவே இருக்கும்". அரசின் இத் தீர்மானத்தை வரவேற்கின்றோம். இத் தீர்மானம் முழுமையாகச் செயற்படுத்தப்படுமாயின் மாணவர்களுக்கு மட்டும் அன்று, பாடசாலைச் சூழலுக்கும் துணையாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நன்மை பயக்கக்கூடிய முறையில் இத்தீர்மானம்

செயற்படுத்தப்படுமா? என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. ஆசிரியர் நியமனங்கள் கட்சிச் செல்வாக்குக்கு இணங்கத் தொடர்ந்து கொடுக்கப்படுமாயின், அல்லது செல்வாக்கைப் பொறுத்தே கட்டடங்களும் வேறு வசதிகளும் செய்து கொடுக்கப்படுமாயின் இத் தீர்மானம் அர்த்தம் அற்றதாகவே இருக்கும். அரசியற் செல்வாக்கினால் தேடிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு ஆசிரியர்கள் சிலர் கடமையில் தவறுவது மட்டும் அன்று, பிழையான போக்குகளிலும் ஈடுபடுவது வருந்தத்தக்கது. பல்வேறு பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை இருக்க, ஏற்றுக் கொள்ளமுடியாத காரணங்களினால் ஒரு சில பாடசாலைகளில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் இருப்பதையும் அவதானிக்கின்றோம். அதிபர்களின் நியமனங்களில், இடமாற்றங்களில்தான் எவ்வளவு அரசியல்! பாடசாலைகளை வழிகாட்ட, கண்காணிக்க வேண்டிய கல்வி அதிகாரிகளும் பற்பல காரணங்களால் தம் கடமைகளில் தவறுவது மாணவர்களைப் பாதிக்கும் ஒன்றாகும். இவ்விதமான அரசியல் தலையீடுகளும் கட்சிப் பிரச்சினைகளும் தவிர்க்கப்பட்டால் மட்டுமே பாடசாலைகளில் அரசியல் இல்லை என்னும் கூற்று - ஓரளவு உண்மையானதாக அமையும். சட்டங்களாலும், தீர்மானங்களாலும், அறிக்கைகளாலும் இது நிறைவேற்றப்பட முடியாது. எனவே அனைவரும், விசேட விதமாகப் பெற்றோரும் இதில் அக்கறை எடுத்து மாணவர்களுக்கு நல்வழிகாட்ட முன்வர வேண்டும்...

இதனால், நமது பிள்ளைகளின் எதிர்காலம் ஒளிபெறும் என்பதைச் சம்பந்தப்பட்ட அனைவரும் கருத்திற் கொள்ளுதல் அவசியம்.

16.01.1981

************

*1981 தேர்தலில் தில்லுமுல்லுகள் பல நடந்தபோது...*

# வேலியே பயிரை மேய்ந்தது

இந்நாட்களில் திடீர் திடீரென அதிசயமான, மறக்கமுடியாத, எதிர்பாராத சம்பவங்கள் நடப்பது சகஜமாகிவிட்டது. அவற்றுள் ஒன்றுதான் 'யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல்'. சர்வஜன வாக்குரிமை நடைமுறைக்கு வந்த சென்ற 50 வருடங்களில், எம் நாட்டில் வேறெந்த ஊழல்கள் இருந்தாலும், தேர்தல்கள் எமது சக்திக்கெட்டியவரை சரியான முறையில் நடைபெற்றுள்ளன எனலாம். இதைக்குறித்து எம் நாட்டிலுள்ள அனைவரும் பெருமைப்பட முடிந்தது.

ஆனால், இம்மாதம் 4ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் நிகழ்ச்சிகள் இப்பெருமையை எம்மிடமிருந்து பறித்துவிட்டன. மேலும், நாம் உலகின் முன் வெட்கப்பட வேண்டியுமுள்ளது. வாக்குச் சாவடிகளின் அதிகாரிகளின் தனிப்பட்ட போக்குக்கிணங்கவே அனைத்தும் நடைபெற்றனவேயன்றி, தேர்தற் சட்டங்களுக்கேற்ப நடைபெறவில்லை. காலை 7 மணிக்கு இயங்கவேண்டிய தேர்தல் நிலையங்கள் பலவற்றில், 10.30, 12.00, பி.ப. 2.00 மணிக்கே வாக்குகளை மக்கள் உட்சென்று போடக் கூடியதாயிருந்தது. அந்தந்த நிலையங்களில் வாக்குகளை எண்ணவேண்டுமெனச் சட்டம் இருந்தும், அதன்படி பல இடங்களிலும் நடைபெறவில்லை என்பது பகிரங்க செய்தியாயிற்று. இவற்றைப்போல் இன்னும் பல சட்டத்திற்கு முற்றும் மாறான நடைமுறைகள் அதிகாரத்தோடு கையாளப்பட்டதாலே, யாழ்மாவட்டத் தேர்தல் முடிவுகள் 12 நாள்கள் கழித்து வெளிவந்தன.

ஒரு வாக்களிப்பு நிலையத்திற்கு வாக்குப் போடும் பெட்டி 12 மணியளவிலேயே கொண்டு வரப்பட்டது. அதன் அதிகாரிக்குத் தமிழ் தெரியாததால், அங்கு வாக்குரிமையைப் பயன்படுத்த வந்த குருவானவர் ஒருவர் மூலம் மக்களுக்குக் கூறினார்: "12 மணி தொடக்கம் 12.30 மணி வரையுமே வாக்குப் போடலாம்" என்று.

இதைக் கேட்டதும் மக்கள் இதிற் பொருளில்லை எனக்கருதி, வாக்குப் போடாமலே வெளியேறினர். அப்போது அவ்வதிகாரி திரும்பவும் குருவானவர் மூலம்: "4 மணிவரை போடலாம். ஆனால் இங்கு எண்ணமாட்டோம்" என்று சட்டத்தை மீறுகிறோமே என்ற எவ்வித கலக்கமுமின்றிக் கூறினார்.

இவைபோன்ற சட்டத்திற்கு மாறான செயல் இம்மாவட்டத்தின் அபிவிருத்திச் சபைத் தேர்தலில் அநேக பகுதிகளில் நடைபெற்றிருப்பதால் இவ்வதிகாரிகளின் தனிப்பட்ட குறைகளாக இவற்கைக் கருதமுடியாது. நாட்டினதும், தேர்தலினதும் உயர் அதிகாரிகளே இதற்குப் பொறுப்பாயுள்ளனர் என்ற கருத்து மக்கள் மனத்திற் பதிந்துவிட்டது.

இப்படியொரு தேர்தல் நடைபெற்ற பின்னும் சர்வசன வாக்குரிமையின் 50 ஆண்டு பூர்த்திக் கொண்டாட்டங்களுக்கு நாம் அருகதையுள்ளவர்களா? திரும்பவும் எம் நாட்டிற் சுதந்திரமான ஜனநாயக வாக்கு முறையை எதிர்பார்க்கலாமா? என்பது கவலைக்குரிய கேள்விக் குறியாகிவிட்டது.

19.06.1981

**********

## விடிவு எப்போது...?

பாம்பு ஒன்று தன் வாலைப் பிடிக்க முனைந்து வட்டம் சுற்றி ஓடியதாம். சுற்றிச்சுற்றி ஓடியதுதான் மிச்சம்; எடுத்த கருமம் முடியவில்லை.

நீண்டகால ஆராய்ச்சியை விடுத்து, 1977இன் பொதுத் தேர்தலின் பின்னால் உள்ள குறுகிய நான்கு ஆண்டுகளையே திரும்பிப் பார்ப்போம். இந்த நான்கு ஆண்டுகளைப் பார்க்கும் பார்வையிலேயே அவரவர் அறிவு அனுபவத்திற்கேற்ப, பற்பல வருடத் தொடர் கதைகளின் கோவையும் தென்படும்.

77ஆம் ஆண்டு இந்த அரசு, ஆட்சிக்கு வந்து ஒரு மாதத்துக்குள், நாடு முழுவதும் தமிழன் வதைக்கப்பட்டான். தொடர்ந்து பல வாதப் பிரதிவாதங்கள், சான்சோனி விசாரணை-அறிக்கை-முடிவு ஒன்றும் இல்லை; இன்றும் இல்லை. தொடர்ந்து குறிப்பர்க வடபகுதியில், பல கொலைகள்-கொள்ளைகள்-தாக்குதல்கள்-சிறைப்பிடித்தல்-ஆயுதப் படைகளின் அட்டகாசம்: கண்ட முடிவு ஒன்றும் இல்லை.

பிரதமர் உடபடப் பல மந்திரிகள் வருகை, மாநாடுகள், தீர்மானங்கள், வாக்குறுதிகள், இங்கொன்றும் அங்கொன்றுமான அறிக்கைகள். பொதுப்பணம் விரையம். ஆனால், முடிவற்ற - விடிவற்ற நிலை.

இதற்கிடையில் "கிழக்கே வராதே! வடக்கே வந்துகொள்ள மாட்டேன், எங்களுடைய அலுவலை நாங்கள் பார்ப்போம்" என்ற கோஷங்கள். இவர்களுக்குள் உட்பூசல்கள் - காட்டிக் கொடுத்தல்கள். "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்". ஒரு பக்கமும் ஒன்றும் உருப்படியாகாத நிலையில் வசவுகள். மாற்றான் நமுட்டுச் சிரிப்புச் சிரிக்கின்றான்.

முதிய அரசியல் வாதிகளுடன் இளைஞர்கள் கருத்து மோதல். பிரிவினைக் கூட்டங்கள் - பேச்சுக்கள் - அறிக்கைகள். இது இப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே முதிய அரசியல் வாதிகளுக்குள் 'யார் பெரியவர் - யார் சரி' என்ற போட்டா போட்டி. "தன் பல்லைக் குற்றிப் பிறர் மூக்கில் வைத்த விவேகிகளின்" ஆட்டங்கள்! புதிய பத்திரிகைகளின் குறைப்பிரசவம்; பயன்தான் ஒன்றும் இல்லை.

மாவட்ட சபையை ஏற்பதா? விடுவதா? என்பதிலேயே குஸ்தி விளையாட்டுக்கள். இ்.து அகில உலக ரீதியிலே சர்ச்சைக்குள்ளாகி, இரு கட்சிக் குதர்க்கவாதங்கள். ஒரு தீர்மானத்துக்கும் வரமுடியாத உள் வீட்டுப் பிரிவினைகள்! பணச்செலவு - ஓட்ட ஆட்டம். கண்ட பலன்? கலகத்துக்கு வழி திறக்கிறார்களா?

மாவட்ட சபை உறுப்புரிமை பெற்றுவிடப் பல கழுத்தறுப்புக்கள். திடீர்க் 'குழுக்கள்' தோற்றம். அடுத்தவன் வீட்டைக் கொழுத்துகிறான்; சகோதரர்களோ கண்டும் காணாதவர்கள் போல வீட்டுக்குள்ளே பாகப்பிரிவினைச் சர்ச்சை செய்துகொண்டிருந்தார்கள்.

இந்த நிலையிலே இவ்வாண்டு மே 31ஆம் திகதி மீண்டும் தொடங்கிய (நமக்குப் பழகிப் போன) சம்பவங்கள்; சிறிது வேறுபாடுகளுடன். தினமும் விடிந்தால் அதிர்ச்சி தரும் செய்திகள். ஆனால், நமது வியாபாரப் பெருமக்கள் அரிசி, மா, சீனி, எண்ணெய், குழந்தை உணவுகளிற் பதுக்கல் - கொள்ளை லாபம்!

பரஸ்பரம் உலகத்துக்கே முன்னோடியான நம்பிக்கையில்லாப் பிரேரணைகள். பாராளுமன்றத்திலே பேச்சுக்குப் பதில் கூச்சல். வெளியிலே தலைவர்களின் கண்சிமிட்டலை எதிர்பார்த்து அடிகாரரும், ஆயுதப்படையினரும்!

அம்பாறை-மட்டக்களப்பு எல்லையிலே யாழ் வன்செயல் நாடகத்தின் மறுகாட்சி! தலைவர்கள் தரிசனம்-விசாரணை-முடிவு? அதுதான் இல்லையே. நாடகம் இடத்துக்கிடம் அரங்கேற்றப்படும்.

இந்த நிலை இப்படியேயிருக்க - 83ஆம் ஆண்டு அடுத்த பொதுத் தேர்தலுக்கு முஸ்தீப்புக்கள் தொடங்க வேண்டுமே. மேடை-மின் அலங்காரம்-மாலை-ஒலிபெருக்கி-வசவுப் பிரசுரங்கள்-ஆள்மாறாட்டங்கள்! எப்போ தொடங்குவது!.

இவர்கள் ஓர் அணியில் திரண்டு விடிவுகாணும் நாள் எந்தநாளோ?

7.08.1981

************

# வருமுன் காப்போமா...?

பத்திரிகைகளில் இன்று அடிக்கடி பார்க்கக் கூடிய தலைப்புக்களில் "நிலைமை கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது" என்பது போன்ற தலைப்புக்கள் மக்கள் கவனத்தை ஈர்க்கக் கூடியனவாக உள்ளன.

சட்டக் கட்டுப்பாடுகளின் காரணத்தால் நாடெங்கிலும் ஆங்காங்கு நடைபெறும் பயங்கரவாத சம்பவங்களைப் பத்திரிகைகளோ, வானொலியோ விபரமாக வெளியிடாவிட்டாலும் இடத்துக்கிடம் தினமும் ஏதோ நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைப் பொது மக்கள் விளங்கிக்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இன்று, நாட்டிற் பரவலாக நடைபெற்று வரும் கொள்ளைகள், கொலைகள், தீவைப்புகள், வன்முறைச் சம்பவங்கள் எல்லாம் பல்வேறு குழுக்களால் வெவ்வேறு நோக்கங்களோடு செய்யப்படுகின்றன.

இனவாதம் பேசுவோர், கொள்ளையடிப்போர், கட்சி அரசியல் லாப நோக்கம் கொண்டோர் எனப் பல பிரிவினரின் அபிலா சைகளுக்காக இவை நடைபெற்ற போதும் இனப் பிரச்சினை ஒன் றையே அடிப்படைக் காரணியாகக் காட்டி இன்று உலகிற்கும் பிரசாரம் செய்யப்படுகின்றது. இன்னொரு கலகத்துக்கு ஆயத்தமா? அவை போக, கண்ணாற் கண்ட உண்மைகளைக் கூடத் தன் உறவினனுக்குக் கூறுவதுதானும் வதந்தியைப் பரப்பும் செயல் என மக்கள் அஞ்சும் அளவுக்கு எச்சரிக்கைகள் வேறு செய்யப்பட்டுள்ளன. இவற்றோடு, ஆயதப்படைகளின் குவிப்புக்கள், அவற்றின் நடமாட்டங்கள், தொலைபேசித் தொடர்புகள் துண்டிப்பு, இவை யாவும் பதட்ட நிலைகளை மேலும் அதிகரிக்கச் செய்துகொண்டேயிருக்கின்றன.

இத்தகைய நிலையிலே வைகாசி - ஆனியில் யாழ்ப்பாணத்தில்

நடைபெற்ற வன்செயல்களை மதிப்பீடு செய்து உலகிற்கு உண்மையை விளக்க நடுநிலையாளர் பலர் இங்கு வந்தனர். ஆயர்களும் வந்தனர். ஆயர் இருவரால் வெளியிடப்பட்ட அறிக்கை குறைப்பிரசவமாக வெளிவந்திருக்கின்றது.

இ∴து, உண்மைகளை முழுமையாகத் தராதது மட்டுமன்று, இதுவரை காலமும் இடம்பெற்ற, இனிமேலும் இடம்பெறப் போகின்ற துயர நிகழ்வுகளுக்குப் பரிகாரம் தேடவோ, முற்றுப்புள்ளியிடவோ முழுமையாக துணைநிற்பதாகவோ தோன்றவில்லையே!

எனவே, இன்றைய இந்நிலைக்கு அரசியல்வாதிகளும் கொள்ளையடிக்கும் குண்டர்களும்தாம் காரணகர்த்தாக்கள் என்று திட்டமாகக் கூறமுடியாத தர்மசங்கடமான நிலைமைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். ஆகையால் கழகங்கள், நிறுவனங்கள், கட்சிகள், ஆயர் மன்றம் போன்றவை இதுவரை இடம் பெற்றவை போன்ற அசம்பாவிதங்களும், இன்று நிலவுகின்ற பதட்ட நிலைமையும் ஏற்படாவண்ணந் தடுக்க, எவருக்கும் எந்தவித உணர்வுகளுக்கும் தம்மை அடகுவைக்காது, உண்மைகளை வெளியிட்டுத் தக்க நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும்.

'நோயைக் கட்டு மீறி வளரவிட்டு அதற்கு அபூர்வ மருந்து தேடுபவர்கள் அல்லர்; நோயே வராது தடுக்கும் புத்திசாலிகள் நாம்' என்பதைச் செயலிற் காட்டுவோம்.

14.08.1981

************

# எது ஜனநாயகம் ?

ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாடுகளிலும் தேசத்துக்குத் தேசம் அரசியற் சட்டதிட்டங்களும், தேர்தல் முறைகளும் பலவித மாற்றங்களுடையன; நிர்வாக யந்திரம் இயங்கும் முறைகளிலும் 'மொடல்' மாற்றங்களுண்டு. ஆனால், ஆட்சியாளரைத் தேர்தெடுக்கும் தேர்தல் விதிமுறைகளில் என்ன வேறுபாடுகள் இருப்பினும், அரசியற் கட்சிகள் போட்டியில் ஈடுபடுவதாகிய அடிப்படைத் தன்மை எங்குமுண்டு.

1. மொழி, இனம், மதம் முதலியனவற்றில் அதிக வேறுபாடுகளற்ற-ஏறக்குறைய ஓரினம் போன்ற மக்கள் வாழும் நாடுகளில், மக்கள் தேர்தலில் வாக்களிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகையில், கட்சிகள் முன்வைக்கும் அரசியல் - பொருளாதாரக் கோட்பாடுகளை அவதானித்து, காலத்துக்கேற்ற முறையில் வாக்களிக்கின்றனர். பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் கட்சித் தலைவர்கள், அரச நிர்வாக யந்திரத்தைத் தமது போக்கில் இயக்கும் பொறுப்பில் ஈடுபடுகின்றனர். ஆட்சியாளர் முக்கியமாக இரண்டு இலட்சியங்களை முன்வைத்துச் செயற்படுவர். ஒன்று, அடுத்த முறைத் தேர்தலிலும் வெற்றி பெறுவதற்காக வாக்காளரது அபிலாசைகளைப் பூர்த்திசெய்து வைக்கும் வேகத்தில், நாட்டின் சுபீட்சத்துக்கு உகந்தவையல்லவென நன்றாகத் தெரிந்து கொண்டும் தவறான நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல். நாடு குட்டிச்சுவராவதைப் பொருட்படுத்தாமல் மக்கட் கூட்டத்தின் பின்னே ஆட்சித் தலைவர்கள் குருட்டுநடை போடுதல். மற்றது, மக்கள் தற்காலிகமாக ஓரளவு அதிருப்தி கொண்டாலும், கஷ்டத்துக்குள்ளாகினும், நாட்டினது எதிர் கால சுபீட்சம் என்னும் உயர் இலட்சியத்தைக் கடைப்பிடித்து மக்களுக்கு ஆதரவுடன் வழிகாட்டி முன்செல்லுதல். இதன் காரணமாக அடுத்த தேர்தலில் தோல்வியைத் தழுவ நேரிடினும், அதற்காகத் தெரிந்துகொண்டும் தவறு செய்யமாட்டார்கள். மேற்கூறிய இருவித ஆட்சியாளர்களின் போக்குகளில் எது ஜனநாயகம்?

2. மொழி, இனம், மதம், கலாசாரம் இவைகளில் அடிப்படையான பெரும் வேறுபாடுகளுடைய, ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நாடுகளிலும் கட்சி அடிப்படைத் தேர்தல்கள் மூலம் ஆட்சியைக் கைப்பற்றும் ஜனநாயகம் உண்டு. இலங்கை போன்ற இத்தகைய நாடுகளில், கட்சிகள் நடைமுறையில் இன அடிப்படையில் அமைந்தனவாகவோ, அல்லது இனங்களின் நலனை நாட்டு நலனுக்கு மேலான இலட்சியமாகக் கொண்டனவாகவோ அமைந்துவிடுகின்றன. நாட்டின் பெரும்பான்மை இன மக்களை உறுப்பினர்களாகக் கொண்ட கட்சிகள் அடுத்த தேர்தலிலும் அதே மக்களின் ஆதரவைப் பெறாதவிடத்து ஆட்சிபீடத்தைக் கனவிலும் காணமுடியாதென்பதைக் கருத்திற்கொண்டு, தெரிந்துகொண்டே பாரபட்ச நடவடிக்கைகளில் இறங்கியே ஆகவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன. பாதிப்புக்குள்ளாகும் சிறுபான்மை இன மக்களின் கூக்குரல்கள் கேட்கப்படமாட்டா. நீதி, அடிப்படை மனித உரிமைகள், சமத்துவ சந்தர்ப்பங்கள் அளித்தல் முதலிய தவிர்க்கமுடியாத குடியுரிமைகள்கூட மறுக்கப்படும். இவர்களும் தவறான பாதையில் மக்கள் பின் குருட்டு நடை போடுபவர்களே. சிறுபான்மை இன மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிவைப்பது, அடுத்த தேர்தலில் வெற்றிபெறும் இலட்சியத்திலும் மேலானது என உறுதிபூண்டு, தேசப்பற்றுடனும் தியாகச் சிந்தையுடனும் கிடைத்த சந்தர்ப்பத்திற் செயற்பட முயற்சிப்பது, கட்சி நலனுக்குப் பாதகமாக இருப்பினும் நாட்டு நலனுக்கு உகந்தது எனத் தெரிந்து தீரமுடன் செயற்படுவது மக்களுக்குப் பின்னே போவதாக இராமல், மக்களை வழிகாட்டி அழைத்துச் செல்லுவதாகும். இவற்றுள் எது ஜனநாயகம்?

ஆட்சியைக் கைப்பற்றுவதையே நோக்கமாகக் கொண்ட அரசியற் கட்சித்தலைவர்கள், குறுகிய நோக்கினின்று விடுபட்டு, நாட்டின் நிலையான நலனுக்கு உழைக்கும் 'தேசத் தலைவர்'களாக உயரவேண்டும்.

25.09.1981

**********

# வழி காட்ட ...

இந்த நாடு இன்னொரு பொதுத் தேர்தலை விரைவில் எதிர் பார்த்திருக்கும் இவ்வேளையில், அரசியல் வானில், எமது நிலையை ஊன்றி அவதானித்தல் அவசியமாகிறது. இன்று, தமிழ் மக்கள் நிலை திக்குத் தெரியாத காட்டிற் சிக்கிக் கொண்டவாறாக இருக்கிறது. ''வழிகாட்டுகிறோம், வாருங்கள்'' என்று தெரிந்தனவும் தெரியாதனவுமான குரல்கள் பல திக்குகளிலுமிருந்து கேட்கின்றன. இக் குரல்களுக்குரியவர்களில், யார் பின்னே போவது? என்று தமிழ் மக்கள் விழிக்கின்றனர். வழிகாட்ட முற்படும் இவர்கள் ஒற்றுமையான நிலையான ஓர் அமைப்பில் உறுப்பினர்களாக இல்லையே என்பதுதான் தமிழ் மக்களின் கலக்கம்.

நீண்ட தூரம் போகாமற் கடந்து போன முப்பத்தைந்து ஆண்டு வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் மக்களுடைய இக்கலக்கத்து க்கான காரணம் புலப்படும். அரசியற் கட்சிகளின் அடிப்படையிலான பாராளுமன்ற ஆட்சிமுறை, சோல்பரி விசாரணைக் குழுவினராற் சிபாரிசு செய்யப்பட்டுப் பிரித்தானியரால் எமக்கு வழங்கப்பட்ட அந்த நேரமே உறைந்துகிடந்த தமிழர் பிரச்சினை உருகியோட ஆரம் பித்தது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் '50 : 50' கேட்டு இங்கிலாந்து போக, இங்கே வேறு ''தமிழ்த் தலைவர்கள்'' சட்டசபையில் அதற்கு மாறாகக் கை உயர்த்தி இரண்டுபட்டனர். ''தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா'' என்று மார்தட்டி 1947 இல் முதலாவது பாராளுமன்றத் தேர்தற் களத்தில் தமிழ்க் காங்கிரஸ் குதித்தபோது உறுதியான தமிழர் தலைவர்கள் தோன்றிவிட்டதாகத் தமிழ் மக்கள் கற்பனையில் மூழ்கினர். தோளோடு தோள் நின்று பாராளுமன்றம் புகுந்த ''தலைவர்கள்'' சிலர் மாபெரும் சிங்கள அரசியற் சாணக்கியத்திற் கால் இடறி வீழ்ந்தனர். மந்திரி பதவிகள் ஏற்றனர். விரைவில் இடம்பெற்ற ''இந்திய பாகிஸ்தானிய பிரஜா உரிமை மசோதா வாக்கெடுப்பில் தமிழ்க் காங்கிரஸ் இரண்டுபட்டது; தமிழரசுக் கட்சி தோன்றியது.

தமிழ் மக்களிற் பெரும்பாலார் இரண்டு வழிகளிற் பிரிந்து சென்றனர்.

காலகதியில், தமிழரசாரின் குரல் வலுத்து ஒலித்தது. சமஷ்டி ஆட்சி கேட்டனர். மந்திரி பதவியும் ஏற்றனர், ஒப்பந்தங்கள் செய்தனர்; ஏமாந்தும் நின்றனர். இருப்பினும் நிதானமுள்ள தலைமை எமக்குண்டு என்று ''நம்பி''க் காலம் போக்கினர் தமிழர். ஸ்ரீ எதிர்ப்புக்கள், சத்தியாக்கிரகங்கள், உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள், மறியற்போராட்டங்கள், சட்ட மறுப்புக்கள் குண்டாந்தடி அடிகள் என்றிவ்வாறான செயற்பாடுகளாலும் ''தந்தை செல்வா'' மீது மக்கள் கொண்ட நம்பிக்கை வலுவடைந்தமையாலும் தேர்தல்கள் பலவந்து போயினவாயினும் மக்கள் நம்பிக்கை கருகிவிடாமல் மீட்புக்காலத்தை எதிர்நோக்கிக் காலங் கடத்தினர்.

'வட்டுக்கோட்டைத் தீர்மானம்' நிறைவேற்றப்பட்டது. ''முப்பெரும் தலைவர்கள்'' ஒருவரோடாருவர் முகம் கொடுக்காமலே '' தமிழர் விடுதலைக் கூட்டணி'' பிறந்தது. மக்கள் நம்பிக்கையும் உயரப் பார்த்தது. இப்போதும் தேர்தல்கள் வந்து போயின. வடக்கு, கிழக்கு முகஞ் சுளிப்புக்கள்! இன்னொரு புறம் கூட்டணி முப்பெருத் தலைவர்களில் ஒருவர் ஆளும்கட்சியுடன் இணைந்துவிட்டார். முகம் கொடுக்காத மற்ற இருதலைவர்களும் மறைந்துவிட்டனர். இந்த நிலையில், வாரிசுகளின் ஆட்சிக்காலத்தில் மாவட்டசபைத் தேர்தல் வந்துதித்தது. பாராளுமன்றம் போகும் தலைவர்கள், பேசும் - எழுதும் தலைவர்கள், இளம் சமுதாயத்தினர் என்று மும்முனைப் போராட்டமும் பிளவும் தலைவர்கள் மத்தியில் தோன்றிப் பூதாகாரமாக உருவெடுத்தன. தமிழ்க் காங்கிரசும் இடைக்கிடை தலைகாட்டிக் கொண்டுதான் இருக்கிறது என்பதையும் மறப்பதற்கில்லை. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ''தலைவர்கள்'' பலர் தோன்றிப் பிளவுகள் வலுவடைகின்றன. ''தமிழீழ விடுதலை முன்னணி'' தோன்றியுள்ளது. இவ்வாண்டு தைப்பொங்கல் தினத்தன்று ''தமிழீழப் பிரகடனம்'' செய்வதில் சரி-பிழை மோதல். ஆயுதப்படையினர் கெடுபிடிகள். ''தீவிரவாத இளைஞர்கள்'' சிறைப்பிடிப்பு. இந்தச் சிக்கலுக்குள் ''தமிழ்த் தலைவர்கள்'' அரசுடன் இணக்கப் பேச்சுவார்த்தைகளிலும் தூய்மை பேணப்பட

வில்லையென ஐயமும் வதந்திகளும். ''தேர்தலைப் பகிஷ்கரி'' என்ற பிரசாரமும் கோஷமும் வலுப்பெற்று வருகின்றன. பாவம் தமிழ்ப் பொதுமக்கள் ! யாருடைய வழியிற் செல்வார்கள்?

வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு, பிறநாடுகள், இளைஞர்கள், பழையவர்கள், முற்போக்குக் கொள்கை வாதிகள், இவர்கள் எல்லாம் ''மூன்றுகால்'' மூர்க்கத்தனத்தை விட்டுவிட்டு ஒரணியில் நிற்க வைக்க, தேர்தலுக்குத் தோற்றும் நோக்கும் போக்கும் இல்லாத தீவிர அரசியற் கட்சிச் சார்பற்ற சமயத்தலைவர்கள், கல்விமான்கள், சிந்தனையாளர்கள், தியாகிகள்; தமிழர்களுக்குள்ளே சாதி - சமய - பிராந்திய வேறுபாடுகளற்ற நிலையில் உடனே வெளியே வந்து ஒன்றுகூடி இந்த வேளையில் நல்ல வழிகாட்ட மாட்டார்களா? முதலில் ஒரு நல்ல குரல் தொனித்தால் வழி பிறக்கும் என்பது எம் கருத்து.

28.05.1982

*************

# வினை விதைக்கிறார்கள்

புதிதாக உருவாக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் யூரர்களின்றி விசாரிக்கப்பட்ட வழக்கின் முடிவில் இரண்டு தமிழ் வாலிபர்களுக்குச் சென்ற வாரத்திற் குற்றவியற் சட்டத்தின்படி மரணதண்டனை விதிக்கப்பட்டது. 'சித்திரவதை செய்து பொலிசார் பெற்றுக்கொண்ட சந்தேகப் பேர்வழிகளின் ஒப்புதல் வாக்கு மூலங்கள் செல்லுபடியாகாதவை' என்ற எதிரி தரப்பு வழக்கறிஞர்களின் வாதம் ஏற்றுக்கொள்ளப்படாமல் விடப்பட்டவுடனேயே வழக்கின் முடிவு எப்படியிருக்குமென விடயமறிந்தவர்கள் கூறிவிட்டார்கள்.

கடந்த பல வருடங்களாக மிகப்பயங்கரக் குற்றவாளிகளுக்குக் கூட மரணதண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பதும், அரசியல் வானிற் சமீபத்தில் எதிர்பார்க்கப்படும் தேர்தல் முதலிய சம்பவங்களும், மரண தண்டனை தவிர்க்கப்படலாம் என்பதற்கு நம்பிக்கை அளிப்பனவாயிருப்பினும், இரண்டு தமிழ் இளைஞர்

களுக்கு அந்தச் சலுகை கிட்டுமாவென்பது சந்தேகமளிப்பதாக வுள்ளது.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் நீதியான நிலையான சட்டங்களின் கீழ் விசாரணை செய்யப்பட்டு, சந்தேகப் பேர்வழிகள் குற்றவாளிகளாகக் காணப்படின் தண்டனை விதிப்பதும், அது நிறைவேற்றப்படுவதும் அரசு சம்பந்தப்பட்ட உரிமையும் கடமையுமாகும். தண்டனை நிறைவேற்றப்படுவதாற் சம்பந்தப்பட்ட குற்றவாளி திருந்தி நடக்க வழியேற்படுமாயின் அதுவரவேற்கப்பட வேண்டியதே. அல்லது தண்டனை நிறைவேற்றப்படுவதால் ஏனைய மக்களுக்கு ஒரு படிப்பனை உண்டாகுமாயினும் உலகம் வெறுப்படையாது.

எமது நாட்டிற் குற்றவியற் சட்டக் கோவைகளிலும், அரசியல் யாப்புக்களிலும் அடிக்கடி மாற்றங்கள், திருத்தங்கள், இணைப்புக்கள் செய்யப்படுவது உலகம் அறிந்த விடயம். அரசியற் யாப்பில் நேற்று அவசர அவசரமாக நான்காவது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டு நேற்று ஒரு நாளிலேயே திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தமக்கு வாய்த்துள்ள மிகப்பெரும்பான்மைப் பலத்தை அரசு எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்திக்கொள்ளுகிறது என்பதை வியப்புடனும் அனுதாபத்துடனும் உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த அவசரத் திருத்தங்கள் எல்லாம் யாரைத் பாதுகாக்கச் செய்யப்படுகின்றன என்பதில்தான் கேள்வி எழுகின்றது. ''மக்களை யும் நாட்டையும் பாதுகாக்கவா? அல்லது தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளவா?'' என்று ஒவ்வொரு வாக்காளனும் யோசித்துக்கொண்டிருக்கிறான்.

சட்டங்களைப் படித்து அறிவுபெற்று அனுபவமுதிர்ச்சி கொண்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட சுதந்திரமான விருப்பு - வெறுப்புகளை நீக்கிப் பார்க்கின்ற நீதிபதியின் பொறுப்புக்களும் - கடமைகளும் ஆயுதப்படையினரிடமும் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று துடிப்புக்

கொண்டு நிற்கும் சீருடைக்காரரிடமும் கையளிக்கப்பட்டுள்ளன. சாதாரண படிப்பறிவுகூட இவர்களிற் பலரிடத்தில் இல்லை. பயங்கரவாத தடைச்சட்டம், நம் நாட்டில் அடிப்படை மனித உரிமைகளை வேரோடு சாய்க்கும் அளவுக்குப் பயங்கரமான விதமாக நடைமுறைப் படுத்தப்படும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது.

1977 இலும் அதன்பின் பல தடவைகளிலும் சட்டத்தின் பாதுகாவலராகிய இந்தச் சீருடைக்காரர்கள் குறிப்பாக வடக்கு-கிழக்கிற் சீருடையிலும் சீருடை இன்றியும் புரிந்துவரும் அனர்த்தங்களையும் அவற்றினால் உண்டான அழிவுகளையும் யாரால் மறக்கமுடியும்? அவர்கள் சட்டத்தை மீறிச் செய்த அட்டூழியங்களை அரசு ஏற்றுக்கொண்டதனாலன்றோ அண்மையில் யாழ் பொது நூலகத்துக்கும் பிற சேதங்களுக்கும் பொதுமக்களின் பணத்தைக் கோடிக்கணக்கில் நட்ட ஈடாகக் கொடுத்தது. ஆனால் அழிவும் கொலைகளும் செய்தவர்களை அரசாங்கம் நன்கு அறிந்திருந்தும் அவர்களை விசாரிக்கவோ தண்டிக்கவோ துணிவு கொள்ளவில்லை.

ஆயுதப்படையினரின் பாதுகாப்பில் ஆட்சி நடத்துபவர்களும் அவர்களைத் தட்டிக்கேட்க முடியாதவர்களுமான ஆட்சியாளரின் முடிவு என்னாகும் என்பதற்கு உலகிலும் உள்நாட்டிலும் உதாரணங்கள் பலவுள. குற்றம் இழைத்தமைக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆகப்பெரும் தண்டனை இடமாற்றமும் பதவி உயர்வும் தாம்! இடமாற்றம் செய்யப்பட்டமையைக்கூடத் தண்டனையென்று குறிப்பிடாமல் வழக்கமாக நடைபெற வேண்டிய இடமாற்றம் என்றே குறிப்பிடுகிறார்கள்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட இளைஞரில் ஒருவர் 'இந்த நாட்டில் நான் எவ்வித மனித உரிமையையும் அனுபவித்ததில்லை' என்று குறிப்பிட்டமை சம்பந்தப்பட்டவர்களின் சிந்தனையிற் படுமா? முன்னைய அரசின் ஆட்சியாளர் தாம் விதைத்த வினையின் பயனை அனுபவிப்பதைப் பார்க்கிறோம. ''தன் வினை தன்னைச் சுடும்'' என்ற சாகாத பொன்மொழியை. இன்றைய ஆட்சியாளர்கள் மறக்கலாகாது.

20.08.1982

*************

# தமிழ் மக்களும் ஜனாதிபதித் தேர்தலும்

சிலமாதங்களாக எதிர்பார்க்கப்பட்ட ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் நடுக்கூற்றில் நடைபெறவிருக்கிறது. ஆளும் கட்சியாகிய ஐ.தே.க. இப்போதைய ஜனாதிபதியையே தனது வேட்பாளராகத் தேர்தற் களத்தில் நிறுத்திப் பிரசாரத்திலும் இறங்கிவிட்டது. தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலத்தை நிறுத்திக் கட்டுப்பணமும் செலுத்தி விட்டு மேல்மட்டச் சந்திப்புகளை நடத்திக் கொண்டிருக்கிறது. ஏனைய எதிர்க்கட்சிகள் வேட்பாளரை நிறுத்துவதில் இழுபறியிலும் இறுதித் தீர்மானம் எடுக்கும் கட்டத்திலும் இன்னும் உள்ளனவெனச் செய்திகள் கூறுகின்றன. சென்ற பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்றவர்களெனக் கூறப்படும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது கட்சி இத்தேர்தலிற் போட்டியிடப் போவதில்லையெனவும், ஆயினும் தேர்தலில் தமது நிலையென்ன வென்பதைப் பொறுத்திருந்து அறியுமாறும் கூறியுள்ளனர்.

இந்த நாட்டில் தமிழ் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் மாத்திரமல்ல; சிங்கள மக்கள் பெரும்பான்மை யினராக விளங்கும் கொழும்பு முதலிய மாநகரங்களிலும் பிற இடங்களிலும் வாழுகின்றனர். தமிழ் மக்கள் தாம் வாழ்ந்துவரும் சூழலைப் பொறுத்தும், தொழில் நிலைமைகளைப் பொறுத்தமட்டிலும், அரசியற்கட்சி கொள்கைகளின் அடிப்படையிலும், பொருளாதார நோக்கிலும் பல்வேறு மனப்பான்மையுடையோராக இருக்கின்றனர். ஜனாதிபதி தேர்தலைப் பொறுத்தமட்டில் அவரவர் நிலையென்ன என்பதில் பல வேறுபட்ட தீர்மானங்களும் சிந்தனையுடையவர்களாயுமுள்ளனர். அவரவர் நிலை அப்படி அவர்களை முடிவுபண்ணச் செய்துள்ளது. மேலும் இந்த ஜனாதிபதித் தேர்தல் அதன் இயல்பைப் பொறுத்தவரை நாட்டில் முதன்முறை நடக்கவிருக்கும் தேர்தல் என்ற மட்டிலும் ஒரு வினோத நோக்கும், விளக்கக் குறைவுகளும் இருந்து வருகின்றன.

எமது 'பாதுகாவலன்' நாட்டின் பலதிக்குகளுக்கும் செல்லும் தமிழ் ஏடு ஆகையால், எமது வாசகர்களினதும் பிறரினதும் கருத்துக்களை அறியவும், அவற்றை வெளியிடவும் கருத்து உருவாகவும் செய்ய வேண்டுமெனக் கருதுகிறோம்.

உங்கள் கருத்தை நீங்கள் உருவாக்க உதவும் நோக்கத்துக்காக, நாட்டிலுள்ள தமிழ்மக்கள் மத்தியில் நிலவும் பலதரப்பட்ட கருத்துக்களிற் சிலவற்றை ஈண்டு தருகின்றோம்.

-''இப்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் நாட்டிற் பல அபிவிருத்தி வேலைகளை வெற்றிகரமாகவும் விரைவாகவும் செய்து வருவதனால், மேலும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிப்பதற்காக ஐ.தே.க. வேட்பாளராகிய இப்போதைய ஜனாதிபதிக்கே வாக்களிக்க வேண்டும்'' என்கின்றனர் சிலர்.

-''தமிழ் மொழிக்குச் சம உரிமை வழங்கப்படாமை, பல்கலைக் கழகத் தேர்வுகளில் தரப்படுத்தல், மாவட்ட அடிப்படைத் தெரிவு என்பவற்றைப் புகுத்தியமை, வேலைவாய்ப்புக்களை வழங்குவதில் மிகுந்த பாரபட்சம், நாட்டின் எப்பகுதியிலும் பாதுகாப்பற்ற நிலைமை, இனக்கலவரங்கள், மலையக மக்களுக்கு 'நாடற்றவர் நிலை'யைப் பரிசளித்த அக்கிரமம், தமிழருடைய பாரம்பரிய நிலங்களைச் சூழ்ச்சியாக அபகரித்து வருகின்றமை முதலிய பல காரணங்களினால் இந்தத் தேர்தலால் எமக்கு என்ன பயன் உண்டு?'' என்கின்றனர் ஒரு சாரார்.

-''இன்றைய அரசு உண்மையானதும் நிலையான நன்மை பயப்பனவுமான அபிவிருத்தி வேலைகளைப் பாரபட்சமின்றிச் செய்துவருகின்றதென்றால், அதே வகையில் நாட்டை மேலும் அபிவிருத்திப் பாதையிற் கொண்டு நடத்திவிட்டு, 1984 பெப்ருவரியில் முறைப்படி தேர்தலுக்கு நிற்காமல் ஏறக்குறைய இரண்டு வருடங்கள் முந்தித் தேர்தலுக்கு நிற்கும் மர்மம் என்ன?'' என்று குழம்புகின்றனர் வேறு சிலர்.

-''உலகவங்கி, சர்வதேச நாணயப் பரிவர்த்தனைச் சபை, அபிவிருத்தியடைந்த நாடுகள் முதலிய நிதி நிறுவனங்கள் பண உதவிகளைக் குறைக்கப்போகின்றன; நிதி உதவும் நிபந்தனைகளை இறுக்கப்படுத்தத் திட்டமிடுகின்றன. இதனால், மிக விரைவில் நாடு மோசமான நிதி நிலைக்குத் தள்ளப்படப் போகிறது. மிகவும் கஷ்டமான காலம் வரப்போகிறது. அதன்முன் தேர்தல்களை நடத்தி அரசும் ஜனாதிபதியும் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளனர். நாம் என்ன செய்யலாம்?'' என்று மயங்குகின்றனர் வேறு சிலர்.

-''சிங்கள ஸ்ரீலங்காவுக்கும் தமிழ்ப் பேசும் மக்களுக்கும் பந்தசொந்தமில்லை. கடந்த காலத்தில் அவர்கள் எம்மை

அடிமைகொண்டு ஆட்சிநடத்தப் பெருமுயற்சி செய்தனர்; இன்று மேலும் மோசமாக நடந்து கொள்ளுகின்றனர். அவர்களும் நாமும் ஆளுவோரும் ஆளப்படுவோருமான நிலைக்குத் தள்ளுண்டுள்ளோம். தமிழீழமே எமது இலட்சியம். அரசோடு பேச்சுவார்த்தைகள் வைப்பவர்கள் மக்களுக்குத் துரோகம் இழைப்பவர்கள். எனவே இனித் தேர்தல்கள், பாராளுமன்றம் யாவும் வீண். ஆகவே, எல்லாத் தேர்தல்களையும் பகிஷ்கரிக்க வேண்டும்'' என்கின்றனர் வேறொரு பகுதியினர்.

-''த.வி. கூட்டணியினரிடம் எமக்குள்ள எதிர்ப்பைக் காட்டுவதற்காக ஜனாதிபதித் தேர்தலில் அவர்களுக்கு மாற்றான வேறொரு கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்'' என்கின்றனர் இன்னொரு குழுவினர்.

-''இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவருமே ஓரணியில் திரண்டு நின்று ஒரே தமிழ் அபேட்சகருக்கு வாக்களிப்பதன் மூலம் நமது பலத்தை உலகறியக் காட்ட வேண்டும்'' என்கின்றனர் வேறொரு பாலார்.

10.09.1982

***********

## சர்வஜன வாக்கெடுப்பு பொதுத் தேர்தலாகுமா?

இந்த நாட்டின் இப்போதைய ஆட்சியாளரின் 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்புக்கு அதே ஆட்சியாளரால் நான்கு வருடங்களுக்குட் கொண்டுவரப்படும் நான்காவது திருத்தம்தான் பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அதிகாரம் கோரும் ஷரத்துக்களாகும்.

ஜனாதிபதித் தேர்தலின் முன் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும்

வெளியேயும் பல தடவைகளில் இந்த ஆட்சியாளராற் கூறப்பட்டு வந்த ஓர் உறுதிமொழி: "முன்னைய ஆட்சியாளரைப் போல நாங்கள் பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை ஒரு நாளுக்கேனும் பின்போடமாட்டோம். உரிய காலத்தில் பொதுத்தேர்தல் நடைபெற்றேயாகும்" என்பதாகும். ஆனால், இன்று "ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தவர்களுள் 52.9% வாக்காளர் ஆட்சியிலுள்ள ஜனாதிபதியை ஆதரித்து வாக்களித்துள்ளார்கள். அவர் எதிர்வரும் வருடங்களில் சுபீட்சமான ஆட்சிபுரியப் பொதுத்தேர்தலை ஆறு வருடங்களுக்குப் பின்போடுவது அவசியம். அதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப் போகிறோம். மொத்த வாக்காளரில் மூன்றிலொரு பங்கினர் எம் கருத்தை ஏற்றால் பொதுத்தேர்தல் நடத்தப்போவதில்லை" என்கின்றார்கள். "ஜனாதிபதித் தேர்தலின் முன்பு அல்லது ஜனாதிபதித் தேர்தற் பிரசாரத்தின் போது இந்த அரசியல் ஞானம் அவர்களுக்கு இருக்கவில்லையா? இருந்திருப்பின் அதனை அப்போதே வெளியிடாமல் மறைத்து வைத்துக் கொண்டதன் காரணம் என்ன?" என்று மக்கள் பலர் கேட்கிறார்கள்.

முன்னைய அரசு 1972இல் புதிய அரசியல் யாப்பு ஒன்றினை நிறைவேற்றிப், பதவியிலிருந்த பாராளுமன்றத்தின் ஆட்சிக் காலத்தை மேலும் ஆறு வருடங்கள் என்று நீட்டிக்கொண்டதன் மூலம், மக்கள் ஆணை பெறாமல் மேலும் இரண்டு வருடங்களுக்குப் பதவியிற் சட்ட விரோதமாக இருந்துவிட்டது என்று ஓலமிடும் இப்போதைய ஆட்சியாளர், முன்னையவர்களின் பாதையிலேயே தாமும் சென்று பதவியிலுள்ள பாராளுமன்றத்தின் ஆட்சிக் காலத்தை மேலும் ஆறு வருடங்கள் நீடிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் ஏதோ ஒரு வகையில் சட்டத்தின் பாதுகாப்பை நாடுகிறார்கள் என்று மக்கள் கருதுகின்றனர்.

"சர்வஜன வாக்கெடுப்பு" நடத்தும் நோக்கமும் சந்தர்ப்பமும் வேறு. முக்கிய விடயத்தில் மக்களின் விருப்பு-வெறுப்பையறிந்து செயற்படுவதற்கு மிகுந்த அவசியம் ஏற்படுகையில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படலாம். ஒரு பிரஜையின் அதி உன்னதமான தனித்துவம் வாய்ந்த குடியுரிமையாகிய சனப் பிரதிநிதிகளைத்

தேர்ந்தெடுக்கும் விடயத்தில் ஒட்டுமொத்தமாகத் தனி ஒருவரிடம் மக்கள் உரிமையைக் கண்மூடிக் கையளிப்பதற்குச் சர்வஜன வாக்குரிமை நடத்தப்படுதல், உலகில் வேறெங்கும் நடைபெறாத சம்பவமாகும்.

"பதவியிலுள்ள ஜனாதிபதிக்கு அனுசரணையான முறையில் உங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து தாருங்கள்" என்று பொதுத்தேர்தலிற் பிரசாரம் செய்து மக்களைக் கேட்பதை விடுத்து, "உங்களுக்குப் பதிலாக நாமே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்கிறோம்" என்று கேட்பது வாக்காளரின் அடிப்படையான உரிமையையே மறுத்தலாகும். மேலும், இப்போதுள்ள ஆட்சியாளரால் வகுக்கப்பட்ட அரசியல் யாப்பின் பிரகாரம், விகிதாசாரப் பிரதி நிதித்துவமுறைத் தேர்தல் நடத்துதல் என்னும் திட்டத்தை அவர்களே குழப்புகிறார்கள் என்று வாக்காளர் கூறுகின்றனர். இப்போதுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களைவிட வேறு புது முகங்கள் அதிக தொகையிற் பாராளுமன்றத்தினுள் நுழைந்து விடாமல் இருக்கப் பண்ணுவதற்குச் செய்யப்படும் சூழ்ச்சி இதுவென மக்கள் விளங்குகின்றனர்.

பலமான எதிர்க்கட்சியென்பது சிறந்த ஜனநாயக ஆட்சியின் தவிர்க்க முடியாத ஓர் அம்சம் என்பதை அரசியல் மாணவர்களும் அறிவர். ஆறு வருடங்களுக்கு முன் நடைபெற்ற பொதுத் தேர்தலிற் கிடைத்த பெரும்பான்மைப் பலத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கு ஆட்சியாளர் முற்படுதல், இப்போது தாம் விரும்பும் ஆட்சியாளரைத் தேர்ந்தெடுப்பதற்கு மக்களுக்குள்ள உரிமையை மறுப்பதாகும். "மக்கள் எமது பக்கம் இருக்கிறார்கள். அவர்கள் எங்களையே ஆதரிப்பார்கள் என்ற திட நம்பிக்கை ஆட்சியாளருக்கு இருந்தால் முறைப்படி பொதுத் தேர்தலுக்கு முகம் கொடுக்காமல் மாற்றுவழிகளை நாடுவது ஏன்? சர்வஜன வாக்கெடுப்பில் ஆதரவு தரும் இருபத்தேழு இலட்சம் வாக்காளரை எதிர்பார்த்து, 89 இலட்சம் பொதுத்தேர்தல் வாக்காளருடைய முடிவை மாற்றத் துணிவது முறையற்ற செயல் என்பது எமது கருத்தாகும்.

12.11.1982

*************

# சட்டங்களை இட்டப்படி மாற்றுதல்

... சட்டத்தின் முன்னால் யாவரும் சமம் என்பர். ஆனால், சட்டத்துக்கு விரோதமான பல பெரும் பிழைகளைச் செய்வதற்குச் சந்தர்ப்பம் உள்ள வகையில் வரம்பு மீறிய அதிகாரங்களைத் தம்மிடத்தே வைத்திருப்பவர்கள், அரசியல் மேதாவித்தனம் என்று கருதிக்கொண்டு பாதுகாப்புத் தேடுகிறார்கள். எதிர்க்கட்சிக்காரராகிய முன்னைய ஆட்சியாளருக்குத் தாம் விதித்த தன்மைகள் கால் மாற்றத்தின் பயனாக ஒரு நாள் தங்கள் தலைக்கும் வரலாம் என்பதை உணர்ந்து முன் நடவடிக்கை மேற்கொள்வதை யார்தான் புரிந்துகொள்ள மாட்டார்கள்.

நாம் எந்தத் தவறைச் செய்தாலும் உலகம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று வீணாக ஆசைப்படுகிறவர்கள், நாளைக்குத் தமக்குச் சட்ட ரீதியான விசாரணையும் தண்டனையும் வரக்கூடாது என்று மாத்திரமன்று. தமது சொல் செயல்களை மற்றவர்கள் விமர்சிப்பதையும் வெறுக்கிறார்கள். எதிர்க்கட்சியும் எதிர்வாதமும் இல்லாத ஜனநாயகத்தைப் புதுமையாகச் சிருட்டிக்கும் கற்பனையல்லாமல் இது. வேறு என்ன? சர்வாதிகாரத்தைச் சன நாயகம் என்று, இலாபத்தில் பங்குபெறுகின்ற கூட்டாளிகளன்றி மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பது சிறு பிள்ளைத்தனமாகும். ...

8.11.1985

****************

# ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு !

ஒரு குடும்பத்துக்குள்ளே சச்சரவு, பிரிவினை. தாய்- தந்தை சகோதர- சகோதரிகள் அத்தனைபேரும் ஆளொரு பக்கம், எல்லோரும் 'வாய் மூத்தவர்கள்' என்றால் அந்தக்குடும்பத்தை யார் மதிப்பார்கள்? அந்தக் குடும்பம் விரைவில் அழிந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

ஒற்றுமை இழந்த இனம், நாடு என்பன உருக்குலைந்துபோன கதைகள் உலக வரலாற்றில் நிறைய உண்டு. தெரிந்து கொண்டே பாழ்ங் கிணற்றில் விழ்ந்து மடியக் கங்கணங் கட்டிகொண்டு நிற்பவர்களை யார்தான் காப்பாற்ற முடியும்? கல்வியிற் சிறந்தவர்கள், கடின உழைப்பாளிகள், கடவுள் பக்தியுள்ளவர்கள், கட்டுப்பாடாக வாழத் தெரிந்தவர்கள் என்று ஈழத்துத் தமிழ் பேசும் மக்கள் போற்றி மதிக்கப்பட்ட காலம் போய்விட்டதாகத் தெரிகிறது. கற்றது ஒன்று, கடைப்பிடிப்பது மற்றொன்று; சொல்வது ஒன்று, செய்வது வேறொன்று; நினைப்பது ஒன்று, சொல்வது வேறு என்றபோக்கு அரசியலாகிவிட்டது. இந்த விதமாகத் தமிழினம் வேகநடை போடுவதைப் பார்த்து நல்ல உள்ளங்கள் வேகின்றன. எந்த ஒரு வேறுபாட்டையும் பெரிது படுத்திப் பிரித்து வைத்து இந்த இனத்தை முறியடித்து வெற்றிகாணத் துடிப்பவர்கள் அகமகிழுகிறார்கள்.

அரசியற்றலைவர்கள் என்று மக்களால் எதிர்பார்க்கப்பட்டவர்கள் சந்தர்ப்ப அரசியல் பேசுபவர்களாகவே நின்றுவிட்டார்கள். இனத்தின் தலைவர்களாக, தேசத் தலைவர்களாகத் தம்மை இன்றுவரை உயர்த்திக் கொள்ளவில்லை என்று மக்கள் கருதிவிட்டார்கள். அதனால், அவர்களது சிந்தனை-சொல்-செயல் தூய்மை யானவைதாமா என்பதில் கருத்து வேறுபாடு வலுத்துவிட்டதனால் திக்குக்குத் திக்கு புதிய அரசியல் பேசுபவர்கள் மலிந்து நிலைமை குழப்பமாகிவிட்டது. ஓர் அணியில் திரண்டு நிற்கவேண்டிய அரிய சந்தர்ப்பங்கள் தவறவிடப்படுகின்றன. பாராளுமன்றத்துக்குள்ளே அரசியல் பேசுகிறவர்களுக்கும், அவர்களின் கருத்தை எதிர்த்து வெளியே அரசியல் பேசுகிறவர்கள்- எழுதுகிறவர்களுக்கும் இடையேயுள்ள இடைவெளி பெருகிக் கொண்டே போகிறதை மக்கள் கண்டுணர்ந்து திகைத்து நிற்கிறார்கள். மூத்தவர்கள் இளைவயவர்களுடைய கருத்துக்களைத் துச்சமாகக் கருதிப் புறக்கணிப்பதால் இளையவர்கள் நினைத்தபடி போகப்

பார்க்கிறார்கள். வழி காட்டுதல், கட்டுப்பாடு என்பன மதிக்கப்படாத விடத்து, தான் தோன்றித்தனமான வழிகளில் இளைய தலைமுறையினர் சென்று குழப்பநிலையை மேலும் குழப்பி வைக்கிறார்கள்.

அரசியற் கொள்கை வேறுபாடுகளும் பிரிவினைகளும் வலுத்துவரும் நிலைமையைப் பயன்படுத்தி வன்செயல்களும் ஒழித்துக் கட்டுதலும் பெருகிவருகின்றன. ''மாறுபட்ட கொள்கையுடையோரை மாய்ப்பது பிரச்சினைக்குத் தீர்வு தராது; மேலும் சிக்கற்படுத்தும்'' என்று உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் அனுபவங்கள் படிப்பித்திருந்தும் தீவிரவாதிகள் நிதானப்படக்காணோம். புதுப்புதுப் பெயர்களைச் சூட்டிக் கொண்டு பயங்கரமான முறையில் நெருப்போடு விளையாடுவதை வீரமென்று கருதுகின்றார்கள். நாட்டில் நிலவிவரும் பாதுகாப்பற்ற பதட்ட நிலையைப் பயன்படுத்திக் கொள்ளையடித்துச் சுகசீவியம் பண்ண விரும்புகிறவர்களும் தங்கள் கைங்கரியத்தைப் பெருக்கிக்கொண்டே போகிறார்கள். இவர்களும் தங்களுக்கு அரசியற் சாயம்தான் பூசிக்கொண்டு செயற்படுகிறார்களென்றால் தமிழினத்தின் பரிதாப நிலையை மேலும் விபரிக்க வேண்டியதில்லை.

முழுமையாக மக்களுக்குத் தம்மை அர்ப்பணிக்க முடியாது இரட்டை வேடம் பூணுவோரை, தம் தொழில்- அந்தஸ்தை முன்னே கருதி, பின்னே மக்களுக்காக உழைக்க நினைக்கும் தலைவர்களை மக்கள் இனங்கண்டு கொள்கிறார்கள்.

தந்தை செல்வநாயகம் அவர்களைக் கொள்கை மாறுபாடு கொண்ட மாற்றுக் கட்சியாரும் மதித்து நடந்தார்களென்றால் சிந்தனை-சொல்-செயல் என்பவற்றில் தூய்மையானவராக, நேர்மையான அரசியல்வாதியாக இருந்தமைதான் ஒரே காரணம் என்பதை யாவரும் அறிவர். சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்பிராச்சியத்தை அகிம்சா மூர்த்தியான மகாத்துமா காந்தி அடிகள் நிலைகுலைய வைத்தமை ''தன்னெஞ்சு அறிந்தது பொய்க்காத'' அறவழிச் சொல் செயல்களாற்றான் என்பதை உலகம் முழுவதும் ஒப்புக் கொண்டுள்ளது. அமெரிக்கக் கறுப்பு நிறத்தவர்களின் சமத்துவத்திற்காக அயராது உழைத்த மாட்டின் லூதர் கிங் இறந்தும் இறவாத தலைவராக மதிக்கப்படுவது அப்பழுக்கற்ற நேர்மையான செயற்பாட்டினாற்றான் என்பதையும் யாவருமறிவர். படைப்பலம் கொண்டு, பயங்கரங்கள் புரிந்து வீராதிவீரர்கள் என்று போற்றப்பட்ட சரித்திர புருஷர்களைவிட மேற்கூறிய அகிம்சாவாதிகளான நேர்மையாளருடைய பெயர் நிலைத்து நிற்கும்.

மூத்த அரசியல்வாதிகள், எதிர்க்கருத்துடையோர், இளைஞர்கள், சாதி- மத - பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும், கற்றோர்-கல்லாதவர் என்ற வேறுபாடுகளையும் மறந்து, தமிழினம் என்ற ஒரே அணியில் திரண்டுநின்று கருமம் ஆற்றுவதற்குத் தாமதமாகும் ஒவ்வொரு நாளும் தமிழினம் அழிவுப் பாதையை நோக்கி வேக நடை போடும் நாளாகும். நம்மைப் பிரித்து வைத்து அழித்து அடிமைப்படுத்துவதில் முன்னேறிக் கொண்டு செல்பவர்களை நாம் மேலும் மேலும் அனுமதித்தலாகாது. எமது வழி அஹிம்சை வழி, சத்தியத்தின் வழி, ஒற்றுமையின் வழி என்பதை நிரூபித்துக் காட்டுவதற்கு இப்போது நல்ல சந்தர்ப்பம். தோளோடு தோள் நின்று தலைவர்களின் அதிக வழிகாட்டலை எதிர்பாராமல், எம்மக்களை இன்றே ஒன்று சேர அழைக்கின்றோம். எம் மதங்கள் அனைத்துங் காட்டும் அன்பு வழி நின்று துணிவுடனும் நிதானத்துடனும் ஓர் அணியாக முன்னேறிச் செல்ல மக்கள், சமய-அரசியற்றலைவர்கள், இளைஞர்-சிறுவர் அனைவரையும் அழைக்கின்றோம். அகிம்சா வழியில் எம்போராட்டத்தை நடத்தி எம் உரிமைகளைப் பெற வழிகோலுவோம் - ஒன்றுபடுவோம் வாருங்கள்.

3.12.1982

**********

## அநீதியான பயங்கரவாதத் தடைச்சட்டம்

யாழ். குருநகர் இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டு நிராதரவான முறையில் இரகசியப் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள அனைவர்மீதும் விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும், சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுச் சந்தேக நபர்கள் நீதி விசாரணைக்கு நிறுத்தப்படுவார்கள் அல்லது விடுவிக்கப்படுவார்கள் என்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

எந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன, எந்தச் சட்டங்களின் அடிப்படையில் நீதிமன்றத்தில் நிறுத்தப்படப் போகிறார்கள் என்பதுதான் தமிழ்ப் பொதுமக்களுடைய இன்றைய கேள்வியாகும்.

தேசச் சட்டங்கள் நாடு முழுவதுமுள்ள மக்களுக்குப் பொதுவானதாக இருக்க வேண்டும். ஒரேவிதமான "சட்டவிரோத"ச் செயலைத் தெற்கில் உள்ளவர்கள் செய்தால், சாதாரண சட்டம்: வடக்கில் உள்ளவர்கள் செய்தாற் பயங்கரவாதச் சட்டம் என்ற நிலை பயங்கரமானது. பிரிவுபட்ட அல்லது அடிமைப்படுத்தப்பட்ட நாட்டு

மக்களுக்குப் பழிவாங்கும் முறையில் வெற்றி கொண்ட போராளிகளினால் நடைமுறைப் படுத்தப்படும் ரீதியில், நாட்டின் ஒருபகுதி மக்கள் துன்புறுத்தப்படுவது சோஷலிசம், ஜனநாயகம், தார்மீகம், மனிதாபிமானம், அடிப்படை மனித உரிமைகளைப் பேணுதல் முதலிய யாவற்றையும் கடந்த அநீத முறையாகும்.

சட்டத்துக்கெதிரான நடவடிக்கையில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வதற்கு நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் காரணம் காட்ட வேண்டும். மேலும், பொலிஸ் அத்தியட்சகருடைய எழுத்து மூலமான உத்தரவுடன் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தரத்துக்குக் குறையாத ஒருவராற்றான் கைது செய்ய முடியும் (இல 6(1). பின்னர் நீதிமன்றம் சாட்சியங்களின் அடிப்படையில், சட்ட வல்லுனர்களின் வாத-எதிர்வாதங்களைக் கேட்டு, நூறு வீதம் சந்தேகத்துக்கிடமின்றிக் குற்றவாளியெனத் தீர்மானிக்கும்வரை சந்தேகநபர் குற்றவாளி அல்லர். சந்தேகநபர் உள-உடல் நலிவுபடுத்தலின்றிச் சட்ட அறிஞர்களின் ஆலோசனை பெற்று வாக்கு மூலம் அளிக்க இடமளிக்கப்பட வேண்டும். இவற்றுக்கும் மேலாக மேல் நீதிமன்றத்தில் சந்தேக நபரால் ஆட்சேபிக்கப்படாதவர்களான யூரர்களின் தீர்மானத்துக்கும் இடமுண்டு. துன்புறுத்தப்பட்டு உடல்-உளச் சித்திரவதைக்குள்ளாகி, ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என நீதிமன்றம் கருதினால் அந்த வாக்குமூலம் செல்லாக்காசாகும். இவையெல்லாம் இலங்கை அரசியல் யாப்பில் ஏற்றுக்கொள்ளப் பட்டவையும், மரபு முறையான நீதி பரிபாலன நெறிமுறைகளுமாகும்.

மேற்கூறிய யாவற்றையும் தள்ளிவைத்துவிட்டு அவசரகால நிலைமை, பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற இரும்புத் திரைகளினுள்ளே சட்டங்கள் மீறப்பட்டு, நாட்டின் ஒரு பகுதி மக்கள் ஒடுக்கப்படுவது அத்துமீறலாகும். ஒரு சட்டம் சட்டமென்பதால் அ·.து எப்போதும் நீதியானதெனக் கணிக்க முடியாது. சில சட்டங்கள் நீதியானதாகவும், சரியானதாகவும் இல்லாவிட்டாலும் அவற்றை நடைமுறைப் படுத்தலாம்.

மேலும், சட்டத்தை நடைமுறைப்படுத்துவோருடைய விருப்புவெறுப்புக்களைப் பொறுத்தும் இச்சட்டங்கள் வளைந்து கொடுக்கின்றன. இதனால் "ஒருவர் சட்டத்துக்கெதிரான செயல் புரிந்தார் என்று கூறப்படுவது முழுதும் சரியான கூற்று அன்று. இன்று, இந்த நாட்டில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் சர்வதேச மன்னிப்புச்சபை, சர்வதேச யூரர்கள் மன்றம் என்பவற்றால் அடிப்படை மனித உரிமைகளுக்கு

எதிரானவையென்று கண்டிக்கப்பட்டவை. நீதி பிறழ்ந்த சட்ட வாக்கங்களின் அடிப்படையில் மாற்றுக் கருத்தும், பழிவாங்கும் நோக்கமுங் கொண்டவர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்ட "அதிகாரிகள்" சட்ட பூர்வ மானவை என்று கூறினாலும் உலகம் ஒப்புக்கொள்ளாது.

இந்தச் சட்டங்கள் பயங்கரவாதத்தைத் தடைசெய்ய உதவாமல் ஆட்சியாளர் இஷ்டம்போலப் பயங்கரவாதம் புரியவும் பழிவாங்கவும் உதவுகின்றன. அன்றியும், உண்மையிற் பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நோக்கும் போக்கும் கொண்டவர்களை மேலும் வன்மமும் வைராக்கியமும் கொள்ளச்செய்து பயங்கரவாத நடவடிக்கைகளை அதிகப்படுத்தவே வழிகோலுகின்றன.

நடுநிசியிலும் அதிகாலையிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்ச் சீருடை அணிந்தவர்களாற் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்படுகிறவர்களுக்கு என்ன நடக்கிறதென்பது யாருக்கும் தொரியாது. அவர்கள் குரோத மனப்பான்மை கொண்டவர்களால் மாதக் கணக்கிற் குதறப்படுகிறார்களென்று பின்னர் நீதிமன்றத்தில் சாட்சியங்களிலிருந்து தெரிய வருகிறது. கைது செய்யபட்ட பலரைக் கடைசிவரை காணவில்லை. அவர்களுக்கென்ன நேர்ந்ததென்பதை அறியவும் முடியவில்லை. "அவர்களை நாங்கள் சுட்டுவிட்டோம்" என்று அக்கறையற்ற பதில் அவ்வப்போது கூறப்படுகிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற பீரங்கி வடபகுதியை நோக்கி இலக்கு வைக்கப்பட்டு, வேண்டியபடி பலிகொள்ளுகிறதாக இன்று உலகு அறிந்துள்ளது.

சென்ற வாரம், இந்தப் பத்தியிற் குறிப்பிட்டுள்ளது போல, எமது வழி சத்தியத்தின் வழி, அஹிம்சையின் வழி என்பதை மீண்டும் குறிப்பிட விரும்புகின்றோம். பயங்கரவாதத் தடைச்சட்டம் நாட்டின் சாதாரண நீதிபரிபாலனச் சட்டங்களையும் மரபு முறைகளையும் அரசியல் யாப்பையும் பொம்மைகளாக்கிவிட்டு, அரசியல் வாதிகளையும் ஆயுதப்படையினரையும் இஷ்டம்போலப் பொதுமக்களுக்குத் தீர்ப்பு வழங்க வழி கோலியுள்ளது என்பதே எமது கருத்தாகும்.

இன்று, இது தமிழ்மக்களுக்கு; நாளை எவருக்கும் எதிராகப் பயன் படுத்தப்படலாம்.

10.12.1982

**********

*சட்டபூர்வமாக நடைபெற வேண்டிய புதிய ஜனாதிபதிக்கான தேர்தலுக்குப் பதிலாக அரசு அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்த முற்பட்டபோது....*

## ஜனநாயகத்தைப் பாதுகாக்க

* ஜனநாயகத்தின் அடிப்படை: மக்கள் தாம் விரும்பும் பிரதிநிதிகளைக் காலத்துக்குக் காலம் தேர்ந்தெடுத்து, மக்கள் ஆட்சி நடத்துவதே ஜனநாயத்துக்கு அடிப்படை. அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் அந்த அடிப்படை உரிமையைப் பறித்தால், ஜனநாயகம் எங்கே?

* சட்டபூர்வமாக ஜனநாயகத்துக்குத் தடை: 1977ம் ஆண்டிற் கிடைத்த மிகப் பெரும்பான்மைப் பலத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதாக அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் சட்டபூர்வமாகச் செயற்படுகிறோம் என்று மக்களுக்குச் சொல்லிக்கொண்டு, மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையைப் பறித்தல் ஒழுக்கவியலுக்கு முரணான செயல்.

* முறையான ஜனநாயகத்துக்குப் பலமான எதிர்க்கட்சி அவசியம்: இலங்கை வாக்காளர் இன்றுள்ள நிலையில் ஒரு பொதுத் தேர் தலுக்கு வாக்களிப்பாராயின், வேறுபட்ட புதிய சிந்தனையாளர்கள் பலர் பாராளுமன்றம் செல்வர். பலமான எதிர்க்கட்சி பாராளு மன்றத்தில் இருக்கும். பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு மிக அவசியமான அந்த எதிர்க்கட்சி ஆட்சியாளரை நெறிப்படுத்தும். இன-மத-மொழி அடிப்படையிலான சிறுபான்மையினரது உரிமைகள் பல பாதுகாக்கப்படுவதற்கு வழிகோலும்.

* தாம் வகுத்தவற்றைத் தாமே மீறுகின்றனர்: பாராளுமன்ற ஜனநாயகத்தை மேலும் சிறந்த முறையிற் பாதுகாப்பதற்கு இந்த ஆட்சியாளர் தேர்தல்கள் சம்பந்தமாகப் புதிய திருத்தங்களைக் கொண்டுவந்தனர். ஆனால், இன்று தாம் வகுத்தவற்றுக்குத் தாமே முட்டுக்கட்டை போடும் வகையாக அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்துகின்றனர்.

* அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்படும் சூழ்நிலை: அவசரகால நிலைமை, பயங்கரவாத தடைச்சட்டம் என்பன நடைமுறையிலிருக்கும் நிலையில், அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறவிருக்கிறது. அதிகார பலமும், பணப் பலமும், ஆயுதப் படையினரின் உதவியும், எல்லா மூலவளங்களையும் உபயோகிக்கும் வாய்ப்புங் கொண்ட அரசு, "எதைச் செய்தாற் குற்றமாகிவிடுமோ" என்று பயந்து நிற்கும் பொதுமக்களிடம் இவ்வாக்கெடுப்பு நடத்துவது உலகம் ஒப்புக்கொள்ளுஞ் செயல் என்று கூறமுடியாது.

* இது கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது: ஜனநாயகத்துக்கு உகந்ததன்று என்று கருதப்படும் அபிப்பிராய வாக்கெடுப்பில் எதிராக வாக்களிப்பது எந்தவொரு கட்சியின் அடிப்படையிலும் அன்று.

* மேலதிக 28 உறுப்பினர் தெரிவு: 1978 அரசியல் சாசனத்தின் பிரகாரம் அடுத்த பொதுத் தேர்தலில் 196 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இடம் பெற வேண்டித் தேர்தல் நடைபெறுமென்று ஜனாதிபதி கூறியுள்ளார். எந்தவகையில் இந்தத் தேர்தல் நடைபெறுமோ அந்தவிதத்தில் எல்லாப் பிரதிநிதிகளையுந் தேர்ந்தெடுத்தால் என்ன?

*உலக அபிப்பிராயம: அபிப்பிராய வாக்கெடுப்பில் 1983இல் பொதுத் தேர்தல் நடைபெற வேண்டுமென்ற கோரிக்கையை மக்கள் வென் றெடுப்பாராயின் "பாராளுமன்ற ஜனநாயகத்தில் இலங்கை மக்கள் தேறி விட்டார்கள்" என்று உலகம் போற்றும் என்பது உறுதி. மேற்கூறிய கருத்துக்களை மனதில் வைத்து எதிர்வரும் அபிப்பிராய வாக்கெடுப்பில் நாமனைவரும் அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் முறையில் வாக்களிக்க வேண்டும் என்பது எமது கருத்தாகும்.

17.12.1982

**********

*கோப்பாய்த் தொகுதிப் பாரளுமன்ற உறுப்பினர் திரு. ஆலாலசுந்தரம் சுடப்பட்ட போது.....*

# துப்பாக்கி, தீர்வு தருமா ?

சென்ற வாரத்திற் கோப்பாய்த்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆலாலசுந்தரம் ஆயுதமேந்திய இளைஞர்களினாற் சுட்டுப் படுகாயப்படுத்தப்பட்டார். ''இஃது ஓர் எச்சரிக்கை. திருத்தம் ஏற்படாவிட்டால் மேலுங் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்'' என்ற பொருள்பட அவர்கள் கூறிச் சென்றதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்குச் சில வாரங்களின் முன்னர் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சிவஞானம் மேற்கூறிய வகையான இளைஞர்களால், தலையிற் சுடப்பட்டுத் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளார். துப்பாக்கி இளைஞர்களது பல்வேறு பயங்கரவாத நடவடிக்கைகளிலுமிருந்து மேற்கூறிய இரு சம்பவங்களையும் குறிப்பாகச் சுட்டிக் காட்டுவதற்கு அறிவறிந்த தமிழர் அடிமனத்தில் உணர்ந்து மனவேதனை கொள்ளுங் காரணங்கள் உண்டு.

பெற்ற தந்தை அல்லது மூத்த சகோதரனுடைய போக்கு இளையவனுக்கு விளங்கவில்லை அல்லது பிடிக்கவில்லை. அதனாற் பிரம்பெடுத்து அப்பாவுக்கும் அண்ணனுக்கும் தம்பியாண்டான் நாலுக்காறு முதுகிலே குறிவரவைத்து, 'கவனம். எனக்கு உகந்தபடி அல்லது நான் சொல்லுகிறபடி நல்லதனமாக நடக்க வேண்டும். இல்லாவிட்டால் பிறகு நடப்பது வேறு'' என்று எச்சரித்தானாகில் உலகம் அதனை ஒப்புக்கொள்ளுமா? குடும்பத்தின் எதிர்காலம் என்ன? பாடசாலையிலே, மாணவர் சிலர் ஆசிரியரைப் பிடித்து முழங்காலில் இருத்திப் பிரம்பாலே கொடுத்து ''உம்முடைய முறைகள் எமக்கு ஒப்புமையாயில்லை. நாங்கள் விரும்புகிற மாதிரி நடந்து கொள்ளும். இல்லையேல் உயிர் வாழ்வது நிச்சயமில்லை'' என்றால், கல்வியுலகின் நிலை என்னாகும்? தந்தையிலும் அண்ணாவிலும் ஆசிரியரிலும் தவறு இருக்கலாம் அல்லது தவறுபோல இளையவர்களுக்குத் தோன்றலாம். அதனை அறிந்து நெறிப்படுத்தக் கையாளும் நெறிமுறைகள் மானிடப் பண்புக்கு ஒத்தனவாக இருக்க வேண்டும் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

துவக்கு முனையிலே இந்த நாட்டை எங்கள் இஷ்டப்படி அமைப்போம் என்று தீர்மானித்துச் செயற்படுவது பண்பும் வீரமுமன்று. துவக்கைக் கையாளுவதை விட்டு வேறு எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன. விவேகமும், அறிவாற்றலும், தொழில் நுட்பமும், செயற்றிறமையுங் கொண்ட எங்கள் இளைஞர்களுக்கு அவை சொல்லித் தெரியவேண்டியவையல்ல.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர், தமிழீழ விடுதலை அணியினர் முதலிய எந்த அணியின் சார்பிலும் நாம் இக்கருத்தைக் கூற முன்வரவில்லை. ஈழம் வாழ் தமிழ்ப் பேசும் மக்கள் என்ற ஒரே அணியின் சார்பிலேயே இக்கருத்து இங்கு தரப்படுகின்றது. நாம் ஒரே உடலின் உறுப்புக்களாக, நமக்குள் உள்ள வேறுபாடுகளையும் கருத்து மோதல்களையும் சரி பிழைகளையும் துவக்கைத் தூர வைத்துவிட்டு, வேறு வழிமுறைகளைக் கையாண்டு சீர்செய்ய வேண்டுமென வற்புறுத்துகிறோம். வேதனை தரும் உறுப்பைக் குணப்படுத்தி இயங்க வைப்பதைவிடுத்து, அதனை அழித்து விடுதல் என்பது உலக வரலாற்றில் வெற்றியளிக்காத சித்தாந்தமாகும். தம்மைத்தாமே அழித்துக் கொள்பவருக்கு வாழ்வேது?

''தமிழ் மக்களின் உன்னத இலட்சியங்களைச் சுய நலத்துக்காகத் தொடர்ந்து சிதைத்துவரும் மூர்க்கர்களையும், சீருடை-உத்தியோக ஆயுதபலம் என்பவற்றின் பாதுகாப்பில் இருந்து கொண்டு இளைஞர்களை- யுவதிகளைச் சித்திரவதை செய்வதில் இன்பமும் புகழும் பெறவிரும்பிச் செயற்படுகின்றவர்களையும் நெஞ்சுரம் கொண்ட இளைஞர் சிலர் ஆத்திர மேலீட்டினால் அழிக்கத் துணிந்து விட்டார்கள் போலும்'' என்று மக்கள் கருத்துப் பரிமாறிக் கொண்டனர் அப்போது. ''இன விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடுவது என்ற கொள்கையிற் சிற்சில முன்னேற்பாட்டு நடவடிக்கையில் வீர இளைஞர்கள் சிலர் கூட்டாக இறங்கியுள்ளார்கள் போலிருக்கிறது'' என்றும் யோசித்தனர் தமிழர்கள். ''இனத்துரோகமாகவும் காட்டிக் கொடுக்கும் முறையிலும் பின் தங்கி விட்டவர்களைக் களையெடுக்கிறார்களாம்'' என்று மக்கள் பின்னர் சில தருணங்களிற் பேசிக்கொண்டனர். ''வழிப்பறி, களவு, கொள்ளை முதலிய ஈனச் செயல்கள் மூலம் வயிறு வளர்க்கும் கள்ளர் கும்பல்கள் தூய்மையான இன விடுதலை இயக்கத்தின் பேரைத் தாமும் கூறிக் கொண்டு இயக்கத்துக்கு மாசு கற்பிக்கிறார்கள். அவர்களை ஒழித்துக் கட்டுகிறார்களாம்'' என்றும் பேசிக் கொண்டார்கள். ''மானமுள்ள மனிதனெவனும் சகித்துக் கொள்ள முடியாத அளவுக்குச் சட்டமும் சட்டக் காவலர்களும் அட்டகாசம் புரிவதை இந்த இளைஞர்களாற் பொறுத்துக் கொள்ள முடியவில்லை'' என்று வாதித்தனர் இன்னொரு பாலார்.

யார் யார் எவ்வெப்போது என்னென்ன காரணங்களைக் கூறிக்கொண்ட போதிலும் துப்பாக்கி முனையில் தீர்வு காண்பது அல்லது துப்பாக்கியாற் சீரமைப்பது அல்லது துப்பாக்கியால் பழி துடைப்பது என்பது தமிழ்ப்பண்பாளர் கண்ட முடிவன்று.

எமது வழி அன்பு, அறம், அறிவுடைமை, சகிப்புத் தன்மை, அஹிம்சை, உண்மை-நேர்மை முதலாம் சீலங்களின் வழி. பிரச்சினைகள் எவ்வளவுதான் தலைதூக்கிய போதிலும் நிதானத்தையும் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் கைவிடாதவழி, இறைவனை முன் வைத்து இதய சுத்தத்துடன் செயற்படும் வழியென்பதை இளைஞர்களுக்கு மீண்டும் ஞாபகமூட்ட விரும்புகிறோம். வேற்றுமையில் ஒற்றுமை காண்பது, பிளவுபட்டுப் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து நின்று பலவீனப்பட்டுப் போகாது தூரதிருஷ்டியுடன் நடந்து கொள்வது நமக்கு உறுதியான இறுதி வெற்றியைத் தரும் என்ற சான்றோர் கொள்கைகள் காலங் கடந்த கொள்கைகளாக ஒரு போதும் மாறிவிடமாட்டா. உலக நாடுகளின் கடந்த கால-இக்கால வரலாறுகளில் எமது மேற்கூறிய கருத்துக்களுக்கு எடுத்துக்காட்டுக்கள் பல உள.

இளைஞர்கள் எங்கள் பிள்ளைகள். அவர்களைச் சரியாக வழிநடத்திச் செல்லும் பொறுப்பு எம்முடையது என்பதை "தலைவர்கள்" உணர வேண்டியதும் அத்தியாவசியம்.

4.03.1983

**********

## ஜனநாயகம் எங்கே ?

தென்னிலங்கையில் பதினெட்டுத் தொகுதிகளிற் பாராளுமன்றத் துக்கான இடைத்தேர்தல்கள் பழையமுறையில் நடைபெறவிருக் கின்றன. அதே வேளையிலே நாடு முழுவதும் ஐம்பது உள் ஊராட்சி மன்றங்களின் தேர்தல்கள் புதிய-விகிதாசார அங்கத்துவ-முறையில் நடைபெறவுள்ளன. இப்போது பாராளுமன்றத்துக்குள்ளே 1977இல் பழைய முறையில் தேர்தலில் வெற்றி பெற்று வந்தவர்களும், கட்சித்த தலைவர்களின் கருணாகடாட்சத்தினால் ஆசனங்கள் பெற்றுக் கொண்டவர்களுமாக 150 பேர் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாவரும் பாராளுமன்ற ஜனநாயக பாரம்பரியத்தின்படியும், அரசியல் யாப்பின்படியும் இந்த ஆண்டு யூலை மாதத்தில் ஆசனங்களைக் காலிபண்ண வேண்டியவர்கள். ஆனால், சனாதிபதியுடைய "சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பு" என்னும் மாயாஜால வித்தை யொன்றினால் மேலும் ஆறு

வருடங்களுக்குப் பாராளுமன்ற ஆசனங்களில் ஒட்டிக்கொண்டு பன்னிரண்டு நீண்ட வருடங்களுக்குப் "பாராளுமன்ற உறுப்பினர்" என்னும் பட்டத்தைச் சூடிக் கொண்டிருக்க அதிர்ஷ்டம் அடித்த பாக்கியசாலிகளாகி விட்டார்கள்.

புதிய அரசியல் யாப்பின்படி மேலும் முப்பது உறுப்பினர்கள் புதிய தேர்தற்றொகுதிகளின் அடிப்படையிற் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும். மொத்தமாக, இப்போதுள்ள பாராளுமன்றம் எந்த அரசியல் யாப்பின் பிரகாரம் உருவாக்கப்பட்டு நடைபெற்று வருகிறதென்பதோ, என்ன ஜனநாயக அடிப்படை கொண்டதென்பதோ சனாதிபதி ஜயவர்த்தனா ஒருவருக்குத்தான் தெரியும். ஏனென்றால், பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர் ஒவ்வொருவரினதும் வாழ்வும், வீழ்வும் அவர் கையிலே ஒப்படைக்கப் பட்டுள்ளன. அதாவது அத்தனை பெரிதாகக் கௌரவிக்கப்படும் ஸ்ரீ லங்கா பாராளுமன்றம் சனாதிபதி ஒருவருடைய தனித் தீர்மானத்துக்கு முன்னாற் செல்லாக்காசுக்கு ஒப்பாகும். பாராளுமன் றத்திலே வரவு செலவுத்திட்டம் நிதி மந்திரியினால் சமர்ப்பிக்கப்படப் போகிறது, தனிப்படவும் பொதுப்படவும் என்னென்ன தாக்கங்கள் வீக்கங்கள் ஏற்படப் போகின்றனவோ என்று மக்கள் பாராளுமன்ற ஜனநாயகமுறையில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், அதற்குச் சில நாள்களின் முன்னர், இவ்வாண்டு பெப்ருவரி மாதம் 18ஆம் திகதி, இரவோடு இரவாக அனைத்துப் பாவனைப் பொருள்களுக்கும் அதிகரிக்கப்பட்ட புதிய விலைகள் வர்த்தமானி மூலம் நடைமுறைப்படுத்தப்படுவதானாற் பாராளுமன்றம் பொம்மையாகி விட்டதென்பதற்கு வேறென்ன சான்று வேண்டும்?

பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஊற்றுக் கண்களான கட்சி அமைப்பு, வேட்பாளராகத் தோற்றுவதற்கு அனாவசியத் தடைகள் இன்மை, விரும்பிய வேட்பாளருக்கு வாக்களிக்கும் உரிமை, ஊழல்களும் சட்டமீறுதல்களும் பலாத்காரச் செயல்களும் இடம் பெறாத தேர்தல்கள் என்பன படிப்படியாகச் சட்டபூர்வமாகவும் சண்டித்தன மாகவும் மறைந்து கொண்டு போவதைக் காணுகையில் இங்கு சனநாயகம் என்பது இருக்கிறதா? என்று உள்நாட்டிலும் வெளிநாட் டிலும் வினாவப்படுவதிற் பொருள் இல்லாமலில்லை. 1980ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்டசபைத் தேர்தல் ஒழுங்கீனங்கள் ஜனநாயகத்துக்கே கரி பூசுஞ் செயல்களாகும். இந்த நாட்டில், தேர்தல்கள் நடைபெற்றால் வன்செயல்களும், இனக் கலவரங்களும், அவசரகால நிலையும், ஊரடங்குச் சட்டவாக்கமும் தொடர்ந்துவரும் என்று மக்கள் எதிர்பார்ப்பர். பிரயாணங்கள், பொது

நிகழ்ச்சிகள், வைபவங்களை இரத்துச் செய்வர். உண்மையான ஜனநாயக நாடுகளிற் தேர்தற் காலங்களில், உல்லாசப் பிரயாணிகள் தேர்தல் கோலாகலங்களைக் கண்டுகளிக்க, வந்து கூடித் தொகையாகக் காணப்படுவார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே பிரகடனப்படுத்தப்படாத அவசரகால நிலையும் ஊரடங்குச் சட்டமும் பல வருடங்களாக இருந்துவரும் நிரந்தர விடயங்களாகி விட்டன. போரிலே வெல்லப்பட்ட நாட்டின் மீது கட்டவிழ்த்து விடப்படும் இராணுவ ஆட்சி, இங்கு எவ்வித கட்டுப்பாடுமின்றி நடைபெறுகிறது. பயங்கரவாதத் தடைச்சட்டம் எந்தவொரு பிரசையையும் எவ்வித சட்டவரம்புமின்றிச் சிறைப்பிடிக்கவும் சித்திரவதை செய்யவும் அதற்கும் மேலான எந்தளவு படுபாதகங்களையும் பயமின்றிச் செய்யவும் ஆயுதப்படையினருக்கு உறுதுணையாக இருக்கும்போது, அரசாங்க வானொலியிற் சொல்லக் கேட்கின்ற பொருளாகவே ஜனநாயகம் மாறிவிட்டது. கூட்டம் கூடுதல், உரை நிகழ்த்துதல், ஊர்வலம் செல்லுதல், அபிப்பிராயம் வெளியிடுதல், சத்தியாக்கிரகம்-உண்ணாவிரதம் இருத்தல் முதலிய குடிமக்களின் சாதாரண உரிமைகள் யாவும் பயங்கரவாத நடவடிக்கைகளாகவே இந்த "ஜனநாயக நாட்டில்" மதிக்கப்படுவதைத் தினமும் காண்கிறோம். எனவே, தேர்தல்கள் வருகின்றனவென்றாற் பயங்கரங்கள் வருகின்றனவென்று மக்கள் கிலிகொள்ளுவதில் வியப்பில்லை.

என்னதான் கண்டாலும் கேட்டாலும் தமிழர் மட்டும் ஒற்றுமைப்படமாட்டார்கள்; ஒரு தலைமையில் நிற்கமாட்டார்கள். தமிழர் சாதி-மத-பொருளாதார வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு நிற்பது எக்காலமோ, அக்காலமே நமக்கு விடிவுகாலமாகும். அதுவரை நடப்பன யாவும் தற்கொலை முயற்சிகளே!

15.04.1983

**********

# எங்கே போகிறோம் நாம் ?

வன்செயல், பயங்கரவாதம

"இழந்த உரிமைகளை மீண்டும் பெறுவதற்காகப் பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகள் நடைபெற்று, அவை பல தடவைகளிலும் பயனற்றுப் போயினமையால் வேறு வழியின்றி நேரடி

நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியதாயிற்று'' என்று தமிழ்மக்கள்; குறிப்பாக இளைஞர்கள் கூறுகின்றனர்.

"உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் உட்படத் தமிழ் மக்களுடைய உரிமைகோரும் சாத்வீக நடவடிக்கைகள் யாவும் வன்செயல்களைத் தூண்டுபவை அல்லது பயங்கரவாத நடவடிக்கைகள் என்றும், அவை அடக்கியொடுக்கப்படுவதற்கு அரசுசெய்யும் எல்லாவிதமான சட்டங்களும் நீதியானவை, ஜனநாயகத்துக்கடுத்தவை'' என்றும் நியாயங் காட்டி, அரசும் ஆயுதப்படையினரும் மேற்கொள்ளும் குரூரமான செயல்கள் சரியானவையே என்ற மறுபக்கத்திற் கூறப்படுகிறது.

பொதுமக்கள் துயர்

முடிவாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும் பொதுமக்கள் தமது நாளாந்த கடமைகளில் ஈடுபடவும், வீடுகளிலே நிம்மதியாகத் தங்கியிருக்கவும்கூட வகையற்றவர்களாய் மரணபீதியின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். காரண-காரியம் இன்றி, நியாயவரம்பு கடந்து தினமும் நடைபெற்றுவரும் சம்பவங்களால் வடக்கு-கிழக்கு வாழும் பொதுமக்கள் பொருள் இழந்து, வீடுவாசல்கள் இழந்து உயிர்ப்பாதுகாப்புக்கும் உறுதியற்றவர்களாய் நடமாடும்நிலை இன்று வந்துள்ளது. சட்டவிரோத நடவடிக்கைகள், வன்செயல்கள், பயங்கரவாதம் யாராற் புரியப்படுகிறது என்று நிச்சயிக்க முடியாதவர்களாக அப்பாவி மக்கள் அல்லலுறுகிறார்கள். கதவடைப்பு, பாடசாலைகள், தொழிற்சாலைகள், கடைகள், சந்தைகள் மூடிக்கிடக்கின்றன. உண்ண உணவில்லை, மருந்து வாங்கவும் வழியில்லை: அனைத்திற்கும் மேலாக அன்றாடத் தொழில் இல்லை.

இருசாரார் வாதம்

அரச வாகனங்களில் ஏறிப் பவனிவந்து பொதுப்பணத்தைக் கரியாக்கி நிராயுதபாணிகளை அடிமைகளைப்போல வதைத்து ஆயுத பலத்தினால் அக்கிரமம் புரிந்து ஆட்சியை ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம் என்று ஒரு சாரார் நினைக்கின்றனர். எல்லாஞ் செய்து பார்த்ததாயிற்று: நாங்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டோம். எம் தலைவர்கள் எம்மைச் சரியாக வழிநடத்தவில்லை. எத்தனை காலம் பொறுத்திருப்போம்? காலம் போகப் போக விடுதலைப் போராட்டம் மேன்மேலும் சிக்கலடைகிறது. நாம் நிரந்தர அடிமைகளாகி விடாமல் ஏதோ எமக்குச் சரியென்று பட்டதைச்

செய்கின்றோம் என்று "போராளிகள்" எனப்படுவோர் வாதிடுகின்றனர்.

உண்மை நிலை

திரும்பவும் கூறுவதாகில், இருதலைக்கொள்ளி எறும்புகள் போல ஏழைப் பொதுமக்கள் நிரந்தர பயங்கரவாத நிலைக்குள்ளாகி வாழ வழியின்றி நிற்கின்றனர். இரண்டு நாள் தொழில் இல்லாவிட்டால், இரண்டு நாள் கடைகள் அடைக்கப்பட்டால் அடுப்புமூட்ட வழியில்லாத வர்கள் தாம் நம்மில் அநேகர் என்பதை அரசும் ஆயுதப்படையினரும் "போராளிகளும்" யதார்த்த சிந்தையுடன் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். மாறாத சொறி சிரங்கு போன்ற இந்த ஏட்டிக்குப் போட்டி வன்செயல்களால் மக்கள் சலிப்படைந்து, "ஐயோ! இதற்கு ஒரு முடிவு காணமாட்டீர்களா?" என்று கேட்கிறார்கள்.

வரலாறு கற்பிக்கும் படிப்பினை

உலகில் எந்த நாட்டிலும் எக்காலத்திலும் வரலாறு நமக்குக் கற்பிக்கும் பாடம், கண்ட அனுபவம் ஒன்றுண்டு, வன்செயலும், அதிகார ஆணவமும் எந்தப் பிரச்சினைக்கும் நீதியான தீர்வுகாண உதவவில்லை. பிரச்சினைகளை வளர்க்கவும் மேன்மேலும் சிக்கலடையவும்செய்து மக்களை அழிவுப்பாதையில் இட்டுச் சென்றனவேயன்றி நிரந்தரமான தீர்வுகாண உதவவில்லை. பென்னம்பெரிய வல்லரசுகள் முதலாய்ப் பயங்கர ஆட்சி செய்த காரணத்தாற் பூண்டோடு அழிந்து போன கதைகளைத்தான் வரலாற்று ஏடுகள் கூறுகின்றன.

முடிவு

நாட்டிலே அன்பு, நீதி, சமாதானம், சுபீட்சம் காண வேண்டுமாகில் இருதரப்பினரும் உள்ளத் தூய்மையோடு வீம்பை விடுத்து, விட்டுக்கொடுத்து, உடனுக்குடன் செயற்படுத்தப்படும் உரையாடல்களை நடத்தி ஆக்கப்பாதையை நோக்கித் திரும்பி வீறுநடைபோட வேண்டும். உலகின் மாபெரும் சமயங்களான இந்துமதம், பௌத்தமதம், கிறிஸ்துமதம், இஸ்லாம் மதம் என்பன நம்முடையவென வாய்ப்பேச்சுக்குச் சொல்லிக்கொள்ளும் நாம், ஆட்பலம், ஆயுதபலம், கரவு, ஏமாற்றும் நோக்கம், நம்பிக்கையின்மை முதலியவற்றைக் களைந்து செயலில் இறங்கும்வரை அக்கிரமம் புரிந்தவர்களாகத்தான் எதிர்காலத்தவரால் மதிப்பிடப்படுவோம்.

**********

20.05.1983

*1983ஆம் ஆண்டுக் கலவரம் திட்டமிடப்பட்டதா? கலவரத்துக்கு முன்பிருந்த நிலைபற்றி.....*

# தமிழர் பிரச்சினை தீருமா?

"தமிழ் மக்களுக்குத் தீர்க்கப்படாத பிரச்சினைகள் உண்டு என்பது தெரிகிறது. அதற்காக வடக்கு-கிழக்கில் தீவிரவாத இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவது வழியாகாது" என்றும், "பயங்கரவாதம் புரிய முற்பட்டிருக்கும் தீவிரவாத தமிழ் இளைஞர்களுடன் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ பேச்சுவார்த்தை நடத்தி நல்லதீர்வு காண நாம் தயார்" என்றும் மந்திரிகள் சிலர் சமீப நாட்களாகக் கூறி வருகிறார்கள். "தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கத் திட்டங்கள் பெரும்பாலும் தயார்: ஜனாதிபதி மாத இறுதியில் நாடு திரும்பியதும் அவை ஆலோசனைக்கெடுத்து அமுல் நடத்தப்படும்" என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. "1948க்குப் பின்னால் சிங்கள மக்களுக்குக் கிடைத்த சுதந்திரத்தில் சமபங்கும் வாய்ப்பும் நமது தமிழ்ச் சகோதரர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதானால் இன்று பயங்கரவாதங்கள் தலைதூக்கியுள்ளன. பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்ப்பதற்குத் தீவிரவாதத் தமிழ் இளைஞர்கள் மதத் தலைவர்களைக் கூட அணுகலாம்" என்பதாக கொழும்பு பேராயர் அவர்கள் அண்மையிற் பத்திரிகைகளுக்கு விடுத்த பகிரங்கக் கடிதத்திற் கூறுகிறார்கள்.

இப்படியெல்லாம் பேசுகிறவர்கள்-அறிக்கை வெளியிடுகிறவர்கள் பிரச்சினைகளின் உற்பத்தியையும் உண்மைத் தன்மையினையும் சரிவர உணர்ந்துள்ளார்களா? என்பதும், பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட வேண்டும் என்பதில் அப்பழுக்கில்லாத திறந்த மனமும் உறுதியும் தூய உள்ளமும் கொண்டவர்களா? என்பதும் முன்னிற்கும் வினாக்களாகும்.

இப்போதைய அரசியல் தலைவர்களும் இவர்களுக்கு முந்திய தலைமுறையினரும் ஏறக்குறைய 50 வருடங்களுக்கு முன்னர் தொடக்கமே திட்டமிட்டுக் குட்டை குழப்பி விட்டுள்ளனர்.

(அ) வரலாற்று ஏடுகளிலும் பாடபுத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் வகுப்பறைகளிலும் தேச-இன சரித்திரம் மாற்றித் திரித்து அமைக்கப்பட்டு உண்மைக்குப் புறம்பான கருத்துக்களும் சம்பவங்களும் புகுத்தப்பட்டன. இன்று முதிர்ந்தவர்களாக இருக்கும்

நாட்டுப்பிரசைகள் பெரும்பான்மையினருக்கு ஆங்காங்கு திரித்து எழுதப்பட்ட தேச சரித்திரம்தான் தெரியும், உண்மையான வரலாற்றைச் சொன்னால் அவர்கள் நம்ப மாட்டார்கள்.

(ஆ) "காடு திருத்திக் கழனிகளாக்குகிறோம், உணவுப்பயிர்ச் செய்கையில், தன்னிறைவு காணப் பாடுபடுகிறோம்" என்ற போர்வையில் திட்டமிட்ட அடாத்தான குடியேற்றங்கள் ஏலவே செய்யப்பட்டு விட்டன. இப்போது உறுதிகளும் வழங்குகிறார்கள். தமிழனுடைய பூமி ஏற்கனவே பல பக்கத்தாலும் மறைமுகமாகப் பறிக்கப்பட்டாயிற்று. (இ) நீர்கொழும்பு, புத்தளம், சிலாபம் பகுதிகளில் வாழ்ந்த மீனவர்களும் மற்றவர்களும் 40-50 வருடங்களுக்கு முன் தங்கள் வீட்டிலேயே தமிழ்ப்பேசிய, உள் ஊர்ப் பாடசாலையிலே தமிழ்கற்ற, கோவிலிலே தமிழிலே வழிபாடுகள் நடத்திய தமிழர்கள் என்பதை இன்று அவர்களே நம்பிக்கொள்ள முடியாதபடி திட்டமிட்டு மாற்றப்பட்டு விட்டார்கள். நீர்கொழும்பிலே சில வாரங்களின் முன்னர் அவர்கள் தமிழர்களை அடித்தார்கள் என்று செய்திகள் கூறுகின்றன. (ஈ) இன்றைக்கும் சிங்கள தமிழ் பாடப் புத்தகங்களிலும் வரலாற்று நூல்களிலும் அறிந்து கொண்டும் அறியாமையிலும் பற்பல தமிழின ஒழிப்பு வேலைகள் செய்யப்பட்டுள்ளன: பிள்ளைகள் அவற்றை உண்மையென்று நம்பிப் படிக்கிறார்கள். 19ம் நூற்றாண்டு முற்கட்டத்தில் ஆங்கிலேயர் முழு இலங்கையையும் தங்கள் வலுவான பிடியின் கீழ்க் கொண்டு வருமட்டும் தமிழ்ப் பிரதேசங்களும் தமிழ் ஆட்சியாளரும், சிங்களப் பிரதேசங்களும் சிங்கள ஆட்சியாளரும் தனித்தன்மையுடன் இருக்கவே செய்தனர். "அந்நியர் வந்து தமிழரைவென்று சிங்களவருடைய ஆளுகையில் விட்டுப் போயினர்" என்பதாகச் சரித்திரத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இன்று தமிழ் மக்களைக் கேட்கத் துணியலாமா? (உ) சிங்களத்தை அரச கரும மொழியாக்கித் தமிழ்மொழியின் நியாயமான உபயோகத்தைக் கூட வஞ்சனையாகவும் வக்கிரபுத்தியுடனும் ஒழித்துக்கட்டி வருவதை உலகம் அறியுமே.

மேற்கூறியனவும் இன்னும் பலவுமான உண்மைகள் இருக்க, ஆட்சியாளர்கள் சிங்கள வாக்காளருடைய கவனத்தைத் திசைதிருப்ப, தமிழ்ப் பயங்கரவாத இளைஞர்களைப் பூச்சாண்டி காட்டி வருகிறார்கள் என்று மக்கள் கூறுகின்றனர். பயங்கரவாத இளைஞர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் அதே நேரத்திலேயே, கேள்விமுறை விசாரணை எதற்கும் இடமில்லாமல் தமிழ் மக்களைச் சுட்டுப்புதைக்கு மாறு சட்டத்திலே திருத்தமும் செய்துள்ளார்கள். என்ன நம்பிக்கையுடன் தமிழர் பேச்சுவார்த்தைக்குப் போகப் போகிறார்கள்?" பயங்கரவாத இளைஞர்களுக்குப் புகலிடம் அளித்தார்கள்,

அவர்களை அரசுக்குக் கையளிக்கவில்லை'' என்று குற்றம் சுமத்திச் சித்திரவதை செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் மதகுருமார். "தமிழ் இளைஞர்கள் மதத்தலைவர்களையும் அணுகலாம்'' என்று அழைக்கும்போது, போகப் போவது யார்? ஆதரவு செய்யப்போவது யார்? என்று கேள்விகள் எழுகின்றன. க.பொ.த.(சா.த) பரீட்சைக்குக் கூடத் தோற்றியிருக்க முடியாத 18-30 வயது சிங்கள இளைஞர்களான இராணுவத்தினரிடம் இயந்திரத் துப்பாக்கிகளைக் கொடுத்து "நீங்கள் தமிழரைச் சுட்டுத் தள்ளலாம்- விசாரணை கிடையாது'' என்று விட்டுவிடும் அளவுக்கு அரசு இறங்கிப் போய்விட்ட நிலையில், சமரசத் தீர்வுகாணப் பேச்சு வார்த்தைக்கு அழைப்பது உலகின் கண்ணில் விந்தையாகப் படாதா?

ஒரு மொழி பேசும் ஓரின மக்களுடைய சமயங்களாகிய பௌத்தமும் அசைவமும், அந்தச் சமயங்களின் தலைவர்களும் சாதிக்கமுடியாத பல விடயங்களை, பல மொழி பேசும் பல இன மக்களால் அனுஷ்டிக் கப்படும் கிறிஸ்தவமும் கிறிஸ்தவ மதத் தலைவர்களும் சாதிக்கக் கூடியதாக இருந்தமைக்கு அடிப்படைக் காரணம்: அனைத்துக்கும் மேலாகக் கிறிஸ்தவ விசுவாசத்துக்கும் கோட்பாடுகளுக்கும் புரிந்துகொள்ளும் தன்மைக்கும் சகோதரத்துவ மனப்பான்மைக்கும் அவர்கள் முதலிடம் அளித்து வந்தமையாகும். அரசியல் நோக்குடையவர்களாற் சரித்திரமும் சம்பிரதாயங்களும் மாற்றியமைக்கப்பட்டு விட்டமையால் இன்று அவர்களும் நம்பிக்கையும் வலுவும் இழந்து ஆட்சியாளரை எதிர்பார்த்து நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள் போலும்! இனங்களின் மத்தியிலே புரிந்துணர்வையும் சமரசத்தையும் சகிப்புத் தன்மையையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்ப வல்லவர்களாயிருந்த கிறிஸ்தவ சமயத் தலைவர்கள் திரும்பவும் அச்சமின்றி உண்மையை வலியுறுத்த ஒற்றுமையுடன் முயலுதல் அவசியம். இனவாதத்தைத் தேசியவாதம் என்று மாற்று விளக்கம் செய்யாமல், புகுந்துவிட்ட போலிவாதங்களை இனங்கண்டு விலக்கிப் பாரபட்சமற்ற தீர்வுகள் ஏற்படுத்த முயல முன்வரவேண்டும்.

24.06.1983

**********

*திருமலைப் பகுதியில் 1983 யூலை ஆரம்பத்திலேயே கலவரங்கள் நடைபெற்றபோது ...*

# தற்கொலை முயற்சி

திருகோணமலையில் தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப் படுகிறது. ஆனால், தொடர்ந்து பரவலாக அரக்கத்தனமான வன்செயல்கள் நடைபெறுகின்றன. பல உயிர்கள் பலியாகி விட்டதாகவும், பொருட்சேதம் ஈடுசெய்ய முடியாத அளவுக்குப் போயுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. தாக்குகிறவர்கள் குறித்த ஓரினத்தவர்களாகவும், தாக்கப்படுகிறவர்கள் மறு இனத்தவர்களாவும் இருக்கிறார்கள். தாக்கி உயிர்களைப் பலி கொண்டு கொள்ளை யடித்துப் பொருள் நாசம் செய்பவர்களைச் சேர்ந்தவர்கள்தாம் பொலீசாரும் ஆயுதப்படையினரும். ஊரடங்குச் சட்டத்தை மீறி வெளியே வந்து வன்செயல் புரிபவர்களை ஆயுதப்படையினரோ பொலீசாரோ கண்டித்தது - தண்டித்ததாகச் செய்தி இல்லை. மேற்கூறியவற்றிலிருந்து சிறு பிள்ளையும் புரிந்து கொள்ளக்கூடிய உண்மைகள் பல வெளியாகின்றன. மேலும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய பல அனுபவங்களும் படிப்பினைகளும் இருக்கின்றன.

இந்த நாட்டிலே சில நிலப்பிரதேசங்களையும் கேந்திர ஸ்தானங் களையும் நகரங்கள்-துறைமுகங்களையும்கூட ஓரினத்தார் முழுக்க முழுக்கத் தங்கள் ஆதிக்கத்துக்குட் கொண்டுவர ஆட்சி அதிகாரத்தையும் படை பலத்தையும் வன்முறைகளையும் கையாண்டு பார்க்கிறார்கள். முழுப்பூசினிக்காயை இலைச் சோற்றுக்குள்ளே மறைத்துவிட முயற்சித்த கதைகளையும் வரலாற்று ஏடுகள் கூறத்தான் செய்கின்றன.

பல நூற்றாண்டுகளாக ஜனநாயகம் நிலைத்துநின்று தழைத்தோங்கி வளர்ந்துள்ள உலக நாடுகளிலே எந்த ஆட்சியாளராவது ஆயுதப்படையினரிடம் தஞ்சம் புகுந்து நடந்து கொண்ட சரித்திரம் இல்லை. ஆயுதப்படையினர் கட்டுப்பாட்டுக்குள்ளும், நூறுவீத ஒழுக்க நெறிக்குள்ளும் அந்த நாடுகளில் இருந்து வருகிறார்கள், ஒழுக்கத்திற்கும் கட்டுப்பாட்டுக்கும் கடமையுணர்ச்சிக்கும் ஜனநாயக நாடுகளில் ஆயுதப்படையினர் விருப்பு-வெறுப்புத் தெரிவிப்பதும், தங்கள் விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்வதும் ஜனநாயக நாடுகளில் அத்துமீறிய செயல்களாகக்

கருதப்படும். ஆயுதப்படையினர் அத்துமீறிய செயல்களில் ஈடுபட அரசு இணக்கம் தெரிவித்து, மறைமுகமான அனுசரணைகாட்டி நடந்து கொண்டால் தனக்குத்தானே குழிதோண்டிக் கொண்டதாக ஒருநாள் முடிவுறும். விசாரித்தல் தீர்ப்பிடுதல் தண்டனையளித்தல் முதலிய நீதி பரிபாலன வேலைகளையும், பொலீசாரின் கடமைகளையும் என்ன காரணங்களின் அடிப்படையிலாவது அடிக்கடி ஆயுதப்படையினரிடம் கையளித்துவிட்டு ஜனநாயக அரசு சந்தர்ப்ப இலாபம் கருதிக் கைகட்டிப் பார்த்திருந்தால், காலகதியில் அவையெல்லாம் ஆயுதப் படையினரின் உரிமைகளாக மதிக்கப்பட்டு பழக்கப்பட்டு, கட்டுப்படுத்த இயலாத நிலை வந்து சேரும். ஆட்சிப்பொறுப்பையே ஆயுதப்படைகள் இரத்தம் சிந்தியும் இரத்தம் சிந்தாமலும் கைப்பற்றிக் கொள்ளும் சம்பவங்கள் இன்று உலகில் அடிக்கடி நடைபெற்று வருவதை யார்தாம் அறியமாட்டார்கள்?

சண்டியன் ஒருவனை அடக்கிவைப்பதற்கு அல்லது தீர்த்துக்கட்டுவதற்கு அவனினும் வல்லமையுள்ள சண்டியனைக் கூலிக்கமர்த்தும் 'பெரியவர்' முடிவில் கூலிக்கமர்த்திய சண்டியனுக்குக் கப்பம்கட்டி வாழவேண்டியவராக இருப்பதை அல்லது அவனாலேயே மாண்டுபோக நேருவதை அனுபவங்கள் தெரிவிக்கின்றன.

வட அயர்லாந்திலே ஆட்சியுரிமை கோரிக் கொரில்லாப் புரட்சிசெய்வோர் மவுண்பேட்டன் பிரபுவையே குண்டுவைத்துக் கொலை செய்தார்கள். கொரில்லாக்களை இனங்காணவும், தண்டிக்கவும், சகல அதிகாரங்களையும் கொடுத்து ஆயுதப்படையினரைப் பொதுமக்கள் மீது பிரிட்டிஸ் அரசாங்கம் கட்டவிழ்த்து விடவில்லை. அல்லது ஆயுதப்படையினர் தங்கள் விருப்பப்படி அத்துமீறி ஒழுக்க நெறிகளை மீறி நடந்து கொள்ள விட்டுப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை.

பரவலாக, வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், இன்று குறிப்பாகத் திருகோணமலையிலும் சட்டத்தின் துணைகொண்டு நடைபெறும் அனர்த்தங்கள் அரசாங்கத்தின் தீர்க்கமான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாவிட்டால் அவற்றின் பின்விளைவுகள் யாவருக்குமே மிகக் கசப்பானவையாக முடியக்கூடும்.

1.07.1983

**********

*1983 கலவரத்திற்குச் சில நாட்களுக்கு முன்...*

# மானிட உயிரின் பெறுமதி

திரும்பவும் தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்த வேண்டும் எனப் பிரித்தானிய அரசினாற் கொண்டு வரப்பட்ட பிரேரணை நேற்று முன்தினம் பிரித்தானிய பாராளுமன்றத்திற் படுதோல்வியடைந்துள்ளது. திருமதி மாகிறேற் தட்சருடைய கொன்சர்வேட்டிவ் கட்சி அரசாங்கம் பிரித்தானிய பாராளுமன்றத்திற் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த பெரும்பான்மைப் பலத்துடன் விளங்கினாலும், இப்பிரேரணை சம்பந்தமாக வாக்களிப்பதில் கட்சிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுச் சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமை பா.உ.களுக்கு வழங்கப்பட்டிருந்தமையால், ஆட்சிப் பொறுப்பில் உள்ள மந்திரிகள் சிலர் உட்பட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலர் அரசின் பிரேரணைக்கு எதிராக வாக்களித்துள்ளனர். அங்கிளிக்கன் திருச்சபை அதிகாரிகள் உட்பட, பிரித்தானியாவிற் செல்வாக்கு வாய்ந்த பல ஸ்தாபனங்கள் அரசின் பிரேரணைக்கு எதிராகப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனவென்று செய்திகள் கூறுகின்றன.

கொள்ளை, தீவைப்பு, காவற்படையினரைக் கொலை செய்தல் போன்ற மிகப் பாரிய கொடிய குற்றங்களைப் புரிந்தவர்கள் என்று, சாதாரண நீதிமன்றச் சட்டங்களுக்கியைய விசாரித்து நிரூபிக்கப்பட்டு, யூரர்களின் தீர்மானத்தைப் பெற்று, சட்டமேதையும் அனுபவஸ்தருமான நீதிபதியினால் மட்டும் வழங்கப்படக் கூடிய தூக்குத்தண்டனையைத்தான் வேண்டாம் என்று பிரித்தானிய பாராளுமன்றம் தீர்மானித்துள்ளது என்பதனை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

மனிதனால் ஆக்கப்பட்ட எத்துணை நுட்பமான சட்டப் பரிசீலனைகளின் முடிவிலும், மனிதப் பிறவியான நீதிபதியும் சட்ட மன்றமும் இறைவனாற் படைக்கப்பட்ட விலைமதிப்பற்ற மனித உயிரை என்ன காரணத்துக்காகவும் பறித்தலாகாது என்பது அவர்களுடைய தீர்மானம்.

பழுத்த ஜனநாயக நாடான பெரிய பிரித்தானியா இது விடயத்தில் உலகுக்கும் குறிப்பாக எமக்கும் எடுத்துக் காட்டாக விளங்குவதைத் திறந்த மனத்துடன் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். 1958 ஆம்

ஆண்டு தொடக்கம் இந்த நாட்டில் எத்தனைமுறை இனக்கலவரங்கள் ஏற்பட்டு, அல்லது ஏற்படுத்தப்பட்டு, சிறுபான்மை இனத்தவர்களான மனிதர்களின் உயிர்கள் சகல சட்ட வரன்முறைகளுக்கும் எதிரான முறையில் மிருக உயிர்களிலும் கீழான மதிப்பீட்டுடன் அரக்கத்தனமாகப் பறிக்கப்பட்டுள்ளன. ஏனைய தீவைப்பு, கொள்ளை, கற்பழிப்பு, பொருள் அழிவு, வழிப்பறி முதலியவற்றுக்கு எல்லைகூற முடியுமா? கொலை, கொள்ளை, தீவைப்பு முதலியவையும், பலம் குறைந்தவர்கள் மீது திரும்பத் திரும்பச் செய்யப்படும் போது வழக்கம்-பழக்கமான செயல்களாகவும் இருக்க முடியுமா?

"மழைவிட்டும் தூவானம் போகவில்லை" என்ற விதமாக, கடைசியாகத் திருகோணமலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற படுபாதகமான வன்செயல்களில் மாண்டுபோன மனித உயிர்களுக்கும், மற்றும் சேதங்களுக்கும் யாரால் ஈடு செய்ய முடியும்? அரக்கர்கள் கூட்டமாக வந்து விழுந்து, பதைக்கத் துடிக்கக் கொலைகள் செய்தமையாற் பெற்றோரையும் உற்றாரையும் இழந்து உடுக்கத் துணிக்கும் வழியின்றி வெறுங்கையுடன் "இரத்தக் கண்ணீர் உகுத்துக்கொண்டு நிற்கும் அப்பாவிகளான ஆண்-பெண்-சிறுவர்களுக்குப் பாணும் சரைச் சோறும் கொடுத்துப் பள்ளிக்கூடங்களிலும் கோவில்களிலும் சில நாட்களுக்குத் தங்க வைத்தாற் பழி தீர்ந்துவிடுமா? நட்ட ஈடு செய்ததாகுமா? ஆதிக்கம் பெறுவதற்கும், நிலம்-தொழில் வாய்ப்புப் பெறுவதற்கும் ஆசை கொண்டு திட்டமிட்டு அதிகாரத்துடன் அநியாயம் புரிகிறவர்கள் பிரித்தானியா போன்ற ஜனநாயக உலக நாடுகளைத் திரும்பிப் பார்க்க வேண்டும். "உகண்டாவிலும் வேறு சர்வதிகார நாடுகளிலும் இதைவிட மோசமாக நடக்கிறது" என்று போலிச் சமாதானம் கூறுவது அரசியற் பண்புடைமையாகாது.

"ஆயுத பலத்தினால் ஆட்சியைப் பலப்படுத்தலாம்", "ஆயுதம் ஏந்தி ஆட்சியைக் குழப்பலாம்," அல்லது 'எதிர்க்கட்சிக் காரர்களைக் கொலை செய்வதுதான் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு ஒரேவழி என்றிவ்வாறாகத் தீர்மானித்து நடவடிக்கை மேற்கொள்கிறவர்கள்" வன்செயல்கள் வன்செயல்களைக் கட்டுப்படுத்தமாட்டா" என்ற உலக அனுபவ உண்மையை எப்போது ஏற்றுக்கொண்டு வழிக்கு வரப்போகிறார்கள் என்பதுதான் இன்று பொது மக்களுடைய ஒரே கேள்வியாகும்.

15.07.1983

**********

# கொலை செய்யாதே

கொலை செய்யாதே - இதனை மனிதர் அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது மட்டுமன்றி, இது கடவுளுடைய வெளிப்படையான கட்டளையுங்கூட என்பதை அறிவோம். உயிர் கடவுளுக்குரியது. அவரே அதனைத் தருபவர். அதனை எடுக்க எமக்கு உரிமையில்லை என்பதனை அனைத்து மதங்களும் ஏற்றுக் கொள்ளுகின்றன.

மனிதன் எத்தனையோ வழிகளில் முன்னேறிச் செல்கிறான் என்பது உண்மையும் மகிழ்ச்சிக்குரியதுமாய் இருப்பினும், அவன் மனித உயிர்களின் அழிவுக்குரிய பல்வேறு சாதனங்களைக் கண்டறிந்து வைத்திருக்கிறான்; மேன்மேலும் அத்தகைய சாதனங்களைக் கண்டறிவதிற் போட்டி போட்டுக்கொண்டு முயற்சிக்கிறான் என்பதில் மகிழ்ச்சி அடைபவர் யார்? அதனை மனிதர் வெறுத்துக் கண்டிக்கிறார்கள் என்பதனை அறிவோம்.

குறித்த சில காரணங்களுக்காக ஒருவன் தன் உயிரைப் போக்கும் உரிமை உண்டு என்றும் அல்லது அத்தகைய உரிமை வேண்டும் என்றும் வாதிப்போர் சிலர் இன்று உளர். மரணவாயிலுக்கு இட்டுச் செல்லும் கடின நோயினால் உபாதிக்கப்படுவோர், உடல்-உள் குறைபாடுகளோடு பிறக்கும் குழந்தைகள் போன்ற உதாரணங்களை இதற்கு முன் வைக்கின்றனர். தேச சட்டங்கள் தாமும் இத்தகைய சந்தர்ப்பங்களிலும்கூட உயிரைப் போக்கும் செயலுக்கு உடன்பாடு கொடுக்கவில்லை. பிறப்பிலேயே பாரிச வாதத்தினால் தாக்கப்பட்டு வருந்திய எலிபேத் யூலியா என்னும் 26 வயது அமெரிக்கப் பெண் அண்மையில் உண்ணாவிரதமிருந்து சாக எத்தனித்தபோது, நீதிபதி அதனைத் தடைசெய்து, வற்புறுத்தி உணவூட்டப்பட்டாள்: மனித உயிர் கருவாக உருப்பெற்ற கணத்திலிருந்தே இவ்வுலகில் வாழுகின்ற முழு மனித உரிமையும் பெற்றுவிடுகின்றது என்றும், கருச்சிதைவு செய்வது எந்த நிலையிலும் கொலை என்றும் திட்டவட்டமாகத் திருச்சபை படிப்பிக்கின்றது. ஏனைய மதத்தினர் பலரும் இதனை முழுமையாக ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

இவ்விதமே உரிமைப் போராட்டங்கள் முதலிய வேறுபட்ட எந்த 'நல்ல' நோக்கத்துக்காகவும், எவ்வழி முறைகளிலும் உயிரை மாய்த்துக் கொள்ளுதலை அல்லது முயற்சித்தலை தற்கொலை என்றே கூற வேண்டும். கடின வியாதியால் உண்டாகும் துன்பத்தைத்

தவிர்க்க 'இரக்கக் கொலை' செய்வதையும் வெவ்வேறு கோரிக்கைகளுக்காக தீக்குளித்தல், சாகும்வரை உண்ணாவிரதம் இருத்தல் போன்றவைகளையும் கொலை முயற்சிகளாகவும் ஒழுக்கவியலுக்கு மாறானவை எனவும் கொள்ளுதல் வேண்டும். மேலும், இத்தகைய செயல்களுக்குத் துணை நிற்பதும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும்.

தம்மைக் கொலை செய்யத் திட்டமிட்டு வந்தவர்களிடம் மனுக்குல மீட்புக்காகக் கிறிஸ்துநாதர் தம்மைக் கையளித்தமை, மறைச்சாட்சிகள் தம் விசுவாசத்தை அறிக்கையிடுவதற்காகவும் கிறிஸ்துவின் நற்செய்தியை ஏனையோர்க்கு அறிவித்தலுக்காகவும் மரணத்தைப் பரிசாக ஏற்றுக் கொண்டமை ஆகியவை மேற்கூறிய கொலை முயற்சிகளிலிருந்து முற்றும் வேறுபட்டவையாகும். இந்த நூற்றாண்டின் அண்மைக்கால புனிதர் மக்சிமஸ் கொள்பே உன்னதமான இறையன்பு - பிறரன்பு என்பவற்றுக்காகத் தம்மைக் கையளித்தமையும் அதன் இயல்பில் மேற்கூறியவற்றிலிருந்து முற்றும் வேறுபட்டதும் திருச்சபையாற் போற்றப்படுவதுமான சம்பவமாகும். எப்படியிருப்பினும் உயிர்க்கொலை சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபாடுடையவர்களது மனத்தூய்மை இறைவன் முன்னிலையில் எவ்வாறு தீர்ப்பிடப்படுகின்றது என்பதை மனிதராகிய நாம் அறுதியிட்டுக் கூறமுடியாது என்பதும் கருத்திற் கொள்ள வேண்டியதாகும்.

முடிவாக, இக்காலத்தில் மனித உயிர்கள் அவற்றின் பெறுமதி மதிக்கப்படாத வகையில் உரிமை மீறிப் பல மட்டங்களிலும் அழிக்கப்படுதல் நீதிக்கு முரணானவையாக இருக்கின்றன.

20.01.1984

**********

## விடுதலை மனம்

மக்களை உணர்ச்சி வசப்படுத்துவதன் மூலம் தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக்கொள்ளத் துணிந்து செயற்படுகின்றனர் தலைவர்கள். தலைவர்களின் பேச்சுக்களே தெய்வ வாக்கு எனக்கொண்டு கண்மூடித்தனமான போராட்டங்களுக்குத் தங்களையும், தம்மை நம்பி இருப்போரையும் பலிகொடுக்கும் இளைஞர்கள், தமது சிந்தனையை தமக்கேயுரிய நிலையில் சிந்திக்கப் பழக வேண்டும். அங்கேதான் உண்மையான சுதந்திரம் உதிக்கின்றது.

சுதந்திரம் என்பது ஒருமுறை வாங்கியபின் என்றுமே நிலைக்கும் ஒரு பொருள் அன்று. அது இலவசமானதுமன்று.

ஒவ்வொரு நாளும் அதற்காகப் பாடுபடவேண்டும்: அதை வளர்க்க வேண்டும்: சமுதாயத்தின் எல்லாத்துறைகளையும் அது ஊடுருவவேண்டும்: எல்லா மக்களையும் அது அரவணைக்க வேண்டும்; இதற்காக எல்லாத் தலைவர்களும் எல்லாப் பிரஜைகளும் செயற்பட வேண்டும்

8.02.1980

*பல்வேறுவிதமான அட்டகாசங்கள் சமுதாயத்தில் முளைத்தெழுந்தபோது ...*

# தற்கொலை முயற்சியினை நிறுத்துவோம்

வங்கியிலே நாம் ஈடுவைத்த நகைகளும் சேமித்த பணமும் கொள்ளையடிக்கப்படுகின்றன. தபாற்கந்தோரில் வந்திருக்கும் எமது முதியவர்களின் ஓய்வூதியப் பணம் சூறையாடப்படுகிறது. நாம் போக்குவரவு செய்யும் பேருந்து வண்டிகளும் புகையிரதமும் தீயிட்டுக் கொளுத்தப்படுகின்றன. கூட்டுறவுக் கடைகளில் ஏழை மக்களின் உணவு முத்திரைக்குரிய பங்கீட்டு உணவுப் பொருள்களும் பணமும் வன்முறையாகப் பறிக்கப்படுகின்றன. நெற்றி வியர்வை நிலத்திற் சிந்திப் பாடுபட்டுழைத்துத் தேடிவைத்த பணமும் நகைகளும் வீட்டில் இரவோடிரவாக அழுகைக் குரலுக்கு மத்தியில் ஆயுதமுனையிற் கொள்ளையடிக்கப்படுகின்றன, கற்பழிப்பும் கொலைகளும் நடக்கின்றன.

தினமும் இரவும் பகலும் தமிழ் மக்கள் வாழும் பகுதியெல்லாம் இதே நிகழ்ச்சிகள் தொடர்கதையாக நடைபெறுகின்றன. பத்திரிகைகள் களவு கொள்ளைச் செய்திகளால் நிறைந்து காணப்படுகின்றன. பாரம்பரியமான பண்பாடுகளுடன் வாழும் தமிழ் மக்கள் வாழும் பூமியிலேதான் நாம் வாழுகின்றோமா அல்லது கற்பனைக் கதைகளில் வாழும் நரமாமிச பட்சணிகளான கொள்ளைக் கூட்டத்தார் வாழும் தீவாந்திரம் ஒன்றில் இறங்கியுள்ளோமா என்று திகைக்க வேண்டியுள்ளது.

ஆயுதப்படையினரின் அத்துமீறிய அட்டகாசம் ஒருபுறம். அப்பாவி மக்களை அடித்து நொருக்கி அவர்கள் வீரசாகசம் புரிகிறார்கள். நம்முடைய வீதியிலும் போக்குவரவுச் சாதனங்ளிலும் வலம்வந்து, நமக்குள்ளேயே கலந்து வாழும் "இனம் தெரியாத வாலிபர்கள்" என்று சொல்லப்படும் கூட்டங்களால் அவர்களது உடன்பிறப்புக்களாகிய தமிழ் மக்கள் படும் பயங்கர அவஸ்தைகள் மறுபுறம்....

வேளாண்மையும் தோட்டமும் பலன் தரும் என்று நம்பி முதலீடு செய்யப் பணம் போதாமல், வங்கியில் அடைவுவைத்த நகைகள் கொள்ளை போய்விட்டன. பருவம் தப்பிய பெருமழை - வெள்ளத்தால் விளைச்சலும் வீடு வந்து சேராமல் அழிந்துவிட்டது. இன்னல் விளைவிக்கும் நம்மவரின் இரக்கமற்ற கொடுமைகளுக்கும் எதிர்நிற்க முடியாமற் கண்ணீரிற் கரைந்து போகிறார்கள்.

"இனம் தெரியாதவர்கள்" என்று குறிப்பிடப்படுபவர்கள் தமிழ் மக்களின் பொருளாதார அத்திவாரத்தையே ஆட்டம்காண வைக்கிறார்கள். பல்வேறு நோக்கம் கொண்ட இக் குழுக்கள், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாக எத்தனையோ அரசியல் - பொருளாதாரத் துன்பங்களுக்குட் சிக்குண்டு மீள வழிகாணாது அல்லலுறும் தமிழ்மக்களை அடியோடு சிதைத்துவிட முயற்சிக்கிறார்கள். தான் இருக்கும் கொப்பைத் தானே தறிக்கும் செயல் இது. தாமும் அழிந்து இனத்தையும் அழித்துவிடத் தற்கொலை முயற்சி செய்கிறார்கள்.

கல்வி, தொழில்வாய்ப்பு, போக்குவரவு, தபால் - தந்திச்சேவை என்பவற்றுடன் தன்மானத்தையும் இழந்து அடிமை வாழ்வுக்குத் தள்ளப்பட்டிருக்கும் தமிழினம், நிரந்தர அடிமைகளாகவும் பாமரர்களாகவும் ஏழைகளாகவும், பண்பாடு - நாகரிகம் அற்றவர்களாகவும் சிதைந்து போவதற்கு மேற்கூறிய தற்கொலை முயற்சிகள் வழி வகுக்கின்றன. இரவும் பகலும் நம்மவர்க்கே நாம் பயந்துகொண்டு வாழுகையில் உருப்படியான எதனை நம்மாற் சாதிக்க முடியும்?

மேலும், வன்செயலுக்கு வன்செயல் மருந்தாகாது என்பதனைப் பலரும் வற்புறுத்தியுள்ளனர். வரலாறு அனுபவங்கள் பல கூறும். இதே பந்திகளில் நாமும் இக் கருத்தைப் பல தடைவைகள் குறிப்பிட்டுள்ளோம்.

நமக்குத் தீர்வுகாணப்படவேண்டிய பிரச்சினைகள் பல உள. கடந்த கால வரலாறு பல கசப்பான தோல்விகளை நமக்குத் தந்துள்ளது. பேச்சுவார்த்தைகள் பலன் தராமல் ஏமாற்றத்தில் முடிந்துள்ளன. உடல் பொருள் - ஆவி அனைத்து வழிகளிலும் பாரிய இழப்புக்களுக்குள்ளானோம். எப்படியிருப்பினும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குப் பேச்சுவார்த்தைகளே மீண்டும் வழியாகும் என்பதை நாம் விரக்தியினால் மறுத்தலும் தவறாகும்.

பொதுமக்களின் ஆதரவை விரைவாக இழக்கச் செய்யும் இனத் தற்கொலை முயற்சிகளை முதலில் நிறுத்துவோம். மீண்டும் தலைமைத்துவம் உள்ள இனமாக ஒன்றிணைந்து முன்னேறிச் செல்ல முடிவு செய்வோம்.

2.03.1984

***************

# தேசிய பந்தோபஸ்து

ஜனநாயக ஆட்சி செய்கிறோம் என்று ஊருக்கும் உலகுக்கும் பிரசாரம் செய்துகொண்டு, அதேவேளையில் தம்மை ஆட்சி பீடத்தில் ஏற்றி வைத்த பெரும்பான்மை மக்களின் ஆசைகளை எப்படியாவது நிறைவேற்றி வைத்து, அடுத்த முறையும் ஆட்சியைக் கைப்பற்றுவதிலேயே குறியாக இருக்கும் ஆட்சியாளர்களை உலகு பெருமளவில் அன்றும் இன்றும் கண்டிருக்கிறது. சொந்த மக்களுடைய விபரீத ஆசைகளைக்கூட மற்றவர்களுடைய அடிப்படை உரிமைகள், தேவைகள் யாவற்றினும் மேலாக வைத்துக் கருமம் பார்க்கும் இந்த ஜனநாயக ஆட்சியாளர் வியாக்கியானம் கூறுவதில் வல்லவர்களாகவே இருந்து வந்துள்ளனர். வரலாற்று - பாரம்பரிய - மரபு - கலாசார - மத - மொழிப் பெருமைகளை ஆதாரம் காட்டி அப்பாவி மக்களைத் திசைதிருப்புவதில் இவர்கள் எப்போதும் வல்லவர்களாகவே இருந்துவந்துள்ளனர்.

மேற்கூறியவற்றோடு இந்த நாட்டிலே மக்களைத் திசை திருப்பித் தமக்குச் சாதகமாக எல்லா விடயங்களையும் அமைத்துக்கொள்ள 'வடக்கு- கிழக்கு பயங்கரவாதம்' எனப்படும் ஒன்றுள்ளது. அரசியல் பொருளாதார முட்டுப்பாடுகள் யாவற்றையும் மக்களிடமிருந்து மறைத்துவிட்டு ஆட்சியைத் தொடர்ந்து நடத்துவதற்கு 'அனுமதி' யைப் பெற்றுக் கொள்ள இந்தப் 'பயங்கரவாதம்' என்பது வாய்ப்பான விடயமாக இருப்பதனை மக்களிற் பெரும்பான்மையோர் சிந்திப்பதில்லை, வரலாற்றிலே எந்த நாட்டில் எந்தக்காலத்தில் உரிமைப்போராட்டத்துக்குப் "பயங்கரவாதம்" அல்லது "இராசத்துரோகம்" என்றும், போராளிகளுக்கு "பயங்கரவாதிகள்" அல்லது "அரசுத்துரோகிகள்" என்றும் நாமம் சூட்டப்படவில்லை?

"உரிமைப்போராட்டத்தை ஆட்சிப்பலத்தால், ஆயுத பலத்தால் அடக்கமுடியாது" என்பதற்கு வரலாற்றிற் சான்றுகள் பற்பல உண்டு என்பதை நன்கு அறிந்திருப்பவர்களே தமது கையில் ஆட்சிப் பொறுப்புக் கிடைத்தவுடன் படித்த - அனுபவித்த சரித்திரத்தை மறந்து செயற்படுவது விந்தையே. எதிர்க்கட்சிக்காரர் ஆட்சியிலிருந்தபோது தமக்கிழைத்த சிறு அவமானங்களைக்கூட மாபெரும் மனித மாண்பின் இழப்பாகக் கருதிக்காத்திருந்து கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது எப்படி? "அறநிரம்பிய அருளுடை அருந்தவற்கேனும் பெறலருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்" என்ற கம்பராமாயாண வரிகள் நினைவுக்கு வருகின்றன.

"சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம்" எங்கே? அமெரிக்காவின் வால், வியட்நாமில் நறுக்கப்படவில்லையா? லெபனானில் இருந்து கடை கட்டிக்கொண்டு புறப்பட்டுப் போகிறவர்கள் ஆயுதபலம் இல்லாதவர்களல்லவே!

அதிகாரத்தில் உள்ளவர்கள் சமுகத் தொடர்புச்சாதனங்களைத் தம் இஷ்டப்படியே பயன்படுத்தி, மாற்றுக் கருத்துடையவர்களை மண் கௌவச் செய்யலாம் என்று மனப்பால் குடிப்பதும் பழைய கதைதான். உண்மைக்கு முழுவதும் மாறான செய்திகளையும், அரைகுறை உண்மைகளையும் திரும்பத் திரும்ப அறிக்கை யிடுவதால் மக்கள் மனதிலே பதித்து விடலாம் - நீண்ட நிரந்தரமான பயன் கிடைக்கச் செய்யலாம் எனக் கருதுவது வரலாற்றிலே தோல்விகண்டவர்கள் கடைப்பிடித்த வழிகள் என்பதை உலகம் அறியும். பெற்ற தாய்க்கும் தந்தைக்கும் சமமான முது வயதுள்ள மனிதர்களை அழ அழ அக்கிரமம் பண்ணுவதும் அவர்களைப் "பயங்கரவாதிகள்" என்று தொடர்புச் சாதனங்கள் மூலம் உத்தியோகபூர்வ அறிக்கை விடுவதும், உண்மை - அகிம்சை - சாத்வீகம் என்பவற்றைக் கடைப்பிடிக்கும் தர்ம ஆட்சியாளர்களின் வழி முறைகள் தாம் என்று ஒருவரும் ஒப்புக்கொள்ளமாட்டார். ஒருபக்கம் சார்ந்த உண்மைக்கு மாறன செய்திகள் உளவியல் ரீதியான வெறுப்பையும் அவநம்பிக்கையையும் வளர்த்துக்கொண்டு போகுமேயன்றிச் சமாதானச் சகவாழ்வுக்கு வழிவகுக்குமா?

"பயங்கரவாதத் தடைச் சட்டம்", "தேசீய பந்தோபஸ்து" முதலிய என்ன பெயரின் கீழும் எந்த முளைசாலியினாலும் புரியப்படும் அடக்கு முறை அநியாயச் செயல்கள் தமக்கும் பிறர்க்கும் நிரந்தர சமாதானத்தைத் தரமாட்டா. எதிராளியை "முறியடிப்பது எப்படி?" என்று ஆணவத்தோடு சிந்திக்காமல், "இவன் ஏன் எதிராளியானான்?" என்று எண்ணிப் பார்த்து அடிப்படைப் பரிகாரம் காணுவதே நிலையான பயன் தரும்.

30.03.1984

**********

## எங்கே போகிறோம் ?

பிரயாணம் செய்கிறவன் அறிவையும் கண்ணையும் காதையும் நன்கு உபயோகித்து ஓர் இலக்கை நோக்கிப் போவான். கண்மூடித்தனமாகச் சிந்தனையின்றி ஓர் இலக்கும் இல்லாமற் போகிறவன் படுகுழியில் வீழ்வான். தனி ஒருவனாக அன்றி ஒரு கூட்டத்தாரை அழைத்துச் செல்லுகிறவனுக்கு ஆயிரம் மடங்கு அவதானம் தேவை. ஏனென்றால், அவன் தன்னோடு தன்னைச் சேர்ந்தவர்களுடைய ஆக்கத்துக்கும் அழிவுக்கும் உத்தரவாதம் உடையவன்

இந்த நாட்டிலே பெரும்பான்மை இன மக்களுக்கு அரசியல்வாதிகளாற் சுயநலப் போதை இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே ஏற்றப்பட்டுவிட்டது. மொழி, கல்வி, வேலை வாய்ப்பு, பிரதேச ஆதிக்கம் என்று அந்தப் போதை தலைக்கேறி, கடந்த பல ஆண்டுகளாக அது பலாத்காரம் பண்ணிப் பலப்பிரயோகம் செய்து ஆதிக்கத்தை நிலைநாட்டுதல் என்று முற்றிவிட்டது. போதையேற்றித் திறந்துவிட்ட சிங்கத்தைத் திரும்பவும் கூண்டுக்குள்ளே கொண்டுவர நல்ல அரசியல் மந்திரவாதிகளால் முடியவில்லை. அரசியற் கட்சிகளாகப் பிரிந்து நிற்கும் நிலையில், ஆதிக்கப்போதை ஏற்றப்பட்ட வாக்காளராகிய பொதுமக்களை வழிப்படுத்தும் சக்தியற்றவர்களாக அரசியல் இலாபந் தேடி நிற்கும் கட்சி அரசியல்வாதிகள் ஒருவர் ஒருவர்மேற் பழி போடுவதிற் கண்ணாக இருக்கிறார்கள். அடுத்த தேர்தலையும், ஆட்சியைக் கைப்பற்றுவதையுமே கருத்தாகக் கொண்டுள்ள அந்த அரசியல்வாதிகள், ஒரு கட்சியார் ஆட்சியிலிருக்கும்போது சிறுபான்மை மக்களின் நிலவுரிமைகளுக்காக ஏதாவது நல்லது செய்ய முற்பட்டால் குடி முழுகிப்போவதாகக் கோஷமெழுப்பி முதல்தர தேசாபிமானிகளாக வேஷம் போட்டுக் கலகம் மூட்டிக் குழப்பி விடுவார்கள். பழிவாங்கும் நோக்கத்துடன் காத்திருந்து தங்களுடைய முறை வரும்போது இன்னும் அதிகமாகவே செய்து காட்டுவார்கள். முடிவாகச் சிறுபான்மை இன மக்களுடைய இறைமையும் சுதந்திரமமும் பிற நலவுரிமைகளும் படிப்படியாக மேலும் மேலும் பறிக்கப்பட்டுக் கொண்டே போய்விட்டன. சிறுபான்மை மக்களை இப்படியே குட்டிச்சுவராக்கி, வாக்களிக்கும் தங்கள் சொந்த இன மக்களிடம் செல்வாக்குத் தேடிக்கொள்வதில் 'ஜனநாயக பாரம்பரியம் நிறைவேற்றப்படுவதாக உலகுக்குத் தம்பட்டம் அடிப்பார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் ஏதாவது பேச-

செய்ய முற்பட்டால் இனத்துவேஷ விஷத்தை விவேகமாகக் கொட்டுவார்கள். சம்பந்தப்பட்ட மக்கள் மேல் 'தேசத்துரோக-பயங்கரவாதக்' குற்றம் சுமத்துவார்கள். இந்த வகையிற்றான் 'சர்வகட்சி மகாநாடு' என்ற ஒரு நாடகம் அரங்கேற்றப்பட்டு முடிவுக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. வாய்பாடு ஒன்றுதான். அவர்கள் எங்கே போகிறார்கள் - மக்களை எங்கே அழைத்துப் போகிறார்கள்? ஹிட்லர் பக்கிங்காம் மாளிகையிலே வெற்றி விழாக் கொண்டாடத்தான் பாரிய திட்டம் போட்டு வேலை செய்தான். முடிவு? ஜெர்மனி நிரந்தரமாக இரண்டுபட்டுப்போனது.

சிறுபான்மை மக்களின் அரசியற்றலைவர்கள் எங்கே போகிறார்கள்? "தமிழனென்று சொல்லடா-தலை நிமிர்ந்து நில்லடா" என்று 1947 இல் கோஷமெழுப்பி மக்களைக் கிண்டிவிட்டவர்கள் மிக விரைவிலேயே தம்முட் பிளவுண்டு அழிவுப்பாதையை நோக்கித் திரும்பிவிட்டார்கள். 1947-1977 காலம் வரை பாராளமன்றம் போவதற்கு எத்தனை எத்தனை வித்தைகளைக் கையாண்டார்கள். அவர்களுக்குத்தான் பாரளுமன்றத்திலும் வெளியிலும் எத்தனை கழுத்தறுப்புக்கள்! கடந்த 8-10 வருடங்களில் தீவிரவாதிகளுடைய கை படிப்படியாக ஓங்கி வந்தது. பாராளுமன்றம் செல்லாத தலைவர்கள் மற்றொருபுறம். குருடர் குருடருக்கு வழிகாட்டுவதாகச் சிறுபான்மை மக்களுடைய தலைவிதி அமைந்துவிட்டது. இப்போது நாள்தோறும் பத்திரிகைகளைப் புரட்டினால் 'மரணதண்டனை', கொலை, கொள்ளை, களவு என்று தன்னின அழிப்பு முழு வேகத்தில் நடைபெறுகின்து. அ∴து அரசியல், பொருளாதாரம், கல்வி, பண்பாடு, கலாசாரம் முதலிய அனைத்துக்குமே சாவுமணி அடித்துக் கொண்டிருக்கிறது. "ஒரு நாளைக்குச் சாப்பிடாமல் இருக்கவும், தமிழர் தலைவர்களுக்கு அவர்கள் மக்களிடம் செல்வாக்கு இல்லை" என்று ஆட்சி அதிகாரத்திலிருப்போர் கேலிபண்ணும் அளவுக்கு நிலைமை சீர்குலைந்துவிட்டது. துப்பாக்கியின் பலத்தினால் மட்டும் சுபீட்சம் காண விழைந்து நிற்பவர்கள் பொதுமக்களின் அபிமானத்தை இழந்து போவதைப்பற்றி அக்கறை கொள்ளுவதாகவோ, தம்முட் பிளவுபட்டு நிற்பதைப்பற்றி வெட்கப்படுகிறவர்களாகவோ தெரியவில்லை. இவர்கள் எல்லோரும் குறிப்பாகத் தமிழினத்தைக் கண்ணைக்கட்டி எங்கே கொண்டு போகிறார்கள்? விலைவாசி ஏற்றத்தினாற் பொதுமக்களும் அன்றாட வயிற்றுப் பிரச்சினையில் கரிசனை கொள்கிறார்களேயன்றி எதிர்காலம் பற்றி அவர்களுக்குச் சிந்தனை இல்லை எனலாம். அழியாத உண்மை ஒன்றுண்டு: ஓரணியில் " ஒன்றுபட்டாலே உண்டு வாழ்வு"

3.08.1984

**********

# ஆளுக்கொரு நீதி

"தனக்கொரு நீதி பிறருக்கொரு நீதி" என்பார்கள். என்னுடைய பிள்ளை செய்யும் தவறுக்குப் பெயர் "செல்லம் - அறியாத்தனம்" ஆகும். அதே தவறை மற்றவனுடைய பிள்ளை செய்தால் அதற்கு வேறு கடுமையான சொற்கள் உள; தண்டிக்கவும் மனம் பொங்கி எழும்.

"மாணவர்களுடைய அமைதியின்மைக்கு முழுதும் அவர்கள் பொறுப்புள்ளவர்களல்லர். நமக்கும் அதிலே பங்குண்டு. ஆகையால் அதன் காரணிகளைக் கண்டறிந்து மாற்று வழிகளைக் கையாளவேண்டும்": ஆட்சிப்பொறுப்பிலுள்ள சிரேட்ட உறுப்பினர் ஒருவர் அறிக்கையிட்டதாக அரசாங்கத் தொடர்புச் சாதனங்கள் வெளியிட்ட கூற்று இது. பேராதனை, கொழும்பு பல்கலைக் கழகங்களில் அண்மையில் இடம்பெறற் குழப்பங்களையடுத்துத் தென்பகுதி மாணவர்களிடையே உண்டான அமைதியின்மையைக் கருத்திற் கொண்டு மேற்படி கூற்று வெளியிடப்பட்டிருக்கலாம். மேற்கூறிய சம்பவம்பற்றிப் பாராளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் எத்தனை வாதங்கள்! விசாரணைகள்!! அறிக்கைகள்!!! அவை இன்னும் முடியவில்லை. ஏனென்றால் விலைமதிக்கரிய இளம் உயிர்கள் அங்கே பலியாகியுள்ளன.

வடக்கு-கிழக்குப் பகுதியில் அமைதியின்மையினதும் விரக்தியினதும் எல்லைக்குத் தள்ளப்பட்ட சிறுபான்மை இன இளைஞர்களும் மாணவர்களும் ஏன் இக்கதிக்குள்ளானார்கள் என்று மூல காரணங்களை விருப்பு - வெறுப்பின்றி அலசிப்பார்த்து, அதில் நம்முடையவும் நம் முன்னோடிகளுடையவும் பங்கு என்ன என்று ஆராய்ந்து பார்ப்பதற்குச் சம்பந்தப்பட்டவர்களுக்கு மனப்பக்குவம் இல்லைப் போலும். கடந்த 40-50 வருடங்களுக்கு மேலாக 'அரசியல் தீர்வு' காண முடியாதவர்களாகிப் போய்விட்டவர்கள், இப்போது அனைத்துக் கட்சிகளின் வட்டமேசை மாநாடு கூட்டி அரசியல் தீர்வு காணப்போகிறோம் என்று பற்பல மாற்று முறைகளை முன்வைத்துக் காலம்போக்குகிறவர்கள், 'இராணுவத் தீர்வையே' நடைமுறைக் காரியமாக்கி நிலைமையை மேன்மேலும் சிக்கலாக்குகிறார்கள்" என்று சிறுபான்மை இன மக்கள் ஏகோபித்து சொல்லுவதற்கு இடம்வைத்துவிட்டார்கள்.

"பொலிசாரினாலும் ஆயுதப்படையினராலும் அநியாயமாக அழிக்கப்படும் தமிழ்ப் பேசும் மக்களின் உயிர்களும் பொருள்களும்

அற்பமானவை என்பதுதான் அவர்கள் கணிப்பு'' என்று பிள்ளைகள் தொடக்கம் பெரியவர்கள்வரை ஒரே குரலிற் சொல்லும்படியாக முன்னேறிப்போய்விட்டார்கள். சென்றவாரம் யாழ்நகரில் நடைபெற்ற ''தாய்மார்கள் மௌன ஊர்வல'' த்தைக் கண்டு கண்ணீர்விட்ட எந்தத் தமிழ் உள்ளமும் ஒரே முடிவுக்குத்தான் தள்ளப்படும். ''தீவிரவாதிக''ளுடைய கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் அடியோடு ஒப்புக்கொள்ளாத உள்ளங்களும்கூட மெல்ல மெல்ல அந்தப் பக்கம் சாய்ந்துபோகச் செய்கிறார்கள்.

எத்தனையோ பேர் கண்காண இடம்பெற்ற அக்கிரமச் செயல்களை எப்படித்தான் உருமாற்றி எத்தனை விதமாகப் பிரசாரம் பண்ணினாலும் அது தமிழ் உள்ளங்களை மேலும் எதிர்ப்புறம் தள்ளவே உதவுவதாகும். 'அரசு பதில் நடவடிக்கை எடுத்தே ஆகும்' என்று என்ன உள் நோக்கத்தோடு கூறினாலும் அஃது அக்கிரமச் செயல்களை நியாயப்படுத்துவதாக அமையப் போவதில்லை. எதிரி மனப்பான்மையோடு இயற்றப்பட்ட அநியாயச் சட்டங்களைத் துணைக் கொண்டு தெருக் கோடியில் விசர் நாய்களுக்குச் செய்வது போன்ற செயல்களை உலகு ஒப்புக் கொள்ளும் 'சட்டவரம்புக்குட்பட்ட செயல்' ஆக்க முடியுமா? சகாக்களுக்கு நேர்ந்த இழப்பைக் கண்டு நிதானத்தை இழந்து வெறியாட்டம் போடப்படும் செயல்களும் சட்ட வரம்புக்குட்பட்டவையாக முடியுமா? இவைகளைப் பற்றிக் காய்தல் - உவத்தல் இன்றிச் சிந்தித்துப் பார்ப்பவர்கள், நீதி விசாரணை செய்பவர்கள் இல்லாதவிடத்துத் தமிழ் உள்ளங்கள் விரைவாக ஒரு பக்கம் சாய மாட்டாவா? தீவிரவாதிகள்- பயங்கரவாதிகள் சட்டத்தை மீறுகிறார்கள் என்று சொல்லுகிறவர்கள் அதைவிட மோசமான பதில் நடவடிக்கையில் இறங்கினால் அவர்களுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசத்தை வெளி உலகம் காணப்போகிறது!

தெரியாமல் தவறு செய்கிறவர்களுக்குத் தெரிய வைத்தால் திருந்தி விடுவார்கள். அறிதுயில் கொள்ளுகிறவர்களை விழிப்படையச் செய்வது கடினம். எதிர்வரும் தேர்தலில் வெற்றியையும், பதவி வகித்தலையும் மாத்திரமே இலட்சியமாகக் கொண்டு, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் 'ஜனநாயகம்' ஆகாது. 'ஜனநாயக அரசியல் வாதிகள்' மக்களுடைய அபிலாசைகளை நிவைவேற்ற முயற்சிக்க வேண்டுமே தவிர, வாக்காளருடைய விபரீதமான பேராசைகளை நிறைவேற்றுதல் நீதி ஆகாது. தவறான பேராசையுடையவாகளாக ஆக்கப்பட்ட வாக்காளர் கூட்டத்தைப் பதவி பறிபோனாலும் பாதைக்குக் கொண்டு வருவதற்குத் துணிவுடன்

நடவடிக்கை மேற்கொள்ளக் கூடிய 'தேசத் தலைவர்கள்' யாருமே இல்லையா?

31.08.1984

**********

## "பனையால் விழுந்தவனை..."

காலையில், தினசரியைக் கையிலெடுத்தால் துப்பாக்கி முனையிலே களவு, கொள்ளை, வழிப்பறி, கொலை ('மரணதண்டனை'), நாச வேலைகள், குண்டு வெடிப்பு முதலிய பல்வேறு வகையான அவலச் செய்திகளால் மனம் புண்ணாகின்றது. நாள் முழுவதும், கடமைகளின் இடையிலும் புதிய புதிய கொலைப் புதினங்கள்; இரவு நித்திரைக்குப் போகும்போதும் 'இவ்விரவு என்னென்ன நடக்குமோ?' என்ற மன ஏக்கத்துடன் மக்கள் துயில்கின்றனர். இளம் பிள்ளைகளும் கர்ப்பிணிகளும் வயோதிபரும் வியாதிக் காரரும் மற்றெவரும் இதற்கு விலக்கானவரல்லர். எதிர்காலச் சந்ததியின் உளப்பாங்கு எப்படியாக உருவாகிவரும் என்பதனைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மறுபக்கத்தில் இந்தக் கொள்ளைக்காரர்கள் வழி தெருக்களிலும் ஸ்தாபனங்களுக்குள்ளே புகுந்தும் யாருடைய சொத்தைக் கொள்ளையடிக்கிறார்கள்? தமிழ் மக்களுடைய அடிப்படையான தேவைகளைப் பூர்த்தி செய்யவும், தமிழ் மக்களில் நூற்றுக்கணக்கானோர் வேலைவாய்ப்புப் பெற்று வாழ்க்கை நடத்தவும், இத்தகைய இன்னும் பல நல் நோக்கங்களுக்காகவும், பொதுநல மனப்பாங்கும் தூரநோக்குடைய நம் சான்றோர்களால் அடியிட்டு வளர்த்து வைக்கப்பெற்ற நமது சொந்தச் சொத்துக்களையே கொள்ளையடிக்கிறார்கள்!

'யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சங்க'த்தினர் கடந்த அண்மைக் காலத்தில் எத்தனை வித இழப்புக்களுக்குள்ளானார்கள் என்பதைத் தமிழ் மக்கள் அறிவார்கள். மேலும், இழப்புக்களுக்கு ஈடுகொடுக்க இயலாத நிலையில் அவர்கள் பகிரங்க வேண்டுகோள் விடுத்து அரை நாள் வெளிநடப்புச் செய்து மறியற் போராட்டம் நடத்தியமையின் கருத்தை நம்மவர்கள் உணருகிறார்களா? தமிழ் மக்களின் எதிர்கால நலன் கருதித், தமிழ் மண்ணிற் புதிதாக ஸ்தாபனம் பெற்று வளர்ச்சி பெற முயன்று வரும் தொழில் ஸ்தாபனங்களையும் ஆரம்பக்கட்டத்திலேயே அழித்துவிட இவர்கள்

தயக்கம் காட்டவில்லை. மாதம் முழுவதும் பாடுபட்டுழைத்த தொழிலாளர்களுக்குத் தீபாவளிப் பண்டிகைத் தருணத்தில் வழங்குவதற்குக் கொண்டுவந்து வைத்திருந்த சம்பளப் பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டோடிப் போகிறவர்கள் தங்கள் அக்கிரமத் தனத்தைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

சிலரின் சில நாட் சுகபோக வாழ்வுக்காக நிலையான நலன்தரும் செல்வங்களை நாசம் செய்வது பெரும் மூடத்தனமாகும். பழம் தரும் மரத்தை வேரோடு வெட்டிச் சாய்க்கும் செயலும், நன்னீர் தரும் பொதுக் கிணற்றை இடித்துத் தூர்க்கும் முயற்சியும் எவரும் ஒப்புக்கொள்ளும் செயல்களாகா.

கடினமாக உழைத்து, வாயை - வயிற்றைக் கட்டிச் சிக்கனம் பண்ணி, அணு அணுவாகச் சேமித்து, தாம் பெற்ற பெண்பிள்ளைச் செல்வங்களை வாழவைக்க உதவுமென்று தமிழ் மக்கள் தம் மரபுக்கேற்பச் சேர்த்து வைத்துள்ள இரத்த வியர்வையின் சேமிப்புக்களை சில நிமிட நேரத்தில் வன்முறையினால் கொள்ளையடித்துக் கொண்டு போகிறவர்கள் தாம் அதனைக்கொண்டு வாழலாம் என்று கருதுகிறார்களா?

"பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த" கதையாக, இனக் கலவரங்களிற் சிக்கிச் சொல்லொண்ணத் துன்பங்களுக்கும், இழப்புக்களுக்கும் உள்ளாகி நிற்கும் தமிழர்களை, இலகுவாகச் சுகபோகம் அனுபவக்கவும், தமது ஆசைகளை நிறைவேற்றவும் கருதும் நம்மவர்கள், மேலும் அழித்துத் தமிழ் மண்ணைச் சாம்பர் மேடாக்குவது எந்த வகையிலும் சகிக்க முடியாத அக்கிரமம் ஆகும்.

26.10.1984

**********

## சட்டத்தை மதிப்போம்

...பல வழிகளிலும் நம்மைச் சிதைத்தது நமது அழிவில் 'ஒற்றுமை' காணக் கங்கணம் கட்டி நிற்கும் வெளிப்பகைவர் விழிப்புடனும் கட்டுப்பாட்டுடனும் வாழக் கற்றுக் கொண்டுள்ள இவ்வேளையில், நாம் விழிகண் குருடரைப்போல நம்மை நாமே அழித்துக்கொண்டும், ஒழுங்கு - சட்டமுறைகளை மீறியும் நடத்தல் எவ்வளவு பேதைமை! இந்தப் போக்கு நம்மை முழுதாக அடிமைகொள்ள முனைந்து நிற்பவர்களுக்கு நாமும் உடந்தையாக நின்று செயற்படுவதாக இருக்கிறதென்று உலகம் கண்டு நம்மை ஏளனம் செய்ய வழியாகிறது.

11.04.1986

# வடக்கும் கிழக்கும் வனாந்தரமாகின்றன

ஓராண்டுக்குள்ளே பத்து இலட்சம் வீடுகள் கட்டிப் பாமர மக்களுக்கு வழங்கும் இலக்குடன் அங்கே தெற்கிற் செயற்படுகிறார்கள்- ஆனால், இங்கே வடக்கிலும் கிழக்கிலும, இருக்கிற வீடுகளையே குண்டு வைத்துத் தகர்க்கிறார்கள்; எரிக்கிறார்கள்.

அங்கே புதிய வீதிகளும் பாலங்களும் நிருமாணிக்கிறார்கள்; இங்கே வீதிகள் குண்டும் குழியமாகக் கிண்டிவிடப்படுகின்றன: பாலங்கள் மதகுகள் குண்டுவைத்து உடைக்கப்படுகின்றன.

அங்கே பாடசாலைகள், தபாலகங்கள், நூலகங்கள் புதிது புதிதாகக் கட்டிக் கொடுக்கிறார்கள்; இங்கே இருக்கிற பள்ளிக்கூடங்களை உடைக்கிறார்கள், நூலகங்களைக் கொளுத்தி எரிக்கிறார்கள்.

அங்கே காடு திருத்திக் கழனியாக்கி நெல்லுற்பத்தி செய்கிறார்கள். இங்கே பறித்தெடுக்காமல் மிச்சமாக விட்ட பரம்பரைக் காணிகளிலே வயல்களிலே விளைந்த பயிரை வெட்டியெடுக்கப் போனாற் சுட்டுத் தள்ளுகிறார்கள்.

அங்கே மானிய விலையிலே மோட்டார் வள்ளங்களும் வலைகளும் கொடுத்துத் துறைகள் கட்டிக் கடற்றொழிலாளரைக் கண்ணென வளர்த்தெடுக்கிறார்கள்; இங்கே கடலிலே இறங்கக் கூடாதெனத் துப்பாக்கி முனையிற் கண்டனம் பண்ணி மீனவர்களைப் பிச்சைக்காரர்களாக்கி உணவு முத்திரை வழங்குகிறார்கள். மீனவர் வள்ளங்கள் 'பயங்கரவாதிக'ளுடையவையெனச் சொல்லி அழிக்கப்படுகின்றன.

அங்கே தோட்டப்பயிர்ச் செய்கையாளர்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கி 'ஏற்றுமதிக் கிராமங்கள்' சிருட்டிக்கப்படுகின்றன. இங்கே தோட்டக்காரர்கள் தோட்டந்துரவுகளில் மட்டுமல்லாமல் சந்தை சாவடிகளிலும் வேட்டையாடப்படுகின்றார்கள்.

அங்கே வரண்ட பிரதேசங்களுக்கு ஒன்றன் பின்னொன்றாக நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. குழாய்க்கிணறுகள் குடிநீர்த் திட்டங்கள் திறக்கப்படுகின்றன; இங்கே கிணறுகளில் நஞ்சாம்!

அங்கே அனுதினமும் ஆலயவிழாக்கள், பெரகராக்கள், கலைவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், கூட்டங்கள், கூத்துக்கள் - இங்கே ஆலயங்கள் இடிகரையாகி இருள்மண்டிக் கிடக்கின்றன.

அங்கே, இளைஞர்களும் யுவதிகளும் நாட்டின் விலைமதிப்பற்ற செல்வங்கள். அவர்கள் எதிர்காலத் தலைவர்கள். அத்துடன் தேர்தல்களிலே ஆட்சியாளரைத் தீர்மானிக்கும் வாக்காளர்கள்! அவர்களுக்குக் கேட்டதெல்லாம் செய்தாக வேண்டும்; இங்கே பன்னிரண்டு வயதை எட்டியவர்களெல்லாம் 'பயங்கரவாதி'கள். இவர்களுக்குப் படிப்பில்லை, தொழில் இல்லை, எதிர்காலமில்லை: இவர்கள் ஊரைவிட்டு ஓடவேண்டும்!

அங்கே அவர்கள் மட்டும்தான் இந்நாட்டு உரிமைக் குடிமக்கள் என்பதாக உலகுக்குப் பிரசாரம் பண்ணி, மொழி இனப் பழைமை பெருமை பேசி வரலாறுகளை வசதிப்படி மாற்றிச் சொல்கிறார்கள். இங்கேயுளள்ளவர்கள் பூர்வீகக் குடிகள் அல்லர் என்பதாக இருட்டடிப்புச் செய்கிறார்கள். இங்ஙனம் சாத்தியமான அனைத்து வழிகளிலும் தமிழ்ப் பேசும் மக்களும் வடக்கு-கிழக்குப் பகுதிகளும் அதன் பாரம்பரியப் பெருமைகளும் அழகுகளும் அழிக்கப் படுகின்றன. அதற்கு நாமும் பல வழிகளில் உதவுகிறோம்! சற்று நின்று சிந்திக்க வேண்டும்.

19.04.1985

*******

## சமாதானம

…சமாதானத்துக்கான வழியை அடைவது எப்படி? அதிகார வெறியாலோ, ஆக்கிரமிப்பு வழியாலோ, அடக்கு முறையாலோ சமாதானத்தை நாம் அடைந்துவிட முடியாது. சமாதானத்திற்குச் சகவாழ்வு அவசியம். சகவாழ்விற்கு அன்பும், நட்பும் அவசியம். அன்பும் நட்பும் உள்ள இடத்திற்றான், இறைவனும் இறைவன் கொடுக்கும் சமாதானமும் இருக்கும். அங்கேதான் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவமும் நிலவும். அதனாற்றான் அமரர் ராஜாஜி கூறினார்: அரசியல் தெய்வீகமாக வேண்டும்' என்று. இன்றைய யுகம் ஒரு மனித யுகம்; மானிடத்தின் மகிமை உணரப்படு கின்ற யுகம். இங்கு மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் மனிதன் மனிதனுக்குச் சமாதானத்தை அளிக்க முடியும். 'சமாதானத்தை விட்டுச் செல்கிறேன், என் சமாதானத்தை உங்களுக்கு அளிக்கிறேன்' என்ற இயேசுவின் அருள்வாக்கு நம்இதயங்களில் ஒலிக்கட்டும். உள்ளங்கள் வெல்லப்படும்போது, உலகமும் வெல்லப்படும்….

15.02.1980

# இந்த மக்களையும் நினையுங்கள்

அனுராதபுரத்தில் பொதுமக்கள் மீதும் யாத்திரீகர்கள் மீதும் அக்கிரமமான முறையில் தாக்குதல் நடத்தியதினாலும், இந்நாட்டிற் பழக்கப்பட்டுப்போன அதன் எதிர் விளைவுகளினாலும், நூற்றுக்கணக்கான அப்பாவி மனித உயிர்கள் நாசமாகினவே. 'உணர்ச்சி வசப்பட்டுத் தம்மை மறந்த நிலையில்' ஒழுங்கு கட்டுப்பாடுகள் சட்டதிட்டங்களை மீறி, கேட்பாரில்லை என்ற துணிவில் பதிலடி கொடுக்க முற்பட்டவர்களினால் எண்ணற்ற மனித உயிர்கள் பறிக்கப்பட்டனவே.

நாட்கணக்கிற் கொலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கையில், தொலைதொடர்புச் சாதனங்கள் மூலம் ஒரு தலைப் பட்சமான அதிவேகப் பிரசாரங்கள் உலகறியச் செய்யப்பட்டன. புனித வணக்க ஸ்தலத்திற்றானும் படுகொலைகளைச் செய்யத் துணிந்தவர்களை, திருத்தந்தை உட்பட உலகம் கண்டித்ததாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், அனுராதபுரம் கொலைகாரர்கள் பற்றிய பிரசாரங்களும் அறிக்கைகளும் திடீரென நின்றுபோய்விட்டன. இத்தனை பெரிய சங்கிலித் தொடரான அனர்த்தங்களுக்குக் காரணரான கொலைகாரர்கள் உண்மையாகவே யார் என்பதை உலகமும் குறிப்பாக இந்நாட்டு மக்களும் அறிய உரிமை உடையவர்கள். ஏனெனில், அவர்கள் சிந்திய இரத்தத்தின் விலை அத்துணை பெரியது. அநியாயமாகக் கொலையுண்ட மனித உயிர்களும், அந்த இழப்புக்களினாற் பாதிப்புற்ற குடும்பங்கள் அடைந்துள்ள தாக்கங்களும் மதிப்பிடற்கரியன.

'உணர்ச்சி வசப்பட்டு, தம்மை மறந்து' ஒழுங்கு கட்டுப்பாடுகளை மீறி, கேட்பாரில்லை என்ற துணிவில் நாட்டின் கிழக்கு, வடக்கு, வடமேற்கு, வடமத்திய பகுதிகளில் நடைபெற்ற அக்கிரமங்களைப் பற்றித் தொலைதொடர்புச் சாதனங்கள், பேர்பெற்ற 'உண்மை விளம்பும்' பத்திரிகைகள் என்ன செய்திகளை வெளியிட்டன? என்று மக்கள் கேட்கிறார்கள். தெருவிலே போகிற சொறிநாய்க்குச் சிறுவன் ஒருவன் கல்லால் அடித்தான் என்ற அளவுக்குக்கூட வல்வெட்டித் துறை, கல்முனை, நெடுந்தீவு, திருக்கோணமலை அப்பாவி மக்களின் உயிர்வதைகள் பெறுமானம் அற்றனவாகிவிட்டனவே என்று நடுநிலையாளரான சிந்தனையாளர் வேதனைப்படுகிறார்கள்.

அதிஉத்தம ஜனாதிபதி அவர்கள் சர்வமதத்தலைவர்களை அழைத்து அநுராதபுரம் வன்செயல்கள் சம்பந்தமான விடயங்கள் பற்றி

உரையாடியுள்ளார். குறித்த அநுராதபுரம் வன்செயல்பற்றி மட்டும் தான் சமயத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி அனுதாபம் தெரிவித்தார்களா? அல்லது அதனைத் தொடர்ந்து நடைபெற்ற 'தம்மை மறந்த' கொலைகள், கொள்ளைகள் பற்றியும் ஆலோசித்துப் பார்த்து அனுதாபம் கொண்டார்களா என்பது பற்றித் தெரியவில்லை. ஒரு தொடர்பும் இல்லாத ஆண்கள், பெண்கள், குழந்தைகள், குமர்கள் சிதைக்கப்பட்டமை பற்றி மதத்தலைவர்களுடைய அறிக்கைகளில் கண்டனங்கள் ஏதும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. நீதி எங்கே போய்விட்டது?

'இருதலைக் கொள்ளி எறும்பு' போல இடுக்கியிலே மாட்டுப்பட்டுக், கிலி பிடித்துச் சாகாமற் செத்துக்கொண்டிருக்கும் அப்பாவி மக்களைப் பற்றி, அவர்கள் தினமும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சூறையாடல்களுக்கு உள்ளாவது பற்றி அனுதாபப்படுவோர் யாருமே இல்லையா? அநுராதபுரத்துக்கு மட்டுந்தானா நட்டஈடு?

31.05.1985

**********

## 'ஆயுதங்களைக் கீழே வையுங்கள்'

"பயங்கரவாதி"களை ஆயுதங்களைக் கீழே வைக்கும்படி ஸ்ரீ லங்கா அரசு கேட்கிறது. இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இன்றைய சூழ்நிலையில் அது முதற்கண் நடைபெற வேண்டுமென வெளியே காரணம் கூறப்படுகிறது.

"தமிழ்ப் போராளிகள்" என வெளி உலகு குறிப்பிடும் அவர்களை ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு இன்று தமிழ்ப்பேசும் மக்களே கேட்கிறார்கள்.

எதிரிகளோடு போராடுவதற்குத்தான் போராளிகள் ஆயுதங்களை உபயோகிப்பார்கள். பெற்றோர் பிள்ளைகள், சகோதரர்கள் ஆகிய உள்வீட்டாரோடு கருத்து வேறுபாடு உண்டானால் அறிவறிந்த எவனும் ஆயுதங்களைத் தூக்கமாட்டான்.

ஆயுதப் படையினராலும் வன்செயலாளர்களினாலும் கொள்ளைக் காரரினாலும் முரட்டுச் சனக்கூட்டத்தினராலும் எத்தனை முறை-எத்தனை விதங்களில் எத்தனை ஆயிரம் தமிழ் மக்களுடைய

உயிர்கள் பறிபோய்விட்டன! கணவனையும் மக்களையும் பெற்றோரையும் பறிகொடுத்து, குடும்பத்தின் பாரந்தாங்கும் தூண்களை வீழக் கொடுத்து, நிர்க்கதியாகி நின்று தத்தளிக்கும் குடும்பங்களைச் சரிவரக் கணக்கிடவும் முடியாது!! வீடு, பொருள்கள், தொழில், பணம் முதலானவற்றைக் கொள்ளை கொடுத்துவிட்டு, எதிர்காலத்தை வெறும் சூனியமான இருளாகக் கண்டு செயலற்று ஒடுங்கிவிட்ட தமிழ்க் குடும்பங்கள் எத்தனை ஆயிரம் !!!

இந்த நிலையில் சிறு சிறு கருத்து வேறுபாடுகளுக்காக, தம் இனத்தையே தாம் அழித்துக்கொண்டு வரும் இந்தப் 'போராளி'களைப் பார்த்துத் தமிழ் மக்கள இன்று கூறுகிறார்கள்; 'ஆயுதங்களைக் கீழே வையுங்கள்' என்று.

சமாதானகாலச் சட்டக் காவலர்களும் சட்டமன்றுகளும் சரிவர இயங்காத நிலையில், என்ன செய்துவிட்டும் தட்டிக் கேட்பாரின்றி நடமாடலாம் என்ற துணிவில் தன் இனத்தையே கொள்ளையடிப்பவர் களையும் கொலை செய்பவர்களையும் பார்த்து, தமிழ் மக்கள் இன்று சலித்துவிட்டார்கள். 'விடுதலை' பெற்றுத்தரப் போகிறார்கள் என்று எதிர்பார்த்த 'நம் வீரர்கள்' நம்மையே கொன்று-கொள்ளையடித்துப் பயமுறுத்திச் சர்வதிகாரம் பண்ணப் புறப்பட்டு விட்டார்களே என்று கண்ணீர் வடிக்கிறார்கள். 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதை'யாய் விட்டதே என்று வருந்துகிறார்கள்.

"எங்களுடைய கருத்துக்குச் சற்றாகிலும் மாறுபாடாக மற்றொருவர் பேசினால், செயற்பட்டு விட்டால் அவரைச் சுட்டுத்தள்ளு" என்ற விதமாக 'விடுதலை வீரர்கள்' நடந்து கொள்வது முறைதானா? இதன் முடிவு என்னவாகும்?" என்று தமிழ்ப் பொதுமக்கள் விளங்கிக்கொள்ள முடியாதவர்களாய் நிற்கிறார்கள். முறையான சட்டமன்றுகளிலே எத்தனை விசாரணைகள்-நிரூபணங்கள்-ஆலோசனைகளுக்குப் பின்னர் தண்டனைகள், குறிப்பாக மரணதண்டனை வழங்கப்படுகிறது என்பதனை நாமறிவோம், சினங்கொண்ட சிலர் கூடி விலையேறப் பெற்ற மனித உயிர்களை நாய் பூனைகளின் அளவுக்கும் கீழே தள்ளி, அவமானக்கொலை செய்வது நாகரிக உலகில் நடைபெறலாமா?

மக்களுடைய ஏகோபித்த அன்பு, ஆதரவுடனும் அபிமானத்துடனும் நல்லெண்ணத்துடனும் நடந்துகொள்ள வேண்டியவர்கள், அந்த நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டியவர்கள், காலப்போக்கில் மக்களுடைய எஜமானர்களாகத் தம்மை நியமித்துக் கொண்டு, விரைவாக மக்களுடைய நல்லெண்

ணத்தை இழந்து வெறுப்புக்குள்ளாகும்படியான செயல்களைச் செய்வது, கொண்ட இலட்சியத்தையே பாழாக்குவதாகும் என்பதை நினைவூட்டுகிறோம்.

28.06.1985

**********

# திட்டமிட்ட செயல்

முன்னாள் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. சம்பந்தன் அவர்கள் 'அரசு திருகோணமலையிற் செய்யத் திட்டமிட்டிருந்ததைச் சரிவரச் செய்து முடித்துள்ளது' என்று சுருக்கமாகக் கூறியுள்ளார். மாறுபட்ட கொள்கைகள், மாற்றுக் கட்சியினர், அவர்களுடைய ஆதரவாளர்கள், அவர்களுடைய சொத்துக்கள் வீடுவாசல்கள் எதுவும் இந்தமண்ணில் இருக்கக் கூடாது என்னும் அரசாங்கத்தின் 'ஜனநாயக' கொள்கைக்கும் செயற்பாடுகளுக்கும் திரு. சம்பந்தனே மற்றோர் எடுத்துக் காட்டாகியுள்ளார்.

திருகோணமலை நகரமும் துறைமுகமும் அதன் சுற்றாடல் யாவும் சிங்கள் மக்களின் ஏகபோக உரிமைச் சொத்தாக விளங்க வேண்டும் என்கிற ஆசை இன்று நேற்று உண்டானதன்று. ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு முன்னரே இந்த ஆசை எல்லா ஆட்சியாளருக்கும் இருந்து வந்தது. 'விளைச்சலைப் பெருக்கி தன்நிறைவு காண்போம்' என்ற கோஷத்தினதும் போர்வையினதும் கீழே, படிப்படியாகத் திருகோணமலையை நோக்கி முன்னேறி வந்தவர்கள், இப்போது உள்ள அரசியல் நெருக்கடியைச் சந்தர்ப்பமாகவும் காரணமாகவும் காட்டிப் பாய்ச்சல் போட்டுள்ளார்கள்.

நாடு நகரங்களைக் கைப்பற்றும் அரசுகளின் ஆசை வெறிக்கு, ஆயிரம்-இலட்சம் மானிட உயிர்களும், கோடானு கோடி பெறுமதி வாய்ந்த சொத்துக்களும் பலி போவது உலக வரலாற்றில் ஒன்றும் புதிதான சம்பவமல்லவே.

லெபனானில் பாலஸ்தீனிய அகதி முகாமுக்குள் இஸ்ரேலிய 'வீரர்'கள் இரவோடிரவாகப் புகுந்து, பெண்கள் பிள்ளைகள் என்று பாராமல் நூற்றுக் கணக்கானவர்களைச் சுட்டுத் தள்ளவில்லையா? யப்பானை வெற்றி கொள்வதற்கு அமெரிக்கா இரண்டு பாரிய நகரங்கள் மீது பட்டப் பகலில் அணுக் குண்டுகளைப் போடத் துணியவில்லையா? அவர்கள் தாமே இங்கும் ஆலோசகர்களாவும்

துணைவர்களாகவும் பங்காளர்களாகவும் நிற்கும்போது, திருகோண மலையில் நடைபெற்ற சம்பவங்களைக் கண்டு தமிழர் ஏன் முறைப்பட வேண்டும், வேதனைப்பட வேண்டும் என்று அவர்கள் கேட்பதில் ஆச்சரியப்பட வேண்டியதில்லை!

அக்கரைப்பற்று, பொத்துவில், வவுனியா, செட்டிகுளம் ஆகிய எல்லைப்புறங்களிலே நடப்பதென்ன? சந்தர்ப்பத்தை இலாபகரமாகப் பயன்படுத்தி நாடுபிடிக்கும் வேலை என்பது யாருக்குத்தான் புரியாது?

25ம் திகதி செய்தியில் "திருகோணமலை வழமைக்குத் திரும்புகிறது-சிங்கள, முஸ்லீம் பாடசாலைகள் நடைபெறுகின்றன" என்று கூறிய தன்மூலம் தமது பேரவா நிறைவேறி விட்டது என அரசு கூறி விட்டது.

இந்த ஆக்கிரமிப்புக்களிலே பாதிக்கப்படும் சிறுபான்மை இன மக்கள் இந்த நாட்டுப் பிரசைகள் இல்லையா? அந்த அபலைகள் தங்கள் உரிமை மண்ணிலே சில மணி நேரத்தில் அனைத்தும் இழந்து 'அகதி' களாகிக் காட்டிலும் கடலிலும் காடையாகளின் வேட்டைப் பொருள்களாகி நிற்பது எந்த 'ஜனநாயக'க் கொள்கையைச் சேர்ந்தது என்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

பொய்யும் புழுகும் நிலைக்காது, கொடுங்கோல் ஆட்சிகள் பூண்டோடு ஒழிந்தன. மதிகெட்டு வரும் முன்னே கேடுவரும் பின்னே' என்ற அழியா உண்மைகளைப் பெண்கள் பிள்ளைகள் மேற்றானும் இரக்கம் கொள்ளாத பேர்வழிகளுக்கு நினைவூட்டுகிறோம்.

27.09.1985

**********

## பொறுப்பு வாய்ந்த கடமை

இந்த நாட்டிலே குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதிகளிலே வாழும் தமிழப் பேசும் மக்கள் மத்தியிலே, சிவில் நிருவாகம் பெரும்பாலும் ஸ்தம்பித்துவிட்டது. சாரதியும் ஒழுங்கான இயக்கமும் 'பிறேக்'கும் இல்லாத வண்டியைப் போல, மக்கள் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களும் கட்டுவிட்டுப் போய்விட்டன.

எல்லாவிதமான அக்கிரமங்களும் வெளியிலிருந்து வந்துள்ள வர்களாலும், உள்ளே மறைந்து இருந்து வந்தவர்களாலும் தட்டிக்

கேட்பாரின்றி-பகிரங்கமாகவே-திட்டமிட்டு-தொடர்ந்து-பயமின்றி-'வீரப்' போர்வைக்குள்ளே நடைபெறுகின்றன.

சமய-சமூக ஸ்தாபனங்கள் அலுவலகங்கள், வீடுகள், வியாபார ஸ்தலங்கள் யாவும் கொள்ளை போகின்றன. ஆண்-பெண்-சிறுவர்-வயோதிபர், நோயாளர் யாவருமே பகிரங்கமாக அவமதிப்புக்குளாகிச் சித்திரவதைக்கும் கொலைக்கும் உள்ளாகின்றனர்.

தமக்குச் சாதகமான நிலையைக் கண்டு அக்கிரமம் புரிவோர் மேன்மேலும் ஊக்கம் கொண்டு சங்கிலித் தொடராக மகிழ்ச்சியோடு தீங்கு செய்கிறார்களேயன்றி, ஓய்ந்து போகவோ, ஒடுக்கப்படவோ காணோம்.

நமது சிறுவர்களின் அனுபவத்துக்குட்பட்ட கால அளவிலேயே, தமிழ் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்கென்று உருவாகி, ஒன்று பலவாகக் கிளைத்துச் செயற்படுகின்ற 'விடுதலை இயக்கங்கள்' இன்று நிலவுகின்ற பயங்கரமான-வேதனைக்குரிய-எதிர்மறையான சூழ்நிலைகளுக்குப் பொறுப்பேற்று அவற்றை ஒழித்துக்கட்ட ஊக்கத்துடனும் ஒற்றுமையுடனும் முன்வர வேண்டும்.

ஆயுதமேந்திப் போராடுவதே வழிமுறையெனக் கண்டு, அவ்வழியைச் சிறிது சிறிதாகக் கடைப்பிடித்து, பரந்துபட்ட நிலைக்குக் கொண்டு வந்துள்ள இயக்கங்கள், அந்தப் பெயர்களில், அதே போர்வையில் பொதுமக்களை இம்சித்து, அவர்களது உயிரோட்டமான பொருள் வளம் முதலிய பல்வேறு மூலாதார சக்திகளை நிர்மூலமாக்கி வருபவர்களை இனங்கண்டு தடுத்துவைக்கத் தீவிர நடவடிக்கை மேற்கொள்வது அவர்களது பொறுப்பு வாய்ந்த கடமையாகும்.

சட்டக்காவலர்கள், சட்டமன்றுகள் முதலிய பொதுமக்கள் பாதுகாப்பின் சாதாரண நடைமுறைகளையே ஸ்தம்பித நிலைக்குக் கொண்டு வந்தவர்கள், அவற்றைவிட மேலான வகையிற் பொது மக்களுக்குப் பாதுகாப்பளித்தல் இன்றியமையாத கடமையாகும்.

விடுதலை இயக்கங்களும் காலப்போக்கில் அரசியற் கட்சிகளினதும், அவற்றின் தலைவர்களினதும் பாங்கில் மாற்றமடைந்துபோக முயற்சிப்பின் மக்களுக்குப் பயனளிக்காது.

இராணுவ முறையான ஆட்சி தொடர்ந்து இருப்பதற்கும் உலகம் அனுமதிக்காது. இராணுவ ஆட்சி எந்த நாட்டிலும் சிறப்பெய்தி யதுமில்லை-மக்கள் அனுமதித்ததுமில்லை. மாபெரும் யுத்தங்களை

முன்னின்று நடாத்தி வெற்றிவாகை சூடியவர்களே கடமை முடிந்ததும் அரசியலை உரியவர்களிடம் ஒப்படைத்துவிட்டுத் தங்களிடத்துக்குத் திரும்பி விட்டார்கள்: அல்லது இளைப்பாறி விட்டனர்.

எவ்வித பலவந்தமுமற்ற சூழ்நிலையில் மக்கள் தமது ஆட்சியாளர் களைத் தெரிந்து நிம்மதியுடன் வாழவும், ஜனநாயக பாரம்பரியம் நிலவுமாறும் நாமனைவரும் முயற்சித்தல் அவசியம்.

நாமறிந்த காலம் முதல் தமிழர்களை இரட்சிக்கப் புறப்பட்டவர்கள் யாவரும் பிரிவினைப்பட்டு உட்பூசல் விளைவித்துக் கொண்டு மறைந்தனர். அதையேதான் நாமும் தொடர்ந்து கடைப்பிடித்தால் சுய அழிவுக்கே வழியாகும் என்று கண்கூடாகக் காண்கிறோம்.

மக்களை ஆட்சி செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் சிலதகைமைகள் வேண்டும். அதனை நாம் கண்டுணர்ந்து அக்கறையுடன் கடைப்பிடிக்கும் நாள் எந்நாளோ?

18.10.1985

**********

# மலையகத் தமிழர் பிரஜாவுரிமைச் சட்டம்

94,000 இந்திய வம்சாவழியினரான தமிழர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்கும் தீர்மானம் பாராளுமன்றத்தில் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டமை குறித்துத் தமிழர் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைவர்.

150 வருடங்களுக்கும் முன்னர், பெருந்தோட்டங்களிற் குறைந்த கூலியில் நிறைந்த வேலை செய்விப்பதற்கு, அப்போதைய குடியேற்ற நாட்டு ஆட்சியாளரான பிரிட்டிஷாரால் தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கடின உழைப்பாளிகளான தமிழர்கள் இன்றுவரை இலங்கையின் பொருளாதாரத்துக்கு அச்சாணிகளாக விளங்கி வந்துள்ளனர்.

பிரிட்டிஷாரைப் போலவே, பிந்தி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்ட இலங்கைப் பெரும்பான்மையினரும் மேற்சொன்ன இந்திய வம்சாவழியினர் பல வழிகளிலும் எவ்வளவோ முன்னேறிய பின்னரும், நயவஞ்சகமாகவும் அநீதியாகவும் கொடுமை யாகவும் அவர்களை ஒடுக்கிவைக்க இயன்றவெல்லாம் செய்தனர்.

மிகவும் காலம் கடந்து போனபின்னர், எத்தனையோ சொல்லொணா அநியாயங்கள் இழப்புக்களுக்கு அந்த மக்களை உள்ளாக்கிய பின்னர், இப்போதைய சூழ் நிலைகளின் நிர்ப்பந்தம் காரணமாக இன்றைய அரசு என்னென்ன நோக்கங்களை உள்வைத்துக் கொண்டாயினும் அந்த மக்களுக்குப் பிரஜாவுரிமை வழங்க முன் வந்தமை திருப்தியைத் தருகிறது.

காலம் கடந்த இந்தச் சிறிய உரிமையை வழங்கியமையைத்தானும் எதிர்க்கட்சியினரான அரசியல் வாதிகள் எதிர்க்கிறார்கள்- இனவெறியைத் தூண்டிவிடும் பேச்சுக்களைப் பேசுகிறார்கள் என்றால் அதன் அர்த்தம் என்ன? எந்த அக்கிரமமான முறையிலும்கூட ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு வாக்காளர்களைக் கிண்டிவிட்டு இலாபம் அடையத் தேடுவது இந்நாட்டு அரசியல் வாதிகளது பரம்பரைக்குணம். மக்கள் இவர்களை இனங்கண்டு ஒதுக்கி வைக்கும் நாளில் தான் இந்தநாடு உருப்படும்.

பிரஜாவுரிமை வழங்கும் சட்டத்தை நிறைவேற்றி விட்டால் மட்டும் போதாது: அதனை விரைவாகவும் நேர்மையாகவும் நடைமுறைப் படுத்த வேண்டும். அரசியல் யாப்பில் இடம் பெற்றுள்ள சில சரத்துக்களும், பாராளுமன்றத்தில் அவ்வப்போது நிறைவேற்றப்பட்ட சட்டங்கள்-தீர்மானங்கள் பலவும், பல நிலைகளில் உள்ளவர்களாற் செயன்முறைப்படுத்தப்படாது தள்ளி வைக்கப்படுவது நாம் பலமுறை அனுபவத்திற் கண்டது.

மலையகத்திற் கடந்த வாரத்திலும் ஏற்பட்ட இனப்பூசலின் போது, ஆயுதப்படைகளும் பொலிசாரும் மலையகத் தமிழரையும் பெரும்பான்மையினரையும் எப்படிக் கண்காணித்தனர் என்பது மற்றோர் அனுபவம்.

இலங்கைத் தமிழர்களும் "நாமெல்லோரும் தமிழ் மக்கள்" என்று அவர்களை ஏற்று, எமது ஒற்றுமையை வலுப்படுத்துதல் அவசியம். ஆட்சியாளரின் பிரித்துவைக்கும் உத்திகளை உற்று உணர்ந்து, வடக்குகிழக்கு மலைநாட்டு ஏனைய இடங்களில் உள்ள தமிழர்கள் ஒருவருக்கொருவர் நேசக்கரம் நீட்டிக் கொண்டால் குள்ளத்தனங்கள் நீண்டகாலம் வெற்றிபெறமாட்டா.

கிறிஸ்தவர்கள் இவ்விடயத்தில் ஏனையவர்களுக்கு எடுத்துக் காட்டாக நடந்து காட்ட முடியும். அதற்கான வழிவகைகளை நாடுவது அந்தந்த இடம், சூழ்நிலைகளைப் பொறுத்தது என்பதனை விளக்க வேண்டியதில்லை.

இந்தியாவின் தாக்கமான தலையீடுகளைத் தவிர்த்துக் கொண்டு இலங்கையின் இனப்பிரச்சனையை சுயேச்சையாகத் தீர்த்துக் கட்டுவதற்கு இந்தப் பிரஜாவுரிமை வழங்கும் சட்டதிட்டம் உதவும் என்று எதிர்பார்ப்பார்களாயின் அஃது ஏமாற்றத்திலேயே முடியலாம்.

7.02.1986

**********

## ஆடு நனைகிறதென்று...

அமெரிக்காவின் வளர்ப்புப் பிள்ளையான பிலிப்பைன் நாட்டில் சென்ற 7ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றமையும், அதனைத் தொடர்ந்து உலகம் சிரிக்கும் வண்ணம் அங்கு நடைபெற்ற தேர்தலின் பின்வேடிக்கைகளும் யாவருமறிந்தனவே. அந்தக் கேலிக் கூத்தின் முடிவாகப் பிலிப்பைன் பாராளுமன்றம் கூடிப்பல இலட்சம் வாக்குகளால் முன்னைய ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் வெற்றி பெற்றுள்ளார் என உத்தியோக பூர்வமாக அறிவித்தது. ஆனால், இறுதி முடிவாகத் தோற்றுவிட்டதாக அறிவிக்கப்பட்ட திருமதி அக்கினோ இந்த வாரத்தில் ஜனாதிபதி பதவி ஏற்க, மார்க்கோஸ் அமெரிக்க விமானத்தில், அமெரிக்காவின் அன்புக்குரிய விருந்தினனாக ஒளிந்து ஓடியுள்ளார்.

அமெரிக்க அரசு தனது கபட நாடகங்கள் உலகமறிய வெளிப்படுத்தப்பட்டுவிட்ட கடைசி நேரத்திலும் கூட "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்" என்ற பான்மையில் அறிக்கைகள் வெளியிட்டுக் கொண்டே இருக்கிறது. வெளிப்பார்வைக்கு 'சுயாட்சி' வழங்கி விட்ட பின்னரும் இரத்தம் குடிக்கும் தனது இரும்புக்கரங் களைப் பிலிப்பைன் நாட்டைவிட்டு எடுத்துவிட அமெரிக்கா ஒருப்படமாட்டாது என்பதனை உள்ளங்கை நெல்லிக்கனி போலக் காட்டிக் கொள்கிறது.

முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸ் வெற்றிபெற்று விட்டாரெனப் பிலிப்பைன் பாராளுமன்றம் ஏதோ முறையில் அறிவித்த உடனேயே, உலகநாடுகளில், ருஷியா மட்டும் மார்க்கோசுக்கு வாழ்த்து அனுப்பி, அவரது வெற்றியை வரவேற்றது. காரணம் திருமதி அக்கினோவை விட மார்க்கொஸ் ஆட்சியில் தனது நடவடிக்கைகளுக்கு அதிக வாய்ப்புக்கள் இருக்கும் என அவர்கள் நம்பியமைதான்.

உலக நாடுகளைக் கிழக்கு-மேற்கு என இரு கோஷ்டிகளாகப் பிரித்து வைத்துக்கொண்டு "உங்கள் இரட்சகர்கள் நாங்களேதாம்" என வேஷம் போடும் இரு பெரும் வல்லரசுகளுடையவும் உண்மை வடிவம் இந்தப் பிலிப்பைன் ஜனாதிபதி தேர்தல் என்னும் ஒரு சம்பவத்திலே இன்னொரு முறை வெளிக்காட்டப்பட்டிருப்பதை இலங்கை போன்ற அண்டிவாழும் குட்டிநாடுகள் உணர வேண்டும்.

"சமயப்பற்றும் ஜனநாயப் பிடிப்பும் கொண்டவர்கள் நாம்: தீயசக்தி களின் ஆதிக்கத்திலிருந்து ஒவ்வொரு நாட்டையும் பாதுகாக்கும் பொறுப்பு எம்மிடம்தான் ஒப்படைகக்ப்பட்டுள்ளது" என்ற பான்மையாக அமெரிக்கா நடந்து கொள்வதற்கு உதாரணங்கள் பல. மக்கள் எழுச்சி காரணமாக நம்பினவர்களை நட்டாற்றிற் கைவிட்டு விடச் சம்பந்தப்பட்ட நாடுகளும் மக்களும் அனுபவிக்கின்ற துன்பங்களுக்கு எல்லையில்லை. அவர்களிடமே உழைத்த பணத்தில் ஒரு பங்கை அவர்களுக்கே நன்கொடையாக-கடனாகத் திரும்பக் கொடுத்து அடிமைப்படுத்தி, கடற்படைத்தளம், விமானத்தளம், தொடர்புச் சாதன நிலையங்கள் முதலிய வாய்ப்புக்களை பிரதியுபகாரமாகப் பெற்று, சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசியல்-பொருளாதார ஜீவநாடிகளைக் கைக்குள்ளே வைத்திருப்பதில் அவர்கள் ருசி கண்டவர்கள். பல கோலங்களில் உளவாளிகளை மற்ற நாடுகளுக்குள் அனுப்பி அரசி யலைக் குழப்பி, கொலைகள் செய்வித்து, கலகங்களைத் தூண்டி விட்டு, ஆயுதங்கள் விற்பனை செய்தபின் மத்தியஸ்தம் செய்ய வருவதும் அவர்களே!

வியட்னாம் போன்ற பல நாடுகளில் நல்ல பாடம் படித்த பின்னரும்கூட அவர்களுடைய ஆதிக்க ஆசை குறையவில்லை. லிபிய விவகாரத்தில் மேற்கு ஐரோப்பிய நட்புநாடுகள் ஒத்துழைக்க மறுத்துங்கூடப் புத்திவரவில்லை. மேற்கிந்திய ஹயிற்றி தீவிலே டுவாலியோர் (தந்தை-மகன்) களை சிம்மாசனத்தில் வைத்து அந்த நாட்டைக் குட்டிச்சுவராக்கிய போதும் இரக்கம் பிறக்கவில்லை. ஆர்ஜென்ரீனா விவகாரம் பழைய கதையாகி விட்டது,

இவற்றையெல்லாம் கண்டும் பலர் அமெரிக்க போதை தலைக்கேறி அழிவைத் தேடுவது விந்தையே!

28.02.1986

**********

## உலகம் சிரியாதோ?

போதும் ஐயா, போதும்!
தமிழர்கள் நாம்
கனவுகள் பல கண்டோம்;
அநியாயங்களும்
அடக்குமுறைகளும் களையப்பட்டு,
ஒன்றிணைந்த பெருமையும்
உரிமை வாழ்வும் கிட்டுமென நாம்
கனவுகள் பல கண்டோம்.
எமது குடும்பங்களைப் பராமரிக்க,
மகள்மாரைக் கரையேற்ற
இருந்த எம் மகன்மாரை
நாம் தியாகம் செய்தோம்.

மாற்றானை எதிர்கொண்டு
நெஞ்சிலே குண்டுபட்டபோதும்
“வீர வேங்கை” என்று
மனத்தைத் தேற்றிக் கொண்டோம்.
ஆனால், இன்று
எமது நிலை மோசமடைந்துள்ளது.
பெரும்பான்மையினர்
எம்மையும் எம்மவைகளையும்
அழிக்கின்றார்கள்.
ஊருக்கொரு ‘முகாம்’ -
அவ்வூர் எம்மிடமிருந்து பறிமுதல்;
வீடுகளையும் ஊர்களையும் விட்டு
ஓடோடத் துரத்துகின்றனர்:

எம் நாட்டிற்குப்
பிச்சை தரும் நாடுகளினதும்
உலக வங்கிகளினதும்
கோடைகாலக் கூட்டங்களில்
வெற்றிகரமாகப் பல்லுக்காட்டிக்
கபடநாடகப் “பேச்சு வார்த்தைகள்”-
எம்மையும் அவர்களையும்
பேய்க்காட்டுவதற்காக !!
போர் நிறுத்தம் பண்ணிப்
போராயத்தம் செய்தவர்கள் - இப்போது

உலகறிய இடிமுழக்கம் செய்கிறார்கள்.
இந்த நிலையிலே -
எம்மவர்கள் மத்தியில்
பலம் பார்க்கும் போட்டிகள்;
தலைமைத்துவ மோதல்கள் !

வல்லரசுகள்,
ஆயுத விற்பனைக்கும்
அடிமைத்தளையை இறுக்குவதற்கும்
குட்டி நாடுகளைக் கிண்டி விடுவது போல,
சூத்திரதாரிகள் எம் இளைஞரையும்
மோத விடுகிறார்களே.
ஏன் ஐயா இந்த நிலை?

தமிழன் ஒற்றுமையாக வாழ
ஒருபோதும் தெரியாதவன் - என்று
உலகிற்குப் பறைசாற்றவா?
'உரிமை வாழ்வை விட
தலைமைப் பதவிதான் வேண்டும்'
என்பதை வெளிசசம் போட்டுக் காட்டவா?

எங்களுக்கு ஒன்றும் வேண்டாம் -
இருந்தது போல் இருக்க விடுங்கள்
என்று நாம் ஓலமிடப் பண்ணவா?

சே...சே...எல்லாமே போதும்!
எம்மவர்களையே தொலைக்கச் சென்று
தொலைந்தவர்களுக்கும்,
எம்மவர்களால் தொலைக்கப் பட்டவர்களுக்கும்
'வீரத் தமிழன், வீரவேங்கை'
என்றா நாமமிடுவீர்?
சீ...சீ... அப்பெயர்களுக்கே
களங்கம் வேண்டாமையா !

'உள்ளே உள்ள பூசல்களால்
உரிமைப் போராட்டங்களில்
தோல்வி கண்ட இனம்' என்ற
பழைய பெயரைப் புதுப்பித்துக் கொள்ளவா
ஆயுதம் எடுத்துப் போராடுகிறீர்?

"தமிழர்" என்ற ஓரினமாக
எல்லாரும் ஓரணியில் வாரீர்!

அன்றேல் இன்று
நம்மைப் பார்த்து நகைக்கும்பகைவன்
நாயாக நம்மை அடிமை கொள்ளுமுன்
வெளிநாட்டு அகதிகள்
முகாம்களைச் சென்றடைவது
எல்லோர்க்கும் நன்மை தரும் ! !

2.05.1986

**********

*வலிகாமம் இடம்பெயர்வின் பின், மறுபடியும் 1996இல் குடியமர்ந்தபோது...*

## புதிய வாழ்வின் உதயம்

"வானங்களே, மகிழ்ந்து பாடுங்கள்:
மண்ணுலகே களிகூரு:
மலைகளே, அக்களித்து ஆர்ப்பரியுங்கள்:
ஆண்டவர் தம் மக்களுக்கு ஆறுதல் அளித்துள்ளார்:
சிறுமையுற்ற தம் மக்கள்மீது இரக்கம் காட்டியுள்ளார்"
(இசை. 49:15).

எமது மக்களின் அண்மைக்கால வரலாற்றில் எதிர்பாராத பல்வேறு நிகழ்வுகளை நாம் சந்தித்துள்ளோம். ஆழமான துன்ப-துயரங்கள், பொருள் உயிர் இழப்புக்கள்: இவற்றினூடாகத் தள்ளாடி நடந்து வந்த எம் மக்களில் குடாநாட்டில் வாழ்ந்தோரின் வாழ்விலே ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. தங்கள் சொந்தக் கிராமங்கள் வீடுகளுக்கு வந்தோர் மகிழ்ச்சியும் அடைந்தனர். அதேவேளையில் பாரிய ஏமாற்றங்களையும் சந்தித்தனர்.

வன்னிப் பெரும்பரப்பில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் அவல

நிலைகள் தொடர்கின்றன. சொந்த வீடுகளுக்கு வர ஆசிப்போர் பலர் உளர். குடாநாட்டில் வாழ்வோரின் வாழ்க்கை நிலையை வெறுப்பவர் இல்லாமலும் இல்லை.

உரிமை வாழ்வை நோக்கி நாம் என்றுமே முன்னேறிச் செல்ல வேண்டும் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிந்தனையே. இவ்வளவு காலமும் நாம் நடந்துவந்த பாதை விடுதலைக்கு வழிகோலும் பாதைதானா? என்பது பற்றி முரண்பட்ட கருத்துக்களும் நிலவுகின்றன.

எனினும், நாம் பயணஞ் செய்த பாதையிலே எம்மை அன்பு செய்யும் இறைவனின் பிரசன்னத்தை நாம் உணர்ந்தோமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இடம் பெயர்வில் அனுபவித்த-அனுபவிக்கின்ற இடர்கள் மத்தியில் இறைவனில் இன்னும் ஆழமாகப் பலர் ஒன்றிணைந்தனர். "எம் ஆலயத்தைத் தவிர வேறு ஆலயங்களுக்குச் செல்லமாட்டோம்" என்று மனவிரக்தியினால் தடம் புரண்டோரும் உளர்.

விடுதலைப் பயணத்தில் இடர்களைத் தாங்க வேண்டும் என்று பலரும் கூறும் அதேவேளையில், "ஒரே ஆண்டவர், ஒரே விசுவாசம்...(எபே. 4:5-6) என்று கூறுவோர், இடம்பெயர்ந்து இன்னல்களை அனுபவிக்கின்ற மக்களுக்குத் தமது ஆலயங்களிற் பாட, வாசிக்க, உதவி செய்ய உரிமை இல்லை என்று அடம்பிடித் தோரும் உளர்.

இவ்விதமான பல்வேறு இன்பதுன்பங்களினூடாக, நன்மை-தீமைகளினூடாக நடந்துவந்த நாம், ஒரு புதிய வாழ்வை எம் மத்தியிலே கட்டியெழுப்புவது அவசியம். "முன்பு நடந்தவற்றை மறந்து விடுங்கள்: முற்கால நிகழ்ச்சி பற்றிச் சிந்திக்காதிருங்கள்: இதோ புதுச்செயல் ஒன்றை நான் செய்கிறேன்..." (இசை. 49:18) என்றுரைக்கின்றார் இறைவன். சமாதானமும் நல்வாழ்வும் ஒருமைப்பாடும் சகோதரத்துவமும் எம் மத்தியிலிருந்து எப்பொழுது உருவாகின்றனவோ அன்றுதான் அவை நிலைக்கும்.

இன்று குடாநாட்டிலும், பெருநிலப்பரப்பிலும் வெவ்வேறு நிலைகளும் அதிகார அமைப்புக்களும் உருவாகியுள்ளன. எல்லாவிதமான அடக்குமுறைகளும் அடாவடித்தனங்களும் மறைந்து மக்கள் நலனையும், சுபீட்சத்தையும் இலட்சியமாகக் கொண்டு, மக்களே ஒன்றிணைந்து செயற்படும் வழிமுறைகளை நாம் கையாள்வது அவசியமாயுள்ளது.

இப்புத்துலகம் படைக்கும் பணியைத் தொடர இறைவனே எம்மை அழைத்துள்ளார். இதை உணர்ந்து துணிந்து செயலாற்றும்போது, இறைவனின் படைப்பிலும் மீட்பிலும் நாமும் பங்காளிகளாக மாறு கிறோம் என்பது எமக்கு ஊக்கம் தரட்டும்: செயற்படச் சக்தியாக அமையட்டும்.

28.06.1996

**********

# போராட்டம் எதற்கு ?

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தமிழர் விடுதலைப் போராளிக் குழுக்கள் பல வழிகளிற் போராட்டம் நடத்தி வருகிறார்கள். மதித்தற்கரிய பல இன்னுயிர்கள் களப்பலியாயின. பொது மக்களிலும் ஆயிரக்கணக்கானவர்கள் மடிந்துவிட்டனர். பிற அழிவுகளைப் பற்றி விபரிக்க வேண்டியதில்லை.

அளவிட்டுச் சொல்ல முடியாத இந்த இழப்புக்களெல்லாம் எதற்கு? அரசியல், பொருளாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, காணிபூமி இன்ன பிற நியாயமான அடிப்படை மனித உரிமைகளெல்லாம் பாரபட்சமாகப் பறிக்கப்பட்டு விட்டன. பல்லாண்டு காலம் பலவழிகளிற் கேட்டு ஏமாந்தாகிவிட்டது. விரக்தியின் எல்லையில் ''இனி ஆயுதம் ஏந்துவதுதான் வழி'' என்று துணிந்து விட்டனர் என்று கூறப்படுகிறது.

அங்கும் இங்குமாக நடைபெறும் சிறுமோதல்களினாலும், அவற்றுக்கு விலையாகக் கொடுக்கப்படுகின்ற மனித உயிர்கள் முதலிய பேரிழப்புக்களினாலும், மக்கள் எதிர்பார்க்கும் 'விடுதலை' எப்படி - எப்போது ஏற்படப் போகின்றது என்பது தான் இன்று தமிழ் மக்களுடைய கேள்விகளாக இருந்து வருகின்றன. ''அப்படி அவை கிடைத்துவிட்ட காலத்தில் இங்கு எத்தகைய அரசு நடைபெறும்?''என்றுங் கவலை கொள்ளுகின்றனர்.

பாகிஸ்தானில் நடைபெறுவது போன்ற 'ஜனநாயகம் சர்வதிகாரம்' இங்கும் கொண்டுவரப்படுவதற்காகவா இத்தனை பாடுகள் நாம் படுகிறோம் என்பது மக்களுடைய கிலியாக இருந்து வருகிறது.

வெளியரங்கமான - அந்தரங்கமான பயமுறுத்தல்கள் இன்றி, பூரணமான சுதந்திரத்துடன்: ஊழல்கள் இன்றி, வாக்குச் சீட்டுக்கள் மூலம் தேர்ந்தெடுக்கும் மக்கள் ஜனநாயக அரச வருமா? சாதி - மத துவேஷங்களற்ற சம சந்தர்ப்பங்கள் மக்களுக்கு வழங்கப்படுமா? சட்டக் காவலர்கள், சட்டமன்றுகள் ஆட்சியாளர் தலையீடு இன்றி இயங்க இடமளிக்கப்படுமா? வீதிகளிலும் வீடுகளிலும் மக்கள் உயிருக்கும் பொருளுக்கும் பயமின்றிச் சஞ்சரிக்க முடியுமா? கல்விக் கழகங்கள் வெளியாருடைய தலையீடுகள் இன்றி விதிமுறைப்படி நடைபெற்றுப் பிள்ளைகள் உருப்படியாக வளர விடுவார்களா? எல்லாக் கோணங்களிலும் 'துவக்குமுனை ஆட்சி' செய்ய முனைந்து பிரதிபலன் கேட்டுக்கொண்டே யிருப்பார்களா? இவ்விதமாகப் பல பீதிகள் மக்கள் மனத்தில் உண்டு.

'தாச்சிக்குள்ளிருந்து நெருப்புக்குள் விழுந்த' கதை தமிழர் கதையாகிப் போய்விடக் கூடாது என்பது மக்களுடைய அவா.

எந்தவொரு வெளிநாடும் நமக்கு ஓர் எல்லை வரைதான் துணை வரலாம். மீதி வழியை நாம்தான் வகுத்துக் கொள்ளல் வேண்டும். இதற்குச் சுயநலம், தலைமைத்துவ ஆசை, இராணுவப் பாங்கான அடக்குமுறை இவைகளைக் கைவிட்டு, நீண்ட பிற்கால நல்வாழ்வுக்கான நடைமுறைகளை நிதானத்துடனும் தீர்க்கதரிசனத்துடனும் கையாளுதல் அவசியம். மக்கள் சக்திக்கு நிகர் இல்லை. அதனை மதியாதார் நிலைநின்றதும் இல்லை.

22.08.1986

**********

# சட்டத்தை மதிப்போம்

இந்த நாட்டிலே தமிழர் வாழும் பகுதியிலே கடந்த சில ஆண்டுகளாக 'உரிமைப் போராட்டம்' என்பது ஒன்று உருவெடுத்து அது வேண்டாத வழிகளிலெல்லாம் தலைவைத்து, விசுவரூபமெடுத்து நிற்கும் இந்த நாள்களிலே ஒழுங்கு - விதி, சட்டம் எனப்படுவன எல்லாம் அடியோடு மதிக்கப்படாத சரக்குகள் ஆகிவிட்டன.

சுதந்தர - ஜனநாயக உரிமைகளுடன் வாழும் மக்களுக்கும், சிறப்பாகச் சுதந்தரம் வேண்டிப் போராட்டம் நடத்தும் மக்களுக்கும் ஒழுங்கு -கட்டுப்பாடுகள் அவசியம். ஓரணியில் திரண்டு, சட்டதிட்டங்களை மதித்து, துன்பம் வந்த வேளையிலும்,

நெறிமுறையில் வாழும் மக்களே விடுதலை காண்பர் என்பது வரலாறு கண்ட உண்மை.

பெற்றோல், டீசல், மண்ணெய் உலகிலேயே இங்கு தான் அதிகவிலைக்கு விற்கப்படுகின்றன. படிப்புக்கும் தொழிலுக்கும் பிரயாணம் செய்ய வேண்டியவர்கள் எடுக்கிற சம்பளம் பிரயாணச் செலவுக்கே போதாமையால் என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கிறார்கள். குண்டும் குழியுமான வீதிகளிலே நடமாட முடியவில்லை: பக்கத்தாலும் விதி முறையின்றிச் சீறிக் கொண்டு வரும் வாகனங்களிலே உயிரைப்பறி கொடுக்க வேண்டியநிலை.

இப்படியே பல்வேறு துறைகளும் சீர் கெட்டுப் போயினமையாலும், வீட்டிலும் வெளியிலும் விதிமுறைகள் வேண்டுமென்றே மீறப்படுவதாலும், கட்டுப்பாடற்ற மக்கள் கூட்டமாக நாம் மாறி அழிவை நோக்கி விரைந்து செல்லுகிறோம்.

துன்பத்திலும் செம்மையாக வாழ நாம் செய்ய வேண்டியது என்ன? யாருடைய வழிகாட்டுதலையும் நாம் ஏற்கப் போவதில்லையா? பெற்றோர், பாடசாலைகள், சமய - சமூக ஸ்தாபனங்கள், விடுதலை விரும்பும் தியாகிகள், உண்மையை இடித்துரைக்க அஞ்சாதவர்கள் இவ்வேளை புதிய கண்ணோட்டத்துடன் முன் வந்து எமது மக்கள் சீர்திருந்த முடியாதபடி பின்தங்கிப் போகாமற் காப்பாற்ற வேண்டும்.

11.04.1986

**********

## தெய்வமே துணை

ஒருவன் தனக்கும் தன் வாரிசுகளுக்குமென மாடி வீடொன்று கட்டத் தொடங்கினானாம். எப்படியும் தன்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது அவனது பேராசை. சில நாள்களின் பின் கட்டட வேலைக்காரன் வந்து, ''மேல்மாடி கட்டச் செங்கற்கள் இல்லை'' என்று சொல்ல, ''கற்கள் போதாவிட்டால் கீழ்மாடியை இடித்து மேல்மாடியைக் கட்டுங்கள்'' என்று கூறினானாம் அந்தப் புத்திசாலி!

அவனைப் போலத்தான் இந்த நாட்டு ஆட்சியாளரும் பல்லாண்டுகளாக நடந்துகொண்டு வருகிறார்கள். நாட்டின் அத்திவாரம் என்ன ஆட்டம் கண்டாலும், தம் கட்சிக்கு மக்களின் வாக்குகளைப் பெறுவதற்குச் செய்யக் கூடிய செப்படி வித்தைகளெல்லாம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய

அகராதியில் மக்கள் என்பது சிங்கள வாக்காளரையும், நாடு என்பது சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களையுமே குறிக்கும். ஏனைய மக்களைப் புறக்கணிப்பதால் அவர்களுடைய ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் இழப்பது மட்டுமல்லாமல், நாளடைவில் அவர்களுடைய வெறுப்பையும் எதிர்ப்பையும் பகைமையையும் சம்பாதித்து நாட்டின் சீரழிவுக்கு வழியாகும் என்பதனைச் சிந்தித்துப் பார்க்கும் திறமையற்றவர்களாகிப் போய்விட்டார்கள். படிப்படியாகத் தள்ளப்பட்டுச் சீர்பண்ண முடியாத அளவுக்குப் போய், முழுஅழிவுக்குக் காரணமாகும் என்பதனை உய்த்துணர அவர்களுடைய குறுகிய ஆசைகள் தடையாயிருந்து விட்டன. உடலின் ஓர் அவயவத்திலே நோய்கள் கண்டுவிட்டால், நோயின் மூல காரணத்தைக் கண்டிறிந்து அறிவு பூர்வமான வைத்தியம் செய்து நிரந்தர சுகம் பெறக் கருதாமல், அந்த அவயவத்தை வெட்டி வீசும் முட்டாள்களாகப் பொறுப்புடையவர்கள் இருக்கலாமா? நமக்குப் பின்னால் வரும் சந்ததியினருக்கு 'ஜனநாயக நாட்டை' அன்று ஓர் அழிவுற்ற யுத்தபூமியைத்தான் யாவருமே விட்டுச்செல்லக் கங்கணங் கட்டியுள்ளோம்!

நெல்லுற்பத்தியிலே தன்னிறைவு கண்டு ஏற்றுமதி செய்யக் கப்பல்கள் வாங்கிக் காட்டியவர்கள், இன்று திரும்பவும் பெருமளவில் அரிசி இறக்குமதி பண்ணுகிறார்கள்.

"இனப்பிரச்சினைக்குத் தாமதமின்றி நல்ல தீர்வு காணாவிடில் நிதி நிலைமையைச் சமாளிக்க முடியாது, நாடு அழிவு கண்டு விடும்" என்று பணத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அடிக்கடி கூறி வருகிறார்.

"நாட்டின் அபிவிருத்திக்காகப் பெறப்படும் பணம் பாதுகாப்புச் செலவினங்களுக்காகவும், அழிவுகளை ஈடுகட்டவுமாக வீணாகின்றது. நாட்டின் வளர்ச்சி பின் தள்ளப்படுகிறது" என்ற கூறுகிறார்கள்.

மறுபுறத்தில் ஆண்டுக் கணக்காகக் கொழும்பு, புதுடில்லி, திம்பு, இன்னும் வேறு வேறு இடங்களில் வெவ்வேறு மட்டங்களில் உள்ளொன்று வைத்துப் புறமொன்ற பேசித் தள்ளுகிறார்கள்: முடிவுதான் பூச்சியம்.

இன்னொரு பக்கத்தில் மட்டக்களப்பு, திருமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, பருத்தித்துறை, பலாலி, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் முதலாம் தமிழ்ப் பகுதிகளிலிருந்து தினமும் பாதுகாப்புப் படையினரின் நரவேட்டைப் புள்ளிவிபரங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன

வேறொரு கோணத்திற் குண்டுவெடிப்புக்கள், ஷெல் தாக்குதல்கள், வாகன அழிப்புக்கள், ரெயில் புரட்டல்கள், பால உடைப்புக்கள், ஆள் கடத்தல்கள் முதலிய ஏட்டிக்குப் போட்டி வேலைகள் சங்கிலித் தொடராக நீளுகின்றன.

படிப்பில்லை, தொழில் இல்லை, பணம் இல்லை, உணவு இல்லை, உடல் நலம் இல்லை, பஞ்சம், கொள்ளை நோய்கள் எதிர்பாக்கப்படுகின்றன.

இந்த நிலையிலே மக்களுக்கு நம்பிக்கை என்ன? ''இறைவன் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காப்பவன் கண்விழிப்பது வியர்த்தம்'' என்னும் பாதுகாவலனின் விருது வாக்கியம் கண்முன்னே உடன் தோன்றுகிறது. இறைவன் நாட்டைக் காக்கும்படி வேண்டுவோம். அதற்கான பல வழிவகைகளையும் சம்பந்தப்பட்டவர்களும் மக்களும் தனியாகவும் பொதுவாகவும் முதலில் எடுப்போம்.

6.06.1986

**********

## ஒற்றுமையாக இறங்குவோமாக

''இலங்கை இனப்பிரச்சினை'யைத் தீர்த்து வைப்பதற்காக, சிறீலங்கா ஜனாதிபதி இன்னொருமுறை 'சர்வகட்சி மகாநாடு' கூட்டியுள்ளார். அழைக்கப்பட்ட பதினொரு கட்சிகளுள் மூன்று கட்சியினர் மகாநாட்டிற் பங்குபற்றவில்லை.

மாற்று அரசாங்கம் அமைக்கும் ஆட்பலம் கொண்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் மகாநாட்டிற் பங்குபற்றாதவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். நாடும் மக்களும் என்ன அவலநிலைக்குத் தள்ளப்படினும், ஈடுசெய்ய முடியாத உயிர், உடைமை இழப்புக்கள் ஏற்படினும், அரசியல் சூட்சுமங்களைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியாத வாக்காளர்களைச் சந்தர்ப்பம் வரும்போது 'பேய்க்காட்டி' ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு வாய்ப்பாக முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ளுவதுதான் அவர்களுடைய குறிக்கோள். தமிழ்ப்பேசும் மக்களுடைய பிரச்சினைகளுக்கு ஐ.தே.கட்சியுடன் இணைந்து செயற்பட்டு ஏதோ ஒரு தீர்வுகாணின், நாளைக்கு ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் சூதாட்டத்தில் 'கைத்துரும்பாக' எதனைப் பயன்படுத்துவது என்பதுதான் அவர்களுடைய சீவநாடியான பிரச்சனை.

கடல் கடந்து கைக்கெட்டாத தூரத்தில் வாழும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர், உயிரைப் பணயம் வைப்பதற்கு இணையான வேறு என்னென்ன தடைக் காரணங்கள் இருப்பினும், 'பலமுறை ஏமாற்றப்பட்டு விட்டோம்: மீண்டும் ஒரு முறை ஏமாற்றப்பட நாம் தயாராக இல்லை' என்று வெளியே சொல்லிக் கொள்ளுவதற்குத் தகுந்த காரணம் ஒன்று கைவசம் இருப்பதனாற் பிடிபாடில்லாமல் ஒதுங்கிக் கொண்டனர். மகாநாட்டிற் பங்குபற்றாத மூன்றாவது கட்சியைக் கருத்திற் கெடுக்க வேண்டிய கனம் அதற்கு இல்லை.

தரை, கடல், ஆகாயம் மூன்று வழிகளாலும், பற்பல வழிமுறைகளில் தாக்குண்டு இரவும் பகலும் அழிந்து போகும் தமிழ் உயிர்கள் எண்ணுக் கணக்கிலடங்காதவை. இன்று, இலங்கையில் எந்தத் தமிழர் வீடும் இராணுவ முகாம்களிலிருந்து சில நிமிட தூரத்திற் றான் இருக்கிறது. இலங்கை அரசும் விடுதலைப் போராளிகளும் என்னென்ன அறிக்கைகளைத் தான் உலகுக்கும் பொதுமக்களுக்கும் மாற்றி மறைத்துக் கூறினும், இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஏறக்குறையக் கண்டாயிற்று என்ற கூறுவதில் அத்துணை தவறு இருக்கமாட்டாது. கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டிருக்கும் இந்திய அரசு என்ற கயிறும் எப்போது அறுந்து விடுமோ என்பது கேள்விக்குறி!

அடிமைச் சாசனம் முன் வைக்கப்படுமுன், உலக ஒப்பாசாரத்துக்காகத் தரப்படுகின்ற கடைசிச் சந்தர்ப்பத்தை விவேகமுடன் கையாண்டு கொள்வது பின்னுக்கு நல்லது என்பது, ஆயுதம் ஏந்தாத அறிஞர்கள் கருத்து. தமிழ் பேசும் மக்களை நட்டாற்றிற் கைவிட்டு நம்பிகைத் துரோகம் செய்து விட்டுப்போன, பிரித்தாளும் பிரித்தானியாவும் கூட, இன்று பழைய சம்பவங்களையெல்லாம் கருத்துக்கு எடுக்காமல் சிறீலங்கா அரசுக்குப் பணமும் படை - ஆயுதங்களும் வழங்க முன்வருமாயின், தமிழ் மக்களை இரட்சிக்க யார் இருக்கிறார்கள்?

ஒருவிடயம்: எந்த அளவான ஒப்பந்தத்துக்கும் இணக்கத்துக்கும் எந்தக் குழுவினராவது தலைகொடுககுமுன், இந்தமுறையாவது ''தமிழ்த் தலைவர்கள்'' ஓரணியல் நின்று மந்திராலேசனை பண்ணி ஒற்றுமையாகக் காரியத்தில் இறங்குவது என்ற புதுமை நடக்குமா என்பதுதான் கேள்வி! அந்த ஒன்று மட்டுமே எதிரியைக் கலங்க வைக்கும்.

**27.06.1986**

****************

# படுகுழிதான் முடிவா ?

'தாச்சியிலிருந்து தணலுக்குள் விழுந்தது', 'இருதலைக் கொள்ளி எறும்பு' முதலாய உவமைகள் எதுவும் இன்றைய ஈழம் வாழ் தமிழ் மக்களின் இக்கட்டான நிலையை ஓரளவாயினும் புலப்படுத்தமாட்டா.

இரண்டாம் மூன்றாம் பட்சமாகவேனும் நடைபெற்று வந்த 'ஜனநாயக' சிவில் நிர்வாகமே ஸ்தம்பித்து ஆண்டுக்கணக்கு ஆகிவிட்டது. தொழில், வருமானம், கல்வி இல்லை. வியாபாரம், வங்கிக் கொடுப்பனவு - கொள்வனவு இல்லை. பிரயாணம், பொருள் ஏற்றுதல் - இறக்குதல் இல்லை. திருவிழாக்கள், நன்மை - தீமை பற்றிய சமயசமூக உறவு மரபு முறைகள் இல்லை. கலை கலாசாரம் முதலியன சிதைபட்டுப் போயின. எங்களுக்கு உள் ஊர் ஆட்சிச் சபைகள் இல்லை: பாராளுமன்ற உறுப்பினர் இல்லை. அகதிகளாக எங்கும் ஓடிவிடக் கூட முடியாத கைதிகளாக வாழுகின்றோம். வீடு, வீதி, சந்தை, கோவில், தொழிலகம் எங்கு வைத்தாகிலும் இரவிலும் - பகலிலும், உறக்கத்திலும் விழிப்பிலும் துப்பாக்கி வேட்டுக்களுக்குப் பலியாகக் கூடிய பெறுமானமற்ற புழுக்கள் நிலையில் கணிக்கப்படுகிறோம். எமது பிரேதங்கள் கூட ஒழுங்குமுறையாகப் புதைக்கப்படுமோ - எரிக்கப்படுமோ என்பதுவும் பிறரின் தயவில் தங்கியுள்ளது. குண்டுவெடிப்பு, பீரங்கி முழக்கம், துப்பாக்கி வேட்டு ஒலிகளின் - ஓலங்களின் நடுவே நடுங்கி விழிபிதுங்குவது சர்வசாதாரண விடயமாகிவிட்டது. இப்போது அரிசி, மா, சீனி, எரிபொருள் மற்றும் பாவனைப் பொருள்கள் எதுவும் வாங்க முடியாத வெறுமை நிலை ஆரம்பமாகிவிட்டது.

மேலே கூறிய அவல நிலைகள் உண்மையாக நிலவும் பதட்ட நிலையின் ஒரு சில விடயங்கள் மாத்திரமே என்பது சிறு பிள்ளையும் அறிந்தது.

இப்படியாக ஏங்கித் தவித்து நிற்கும் தமிழ்ப் பெண் மக்கள் கையிலே - கழுத்திலே நகை நட்டு அணிய முடியாது. கொள்ளைக்காரர் கையிலே உயிரைப் பறி கொடுக்கும் செயல் அது. ஆயிரம் இரண்டாயிரம் ரூபா கூடப் பணமாக வைத்திருக்க முடியாது. ஏனென்றால், துவக்கு முனையிலே தட்டிப் பறிப்பார்கள். நாட்டிலே பிழைக்க வாய்ப்பு இல்லையென்று அன்னிய நாட்டுக்குப்

போய்ச் செய்யாத தொழில் எல்லாம் கண்ணீரோடு செய்து வீட்டுக்குப் பணம் அனுப்பினால், தபால் வந்து சேருகிறதாயில்லை: வந்தாலும் மாற்றியெடுக்க வங்கி இல்லை. வயது வந்த மகளுக்கு அதிட்டமாக வந்து கூடிய கலியாணத்தை ஒப்பேற்றி விடுவதற்குச் செய்யக் கொடுத்த ஏழைகளின் நகைகளும் நகைக்கடையிற் கொள்ளை போய் விட்டனவாம். நூற்றுக் கணக்கிற் சாதாரண மக்கள் தொழில் பார்க்கும் பொது ஸ்தாபனங்களுக்கு மூடுவிழாதான் முடிவா? பொதுமக்களின் உரிமையைப் பறித்து, அவர்களது ஆதரவைப் பெறுதல் பகற்கனவாகும்.

இன்று, தமிழ்மக்கள் ஆயுதப்படையினருக்கு அஞ்சுவார்களா? ஆயிரம் காரணங்கள் சொல்லிப் பொருளாதாரத்தை வேரோடு களையும் கொள்ளையர்களுக்குப் பயப்படுவார்களா? பயிற்சி கொடுத்து ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ள அயலவர்களைக் கண்டு நடுங்குவார்களா?

கண்ணைக் கெடுத்துக்கொண்டு சூரியநமஸ்காரம் செய்யப் பார்க்கிறோம்.

15.02.1985

**********

## அழிவில் இலாபம் தேடலாமா ?

இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்தவர்கள் பெரும்பான்மை இனத்தவரைப் போன்று சரிநிகர் உரிமைகள் யாவும் பெற்றுத் தலைநிமிர்ந்து வாழவேண்டும். இதனால் இன்று தமிழ்ப் பேசும் மக்கள் இழந்து விட்ட உரிமைகளை மீளத் தருமாறு கேட்டுப் பல்வேறு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

பலருடைய நோக்கு - போக்குகளின்படி இழந்த உரிமைகளை மீளப் பெறுவது என்பது: ஆட்சியாளர் கொழும்பிலிருந்து ஒரு விசேட விமானத்திற் பெரிய பெட்டிகளிற் கொண்டு வந்து கோட்டை மைதானத்தில் வைத்துத் தமிழ் மக்களுக்கு எடுத்தெடுத்துக் கொடுப்பது என்பதாக எண்ணி எதிர்பார்ப்பதாகப்படுகிறது. அப்படியானாலும் கூட, இவர்கள் 'கியூ' வரிசையிற் போய் அந்த அபூர்வ பொருளை விழுத்திக் கொண்டுதான் போவார்கள் என்று அனுபவப்பட்டவர்கள் கூறுகிறார்கள்.

எமது இழந்த உரிமைகள் கொழும்பிலிருந்தோ சென்னை, புதுடெல்லி, லண்டன் முதலிய வேறு இடங்களிலிருந்தோ நமக்கு வரப்போவதில்லை. வெளியிடங்களிலிருந்து நமது முயற்சிகளுக்கு ஒரு சில வகைப்பட்ட ஆதரவுகள் கிட்டலாம். ஆனால், நமது ஒற்றுமை, பலம், வளம், மதிநுட்பம், செயற்றிறன் முதலியவற்றாலேயே நாம் பறிகொடுத்த உரிமைகளை நாமே தேடிக் கண்டடைய வேண்டும்.

நம்மை ஒற்றுமையீனப்படுத்தவும், நமது பலம், வளம் முதலியவற்றை அழித்துவிடவும், நமது மதி நுட்பம், செயற்றிறன் ஆகியவற்றைத் திசைதிருப்பி விடவும் மாற்றார் முழு முயற்சியும் செய்வர் என்பதை நாம் எதிர்பார்க்க வேண்டும். நம்முடைய ஒற்றுமையீனமான விவேகமற்ற சுயநல நடவடிக்கைகள் மாற்றானுக்கே உதவியான வையும், நம்மை நாமே அழித்துக் கொள்ளுபவையாகவும் இருப்பின் எத்துணை மடைமை என்பதை விளக்க வேண்டியதில்லை.

'உதவி செய்யாவிடினும் உபத்திரவம் பண்ணாமலாவது இரு' என்பார்கள். 'வெந்த வீட்டிற் பிடுங்கியது அறுதி' என்ற கொள்கை யுடன் வாழுவோர் எங்குங் காணப்படுகின்றனர்.

வடக்கு, கிழக்குப் பகுதிகள் எல்லா வழிகளாலும் நசுக்கப்படுகிற இந்த வேளையிலே பலவித வேடங்கள் தாங்கித் தந்திரோபாயங் களைக் கையாண்டு சொந்தலாபம் சம்பாதிக்கும் குள்ள நரிகளும் வலம் வருகிறார்கள். தமிழ்ப்பகுதிகளிற் சீர்கெட்டுப் போய்விட்ட பொது - தனியார்துறைகளை மேலும் அழித்து, அந்த அழிவுகளி லிருந்து தாம் வாழ வழி தேடுவோர் பற்றி மக்கள் மிக்க விழிப்புடன் இருத்தல் அவசியம்.

தமிழ் மக்களுடைய மூலவளங்கள் இருபக்கத்தாலும் அழிக்கப் படுகின்றன. நாட்டில் அமைதி ஏற்படும் வரை தாம் பெற்ற செல்வங்களைப் பாதுகாப்புக்காக வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கிறார்கள். 'வாழத்தெரிந்த' தமிழ்ப்பெற்றோர்: அடுத்தவனுடைய வீட்டுப் பிள்ளை போராடி உயிரைக் கொடுத்து உரிமை பெற்றுத்தர வேண்டும் என்பது அவர்களுடைய சுயநலமான எதிர்பார்ப்பு!

நேற்றுவரை தங்களைப் போலவே அரச ஊழியம், பார்த்து இளைப்பாறிய மூத்த சகோதரர்களுடைய ஓய்வூதியப் பணத்தைச் சரிவரக் கொடுப்பதில் தான் எத்தனை தில்லுமுல்லுக்கள்: இறந்தவர்களுடைய பெயரில் ஓய்வூதியப்பணத்தை 'உரிமை வேண்டுவோர்' களவாடுகிறார்களாம்!

உண்மை, நீதி, சகோதரத்துவம், ஒற்றுமை, பிறரன்பு, தியாகம், கடின உழைப்பு முதலியன இன்றிக் குறுக்குப் பாதையால் உரிமைகள் வரும் என எண்ணியிருப்பது 'இலவுகாத்த கிளி' யின் கதைதான்.

26.04.1985

**********

## திம்புவின் பின்னரும் நம்புவோம் !

இலங்கை அரசுக்கும் இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்கள் பிரதிநிதிக் குழுக்களுக்கும் இடையில் திம்புவில் நடைபெறும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் இரண்டாம் அங்கம் எதிர்பார்த்தவாறு இவ்வார இறுதியளவில் மீண்டும ஆரம்பமாகும் அறிகுறிகள் தென்பட வில்லையே!

பிரிட்டிஷ்காரர் நாட்டைவிட்டுப் புறப்படுவதற்குப் பல வருடங்களுக்கு முன்னரே தமிழ்ப் பேசும் மக்களைப் பின்தள்ளி வைக்கவும், பெரும்பான்மை மக்களை எல்லா வகையிலும் முன் தூக்கி வைக கவும் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் - நீண்டகால குறுகிய கால திட்டங்களைப் போட்டு நடைமுறைப்படுத்தியவர்களும், அவர்களுடைய வாரிசுகளும் அன்று தொடக்கம் இன்றுவரை பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டுதான் வருகிறார்கள்: அவ்வப்போது ஒப்பந்தங்களும் செய்தார்கள் என்பதை யாரும் மறக்கவில்லை.

அண்மையிற்றான் 'சர்வகட்சி மாநாடு' கூட்டி 13 மாதங்களை வீணிலே போக்கடித்தார்கள். இப்போது, இந்திய அரசை இடை வைத்துக்கொண்டு திம்புவிலே அதே இடைப் பேச்சுக்களையே பேசுகிறார்கள். இடமும், மேசை - நாற்காலிகளும், ஆட்களும், சுவாத்தியமும் மாறுகின்றனவேயன்றிப், பேச்சுவார்த்தைகளில் மனப்பாங்கில் மாற்றம் அல்லது முன்னேற்றம் காணப் படுவதாயில்லை.

''போர் நிறுத்தம்'' செய்து திம்புவிலே பேசப் போவதாக உலகுக்கு உரத்துக் கூறினார்கள். ஆனால், அதே காலகட்டத்திற்கொன்று குவித்துக் கொண்டிருக்கும் மானிட உயிர்களோ நூற்றுக்கணக்கில்!

மிகப்பழைய - அதிகாரமும் நிதி வசதியுமற்ற - ''மாவட்டசபை'' பற்றித்தான் ''பூர்வாங்க'' பேச்சுவார்த்தைகள் ஐந்து ஆண்டுகளாக நடக்கின்றன.

பேச்சுவார்த்தைகள் பயனளிக்க வேண்டுமாயின் மாற்றானுடைய கட்சியைக் கருத்துக்களைத் திறந்த நேர்மையான உள்ளத்துடன் கேட்டுப் புரிந்துகொள்ள வேண்டும். பேசுகிறவர்கள் நம்பிக்கைக்குரிய வர்களாக இருக்க வேண்டும். வாக்களித்தவற்றைத் தப்பாமற் செய்து காட்டும் மனமும் பலமும் உடையவர்களாக இருத்தல் வேண்டும். ஏமாற்றப்படாதவர்களாகவும், ஏமாற்றும் உள்ளக் கருத்து அற்றவர்களாகவும் இருத்தலும் வேண்டும். மற்றவனுடைய துன்பத்தைப் போக்க - தேவையை நிறைவேற்ற - தன்னைத் தியாகம் செய்யும் பக்குவம் இல்லாவிட்டாலும், மேலதிக வாய்ப்புக்களையாவது பேராசையின்றி விட்டுக்கொடுக்கும் உள்ளம் உடையவராதல் வேண்டும்.

நாம் மேன்மேலும் வேதனைகளால் துவண்டுபோயிருப்பினும் எம்மிலும் எமது நண்பர்களிலும் இறைவனிலும் நம்பிக்கையை இழக்காதிருப்போமாக.

ஏனெனில், எவ்வளவோ கொடூரமானவையும் நீண்டவையும் அளப்பரிய இழப்புக்களை விளைவித்தமையுமான மாபெரும் போர்களும் முடிவுற்றுள்ளன. அந்தப் போர்களின் இறுதியிலும் பேச்சுவார்த்தை களும் உடன்படிக்கைகளும் ஏற்பட்டன. அழிவையும் தீமையையுமே எதிர்பார்ப்பவர்கள் கூறும் ''தீர்க்கதரிசன வார்த்தைகளை'' நம்பிக்கொண்டு, நல்லவைகளை நாடாமல் மனப்பாரத்தை மட்டுஞ் சுமந்து கொண்டு பேதைகளாவது வீணே.

அதேவேளையில், மற்றவர்களிடம் மனமாற்றத்தை எதிர்பார்க்கும் நாமும், நம்முடைய போக்குகள் வழிமுறைகளை ஏற்ற வகையிற் சீர்செய்து கொள்ள மனமாற்றம் - செயல் மாற்றம் தேவை.

மனிதனுடைய திட்டங்கள் வழிமுறைகள் அனைத்துக்கும் அப்பால் நின்று ஆண்டு நடத்தும் இறைவனிடத்தில் நமது நம்பிக்கையைப் பெருக்கிக் கொள்ளுதல் அத்தியாவசியம். நாமொன்று நினைக்கத் தாமொன்று செய்யும் தெய்வானுக்கிரகத்தை நெகிழவிடலாகாது. தமிழ்ப் பேசும் மக்களை ஏமாற்றவேண்டுமென்று கனவிலும் கருதாத சிங்களப் பெருமக்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இப்போதும் பல்லாயிரவர் உளர்.

நம்பிக்கையுடன் நேர்மையான வழியில் நல்ல முடிவு காணும் நோக்கில், தொடர்ந்து முயற்சி செய்து நன்மை பெறுவோம்.

23.08.1985

**********

# வேண்டப்படாதவர்களல்லர்

நமது நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்புகள் - தேயிலை என்றால் 'இலங்கை' தான் என்ற சிறப்புப் பெயரை அகிலமெல்லாம் கூறும்படியாகச் செய்தவர்கள் நமது நாட்டின் இந்தியத் தோட்டத் தொழிலாளார்கள்தாம் என்பதை இன்றைய நாள்வரை எவரும் மறுத்து உரைப்பதில்லை.

ஆனால், இன்று அவர்கள் நிலைமையென்ன?

அண்மைக் காலங்களில் அடுத்தடுத்து நடந்து கொண்டிருக்கும் பயங்கரவாத நிகழ்வுகளால் இந்திய தோட்டத் தொழிலாளர் நிர்க்கதியான நிலைமைக்கு மேலும் மேலும் தள்ளப்பட்டுள்ளனர். அவதியுறும் அகதிகளான இம்மக்கள் பிரச்சினையில் இருநாட்டு அரசுகள் மட்டுமல்ல தருமநிலையங்கள், சமயநிலையங்களும் பிற பொது ஸ்தாபனங்களும் கூடிய அக்கறை காட்டவேண்டும். இது வரையில் இவர்களின் விடிவுக்காக எத்தனையோ குருக்களும் கத்தோலிக்க நிறுவனங்களும் குரல் எழுப்பியிருக்கின்றனர் என்றாலும், அவை அவர்கள் பிரச்சனையைத் தீர்த்து வைக்கக் கூடிய அளவில் அமையவில்லை.

மலையகத் தோட்டத் தொழிலாளரிடையே பணியாற்றும் சில குருக்களைச் சந்தித்த போது அவர்கள் கூறிய வேதனையூட்டும் ஒரு கருத்தைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளோம்.

''பிற மாவட்டங்களில் இருந்து வந்து இங்கு கடமையாற்றும் குருமார்கள் இவர்களிற் காட்டும் அக்கறையும் அனுதாபமும் மலையகத்தைச் சேர்ந்த மாவட்டங்களில் இருந்து வந்த குருமாருக்கு இல்லை. அவர்களது ஈடுபாடுகள் யாவும் மலையகத்தில் உயர்தர வர்க்கத்தவர்களுடன் இருக்கின்றனவே தவிர இந்த ஏழை மக்களோடு கிடையாது. வருடத்துக்கு ஒருமுறைதானும் குருக்களின் காலடிபடாத சில கோவில்களுமுண்டு.

இந்த வாக்கியங்கள் இன, மத, மொழி பேதங்களை மறந்த நிலையில் எமது கத்தோலிக்கர் இவர்கள் மீது கொள்ளவேண்டிய கரிசனையை எமக்கு வலியுறுத்திக் கூறுகின்றன.

எனவே, கிறிஸ்துவின் வழியில் ஏழைகளை அன்பு செய்ய வேண்டிய நாம் ''இவர்கள் வேண்டப்படாதவர்கள்'' என்ற மனநிலையில் நின்று மாறுபடுவோம். அடக்கப்படும், ஒடுக்கப்படும் மக்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் கத்தோலிக்கரே என்று உலகெல்லாம் பரவிவரும் நல்லபிப்பிராயத்துக்க மேலும் உரமூட்டி உயிரளிப்போம்.

4.09.1981

**********

# சமூகப் பண்பு

"வாழு-வாழவிடு". ஜனநாயகம் என்பதற்குப் பலரும் பலவிதமான வியாக்கியானங்கள் கூறியிருக்கிறார்கள். மனித மாண்புகளுடன் நாமும் நன்றாக வாழவேண்டும்; அதேபோல மற்றவனும் வாழ நாம் வழி செய்ய வேண்டும். குறைந்த பட்சம் அதற்கு நாம் தடையாக இல்லாமலாவது இருத்தல் வேண்டும். சுதந்திரம், ஜனநாயகம், சமாதானம், சுபீட்சம் எனப்படும் இலட்சியங்கள் யாவும் அதற்குள் அடங்குகின்றன.

"உன்னைப் போலவே உன் அயலானையும் நேசி" என்று இறைமகன் கிறிஸ்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இதனைக் கூறிவைத்தார்.

நம் வீடு, பாடசாலை, தொழிலகம், ஆலயம், சபைகள் முதலிய மனித சமூக வாழ்வுக்குரிய எந்த இடத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும், 'எனக்குரிய விருப்பு-வெறுப்புக்கள், அபிலாசைகள் இலட்சியங்கள், உரிமைகள் மற்றவனுக்கும் சரிசமமாகவே உண்டு, என்று நாம் விளங்கிக்கொண்டு வாழ்ந்தால், சமாதான சகவாழ்வும் சுதந்திரமும் ஜனநாயகமும் தழைத்தோங்கி நிலை பெறுவதற்குத்தடை ஏது?

நாம் சாதாரணமாகக் கண்டு மனக்கவலை கொள்ளும் எத்தனையோ சிறு சிறு அனுபவங்களும், இன்று நம் நாட்டிலும் உலகிலும் நடைபெறும் பற்பல பெரிய-சிறிய சம்பவங்களும் எல்லா மட்டங்களிலும் மேற்கூறிய சமாதான சகவாழ்வுக்குச் சாவுமணி அடிப்பனவாகவே உள்ளன.

வீட்டிலே மற்றச் சகோதரர்களுக்கு இருக்கிறதோ இல்லையோ "எனக்கு வயிறுமுட்டப் போட வேண்டும்" என்று கேட்பவனும், ஆடை ஆபரணம் ஆஸ்தி பாஸ்திகளைத் தானே சுருட்டிக் கொண்டு "உடன் பிறந்தவள் எக்கேடு கெட்டாலும் எனக்கென்ன?" என்று சுயநலம் பாராட்டி நடப்பவளும் நம்மிடையே இருக்கிறார்கள்.

பாதசாரிகளுக்கும் வாகனங்களுக்கும் இடைஞ்சலாக வீதியிலே குறுக்கே நிற்கும் 'நட்டு வைக்காத தடி'யர்களும், வீதி ஒழுங்குகளை அற்பமேனும் அறியாதவர்கள் போன்று, 'குறுக்கே பாய்வது வீரத்தனம்' என்ற கொள்கையுடையோராய் நடந்து கொள்பவர்களும் நூற்றுக்கணக்கிற் காணப்படுகிறார்கள். பேருந்திலே புகைவண்டியிலே மற்றப் பிரயாணியையும் சக மனிதன் என்று கருதி நடந்து கொள்பவர்கள் மிகச் சிலரே எனலாம்.

'என்னுடைய பிள்ளை படித்துப் பட்டங்கள் பெற்றுப் பெரியவனாக வரவேண்டும்' என்று அடங்காத ஆவலுடன் கண்ணுறங்காமற் கருமம் பார்க்கும் ஆசிரியர் ஒருவர், தன்னிடம் படிக்கவரும் ஊரார் பிள்ளைகளை உதாசீனம் பண்ணிச் சும்மா இருந்து சம்பளம் வாங்குவது என்ன வகையிற் சேரும்?

தொழிலாளியை வஞ்சித்து இரத்தங் குடிக்கும் முதலாளிகளும், வருடத்தின் எல்லா நாள்களிலும் 'மேதின' வீறாப்போடு நடந்து கொண்டு, கஞ்சி வார்க்கும் முதலாளிப் பானைக்கு ஓட்டைபோடும் தொழிலாளத் தோழர்களும் தினமும் நம் கண்ணிற் படுகிறார்கள்.

சீவி முடித்துச் சிங்காரித்துச் சினேகிதக் கும்பலுடன் கோவிலுக்கு வந்து தெய்வ நிந்தனை செய்கிறபான்மையாக மற்றவனையும் மனமொப்பிச் செபிக்க விடாமல் அக்கிரமம் பண்ணுவோர் அடிக்கடி ஏன் கோவிலுக்கு வருகிறார்கள்?

எந்த நல்ல நோக்கத்துக்குக் கூட்டங் கூடினாலும், சொந்தப் பெருமை இலாபங்களைக் குறிக்கோளாக வைத்துக் குழப்பியடிக்கும் குள்ளநரிப் பேர்வழிகள் கிராமத்துக்குக் கிராமம் காணப்படுவதில்லையா?

ஐம்பது ரூபாய் அரசாங்க உதவிப்பணம் பெறும் ஆதரவற்ற விதவைக் கிழவியிடம் ஐந்து ரூபாய் இலஞ்சம் கேட்கும் அரச சேவையாளர் ஏழைக் கிழவியையே கஞ்சி குடிக்க விடாதவராகக் குறுக்கே நிற்கிறார்.

'மற்றவர்களைப் போலல்லாமல் நாம் மெய்யங் கடவுளைக் கையெடுத்து வணங்குகிறோம்' என்று பேச்சளவில் மட்டும் சொல்லிக் கொண்டாற் போதுமா? நமது நாளாந்த உணவு, உடை, பேச்சுவார்த்தை, பழக்கவழக்கங்கள், செயற்பாடுகள் யாவும் இறைவனுக்கும் பிறனுக்கும் உகந்தவைதாம் என அந்தரங்க சுத்தியுடன் நாம் திருப்தியடைய முடியுமாயின் நலமே.

'இறையரசு' இவ்வுலகில் நம் கண்முன்னே நிலைபெற்று இயங்குவதற்கு நாம் ஒவ்வொருவருமே துணையாளர்களாக இருக்கத் தலையாய கடமைப்பட்டுள்ளோம். இறையரசு பேச்சுக்களிலும் பிரசங்கங்களிலும் அன்று; அது நமது உள்ளக வாழ்விலிருந்து தொடங்கிச் செயற்பட்டுச் சமூகப் பண்பாகவும் இறை வணக்கமாகவும் மலருகிறது.

இறைவனது அருட்செல்வமும் அரசுடைய பொருட்செல்வமும் நாம் மட்டும் சுய நலத்தோடு அனுபவித்தற்குரியவையல்ல. இறைவனுக்கும் மக்களுக்கும் பணிபுரிவதால் அவை பொதுச் சொத்தாக வேண்டும்.

10.02.1984

***********

## பாலையிற் பால் வார்ப்போம்

"அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்;
ஏனெனில், அவர்கள் கடவுளின் மக்கள்
என அழைக்கப்படுவர்" (மத். 5:9).

அமைதி (சமாதானம்) எங்கிருந்தோ வருமென எதிர்பார்த்திருந்த நாம் தொடர்ந்து ஏமாற்றத்தையே சந்தித்து வந்துள்ளோம். 'அவர்களும் இவர்களும் எமது நலன் கருதியே என்றும் செயற்படுவார்கள்' என்று நம்பிய நாம் பாரிய மனக்கசப்புக்களையே கண்டிருக்கிறோம்.

பிறரிடமிருந்தே அமைதி வரும் என்ற நினைப்பில் நாம் செயலற்றவர்களாக இருக்கப் பழகியது மட்டுமன்று, அந்த அமைதி நிலைக்குக் குந்தகம் ஏற்படுத்தும் சிந்தனை, சொல், செயல்களிலும் ஈடுபட்டோம்; அமைதி நிலை கானல் நீர்போல் ஆயிற்று.

எண்ணற்ற அனர்த்தங்கள், துன்பங்கள், இடம்பெயர்வுகளும், இயலாமைகளும் இல்லாமைகளும் மலிந்து கிடக்கும் எமது சமுதாயத்திலே, பல்வேறு அரச-தனியார்-மத அமைப்புக்களும் தமது செயற்பாடுகளை மக்கள் நலனுக்காகத் தீவிரப்படுத்தியுள்ளனவா? இவற்றின் செயற்றிறன் முன்னையவற்றைவிட வளர்ச்சி பெறல் வேண்டும்; மக்களின் தேவைகளை இலகுவாகப் பூர்த்தி செய்பவையாக மாற்றம் அடைய வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற வழி சமைக்க வேண்டும்.

மேலும், தனிப்பட்டோரினதும், சில குடும்பங்களினதும் செயற்பாடுகள் அவர்களுடன் தொடர்புகொள்வோருக்கும் அவர்கள் துணையை நாடி நிற்போருக்கும் கசப்புணர்வுகளைத் தூண்டுகின்றன. தமது வருவாயை மட்டுமே நோக்கமாகக் கொண்டு சுயநலனோடு, பிறர் உணர்வுகளை மதிக்காது, சட்டத்துக்குப் புறம்பான குடிவகைகளை விற்பவர்களை இங்கு உதாரணமாகக் கூறலாம்.

இவர்களின் இந்தச் செயற்பாடுகள் சிலரைப் பிரியப்படுத்தவும், தமது செல்வாக்குகளை வளர்க்கவும் முற்படுவதனால் சூழ வாழ்வோர் அனுபவிக்கும் இடர்கள் எண்ணிலடங்கா.

பொதுப்பணிகளைச் செய்யும் ஒவ்வொருவரும் தமது கடமையை நினைந்து தம்மை நாடி வருவோரின் தேவைகளை உணர்ந்து அகமும் முகமும் மலர்ந்து பூர்த்தி செய்ய முற்படுவது பாலை நிலத்திற் பால் வார்ப்பதற்கு நிகராகும்.

அண்மைக்காலப் போரின் காரணமாகக் கல்வி பின்தங்கியிருக்கும் இக்கால கட்டத்தில் எல்லாநிலைக் கல்விக் கூடங்களும், இயக்குனர்களும் மாணவரின் நலனில் ஆழ்ந்த அக்கறை கொண்டு செயலாற்றல் வேண்டும். இத்தகைய சேவை மனப்பாங்குடைய செயலாற்றல்கள் இளந்தலைமுறையினர் உள்ளத்தில் நல்லெண்ணங்களையும், நற்பண்புகளையும் பசுமரத்தாணிபோற் பதிய வைக்கும் என்பதில் ஐயமில்லை.

நமது தனிப்பட்ட வேற்றுமைகளையும் கோபதாபங்களையும் சாதிக்க முற்படும் நேரம் இதுவன்று. பழிவாங்க முற்படுவதாற் பேரழிவுகளே பெருகும். இன்னல் நிறைந்த காலமிது என்பதை அனைவரும் உணர்ந்து, 'பிறர் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்' (லூக். 6.31) என்ற இயேசுவின் பொன்மொழியை எமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு, பிறர் வாழ்வை மேம்படுத்த முன்வரவேண்டும்.

ஒரே மனத்துடன் ஒன்றுபட்டுச் செயலாற்றும்போது அமைதி நிலவும். அமைதி நிலையை உருவாக்கும் சிற்பிகளாக நாம் செயற்படுகின்றோம் என்ற திடமான நம்பிக்கை நமக்கு வெற்றி தரும்.

23.08.1996

**********

## கடமையைச் சேவையாக்க

கடமையைக் கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் செய்கிறவர்கள் பலர் உளர். அவர்களுக்குள்ளும் கடமையை மக்கள் சேவையாகக் கருதி ஆர்வத்துடனும் உள்ளத் தூய்மையுடனும் செய்யும் உத்தமர்கள் சிலர் இன்றும் உளர். இத்தகையோரை மக்கள் 'வானுறையும் தெய்வத்துள் வைத்து'ப் போற்றுவர்.

சென்றவாரம் முல்லைத்தீவுக் கச்சேரியைச் சேர்ந்த தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் சிங்காரவேலு அவர்கள் விபத்திற் சிக்கி அகால மரணமடைந்த போது, முல்லைத்தீவு மக்கள் வெளிப்படுத்திய அன்பும் அபிமானமும் மேற்கூறப்பட்ட உத்தமரின் பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டியது. விபத்தில் சிக்கிய அந்த இறுதி உத்தியோகபூர்வ பிரயாணமும் கூட, தவிர்க்கப்படக் கூடிய ஒன்றாக இருந்தும், மக்கள் நலனை முன்வைத்தே அவரால் மேற்கொள்ளப்பட்டதாக விடயம் அறிந்தவர்கள் கூறிக் கண்ணீர் மல்கினர்.

சென்ற வருடம் முல்லைத்தீவில் நடந்தேறிய வன்னிப் பிராந்திய தமிழாராய்ச்சி மகாநாடு மிகச் சித்தியுற நடைபெற்றமைக்குச் சிங்காரவேலு அவர்கள் ஆற்றிய பெரும் பங்கினைப் பாராட்டி, யாழ் பல்கலைக்கழக உபவேந்தரும் முல்லைதீவு அரசாங்க அதிபரும் இணைந்து, சென்ற வாரம் வெளியிட்ட அஞ்சலிச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்: "பல்வகைப்பட்ட பிரச்சினைகளின் மத்தியில் தமிழாராய்ச்சி மகாநாட்டினை வெற்றிகரமாக நடத்தியதற்கு திரு. சிங்காரவேலு அவர்களே காலாக இருந்தார். அவரில்லாவிட்டால் மகாநாடு நடந்தேயிராது. அவரின் அயாராத முயற்சிகளுக்கு அடித்தளமாக இருந்தது அவருக்கு மக்களிடமிருந்து கிடைத்த ஆதரவாகும். அவருடைய வெற்றி களின் இரகசியம் அவர் பொதுமக்களின் பணியாளனாகத் திகழ்ந்ததாகும். அவர் விரும்பியிருந்தால் பொதுமக்களின் பிரதிநிதியாகப் பாராளுமன்றம் சென்றிருக்கலாம்".

அரச - கூட்டுத்தாபன - தனியார்துறை ஊழியர்கள் எவராயினும் சரி, அவர்கள் பெரிய-சிறிய பதவி எதிலிருந்தாலும் கடமையைக் கண்ணெனக் கருதிச் செய்பவருக்கு மக்கள் தலைவணங்குவர்.

'தொலைநாடுகளில் இருக்கும் என்னுடைய கண்ணியம் வாய்ந்த இராசப்பிரதிநிதிகளும், எனது அரண்மனையின் சிறிய வாயிற்காப்போனும் அரச விசுவாசத்துடன் தம் கடமைகளைச் செய்யும்போது சமமான சன்மானத்துக்கு உரிமையுடையவர்களே' என்று ரூஷ்ய சக்கரவர்த்தி ஸார் கூறினாராம்.

கசப்பு நிறைந்த எத்தனை எத்தனையோ அனுபவங்கள் நமக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நாள்களிலேகூட எத்தனையோ அரச ஊழியர்கள் - ஆண் பெண், முதியவர் இளையவர் என்ற பாகுபாடின்றி - மக்களின் பணியாளராகத் தம்மைக் கருதாமல், மக்களின் எசமானர்களாகத் தம்மைத் தப்பாக மதிப்பீடு

செய்துகொண்டு தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வதைக் காண்கிறோம். நாலுதரம் வரவேண்டிய ஒருவனுடைய அலுவலை ஒரே முறையில் அன்பு ஆதரவுடன் முடித்துக் கொடுத்து ஆறுதல் செய்ய வேண்டிய இக் காலகட்டத்திலும்கூட, பொது மக்களை நாயாக அலைய வைத்து வேடிக்கை பார்க்கும் பொது ஊழியர்கள் சிலரால் நல்லவர்களுடைய சேவையும் பொருளற்றுப் போகிறது. சிறிய தொகையானாலும் இலஞ்சம் வாங்காமல் எந்தக் கருமத்தையும் செய்து முடிக்காத பொது ஊழியர்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்றனர்.

காலத்தின் கோலத்தைப் பார்த்தாவது அல்லது கண்ணியம் வாய்ந்த சிங்காரவேலு போன்ற மக்கள் ஊழியர்களின் முன்மாதிரியைக் கண்டாவது எமது 'உத்தியோகத்தர்'கள் மக்கள் ஊழியர்களாக மாறவேண்டும்.

23.11.1984

**********

## வாழ்ந்து காட்டுவோம் !

சன்மார்க்கம், பண்பு, நல்லொழுக்கம், சமயநெறி முறைகளையொட்டிய வாழ்வு விடயத்தில் பெற்றோர் - பிள்ளைகள் தொடர்பு தனித்தன்மையானது. அந்தஸ்து, சாதிப்பெருமை, இனசனப் பெருக்கம் முதலிய விடயங்களில் என்ன நிலையிருந்தாலும், குடும்பம் என்பது அதன் இதயத்துடிப்பைப் பொறுத்த வரையில், எல்லா மட்டங்களிலும் அதன் இயங்கு சக்தி ஒன்றுதான். 'தாயைப்போலப் பிள்ளை...', 'தந்தை எவ்வழி மைந்தன் அவ்வழி' என்ற முதுமொழிகள் ஏறக்குறைய எல்லாக் குடும்பங்களிலும் காணக்கூடிய விடயமே. நல்லொழுக்கமும் சமய நெறிமுறை வாழ்வு முதலிய பண்புகளும் பெற்றோரிடமிருந்தே பிள்ளைகளுக்கு 'முதுசொத்து' ஆக வழங்கப்படுகின்றன. குடிகாரத் தந்தை மகனைப் பார்த்து 'கள்ளுக்கடைப்பக்கம் போகாதே' என்று காலில் விழுந்து கெஞ்சினாலும் பெரும்பாலும் நடவாது. இல்லாத பொல்லாத ஊர்வம்பெல்லாம் பேசிக் காலம் கழிக்கிற அன்னையானவள் மகளைப் பார்த்து "வாயடக்கம், சகிப்புத்தன்மை பெண்பிள்ளையளுக்கு வேணும்" என்று உபதேசம் பண்ணினாற் பொருந்துமா? 'சமய பாடம் படிப்பிக்கிற ஆசிரியர் வேண்டாம் - சமயத்தை அனுசரிக்கிற ஆசிரியர்தான் தேவை' என்று மாணவர் இன்று கூறுவர்.

இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கு மட்டுமல்லாமல், மறுவுலக வாழ்வுக்கும் வழிவகுக்கிற சமயநெறி முறைகள் போதனையாலும் சாதனையாலும் பிள்ளைகளுக்கு ஊட்டப்பட வேண்டியவை.

'கிறிஸ்தவ உருவாக்குதலில் பெற்றோரின் பங்கு என்னும் பொருளைப் பற்றி நாம் சிந்தித்துச் செயற்பட முனையும் இவ்வேளையில், நம்மைச் சூழ்ந்துள்ள பிற சமயச் சகோதரர்களைச் சற்று நோக்குதல் பயன் தரும். சைவ - முஸ்லீம் பெருமக்களில் எத்தனையோ பேர் நாம் பார்த்து வியக்கும் அளவுக்கு - இறைபக்தி - மனிதப்பண்பு உள்ள சான்றோர்களாக வாழுவதையும், அவர்களது பிள்ளைகளும் பெற்றோர் - குடும்பப் பெரியவர்கள் வழியில் ஒழுக்க சீலர்களாக வளர்ந்து வருவதையும் காண்கிறோம். இயற்கையாகவே இரத்தத்தில் ஊறிய இறையன்பும் மக்கள் சேவை மனப்பாங்கும் அவர்களிடமுண்டு. போலித்தனம், நடிப்பு, பயம் முதலியன இல்லாத மனத் தூய்மையான வாழ்வு வாழ்ந்து, தமது மக்களையும் அதே வழியிற் பயிற்றிக் கொண்டு போகிறார்கள்.

திருக்குடும்பத்தையும், புனிதர்களையும் உதாரணமாகக் கொள்ளும்படி போதிக்கிறவர்களும் எழுதுகிறவர்களும் எடுத்துக் காட்டுகிறார்கள். 'அப்படியெல்லாம் அப்பழுக்கற்ற புனித வாழ்வு வாழ்ந்துகாட்ட நம்மால் முடியுமா?' என்று சாதாரண மக்கள் நெஞ்சுக்குள்ளே கேட்டுப் பின்வாங்குகிறார்கள். குறைகள், தவறுகள், பிணக்குகள், கண்ணீர்கள் ஒன்றும் இல்லாமல் வாழுகின்ற குடும்பம் எது? அந்தத் துன்பங்கள் முரண்பாடுகளுக்கிடையிலும் அடிப்படையான நெறிமுறைகளைக் கைவிடாத தன்மை நமக்கு வேண்டும். கணவன்-மனைவி, பெற்றோர் -பிள்ளைகளுக்கிடையிற் பிணக்குகள் ஏற்பட்டவிடத்தும், நம்மிடம் உறுதியான நல்ல அப்படை மனப்பக்குவங்கள் இருப்பின் வரும் துன்பங்கள் தாங்கக் கூடியவையாயும், இலேசாக நீங்கிவிடக் கூடியவையாயும், அவற்றின் பயனாகப் பிள்ளைகள் நல்ல அனுபவங்களைப் பெறக் கூடியவர்களாயும் மாறி, நன்மையே முடிவாகும். தவறுக்குக் காரணமானவர் மன்னிப்புக் கோருவதும், அதற்கு முன்னரே மற்றக் குடும்ப உறுப்பினர்கள் அவரை மனப்பூர்வமாக மன்னித்து நேசிப்பதும் சகிப்புத்தன்மையும் எத்துணை 'பயன்தரத்தக்க துன்பங்கள்' என்று பிள்ளைகள் கண்டுணர்வர்.

இறைவனது சிருட்டித்தொழிலிற் பங்கேற்றுக் கொண்ட பெற்றோர், தம் பிள்ளைகளை இறைவழியிற் பயிற்றுவிப்பதிலும் பொறுப்பான பங்குடையோராவர்.

29.06.1984

**********

# 'நிறைகுடம் தளம்பாது'

இ்.து எம் முன்னோர் சொன்ன அனுபவத்தின் கனி. இன்றைய உலகிற் பல துறைகளில், பல நிலைகளில் பலரையும் சந்திக்கின்றோம். ஆனால், எல்லோரும் தத்தம் தகைமைகளிற் பெருமையைப் பாதுகாக்கும் பண்பினராக விளங்குகின்றனரா? இ்.து ஒரு கேள்விக்குறிதான்.

"பதவி வரும்போது பணிவு வரவேண்டும்" என்று ஒரு கவிஞன் பாடிவைத்தான். ஆனால், பலரிடம் பணிவைக் காண்பது முயற்கொம்பாகவுள்ளது. அதிகாரம் தம் கையிற் கிடைத்தவுடன் 'அர்த்தராத்திரியிற் குடைபிடிப்பவர்'களாக அநேகம் பேரைக் காண்கின்றோம். தமக்கு மிஞ்சியவர்கள் யாருமில்லை என்று தம்பட்டம் அடிக்கின்றவர்களையே சந்திக்கின்றோம். இந்நிலை பின்கதவால் நுழைந்து பெரியவர்களானவர்களுக்கும் பொருந்தலாம்.....

இத்தகையோரோடு - அண்மையில் அமரராகிவிட்ட அடிகளார் தனிநாயகம் அவர்களை ஒப்பிட்டுப் பார்த்தால், அவர்கள் உண்மைச் சான்றோருக்கு ஓர் உதாரணம். உலகிலே விரல்விட்டு எண்ணக்கூடிய மேதைகளில் அவர் ஒருவர். அப்படியிருந்தும் அவர் தம் வாழ்க்கையில் அனுபவித்த அடக்கம், ஆடம்பரமின்மை, அமைதி, எளிமை அனைவருக்கும் ஒரு முன்மாதிரிகை....

இத்தகைய பெருமக்களை நாம் மேற்கோள் காட்டிப் பேசுவதோடு மட்டும் நின்று விடக்கூடாது. பெரும் பதவியில் இருப்போர் அத்தகையவர்களைத் தமது வாழ்க்கை வழிகாட்டிகளாகக் கொள்ளவேண்டும். தகைமையுள்ளவர்கள்கூடத் தம்மைத் தாழ்த்தும் மனப்பக்குவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் படிப்பினையையே இயேசு பெருமானும் 'விருந்துக்குச் செல்பவன் கடைசி ஆசனத்தில் உட்காரவேண்டும்' என்று கூறியதன் மூலம் எமக்கு உணர்த்துகின்றார்.

ஒருவர் அரசியல்வாதியாக இருக்கலாம், அரச உத்தியோகத்தனாக இருக்கலாம், குருவாக, துறவியாகவேனும் இருக்கலாம். அனைவருக்கும் இ்.து அவசியம் தேவையானதாகும்.

கௌரவம் என்பது ஒருவர் எதிர்பார்த்துக் கிடைப்பதன்று: அடுத்தவனால் விரும்பிக் கொடுக்கப்படுவதிலேயே அதன் பெருமை அடங்கியுள்ளது. எனவே, குறைகுடங்களாகக் குதித்து ஆர்ப்பாட்டஞ் செய்யும் குணம் மாற்றப்படல் வேண்டும்; இதனாற் கிட்டும் நன்மைகள் பல.

இறை 'இயேசுவைப் பிள்ளையாகப் பெற்றவள்' என்ற பெருமையைக் கொண்டிருந்த அன்னை மரியின் தாழ்ச்சி எமக்கு முன் உதாரணமாக இருக்கட்டும்.

12.09.1980

**********

# கிறிஸ்தவ அரச பணியாளர்

## மனச்சாட்சிக்கு

" 'அன்புள்ள ஐயா', ..... என்ற ஆரம்பம்"
" 'உங்கள் கீழ்ப்படிவுள்ள ஊழியன்' ..." என்ற முடிவு.

இலங்கைக் குடியரசின் எந்த ஒரு குடிமகனுக்கும் ஜனாதிபதி முதல் சாதாரண அரச ஊழியன் வரை அனுப்பிவைக்கும் கடிதங்களில் எழுதப்பட்டுவரும் கடிதங்களின் மரபு.

நினைத்துப் பார்க்கையில், இந்தக் கடிதத்தைப் பெற்றவருக்கு உள்ளத்தில் ஓர் உவகை நெருடல்! ஆனால்.....

உண்மை என்ன? இன்றைய அரச ஊழியர்கள் பொதுமக்கள் மட்டிற் கீழ்ப்படிவுள்ள ஊழியர்களாகத்தாம் விளங்குகின்றனரா? பொதுமக்களின் வரிப்பணத்தில் ஊதியம் பெறும் அரச ஊழியர்கள் தாம் பெறும் ஊழியத்திற்குப் பெறுமதியான பணியைப் புரிகின்றனரா?

பஞ்சத்தின் விளிம்பிலே தடுமாறும் குடிமக்கள் இவர்களது லஞ்சத்தின் வலையிலே சிக்கித் திணறும் பரிதாபம்! இப்பரிதாப நிலைமை உருவாகுவதற்கு யார் காரணம்? எமது காரியங்களை இலகுவாகவும் குறுக்கு வழியாலும் செய்து முடிப்பதற்காகக் கொடுத்துப் பழக்கிய பொதுமக்களும் காரணம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே!

தனக்குள்ள எத்தனையோ தொல்லைகளிடையே பொதுமகன் ஒருவன் நேரத்தை ஒதுக்கி அரச அலுவலகங்களுக்கு ஏதேனும் அலுவலாகச் சென்றால், "இ∴து எனது சப்ஜெக்ற் அன்று" என

ஊழியர்களாற் செய்யப்படும் அசட்டை, அலைக்கழிப்பு: வேதனைக்கும் வெட்கத்துக்கும் உரிய செயல்களாக இருக்கின்றன.

விலைவாசி உயர்வு, தொழில் - உபகரணப் பொருள்கள் தட்டுப்பாடு இவற்றின் தொல்லைகளாற் போதிய உழைப்பின்றி அல்லலுறும் நாளாந்த உழைப்பாளர்களான பொதுமக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அரசாங்கத்தின் சம்பள உயர்வுகள் போன்ற அனைத்துச் சலுகைகளையும் அனுபவிக்கும் அரச ஊழியர்கள் நிரந்தரமானதும் கூடுதலுமான வருமானத்தைப் பெறுகின்றார்கள் என்பது உண்மையாகும்.

இத்தகைய வாய்ப்புக்கள் வசதிகளைப் பெறும் அரசாங்க ஊழியர்கள் மனச்சாட்சிக்கும், இறைவனுக்கும் பயந்தவர்களாகச் சேவையாற்ற வேண்டியவர்களே.

நாளொன்றிற்கு எட்டு மணித்தியாலம் வேலை செய்வதாகக்கூறும் அரச ஊழியர்கள் எத்தனை பேர் நான்கு மணித்தியாலமாவது தொடர்ந்து வேலை செய்கின்றார்கள்? அலுவலக நேரங்களையும், சொத்துக்களையும், வாகனங்களையும் சொந்தக் காரணங்களுக்காக அரச ஊழியர்கள் செலவிடுவதை - பயன்படுத்துவைதை நாம் காணவில்லையா?

இதனால், அரசாங்கத்தையும், பொதுமக்களையும் ஏமாற்றித்தான் வாழ எண்ணும் அரசாங்க ஊழியர்கள் தம் மனச்சாட்சிகளையும் இறைவனையும் ஏமாற்றுகின்றார்கள் என்பதை உணர வேண்டும்.

இத்தகைய ஊழியர்கள் மத்தியிலே கடமையாற்றும் கிறிஸ்தவ ஊழியர்களுக்கு ஒன்று கூறுகின்றோம்.

கடமையை நிறைவேற்றுவதில் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றி கண்டவர் கிறிஸ்து. எமக்கு ஏற்படுவது போன்று சோதனைகளும் தளர்ச்சிகளும் அவரையும் ஆட்கொண்டபோதும் இறுதியில் அனைத்தையும் வெற்றிகண்டு கடமை மட்டில் உள்ள பொறுப்புக்கு உதாரண புருஷனாக இறைமகன் இயேசு எமக்கு வாழ்ந்து காட்டியுள்ளார்.

எனவே, கிறிஸ்தவ அரச ஊழியர்கள் கிறிஸ்து வழியில் தம் கடமையை மேற்கொள்வார்களாக. கிறிஸ்துவின் கடமையில் 'அன்பு' இருந்தது. அடுத்தவருக்காகத் தன்னை, தன் சுகத்தை அர்ப்பணிக்கும் தியாகம் இருந்தது.

அந்த அன்பும், தியாகமும் எமது கிறிஸ்தவ அரச ஊழியர்களிடம் குடிகொள்ள வேண்டும். இவ்வாண்டு தவக்காலத்தில் எடுக்கும் தீர்மானங்களில் இது முக்கிய இடம் பெறட்டும்.

21.03.1980

**********

# வெற்றிக்கு வழி

நாட்டின் இன்றைய முக்கிய துறைகள் யாவற்றிலும் இளைஞர் பங்கு முதலிடம் வகிக்கின்றது. அது முன்னேற்றமானதும், நன்மையானதுமான துறைகளில் மட்டுமல்ல, குற்றவியல் துறையிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளதே வேதனைக்குரியதாகும்.

போராட்டங்களில் இளைஞர்கள்
வழிப்பறிகளில் இளைஞர்கள்
கொள்ளைகளில் இளைஞர்கள்
கொலைகளில் இளைஞர்கள்
இன்னும் எத்தனையோ .....
இவற்றிற்குக் காரணமானவர்கள் யார்?

தாம் விரும்பிய கல்வியை உயர் படிப்பு வரை தொடரமுடியாத சுதந்தரமின்மை, அதன் விளைவால் தாம் விரும்பிய தொழிலைச் செய்யமுடியாத ஏக்கநிலைமை, இளைஞர்களைப் பாதை தவறிப் பயணஞ்செய்ய வைத்துள்ளன. இங்கு நாம் குறிப்பிடுவது பிள்ளைப் பருவத்திலேயே பேணுவார் அற்ற நிலையில் தான்தோன்றித்தனமாக வளர்ந்து விட்ட இளைஞர்களைப் பற்றியன்று ...

தக்க வழிகாட்டலுடன் பெரியோரால் உருவாக்கப்பட்டும், தனது இளமைப்பருவத்திலேயே போகும் திசை தெரியாது விரக்தியில் வீழ்ந்து உழலும் இளைஞர்களைப்பற்றியே....

'எதிர்காலத்தை இளைஞர்கள் பாழாக்குகின்றனர்' என்று சொல்வதைவிட, இன்றைய பெரியோர்கள் வகுப்பு வாரியான, இனவாரியான திட்டங்களை வகுத்து அதை நடைமுறைப் படுத்துவதாலேயே பெரும்பான்மையான இளைஞர்கள் வழிதவற வழிபிறந்துள்ளது என்பதை உணருதல் வேண்டும். இளமை என்னும் காட்டாற்று வெள்ளத்தின் வேகம் அணை உடைத்துப் பாய்ந்து அழிவுக்கு வழிகோலாமற் பாதுகாக்கப்படல் வேண்டும்.

இதேவேளையில் இளைஞர்களது பங்கு என்ன? பொறுப்பு என்ன?

தமது இளமைப் பருவத்தின் பெறுமதியை உணர்ந்து செயற்படவேண்டியவர்கள் இளைஞர்கள்.

சுயநலன் கருதிச் சூதாட்டம் நடத்துபவர்களின் சூறாவளிப் பிரசாரங்களுட் சிக்குண்டு இளமையையும், எதிர்காலத்தையும் விரயமாக்காமல் தம்மைப் பாதுகாக்க வேண்டும்.

உலக அரங்கில் இன்று இளைஞர்கள் பெற்றிருக்கும் முக்கியத்துவத்தைக்கண்டு முதிரா நிலையில் உள்ள நமது இளைஞர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் போராட்டங்களும், எதையும் உடன் பெறவேண்டும், உடனே சாதிக்கவேண்டும் என்ற தீவிரத்தால் ஆபத்திற் கொண்டுபோய் நிறுத்திவிடுகின்றன.

எனவே, பெரியவர்கள், இளைஞர்கள் பிரச்சினைகளுக்கு நிவர்த்தி காணவேண்டும் என்பது ஒருபக்கமிருக்க, இளைஞர்களும் தமது பிரச்சனைகளுக்கு நிவாரணம் தேடும் விடயத்தில் நிதானமும் அமைதியும் கொண்டு செயற்பட வேண்டும்.

உண்மை எதுவோ அ∴து எங்கிருந்தாலும், எத்தனையோ பிரச்சினை களுக்கிடையேதான் அடைய முடியும் என்றாலும், அதை நிதான மான, நீதியான முறையிற் பெற்றுக் கொள்ளும் மனத்திண்மை பெறவேண்டும்.

தாம் மட்டுமே சமுதாயத்தில் வாழ்பவர்கள் என்று நினையாது, அவர்களுக்கு மூத்தவரும் இளையவரும் உளர், அவர்களோடு ஒன்றுசேர்ந்துதான் வாழவேண்டுமாகையால் அத்தகைய குடும்பமான கூட்டுவாழ்க்கையில் வாழத் தம்மைப் பயிற்றுவிக்க வேண்டும்.

அதுவே இளைஞர் வாழ்வில் வெற்றிக்கு வழி சமைக்கும்.

4.07.1980

*********

# புத்தாண்டு மலர்க !

இந்த நாட்டு வரலாற்றில் என்றும் அழியாவண்ணம் தனது கரியபாதச் சுவடுகளைப் பதித்து வைத்துவிட்டு 1983 ஆம் ஆண்டு நாளையுடன் சென்று மறையப் போகிறது.

தனிப்பட்ட முறையிலும் பொது வாழ்விலும், ஆன்மீகத் துறை உட்பட எல்லாக் கோணங்களிலும், இந்த ஆண்டின் இலாப நட்டக் கணக்குகளை மீட்டுப் பார்த்துக் கொள்வது நம் ஒவ்வொருவரினதும் கடனாகும்.

இந்த ஆண்டின் இலாப - நட்டக் கணக்கைப் பொறுத்து, எதிர்வரும் ஆண்டிற்கான திட்டங்களை வகுத்துக் கொள்ளாதவர்கள் பின்தங்கிவிட நேரிடும்.

பிறக்கப்போகும் புத்தாண்டில்

கடந்த யூலை வன்செயல்களினாற் பாதிப்புக்குள்ளான நம் சகோதரர்கள் எல்லா வழிகளிலும் தேறுதலும் ஆறுதலும் அடைந்து புதுவாழ்வு பெற்றுப் பொலிவுறுதல் வேண்டும்.

ஈழம்வாழ் தமிழ் மக்களின் நலவுரிமைகள் சம்பந்தமாக நடைபெறவிருக்கும் தொடர் சந்திப்புக்கள், வீம்பு வீறாப்புப்பேசி வீண்பொழுது போக்கி வினையைத் தேடிக்கொள்ளும் கூட்டங்களாக அமையாது, நாட்டில் நிரந்தரமான அமைதியும் சமாதானமும், அடக்கி ஒக்கப்பட்டவர்களுக்கு விடுதலையும் தரும் பயனுள்ள முயற்சியாக அமைதல் வேண்டும்.

இரவிலும் பகலிலும், வீட்டுக்குள்ளேயும் வெளியேயும் மக்கள் அஞ்சி ஒடுங்கி வாழுகின்ற அவல நிலைமாறி, களவு, கொள்ளை, கொலை, வழிப்பறி முதலாம் தீச் செயல்களில் ஈடுபட்டு யாவருக்கும் களங்கம் தேடுவோரினது அக்கிரமங்கள் மறைந்து நிம்மதி நிலவ வேண்டும்.

தீமைகள் விலகிப் போகவேண்டுமென்று ஆசிக்கின்ற நாம் நன்மைகளைச் செய்ய முன்வரவேண்டும். மனத்தளவிலிருந்தே அன்பு, அறம், நீதி, பொதுநலம், தியாகம், இறையன்பு, பிறரன்பு எனப்படுகின்ற நன்மைகள் செயலுருவில் மலருதல் வேண்டும்.

மேற்கூறிய நலன்கள் யாவும் பிறக்கப்போகும் புத்தாண்டில் அனைவருக்கும் சித்திக்கவேண்டுமென்று ஆசிக்கின்றோம். இறையருளும் நல்லதிஷ்டமும் விடாமுயற்சியும் பெருக வாழ்த்துகின்றோம்.

30.12.1983

**********

# கிறிஸ்தவ பண்பு

'உலகம் முன்னேறிவிட்டது. உலகம் சுருங்கிவிட்டது. மனிதன் அணுயுகத்தையும் தாண்டி விண்வெளி யுகத்தில் வாழுகிறான். நாகரிகத்தின் உச்சக்கட்ட காலத்தில் நாம் வாழுகின்றோம்'. இப்படி யெல்லாம் பேசப்படுவதையும் எழுதப்படுவதையும் நாம் அறிவோம்.

கைத்தொழிற் புரட்சி காரணமாகவும், மேலைநாடுகளில் உயர்ந்தோங்கி வளர்ந்துள்ள விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு-கண்டுபிடிப்புக்களினாலும் மனித சமுதாயம் வளர்ச்சி கண்டுள்ளது. மேனாட்டார் செய்துதரும் இயந்திரங்களினாலும், மற்றும் பொருள்களினாலும் நாம் சுகபோகவாழ்க்கை வாழ அறிந்துள்ளோம். மேலைநாட்டாரைச் சரியாகவோ பிழையாகவே "கொப்பி" பண்ணி உண்ண - உடுத்தவும்கூடப் பழகி விட்டோம். இவையெல்லாவற்றுக்கும் மேலாக, நூற்றைம்பது ஆண்டுக் காலத்தில் ஆங்கிலம் நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டுப் பெருந்தொகையானோர் ஆங்கில மொழி மூலம் கல்விகற்று அரச ஊழியர்களாகவும் பிறபதவிகளிலும் உள்ளனர். கிறிஸ்துவ சமயம் கடந்த நாலரை நூற்றாண்டுக் காலமாக நமது சமுதாயத்திற் செலுத்திய செல்வாக்கினாற் சாதாரண கிறிஸ்தவர்களாக மட்டுமல்லர், திருநிலைப்படுத்தப்பட்ட குருக்களாகவும், துறவிகளாகவும் இருக்கின்றனர். ஸ்தல திருச்சபையை நிருவாகம் பண்ணும் அளவுக்கு நாம் வளர்ந்தும் விட்டோம்.

மேற்கூறிய எல்லாம் சேர்ந்து நாம் நாகரிகம் தெரிந்த மக்கள், பண்புள்ள மக்கள் என்று நம்மைப் பாராட்டிக்கொள்ள முடிகிறது. ஆயினும் "நமக்குள்ளே நாம் எப்படி?" என்ற வினாவுக்கு மனச் சான்றின்படி திருப்தி கொள்ளுமளவுக்கு விடை கூற நம்மால் முடியுமா?

“மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் ஆகுல நீரபிற”; “தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்” இவை பொய்யாமொழிகள்.

நம் உள்ளத்திலே அறிவுத் தெளிவு, இறைபக்தி - பிறரன்பு, பணப் பெருமை - சாதிப்பெருமை எண்ணாத சமரச மனப்பாங்கு, மற்றவர்களும் மனிதர்கள்தாம், மனித மாண்புடன் அனைவரும் வாழச் சிறப்பாகக் கிறிஸ்தவர்களாகிய நாம் முழுமனத்துடன் செயலாற்றவேண்டும் என்ற எண்ணம் நம்மிடம் உண்டா?

‘‘கடவுளே, கள்வர் அநீதர் விபசாரர் முதலான மற்ற மனிதரைப் போலவோ, இந்த ஆயக்காரனைப்போலவோ நான் இராததுபற்றி உமக்கு நன்றி செலுத்துகிறேன்” என்று செபித்த பரிசேயனைப்போல, கடவுளே அவனைப் போலில்லாமல் என்னை உயர் சாதிக்காரனாகப் படைத்தமைக்கு நான் உமக்கு நன்றி செலுத்துகின்றேன், என்று செபிக்கும் மனப்பாங்குள்ள கிறிஸ்தவர்கள் நமக்குள் இருக்கிறார்கள்.

நேர்முகமாகவோ, ‘புத்திசாலித்தன’மான மறைமுகமாகவோ, சாதி வேற்றுமை பார்க்கும் சபைகள், நிறுவனங்கள் நமக்குள்ளே இருந்துவருவதை உலகு அறியும். சாதிக்கொரு கோவில் கட்டி, சாதிக்கொரு திருவிழா நடத்திச் சமயத்தை உறுதிப்படுத்தும்போது, மனிதமாண்பு மறுக்கப்படுவதையும் அதன் பின்விளைவுகளையும் மறந்துவிட்டோம். இன்றைக்கும் சாதிப்பிரச்சினையின் பேராற் கோவில் திருவழிபாடுகள் கேலிக்கூத்தாக்கப்படுவதை எல்லா மக்களும் கண்டு, கிறிஸ்தவ பண்பு இவ்வளவுதானா? என்று நகைத்துக்கொள்ள இடமளிக்கப்படுகிறது. முஸ்லீம் மக்களை இதுவிடயத்தில் நமக்கு முன்மாதிரியாகக் காணலாம்.

மனித முன்னேற்ற இயக்கத்தினர் இத்தவக்காலத்தில் எடுத்துவரும் நல் முயற்சிகள் வெற்றியளிக்க இனியாவது முழுமனத்துடன் ஆவன செய்வோம். இந்த ஆண்டு தவக்காலத்தின் உயர் இலட்சியமாக, ‘மனிதனை மனிதனாக மதிக்கும் மனமாற்றத்தை மக்கள் அனைவரும் பெறவேண்டும்’ எனக் கொள்ளுதல் மிகப் பொருத்த மாகும்.

**19.03.1982**

***********

# மனித உரிமைகள்

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் அமைப்பின் அனுசரணையுடன் ஆசிய பிராந்தியங்களைச் சேர்ந்த நாடுகள் பிரதிநிதித்துவம் வகிக்கும் மனித உரிமைகள் கருத்தரங்கு இவ்வாரம் கொழும்பில் நடை பெறுகிறது. அங்கு ஜனாதிபதி அவர்கள் உரையாற்றுகையில், 'இலங்கையிற் பல்லாண்டு காலமாக ஜனநாயகமும், மனித உரிமைகளும் கண்ணெனப் போற்றிப் பாதுகாக்கப்படுவ'தாகக் கூறியுள்ளார்!

மானிடப்பிறவியெடுத்த ஒவ்வொருவருக்கும் ஆண்-பெண், நிறம், இனம், மொழி, மதம், பிராந்தியம் முதலிய எவ்வித வேறுபாடுகளுக்கிடையிலும் முழு மனித மாண்புடன் வாழும் உரிமை அடிப்படையானது. கல்வி, தொழில், வழங்கும் மொழி, திருமணம், சமயம், நீதி கோருதல் முதலிய அடிப்படையான விடயங்களில் தனி மனித உரிமைகளை அரசாங்கம் கட்டுப்படுத்தக் கூடாதென ஐ.நா. மனித உரிமைச் சாசனம் விபரிக்கின்றது.

ஆதிகாலத்திலிருந்தே தனிப்பட்ட முறையினும், குழு நிலையிலும், இனங்கள் - நாடுகள் மட்டத்திலும் மனித உரிமை மீறுதல் நடைபெற்றுக்கொண்டே வருகின்றது. "உனக்கு எதனை விரும்புகிறாயோ அதனையே மற்றவனுக்கும் விரும்பு", "வாழு, வாழ விடு" என்பனவெல்லாம் ஏட்டுச் சுரைக்காய்களாவே இருந்து வருகின்றன.

இரண்டாம் உலகப் பெரும் போரின்போது நாசித் தலைவர் ஹிட்லரால் அவிழ்த்து விடப்பட்ட "யூத இன ஒழிப்புக் கொடுமைகள்" மனித உரிமை மீறற் சம்பவங்களுக்குச் சிறந்த உதாரணங்களாகும்.

இரண்டாம் உலகப் பெரும் போரின் முடிவாக ஆளப்பட்ட நாடுகள் பலவற்றுக்கும் பற்பல காரணிகளின் அடிப்படையில் ''சுதந்திரம்'' வழங்கப்பட்டது. வெளியேறிப்போன வெள்ளையர்கள் விட்டுச்செல்லும் நாடுகளின் வருங்காலத்தைப்பற்றி, அந்த நாடுகளில் வாழும் பல்வேறு இன-மொழி மதச்சார்புடைய மக்களின் வாழ்வைப்பற்றி அக்கறை கொள்ளவில்லை.

இதன்பேறாகவும் வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டவர்களின் பேராசை காரணமாகவும், மனித உரிமை மீறல்கள் பல வடிவங்களில் உருவெடுத்துத் தொடர்கதையாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

நம்முடைய நாட்டையே எடுத்துக்கொண்டால், சோல்பறி ஆணைக்குழு விசாரணைக் காலம் தொடக்கமே மனித உரிமை மீறல்களுக்குக் கால்கோள் செய்யப்பட்டுவிட்டது. குறிப்பாக 1947 தொடக்கம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை மாறிமாறி ஏற்றுக்கொண்ட சிங்களப் பெரும்பான்மை இனத்தின் அரசியற் கட்சிகள் ஒன்றுக் கொன்று சளைக்காதனவாகவே தமிழ்ப்பேசும் இனத்தைப் பல துறைகளிலும் அடக்கி ஒடுக்கி வந்துள்ளன.

ஆங்கிலேயர் வெளியேறிப் போகையில் தமிழினத்தை ஆட்சி செய்யும் எசமான உரிமையைச் சிங்களப் பெரும்பான்மையினரிடம் ஒப்படைத்து விட்டதாகவே கருதப்படுகிறது. 'மேசையிலிருந்து விழும் அப்பத்துண்டுகள் அவர்களுக்குப் போதும்' என்ற ஒரு பக்கவாதம் கொள்கையாகிவிட்டதுமன்றி, அது சரி - நீதி என்பதாகவும் இப்போது வெளிப்படையாகவே கூறுகிறர்கள். தமிழ்ப் பேசும் இனம் சமமான மனித உரிமைகளும் குடியுரிமையுங்கொண்ட ஒரு சக இனம் என்பது பெரும்பான்மை இனத்தவரால் விளங்கிக்கொள்ள முடியாத விடயமாகிவிட்டது.

சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாகப் பிரகடனஞ் செய்யப்பட்டமை, வேலைவாய்ப்புக்களில் இனத்திணிப்புச் செய்தமை, உயர் கல்விபெறும் அடிப்படை மனித உரிமையைச் சிறுபான்மை இன மக்களுக்குக் கட்டுப்படுத்தியமை, அபிவிருத்தி வேலைகளில் நிதி ஒதுக்கீடுகளில் - பிறநாட்டு நிதி உதவிகளைப் பயன்படுத்துவதில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொணடமை முதலியவையெல்லாம் இன ஒதுக்கல் முறையில் மனித உரிமைகள் மீறுதல் அல்லாமல் வேறென்னவாகும்? இப்போதைய ஆட்சியாளரால் இன்றுவரை நிறுவப்பட்ட 168 கிராம எழுச்சித் திட்டங்களில் தமிழ்ப் பேசும் மக்களுக்குச் செய்யப்பட்டவை எத்தனை? 168 திட்டங்களில் உள்ள 50,000க்கும் மேற்பட்ட வீடுகளில் தமிழ்ப் பேசும் மக்களுக்குக் கிடைத்த வீடுகள் எத்தனை? "சுவர்ண பூமித் திட்டம்" தமிழ்ப் பிரதேசங்களில் அவர்களுக்காக வும் நடைபெறுமா?

நியாயமான காரியங்களுக்காக அடையாள வேலைநிறுத்தம் செய்தவர்கள் நீண்டகாலப் பட்டினியால் அடையாளம்

மாறிப்போய்விட்டார்கள். பயங்கரவாதிகள் என்ற பட்டத்தைச் சூட்டி, மாணவர் உட்பட, பாவம் ஒன்றும் அறியாத தமிழர் பலரும் விசாரணையின்றி வருடக்கணக்கிற் சிறையில் வாடுகிறார்கள்; சித்திரவதை செய்யப்படுகிறார்கள். இது போன்ற விடயங்களில் தமது இனத்தவர்களுக்குத் தேர்தலை நோக்கி மன்னிப்பு! தமிழ்ப் பேசும் இளைஞர்களுக்குத் தோலுரிப்பு! இரவோடிரவாக ஆயுதப் படையினராற் கொலை செய்யப்பட்டு வீதியில் வீசப்பட்டவர்கள் எந்த நீதிஸ்தலத்தில் விசாரித்துத் தீர்ப்பிடப்பட்டார்கள்?

இத்தகைய சம்பவங்கள் கொலைகளென்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்த பின்னர் சந்தேகப் பேர்வழிகள் மேலிடத்து உத்தரவின் மேல் 'ரிமாண்டி'லிருந்து விடுவிக்கப்பட்டு, மாலை மரியாதைகளுடன் அழைத்துச் செல்லப்படுகின்றமை மனித உரிமைப் பாதுகாப்பு முறைகள்தாமா? நடுராத்திரியில் சிறைப்பிடித்துச் செல்லப்பபட்டவர்கள் சிலரை எங்கேயென்று தெரியவில்லையாம். இவையெல்லாம் "ஜனநாயக அடிப்படையில் மனித உரிமைகள் போற்றிப் பாதுகாக்கப்படும்" நடைமுறைகள் அல்லவென்பதை உலகறியும்.

25.06.1982

***********

# தொழிலாளர் தினம்

"மேதினம்": காலம், இடம், சூழ்நிலை முதலியவைகளை முன் வைத்து நிதர்சன நோக்குடன் தொழிலின் மகத்துவம் அல்லது இன்றியமையாமை, தொழிலாளரின் மனித மாண்பு, பொருளாதார வளர்ச்சி, நாடு நலம் பெறல் முதலிய அவசியமான கோணங்களிலே மேதினச் சிந்தனையைத் திருப்பிப் பார்ப்போர் மிகச் சிலரே உளர் என்று கூறின் மிகையாகாது.

இது தொழிலாளர் யுகம். இந்த நாட்டிலே குறிப்பாகத் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளிலே தொழில்கள், தொழில் வாய்ப்புக்கள், தொழிலாளர் நலன்கள் இன்று எப்படி இருக்கின்றன? நாளை எப்படி ஆகும்? என்ற நடைமுறைச் சூழ்நிலைகளோடு ஒட்டிச் சிந்தித்துப் பார்த்துச் செயலாற்றுவது இன்றியமையாததாகும்.

கமத்தொழிலாளர், தோட்டத் தொழிலாளராகிய விவசாயிகளுடைய நிலையைப் பார்க்குமிடத்து இன்றைய நிலை திருப்திகரமானதாக இல்லை. வரட்சியினாலும், பொருள்கள் விலையேற்றத்தினாலும், கூலி அதிகரிப்பினாலும், தொழிலாளர் தட்டுப்பாட்டினாலும் நெல் பயிரிடுவோர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். வெங்காயம், மிளகாய், கிழங்கு முதலிய உபஉணவுப் பொருள்கள் விளைவிப்போர் மாற்றாந்தாய் மனப்பான்மையுடைய ஆட்சியாளருடைய சூழ்ச்சிகளால் வீழ்ச்சி கண்டுள்ளனர். தமிழன் அறுவடை செய்யும் காலத்தில் பொருள்களை இறக்குமதி செய்தல், விலைக்கட்டுப்பாடு செய்தல், ஏற்றுமதிக்குத் தடைவிதித்தல் முதலியவற்றால் தோட்டப்பயிர் செய்யும் தமிழர் பாதிப்பு அடைந்துள்ளனர்.

மீன்பிடித் தொழிலாளருடைய நிலைமையைப் பார்க்குமிடத்து நாட்டின் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பகுதிகளில் உள்ள தமிழ் மீன்பிடியாளருடைய தொழில்கள் பல வழிகளிற் சிதைவுகண்டுள்ளன. மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு மீன்பிடிப் பாடுகளில் பருவத்துக்குப் பருவம் தென்னிலங்கை மீன்பிடியாளர்கள் வந்து சூறையாடுகின்றனர் என்றே கூறலாம். ஆட்சியாளர்கள் ஆதரவு, ஆட்பலம். ஆயுதப்படைகளின் துணை முதலிய பலத்துடன் வரும் இந்த மீன்பிடித்தொழிலாளர் சொந்த மண்ணிலும் தமிழரைக் கலக்குகின்றனர். வடபகுதியில், ஆழ்கடலில் மீன்பிடிப்போர் இந்திய

மீன்பிடியாளரினால் அடிக்கடி பற்பல முறைகளிலும் தாக்கு தலுக்குள்ளாகி முறியடிக்கப்படுவதைக் கவனத்திற் கொள்வாரில்லை எனலாம்.

அரசாங்க-கூட்டுத்தாபன-தனியார்துறை வெள்ளாடை ஊழியர்களின் இரண்டுங்கெட்டான பரிதாப நிலையை விபரிக்க முடியாது. கல்வி கற்று, வேறு உயர்ரக ஸ்தானங்களைக் கைப்பற்ற அதிட்டமில்லாமல் இந்தவகைத் தொழிலுக்குத் தள்ளப்பட்ட இவ்வகைத் "தொழிலாளர்கள்", உண்ண-உடுத்த-பிள்ளைகளைப் படிப்பிக்க, குடியிருக்க, பிறகாரியங்கள் பார்க்க படும் அவஸ்தை அவர்களுக்குத்தான் தெரியும். "சம்பளத்தைக் கூட்டவேண்டும்: சாமான்களின் விலையைக்குறை" என்று இவர்கள் போடும் கூக்குரல் யாருடைய காதிலும் விழுவதாயில்லை. நியாயமான காரணங்களை முன்வைத்து 1980 இல் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்த இந்தவகைத் தொழிலாளர்கள் நூற்றுக்கணக்கானோர் அரசாங்கத்தின் பழிவாங்கும் கெடுபிடிப் போக்காற் பிச்சைக்காரர்களாயினர்: அல்லது தற்கொலை செய்து கொண்டனர் என்பது பலரறிந்த இரகசியம்.

தனிப்படவும், தொழிற்சாலைகள்-ஸ்தாபனங்களினாலும் பல்வேறு வகையான தொழில்கள் செய்து ஜீவனோபாயம் செய்யும் பல்லாயிரக்கணக்கான உடலுழைப்புத் தொழிலாளரின் பிரச்சினைகளும் பலதரப்பட்டவை. வஞ்சிக்கப்பட்ட முறையில் குறைந்த ஊதியம் பெறுவோர் இவர்களுட் பலர். வேண்டிய பாதுகாப்புக்கள் வழங்கப்படாத நிலையில் இயந்திர சாதனங்களுடன் தொழில் செய்வோர் அங்கவீனர்களாகப் போவதை விட, உயிரிழந்தவர் பலர். காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம் தமிழ்த் தொழிலாளர் பலரைப் பலிகொண்ட கதைகளில் அம்பலத்துக்கு வருவன மிகச் சிலவே.

இந்த நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளிலே, அதிகம் படித்தவர்களும் கொஞ்சம் படித்தவர்களுமான இளைஞர்களும் யுவதிகளும் தொழில் வாய்ப்பின்றிப் படும் இன்னல்கள் மேதினச் சிந்தனைகளில் முதல் இடம் பெற வேண்டியவை. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கள் என்னும் மாயையும் மங்கி மறைந்து மவுசிழந்து போவதைப் பலர் அறிவர். "இனவிடுதலை வேண்டும், சொந்த மண்ணைப் பாதுகாத்தல் அவசியம், பொருளாதார முன்னேற்றம் காண வேண்டும், கல்வி-வேலைவாய்ப்புக்களில் வஞ்சிக்கப்படுகிறோம். ஆயுதப்படைகள் ஆக்கினை செய்கின்றன" என்றெல்லாம் சந்தர்ப்பத்துக்குத்தகப் பேசிவிட்டுச் சொந்த நலனில்

மட்டும் மன அக்கறையுள்ள தமிழ்ப் பெருமக்கள் இதுபற்றி அதி தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். புதிய புதிய தொழில்களைத் தொடங்குவதன் மூலம் தமிழர்களது வேலை வாய்ப்பு, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குப் பல வழிகளில் தீர்வு காணுவதை விடுத்து, வசதி படைத்தவர்கள் பணத்தை வங்கிகளிலும், வட்டிக்கும் வைப்புச் செய்துவிட்டு இருப்பது கவலைக்குதரியதாகும். நிபுணத்துவ ஆலோசனைகள் வழங்கக்கூடிய தொழில் நுட்ப விற்பன்னர்கள் ஆக்க பூர்வமான ஆலோசனைகளைப் பொதுநலனில் அக்கறை கொண்டு வெளியிடுவதன் மூலம் பணத்தைக் கட்டிக் காப்பவர்கள் தூண்டுதல் பெற்றுச் செயற்பட வாய்ப்புண்டு.

இந்த மே தினத்தில், தொழில் செய்வோர், தொழில் தருவோர் ஆகிய இரு திறத்தினர்க்கும் எமது நல்லாசிகளைத், தமிழ் மக்கள் நலனின் மீது வைத்து, வாழ்த்துகிறோம்.

29.04.1983

**********

# காணி நிலம் வேண்டும்

குடும்பத்துடன் குடியிருக்கக் காணி வேண்டும். உழுது கொத்தி வெட்டிப் பயிர்செய்து வாழ்க்கை நடத்தக் குடியானவனுக்கு நிலம் வேண்டும். பாழ் நிலம் பசியைப் போக்க உதவாது. நிலத்துடன் நீரும் வேண்டும். அதாவது வளமுள்ள நிலம் வேண்டும். அல்லது, நிலம் நீர்வளம் உடையதாக மாற்றப்படவேண்டும். இதுதான் அன்றுதொட்டு இன்றுவரை அரசர்களும் மக்கள் அரசுகளும் செய்துவரும் முக்கியபணி. 'காணி நிலம் வேண்டும்' என்று பாரதி குறிப்பிட்ட கருத்தும் இதுவேதான்.

நம் நாட்டிலேயே கடந்த முப்பது, நாற்பது ஆண்டு காலத்தைத் திருப்பிப் பார்ப்போமானால் காணி நிலம் வேண்டும் என்ற இந்த அடிப்படைத் தேவை எத்தனை வழிகளில் இந்நாட்டு அரசாங்கங் களையும் மக்களையும், பொதுவகையிலும் தனிப்பட்ட முறையிலும் ஆட்டிப்படைத்து வருகிறது என்பது புலனாகும்.

'உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்' என்ற கோஷத்தின் கீழ், பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதிக் கால கட்டத்திலேயே காணி நிலப் பிரச்சினை தலைவர்களதும் மக்களதும் தலைக்குட் புகுந்து கொண்டது

காட்டை அழித்துக் கழனியாக்கி, கமக்காரனைக் குடியிருத்தி உணவுப்பிரச்சினைக்குத் தீர்வுகாணச் சங்கற்பம் பூண்டுள்ளோம் என்ற இலட்சியத்தின் கீழ் திட்டமிடப்பட்ட பணிகளின் திரைமறைவில் சதிவேலைகளும் தூர நோக்கோடு செய்யப்பட்டன. திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களும் அத்துமீறிய குடியேற்றங்களும் காணி நிலப் பிரச்சினையை அப்போதே ஆரம்பித்து வைத்துவிட்டன.

எங்கும் உள்ளவாறே இங்கும் குடிசனப் பெருக்கம் காணி நிலப்பிரச் சினையைச் சிக்கற்படுத்தியது இயற்கையான விளைவு என்று சற்று விட்டுவைக்கலாம். அதிகார துஷ்பிரயோகம், இலஞ்சம், பேராசை முதலியவற்றின் பின்னனியில் ஊரார் கண்ணில் மண்ணைத் தூவிக் காணிகள் பிடித்த நம்மவர்களின் கதைகள் ஏட்டிலடங்கா. 'வருடாந்த பெர்மிட்டு', 'எல்.டீ.ஓ. பெர்மிட்டு' என்னும் முறைகளில் வழங்கப்பட்ட காணிகளின் விஸ்தீரணம் இரண்டு ஏக்கர் இருபது ஏக்கராகவும் மாறிய கதைகள் உள. ''இந்தப் புளிக்குக் கீழே தான் எங்கடை ஆச்சி அப்ப குடம் வைச்சு இருந்தவ: குசினி அப்பிடி இருந்தது' என இரண்டு 'உண்மை'ச் சாட்சிகளுடன் 'உறுதி' முடித்து முடிக்குரிய காட்டை முதுசொத்துக் காணியாக்கிய காரியப் புலிகள் எத்தனை பேர்!

கடந்து போன பத்து வருடங்களுக்குள், திரை கடல் கடந்து திரவியம் தேடப் போய் வெற்றி கண்டவர்களினாலும் காணி நிலப் பிரச்சினை வளர்ந்துள்ளது. கறிக்கடையிலே கண்டவிலை கொடுத்துப் பொருள்களை வாங்குவதனால் கஷ்டப்பட்டவர்கள் கை நீட்ட முடியாமற் செய்வது போன்று, காணிக் கொள்வனவு-விற்பனவிலும் கஷ்டப்பட்டவன் குடியிருப்புக் காணியைப் பற்றிக் கனவிலும் நினைக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. பட்டினப் பகுதிகளில் மட்டுமல்லாமல் கிராமப் புறங்களிலும்கூட காணிப்பிரச்சினை மும்முரமாகத் தலை தூக்கியுள்ளது. கவனிப்பாரற்றுக் கிடந்த கலட்டு நிலங்களுக்குக்கூட கதிகால், கப்பு நட்டு எல்லை போடுகிறார்கள். இரவிரவாக எல்லை போடுவதும், விடிய விதானையாரோடு மற்றவர் வந்து பிடுங்கியெறிவதும் தொடங்கியுள்ளன. முடிக்குரிய காணிகள், உரிமை பாராட்டாத காணிகள், 'முன்யோசனைக்காரர்'களால் விழுங்கப்படுகின்றன. படித்தவர்களும், பலவான்களும் பணவசதி படைத்தவர்களுமான காரியக்காரர்களே பெரும்பாலும் இவற்றை முன்னின்று செய்து முன்மாதிரி காட்டுகிறார்கள்.

இந்த நிலையில் உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் காணியை நீண்டகால ஒப்பந்தத்தில் வழங்கும் திட்டமும் நடைபெறுகிறது. சிறிய விவசாயி

நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவது மட்டுமன்றி மேற்படி முதலீட்டாளர்களுக்கு நிரந்தர கூலிக்காரனாக்கப்படுகின்றான்.

முடிவாக இவற்றினாலெல்லாம் பாதிக்கப்பட்டுத் தெருவில் நிற்கப் போகிறவர்கள் ஏழைகளே. குடியிருக்கவும் பயிர் செய்து பிழைக்கவும் ஒருதுண்டுக் காணியுமின்றி அவதியுறப் போகிறவர்கள் அவர்கள்தாம். ஆனால், மேற்கூறிய 'முன்யோசனைக்காரர்'களோ பிறக்காத பேரப்பிள்ளைகள் பீட்டப்பிள்ளைகளுக்குக் காணி நிலம் இப்போதே தேடிவைக்கப் பாடுபடுகிறார்கள்.

கிறிஸ்துவப் பகிர்தல், பிறனை அன்பு செய்தல், இல்லிடமற்றவர் களுக்கு இல்லிடம் கொடுத்தல் எனப்படும் நன்மைகள் மறக்கப்படலாமா? சட்டத்தையும் நீதியையும் ஏமாற்றிக் காணி நிலம் அபகரித்தல் என்னும் பேராசை ஏழைகளுக்கு எதிராகச் செய்யப்படும் பிறரன்புக்கு மாறான செயல் என்பதில் தவறு இராது.

23.10.1981

**********

## இது பகிர்தலா?

"தருமம் தன்வீட்டிலிருந்து தொடங்குகிறது" என்பது பலர் அறிந்த ஓர் ஆங்கிலப் பொன்மொழியின் தமிழாக்கம். கணவனும் மனைவியும் பிள்ளைகளும் தத்தம் கைப்பொருள்களை ஒருவருக்கொருவர் கரவாது வழங்கி அன்பின் அடிப்படையிற் பொது இலட்சியத்துடன் வாழும்போது குடும்பம் வளமுறும். ஆனால், குடும்ப உறுப்பினர் களுக்குள்ளேயே எனது சொத்து, எனது உழைப்பு என்பதாக உரிமைப் போராட்டங்களும், தனி அனுபவிப்புக்களும் தலையெடுக்குமாயின் அங்கே அன்பேது - இல்லறமேது? பெற்றோருடன் பிள்ளைகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் போதே, அன்பின் அடிப்படையின்றிச் சுயநல வாழ்வு வாழப் பயின்று கொண்ட சகோதர - சகோதரிகள், வளர்ந்து தனிக்குடும்பஸ்தர்களான பிறகு ஒருவர் ஒருவரை ஆதரிப்பார்கள் என்று கனவிலும் எதிர்பார்க்க முடியாது. ஒருவன் பசித்திருக்க மற்றவன் தினமும் 'கிறிஸ்மஸ்' கொண்டாடுவதைக் காண்பதில் ஆச்சரியமில்லை. தான்மட்டும் சுகித்திருக்கும் அல்லது நல்வாழ்வு தேடும் இந்தக் குறுகிய சுயநலவாதம் மேலும் விரிவடைந்து அடுத்தவனுக்கு-அயலவனுக்கு எச்சந்தர்ப்பத்திலும் இரங்காத - ஈயாத ஓர் அரக்கத்தன்மையாக மனிதர் மத்தியில் உருவெடுத்துவிடுகிறது. அதனாற்றான்

'கொடையும் தயையும் பிறவிக் குண'மாக, குடும்பப் பழக்கமாக அமைய வேண்டுமெனப் பெரியோர் கூறினர்.

உடன் பிறந்த சகோதர-சகோதரிகள், உற்றார் உறவினர்கள், அயலவர்கள்-ஊரவர்கள் என்றிவ்வாறு நம் புலன்களுக்கெட்டிய வகையில் வாழும் மக்களுடைய இன்ப-துன்பங்களையும் பகிர்ந்து கொள்ள நாம் முதலில் முன்வரவேண்டும். அவர்களுடைய உணவு, உடை, உறைவிடம், அந்தஸ்துக்களைத் தெரிதல் முதலிய பல்வேறு தேவைகளிலும் நமக்கும் தட்டிக்கழிக்க முடியாத பங்கு உண் டென்னும் கடமைப்பாட்டினை உணர்ந்துகொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. மாறிவரும் உலகமும், உலக மாற்றங்களுக்கேற்ப வளர்ந்துவரும் திருச்சபையும் இதனை எமக்கு உணர்த்தி வருவதை இனிமேலும் நாம் உணர்ந்து செயற்படாதிருக்க முடியாது. ''அற்றார் அழிபசி தீர்த்தல் பொருள் பெற்றான் ஒருவன் வைப்புழி அ..து.'' பசித்தவனுக்குப் போசனத்துக்கு வழி செய்க: பொருள் உள்ளவன் அதனைச் சேமித்து வைக்கும் வங்கி அதுவே. திருவள்ளுவரின் இந்த வாக்கு அன்றிருந்ததைவிட இன்று அதிக சக்திவாய்ந்த வாழ்க்கைக் கோட்பாடாக நம்முன் நிற்கின்றது. அவ்வாறு செய்யாவிட்டால் ''ஈத்துவக்கும் இன்பம் அறியார், தம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர்''. அதாவது இல்லாதவனுடன் பொருளைப் பகிர்ந்து இன்பமடைய அறியாதவர்கள் அதனை இழந்து துன்பமடைய நேரிடும்.

நம்மவர்கள் மத்தியிலே இன்று நாம் பரவலாகக் காண்பதென்ன? தன் உறவினனுக்கும் அயலவனுக்கும் ஓர் அவசரத்துக்கும் ஒரு தற்காலிக உதவிதானும் புரிபவர்களைக் காண்பது அரிதாகியுள்ளது. வசதிபடைத்த ஒருவன் தனக்கு மிக நெருங்கிய ஒருவனுக்கு அல்லது ஒரு குடும்பத்துக்கு ஆக்கபூர்வமான ஓர் உபகாரத்தை நீண்ட கால அடிப்படையில் திட்டமிட்டுச் செய்து கைதூக்கி விடுவது கதைகளில் வரும் கற்பனை விடயங்களாகிவிட்டன. அறிவாற்றலுள்ள தன் சகோதரனுடைய மகனைப் படிப்பித்து முன்னேற்றிவிட்ட நல்லவன் ஒருவனைக் காட்டமுடியாத உலகத்திலே வாழுகின்றோம் என்றால் மிகையாகாது. இந்த நிலையிலே கண்காணாத தொலைதூர நாடுகளில் பசிபட்டினியாலும், நோய்பிணியினாலும் கெடு பிடிகளினாலும் அல்லலுறும் மக்களுக்கு இரங்கிப் பொருள் வழங்குவது பற்றியோ ''பகிர்ந்து வாழ்தல்'' பற்றியோ பேசுவது எப்படியென்று கேட்கத் தோன்றுகிறது. தனிமனிதர் மட்டுமல்ல, நம்மிடையே உள்ள குழுக்கள், ஸ்தாபனங்கள், பங்குகள் போன்ற அமைப்புக்கள்தாமும் இந்தப் ''பகிர்ந்து வாழ்தல்'' என்ற விடயத்தில் ஏதாவது செயற்றிட்டம் உடையனவா? என்று பார்க்கின் விடை

கூறுதல் மிக்க கஷ்டமாகவே இருக்கும். ஆண்டவன் அருளிய மூலவளங்கள் காரணமாக இலட்சக் கணக்கில் நிதி சேமித்து வைத்துக்கொண்டு இடாம்பீகமான முறையில் நடந்து கொள்ளும் நமது பங்குத்தளங்களிற் சில, அயலிலே அல்லது மறைமாவட் டத்திலே உள்ள வளம் குறைந்த-பொருளாதார நெருக்கடி மிகுந்த-பங்குகளுக்கு ஏதாவது ''பகிர்ந்து'' கொடுக்கும் நடைமுறை நம்மிடையே உண்டா என வினவினால் விடை என்ன கிடைக் கும்? ''தருமம் தன்வீட்டிலிருந்தே ஆரம்பமாகிறது'' என்னும் பொன்மொழியின் பொருள், ''தனக்குக் கண்டு தானம் வழங்கு'' என்னும் தமிழ்ப் பழமொழியின் பொருளைவிட ஆழ நீளமானது.

நாம் பரிந்து உதவிபுரிய வேண்டிய ''நம் அயலவர் யார்?'' என்ற வினாவுக்கு, கிறிஸ்து கூறிய நல்ல சமாரித்தான் உவமையும், உலக மீட்பின் 1950-வது யூபிலி வருடத் தவக்காலத்தை யொட்டித் திருத்தந்தை அனுப்பியள்ள சுற்றுமடலில் விபரிக்கப்பட்டுள்ள ''அயலவர் யார்?'' என்ற விளக்கமும், பேச்சு-எழுத்து என்ற எல்லைகளைத் தாண்டி நாம் உருப்படியான செயலில் இறங்குவது எப்படி யென்பதையிட்டு நம்மைத் தீவிரமாகச் சிந்திக்க வைக்க வேண்டியவையாகும்.

தாய் தெருப்பிச்சைக்காரி, மகன் அன்னதானக்காரன் என்ற பொருளில் நாடோடிப் பழமொழி ஒன்றுண்டு. இந்த விதமாக ''விருதுக்கு வேட்டையாடும்'' மனிதர்களும் நம்மிடையே இருக்கிறார்கள். ''வெளிவேடம் போடுகிற பரிசேயர்கள்'' என்று கிறிஸ்து கண்டித்தது அவர் காலத்தில் உள்ள பரிசேயர்களை மட்டுமன்று.

11.03.1983

**********

# குடும்பம்

இவ்வாண்டு 'குடும்ப நல ஆண்டு': திருச்சபையாற் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் அனைத்து ஆயர்களும் ஒருமித்து எமது குடும்பங் களின் நிலைமையை ஆராய்ந்து குடும்ப முன்னேற்றத்துக்கான ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் ஒரு திருமுகமாக வெளியிட்டுள்ளனர்.

இன்றைய நிலையிற் குடும்பத்தைப் பற்றி மட்டுமன்று. சமுதாயத்தில் எழும் சமய, சமூக, பொருளாதார அரசியற் பிரச்சினைகள் பற்றியும் ஒருமனப்பட்டவர்களாகக் கருத்துக்களையும், வழிகாட்டுதலையும் கொடுக்கத் துணியவேண்டும்.

இப்பிரச்சினை மட்டில் எம்மவர்கள் எடுக்கும் தீர்வுகளைக் கிறிஸ்த வர்கள் அல்லாதவர்கள் வரவேற்க மாட்டார்கள் என்பதற்காக நாமோ, தலைவர்களோ, வழிகாட்டும் பொறுப்பில் உள்ள எமது ஆயர்களோ மௌனம் சாதிக்க முடியாது என்பதே எம் கருத்தாகும்.

குடும்ப வாழ்க்கையே சமூக வாழ்வுக்கு வித்திட்டு வழிகாட்ட வேண்டும். எனினும் அந்தப் பாரிய பொறுப்பை ஏற்கும் அளவுக்கு எமது குடும்பங்கள் உருவாகவில்லை என்பது எமது கருத்து. எனவே, இந்நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டுமெனிற் குடும்பங்கள் அனைத்தும் திருமணத்துக்கு முன்னரும், பின்னரும் எவ்விதமான ஆயத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்றும், எவ்விதமான ஆலோசனைகள் அவற்றிற்கு வழங்கப்பட வேண்டும் என்பது பற்றியும் வலியுறுத்தப்படல் வேண்டும்.

நமது குடும்பங்களில் இன்று நிலவும் குறைகளுக்குக் காரணம் குடும்ப உருவாக்கலில் உள்ள குறைபாடுதான்.

"பாசமன்று பணமே", "குணமன்று குலமே" என்பன போன்ற சீரழிந்த ஆசைகளும், தலைவிரித்தாடும் சீதனப்பேயும், எமது துடிப்பான வாலிபர்களையும், யுவதிகளையும் பிழையான சூழலுக்குள் தள்ளிவிட்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

திருமணத்தின் அடிப்படை நோக்கம் இரு உள்ளங்கள் ஒருங் கிணைந்து அனைத்தையும் பகிர்ந்து வாழுவதே. எனவே, திருமணத் துக்கான ஆயத்த காலங்களிற் சம்பிரதாயங்கள், சடங்குகள் மட்டிற் காட்டப்படும் அக்கறையை விட, தம்பதிகளின் ஒன்றித்த வாழ்வுக்கான மனப்பான்மையை அவர்களுக்கு ஏற்படுத்துவதிற் கூடிய கவனம் எடுக்கப்படல் வேண்டும்.

முறிந்த குடும்பங்களை ஒன்றிணைவதற்கு வழிகாட்டுவதை விடக் குடும்பங்கள் முறியாமல் இருப்பதற்கு வழி காட்டுதல் அவசியம். இதற்கு ஏற்ற வகையில் திருமணப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படல் வேண்டும். இதற்குக் கிறிஸ்தவர்கள் முன்வரல் வேண்டும். இதுவே மிக அவசியமானதாகும்.

திருமணம் செய்வதும் குடும்பமாக வாழ்வதும் இல்லறத்தோரே. எனவேதான் குடும்பங்களைச் சரியான வழியில் உருவாக்க ஒத்துழைப்பு நல்க வேண்டியவர்களும் இல்லறத்தோரே என்று ஆயர்கள் கோரியுள்ளனர்.

திருச்சபையின் பணியில் ஒத்துழைக்க வேண்டிய இல்லறத்தோர் திருமணம், குடும்பம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிற் சிறப்பாகவும், முழுமையாகவும் ஈடுபட்டுத் தம் கடமையைச் சரிவரச் செய்யப் பின்நிற்றல் ஆகாது என்பதை வலியுறுத்துகிறோம்.

11.07.1980

**********

# குடும்பக் கட்டுப்பாடு

'பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள்'.

இது வேதாகமத்திற் முதற் பக்கத்திலேயே இறைவன் இட்டகட்டளை. அன்றில் இருந்து பிள்ளைகளே பெருஞ் செல்வங்களாக மதிக்கப்படுகின்றனர். ஒரு குடும்பத்தின் பெருமை பிள்ளைகளின் தொகையிலேயே கணிக்கப்படுகின்றது. குதூகலமான குடும்பங்களுக்கு அதிக அளவான பிள்ளைகளே காரணமாகவும் விளங்கினர்.

அந்த நிலைமாறி, "அளவோடு பெற்று மகிழ்வோடு வாழுங்கள்" என்ற ஆரவாரக் கோஷங்கள் இன்று எங்கும் ஒலிக்கத் தொடங்கி விட்டன.

குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டும் என்ற உண்மையைத் திருச்சபை ஏற்றுக்கொண்டதுடன், அதை ஒழுக்க வழியிற் செயற்படுத்துவதற்கு வேண்டிய முறைகளையும் கூறி வந்துள்ளது. அதேவேளையிற் செயற்கை முறைக் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை அது கண்டிக்கவும் தவறியதில்லை. குறிப்பாக 6ஆம் சின்னப்பரின் 'குடும்பக் கட்டுப்பாடு' என்ற சுற்றுமடல் இதைப்பற்றி தெளிவாகக் கூறியுள்ளது.

அரசாங்கம் நாட்டின் அபிவிருத்திக்காகவும் நன்மதிப்பைப் பெறுவதற்காகவும் குறுக்கு வழியிற் குடும்பத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முன்வந்துள்ளது. அதற்காகப் பல கோணங்களில் இதற்கான ஊக்குவிப்புக்களையும் கொடுக்கின்றது.

வைத்தியர்கள், தாதிகள், மருத்துவ மாதர்கள் போன்றவர்களுக்குப் பணத்தை ஏராளமாக அள்ளி இறைப்பது மட்டுமன்றி, தம்மை மலடாக்கத் துணிபவர்களுக்குச் சன்மானமும் வழங்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்துக்குப் பலியாகப் போகின்றவர்கள் ஏழைகளே. இந்நிலைகண்டு யாரும் கண்மூடிக்கொண்டு கண்டிக்காதிருக்க முடியாது. இறைவனால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கொடைகள், ஆற்றல்கள், சக்திகள் அனைத்தையும் அவன் பயன்படுத்துவதற்கு வாய்ப்பும், சுதந்திரமும் கொடுக்கப்படல் வேண்டும். அதற்கு மாறாகச் செய்யப்படும் ஒவ்வொன்றும் அதனைக் குறைக்கவோ அழிப்பதற்காகவோ மேற்கொள்ளும் நடவடிக்கை என்றே கொள்ளப்படல் வேண்டும். அத்தோடு இஃது ஒழுக்கவியலுக்கு முரண்பாடானதும், ஆன்மீக - சமுதாய - உள அமைப்பிற் புனரமைக்க முடியாத தீமைகளுக்கும் வழி கோலுகின்றது. இந்தக் கட்டத்தில் இலங்கை ஆயர்மன்றத் தலைவரின் கண்டனத்தை முற்றுமுழுதாக நாம் ஆதரிக்கின்றோம்.

இன்றைய அரசு அளவிட முடியாத தொகைகளை அபிவிருத்திக்கென்று அந்நிய நாடுகளில் இருந்து பெறுகின்றது. அந்நாடுகள் இடும் பிச்சைக்காக குடிசனத்தைக் கட்டுப்படுத்த அவை விடுக்கும் நிபந்தனைகளை ஏற்க வேண்டிய அடிமை நிலையிலும் நமது நாடு இருக்கின்றது.

அரசின் இத் திட்டத்தாற் பாதிக்கப்படுபவர்கள் இலங்கைவாழ் மக்கள் அனைவருமல்லர்; குறிப்பாக ஏழைகளும், இலங்கையின் சிறு பான்மை இனத்தவர்களும் தாம் என்பது பொதுமக்களின் கருத்து. இத்தகைய திட்டமிடப்பட்ட அநீதிகளை நாம் கண்டிக்காதிருக்க முடியாது.

மனித நன்மைக்காக அரசு இருக்குமானால் அது முதலில் மனிதனின் மகத்துவத்தை உணர்ந்து சுதந்திரத்துடன் வாழவைக்க வேண்டும்.

ஏற்றுக் கொள்ள முடியாத குடும்பக் கட்டுப்பாடு பற்றிய பிர சாரங்களைச் செய்வதும், அதனால் ஏற்படும் தீமைகளை மறைப்பதும் நிச்சயமாகத் தவிர்க்கப்படல் வேண்டும். திருச்சபையின் தலைவர்கள், குருக்கள், துறவிகள், பொது நிலையினர் அனைவரும் தத்தமது நிலைகளில் நின்று அரசு மேற்கொள்ளும் இந்த தவறான செயற்றிட் டத்தைத் தட்டிக்கேட்கும் துணிவு கொள்ள வேண்டும். அத்தோடு மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் மட்டுமல்ல, அவனைப் பொறுப்புள்ள மனிதனாக வாழவைக்க வேண்டிய பணியையும் செய்தல் வேண்டும். தன்னிலேயே தீமையான இச்செயற்கை முறையை எந்தவொரு 'நலனிற்காகவும்' பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை மனத்தில் நிறுத்துதல் எம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

24.10.1980

**********

# ஆக்கத்துக்கு உழைப்போம்

''பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போராடுகிறோம். அவர்களை அழிக்கின்றோம்'' என்று கூறிக்கொண்டு, அரசின் எல்லை மீறிய அதிகாரங்களையும் சலுகைகளையும் மற்றும் மறைமுகமான ஆதரவுகளையும் பெற்றுக்கொண்டுள்ளவர்கள் திட்டமிட்டு அழிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

''கடல் கண்காணிப்புச் செய்கிறோம்'' என்ற போர்வையில் காரைநகர் தொடக்கம் தாளையடிக்கும் அப்பால் முல்லைத்தீவு தாண்டியும், மீனவர்கள் கடலில் இறங்கித் தொழில் செய்யமுடியாமற் செய்துள்ளார்கள். தொழிலுக்குப் போகாமற் பட்டினி கிடப்பது மட்டு மல்லாமல், கடலையடுத்துள்ள அவர்களது இல்லிடங்களில் உயிருக்குப் பாதுகாப்பின்றியும் இரவு பகலாக அலைகின்றார்கள்.

விவசாயிகள் துப்பாக்கிக்குண்டுகளை எந்நேரமும் எதிர்பார்த்துக் கொண்டே தோட்டம் துரவுகளில் வேலை செய்கிறார்கள். விளைந்த பொருள்களைச் சந்தைக்கு எடுத்துப் போவதானாலும் உயிரைத் துச்சமாக மதிக்க வேண்டும்.

வியாபாரிகள் வாரத்துக்கு எத்தனை நாள் கடைகளைப் பூட்டிவைத்துவிட்டு விழிபிதுங்கிக் கொண்டு இருக்கிறார்களென்பது யாவருமறிந்த விடயம்.

முன்னோர் விட்டுச்சென்ற பொருள் பண்டங்களும், நெற்றி வியர்வை சிந்திப் பாடுபட்டுழைத்துச் சிக்கனமாக வாழ்ந்து சேகரித்துச் சின்னஞ் சிறுவர்களுக்கென வைத்திருக்கும் தேட்டங்களும் எந்நேரத்திலும் சூறையாடப்படலாம்; தீயிட்டுக் கொளுத்தப்படலாம். ஐசுவரி யங்களோடு வாழ்ந்த தமிழ் மக்கள் பல்லாயிரவர் அரச படைக ளாலும், வெறிகொண்ட பெரும்பான்மையினராலும் அரைமணியில் அபலைகளானார்கள். சூறையாடிக் கொழுத்து ருசிகண்டவர்கள் அதிகாரத்துடன் வழங்கப்பட்ட ஆயுதமுனையில், தொடர்ந்து தங்கள் வேட்டையை நடத்திக் கொண்டே போகிறார்கள். தமிழ் மக்களோ அசுர வேகத்தில் அனைத்தும் இழந்த அகதிகளாக மாறிக்கொண்டே போகிறார்கள்.

இந்த நிலையிலே ''.... கெட்ட குடியே கெடும் என்பதை இன்னும் விரைவிலே காட்டி வைப்போம்'' என்று சூளுரைத்தவர்கள் போல

எம்மவர்களும் மூர்க்கத்தனமாகக் கருமம் ஆற்றி வருகிறார்கள். அழிப்பு வேலைகளிற் காட்டும் ஒற்றுமையையும் செயற்றிறனையும் ஆக்கப்பணிகளிற் காட்டுகிறார்களில்லை. அரசின் நீண்டகால, நிகழ்காலத் திட்டமிட்ட சூழ்ச்சிகளினாற் படிப்படியாகவும், இப்போது வேகமாகவும் அழிந்துவரும் தமிழினத்தைக் கண்டு வேதனையும் விரக்தியுமுற்றுவிட்டவர்களைப் போல வேடமிட்டு வேண்டாத வேலைகளில் ஈடுபட்டுவரும் சுயநலமிகளின் கொடுமைகளும் கோமாளித்தனங்களும் எல்லைமீறிப் போகின்றன.

உதாரணமாக, அன்னை இந்திரா காந்தியின் கோரமான மறைவின்போது அஞ்சலியும் வீரவணக்கமும் வெளிப்படையாகச் செய்ய முனைந்தவர்களில் ஒரு பகுதியினர், யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பல்லாயிரம் வாழைமரங்களை அழித்து விட்டார்கள். தென்னங் குருத்துக்களையும் பாளைகளையும் அளவின்றி வெட்டிச் சரித்துவிட்டார்கள். கர்ண கடூரமான குண்டுகளை வெடிக்கவைத்து மக்களுக்குக் கிலி உண்டுபண்ணுவதிற் பணத்தையும் தங்கள் நேரத்தையும் வீண்படுத்தினார்கள். தமிழ் மக்கள் மனமொப்பிச் செய்யும் பண்பான அஞ்சலிக்கு இவர்கள் மாசு கற்பித்தார்கள் எனலாம். இவர்களுடைய பயமுறுத்தலினாற்றான் அன்னை இந்திராவுக்குத், தமிழர்கள் கோழைத்தனமாக அஞ்சலி செலுத்தினார்கள் என்று மற்றையவர்கள் கருதும்படியாயிற்று.

இத்தகைய வேடிக்கையான விடயங்களிற் செலவழிந்த பணத்தையும் சிரமத்தையுங் கொண்டு வன்செயல்களால் உணவு-உடை-இல்லம் இழந்து பரிதவிக்கும் தமிழ் அபலைகளுக்கு அன்னை இந்திராவின் பெயராற் பல உதவிகள் புரிந்திருக்கலாம். அதனை அனைவரும் ஆதரித்துப் பாராட்டியிருப்பர்.

தமிழ் மக்களைப் பாதுகாப்பதில் எங்கள் ஆற்றல்களைப் பயன் படுத்துவோம்.

9.11.1984

****************

# புத்தகம் வாசித்தல்

நாடகம், நாளிதழ்கள் தொடக்கம் தொலைக்காட்சி போன்ற நவீன கண்டறிதல்கள் வரையிலான சமூகத் தொடர்புச் சாதனங்களைப் பற்றி நாம் திரும்பவும் சிந்தித்துப் பார்ப்பது இவ்வேளையில் மிகவும் பொருத்தமானது.

மேற்கூறிய சமகாலத்திலுள்ள சமூகத்தொடர்புச் சாதனங்களுடன், காலம் கடந்தும் கற்றோர்-நல்லோர் மத்தியிற் செல்வாக்குடன் விளங்குகின்ற மற்றுமோர் தொடர்புச் சாதனம் உண்டு: அதுதான் புத்தகம்.

'வாசி-வாசி-எடுத்து வாசி'' என்று அறிவறிந்தவர்களையும் மற்றவர்களையும் தூண்டுகின்ற புத்தகங்கள் என்னும் அறிவுப் பொக்கிஷங்களைப் பல மட்டங்களிலுமுள்ள இக்காலத்தவர்கள் படிப்படியாகக் கைநெகிழ்ந்து வருகிறார்கள் என்றால் தவறாகாது. இக்காலத்தில் வாசிக்கும் பழக்கம் அருகிவருவதற்குத் தொலைக்காட்சி போன்ற 'றெடிமேட்' சமூகத் தொடர்புச் சாதனங்கள் பெருகிவிட்டமையும் ஒரு காரணம் என்று அபிப்பிராயம் வெளியிடப் படுகிறது.

புத்தகங்கள் என்று நாம் இங்கு குறிப்பிடுவது மக்களின் பண்பு, ஒழுக்கம், சன்மார்க்கம் முதலியவைகளை அழித்து, பணம் பண்ணும் நோக்கத்துடன் புற்றீசல்கள் போலப் பெருகிவரும் கீழ்த்தரமான 'மஞ்சட் புத்தக' வரிசைகளையல்ல என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அவரவர் மொழித் தேர்ச்சிக்கும் நாட்டங்களுக்கும் ஏற்ப அறிவுதரும் நூல்கள் பலவகைப்பட்டனவாக இருப்பதனை விளக்க வேண்டியதில்லை. அறிவுப் பசிக்காக மட்டுமல்லாமல், தத்தமது தொழிலின் தன்மைக்கும் தேவைகளுக்கும் ஏற்பவும் நூல்களை வாசித்து அறிவை ஆழப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். இடைநிலை-உயர்நிலை வகுப்புக்களிற் கல்வி கற்பிக்கும் ஆசிரியப் பெருமக்களைப் பற்றியும், உயிர் காக்கும் மருத்துவர்கள், சட்டத்துறையினர், நற்செய்தி அறிவிப்பாளர்கள் பற்றியும் எண்ணிப் பார்க்கும்போது, நிலைமை திருப்தியுறும்படியாக இல்லை. தொழில் பார்ப்பதற்குரிய தராதரப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கான பரீட்சைகளிற் சித்தி பெறுவதற்காகப் படித்ததன் பின்னால், பழைய

புத்தகங்களை மூட்டை கட்டி வைத்து விட்டவர்களையும், புதிய நூல்களைப் பற்றி அறியாதவர்களையும்தாம் பெருமளவிற் காண்கிறோம். இவர்கள் தம்மை வளர்த்துக் கொள்ளாமல் விடுவது மட்டுமன்றி இக்கால-எதிர்கால மக்களையுமே பாதிக்கிறார்கள: அல்லது பின்தள்ளி விடுகிறார்கள். இத்தகைய தொழில்களில் ஈடுபடுவோருக்குக் காலத்துக்குக் காலம் 'தகுதி காண் பரீட்சைகள்' நடத்தி, அவர்களது தகுதியுடைமையைப் பரீட்சித்துப் பார்ப்பது பயன்தரும் என்று பலர் கருதுகிறார்கள்.

பல்கலைக்கழகங்களிற் பயின்று பட்டதாரிகளாகி இருப்பவர்களிற் கூடப் பெரும்பான்மையினர் தாம் பயின்ற துறையைவிட மற்ற விடயங்களில் ஒன்றும் அறியாதவர்களாக இருப்பதைக் காணலாம். மொழி, இலக்கியம், வரலாறு, அரசியல், புவியியல், சமயம் போன்ற துறைகளில், சராசரி அறிவைக் கூடத் தாமாகத் தேடிக்கற்று வளர்த்துக் கொண்ட விஞ்ஞான-மருத்துவ-பொறியியல், சட்டத்துறைப் பட்டதாரிகளைப் பார்ப்பது நம்மவரிடையில் இக்காலத்தில் அரிது எனலாம். இதனாற்றான் வேறுசில நாடுகளில், கலைத்துறைப் பட்டதாரி மாணவர்கள் ஒரு விஞ்ஞானத்துறைப் பாடத்தையும், விஞ்ஞானத்துறை மாணவர்கள் ஒரு கலைத்துறைப் பாடத்தையம் கற்றக்கொள்ளப் பல்கலைக்கழக ஆரம்பக் கற்கைநெறிகளில் திட்டம் வகுத்துள்ளார்கள்.

1960ஆம் ஆண்டு இறுதியில் அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரித்துக் கொண்ட பின்னர், ஏறக்குறையக் கடந்த கால் நூற்றாண்டுக் காலப்பகுதியில், ஏனைய துறைகளை விடச் சமயபாடம் கற்றல்-கற்பித்தலில் உண்டாய வீழ்ச்சி மிகப் பெரிதென்பது யாவருமறிந்த விடயம். ஆயினும், மக்கள் மத்தியிற், குறிப்பாகப் பெற்றோரிடையே அதனைப் பற்றிய அக்கறையும் கவலையும் இருப்பதைச் செயலளவிற் காணோம். மிகப் பாரதூரமான விடயத்தில் மிகக் குறைந்த அக்கறைதானுஞ் செலுத்தப்படாமல் இருப்பது மனச்சான்று பூர்வமாக மிகக் கவலைக்குரிய விடயமே. க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகக் குறித்த நான்கு பாடங்களையும் சிரத்தையுடன் படிக்கும் உத்தமமான மாணவ மாணவியரிடையே தானும் சமயபாட அறிவு தேய்ந்து கொண்டு போவதைப் பரக்கக் காணலாம். பெற்றோரும், ஆசிரியர்களும், அதிபரும் சம்பந்தப்பட்ட பாடங்களைத் தமது பிள்ளைகள் நன்கு கற்றுப் பரீட்சையிற் சிறப்பாகத் தேறிப் பல்கலைக்கழக அனுமதி பெற்றுவிட வேண்டுமென்பதிற் காட்டும் துடிப்பில் சிறிதளவுதானும் சமயபாட அறிவு வளர்ச்சியிற் கொள்ளுவதில்லை என்று மக்கள் அறிவார்கள்.

நற்செய்தி அறிவிப்புத் தினத்தோடு ஒட்டிய இவ்வேளையில் மிகவும் கண்டிப்பாக நாம் இங்கு குறிப்பிட விரும்புவது, பிள்ளைகள், பெற்றோர், ஆசிரியர்கள், படித்தவர்கள், நற்செய்தி அறிவிப்புக்கென்று தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் ஆகியோர், நற்செய்தி (வேதாகம) நூலைப் படித்து அறிந்து கொள்வதில் எத்தகைய பழக்கமும் பயிற்சியும் நம் வாழ்க்கையில் வைத்துக்கொண்டுள்ளோம் என்பவற்றையாவது சிந்தித்து நல்லதொரு தீர்மானத்தை மேற்கொள்வது அவசியமாகும்.

21.10.1983

**********

# நல்லன செய்யும் இளைஞர்

மறைமாவட்டப் பணியாளரான குருக்களும், துறவறச் சபைகளைச் சேர்ந்த குருக்களுமாக இவ்வாண்டு 37 புதிய குருக்கள் இலங்கையில் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார்கள். முன்னொரு போதும் இல்லாத புதிய சாதனை இது.

யாழ் மறை மாவட்டத்தில் நால்வரும் மன்னாரில் ஒருவருமாக ஐவர் இப்பகுதியிலும் இறைவனின் பணிக்கெனத் திருநிலைப் படுத்தப்பட்டுள்ளனர் என்பது எமக்கு மிக்க பெருமை தரும் செய்தியே. அனைத்துலக இளைஞர் ஆண்டாகிய இந்த வருடத்தில் மேற்கூறிய சம்பவம் மிகப் பொருத்தமாக அமைந்து விட்டமையும் மகிழ்ச்சிக்குரியது.

வாழ்க்கையில் இளமைப் பருவம் மிக இனிமையானது. இளமைப் பருவம் அழகும் ஆற்றலும் நிறைந்தது. வயது முதிர்ந்த பின்னரும் இளம் பருவத்தில் நிறைவேற்றப்பட்ட சாதனைகளை எண்ணி மனிதன் பூரிப்பும் பெருமையும் அடைகிறான். எனவே, இளமைப் பருவத்தில் இன்று இருந்துகொண்டிருக்கும் இளைஞர்கள் தனித்துவமான சிறப்புக்கும் அக்கறைக்கும் உரியவர்கள். இளைஞர்கள் செய்யக் கூடிய பணிகளை இளைஞர்களேதாம் செய்ய முடியும்.

சிறந்த இளமைப் பருவத்துக்கு எமது குழந்தைகளை ஆயத்தஞ் செய்வதும், இளைஞர்களையும் யுவதிகளையும் அன்புடன் ஆதரித்து, அவர்களிடமிருந்து உச்சமான அளவுக்கு உலகு பயன்பெறும் விதத்தில் வழி நடத்துவதும் பெற்றோர்-பெரியோர்-அரசினர் ஆகியோரின் மிகப் பொறுப்பு வாய்ந்த கடமைகளாகும்.

நாம் சிருட்டித்து வைக்கும் உலகையே நமது இளைஞர் கண்டு அனுபவிக்கின்றனர் என்ற உண்மையை மறத்தலாகாது. சந்ததி சந்ததியாக இந்த வாரிசு முறை தொடருகிறது. இந்தப் பாரம்பரியமான படிமுறையிலேயே மனித சமூகம் ஆக்கம், அல்லது அழிவை நோக்கி ஏறுகிறது அல்லது இறங்குகிறது.

நமது இளம் சந்ததியினர் வாழ்ந்து அனுபவித்து, தமது அடுத்த சந்ததியினருக்கு வழங்குவதற்கு நாம் ஆயத்தஞ் செய்து கொடுக்கும் உலகம் குறைகள் நிறைந்ததாயின், இளைஞர்கள் வெறுப்பும் விரக்தியும் கொண்டு பாதகமான வழிகளில் திசை திரும்புவது கண்கூடு.

வேறு சில குறுக்கு வழிகளாலும் தீய சகவாசத்தாலும் அங்குமிங்குமாகச் சில இளைஞர்கள் தீயவர்களாகிப் போவது வேறு.

நமது பெரும்பாலான இளைஞர்கள் என்ன வழியிற் போகிறார்கள் என்பதற்கு நாம்தான் பொறுப்பு ஏற்க வேண்டும். நமது இளைஞர்கள் தமக்கும் தமது சந்ததிக்கும் பயனுடையவர்களாக வாழுவதற்கு நாம் ஒவ்வொருவருமே நமக்குள்ள பொறுப்புக்களின் அடிப்படையில் தீவிர முயற்சி செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

இளம் குருக்களைத் தோற்றுவிப்பது மட்டுமன்று, இளம் குருக்களும் மூத்தவர்களும் என்னென்ன வழிகளில் இளைஞர் பணிகளிற் பயனுள்ள வகையில் ஈடுபடலாமென்பதற்குக் கூட்டு முயற்சியும் பொது இலக்குகளும் அவசியம். மூலைக்கு மூலை தமக்குத் தமக்குத் தோற்றிய வகையில் ஏகோபித்த போக்கின்றி இயங்குவது நன்மைக்குப் பதில் பாதகமான விளைவுகளை உண்டுபண்ண ஏதுவாகவும் கூடும்.

முதியவர்களுடைய வழிவகைகள் மிகத் தீவிரவாதம் கொண்ட சில இளைஞர்களுக்குப் 'பத்தாம் பசலி'த்தனமாகப் படலாம். அதனால் 'நல்வழி நிற்கும் இளைஞர்களைத் துணைக் கொண்டு சமகாலத்தினரான இளைஞர்களைக் கட்டுப்படுத்தி வழிப்படுத்துதல் இலகுவாக இருக்க முடியும்.

இந்த நாட்டிலே பெரும்பான்மையினர், சிறுபான்மையினா ஆகிய சமூகத்தவரிடையே இளம் கிறிஸ்தவ துறவிகள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுதல் வருங்காலத்திற் பிணக்குகளைத் தவிர்த்து இணக்கங்களை உண்டு பண்ண வழிவகுக்க முடியும்.

9.08.1985

**********

# அழியவிடுதல் ஆகாது

மேற்குப பாகிஸ்தானிலிருந்து கிழக்குப் பாகிஸ்தான் பிரிந்து, பங்களாதேஷ் ஆகப் புனர்ஜென்மம் எடுப்பதற்கு உண்டான பிரசவ வேதனையின்போது இடம் பெற்ற வழக்கமான அக்கிரமச் செயல் களுள் ஒன்றாக, பாடசாலைகள்-பல்கலைக் கழகங்கள்-நூல்களை அழித்தல், பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் முதலிய கல்விமான்களைக் கொலை செய்தல் ஆகிய கல்வி கலாசாரத்தின் ஊற்றுக் கண்களை அடைக்கும் கொடுமையும் இடம் பெற்றது.

இந்த நாட்டிலும் யாழ். பொதுஜன நூலகத்தை அதன் முழு அறிவுச் செல்வங்களுடன் எரியூட்டியதில் தொடங்கிய மேற்படி கைங்கரியம், இப்போது பருத்தித்துறையில், தலைசிறந்த கல்லூரிகளையும் நூலகங்களையும் தீயிட்டு அழிப்பதிற்போய் நிற்கிறது. அத்தியாயங்கள் தொடரலாம்.

தமிழனை அடிமைப்படுத்திச் சலுகைகள் வழங்க, திட்டமிட்டுச் செயற்படுவோா மூட்டி விடுகிற அறிவை அழிக்கும் தீயிலே நாமும் எண்ணெயும் விறகும் போட்டு அதனைச் சுவாலிக்கச் செய்து தற்கொலை முயற்சிகளில் தாராளமாக ஈடுபட்டு வருவது எத்துணை பரிதாபத்துக்குரிய நிலை என்பதை நம்மவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

நிகழும் 1984ஆம் ஆண்டிலே பாடசாலைகள் கூடிய நாள்கள் எத்தனை? பாடத்திட்டத்தின் பிரகாரம் வகுப்பு-வேலைகள் நடைபெற்ற நாள்கள் - பாடவேளைகள் எத்தனை? சில பிரதான பாடங்கள் வருடத்திற் குறைந்த பட்சம் நடைபெற வேண்டிய 180 பாடவேளைகளில் எத்தனை பாடங்கள் முழுமையாக நடைபெற்றுள்ளன? நடைபெற்ற அரை குறைப் பாடங்களுக்குச் சமுகமளித்த பிள்ளைகள் எத்தனை பேர்?

மூன்றாம் பருவம் ஆரம்பித்த சில வாரங்களுக்குள்ளேயே பாடசாலை நாள்கள் எத்தனை, பகிஷ்கரிப்பு நாள்கள் எத்தனை என்று இலகுவாக எண்ணிப் பார்த்துவிடலாம். என்னதான் அழிந்து போனாலும், கல்வி-அறிவு-ஒழுக்கம்-பண்புகள் முதலிய செல்வங்களையும் சீலங்களையும் பலியிடாதிருப்போமாக.

''சுவரைப் பாதுகாக்க வழியைக் காணோம், சித்திரத்துக்குக் கேடு வந்துவிடப் போகிறது என்று அழுவானேன்'' என்று சிலர் கேட்பது காதில் விழுகிறது. தமிழனின் தனிப்பெரும் செல்வமாகிய அறிவுப் பயிரை அழிக்கும் வேலையில் எதிரிக்குத் தோள் கொடுக்க வேண்டாமென்றுதான் கூறுகிறோம்.

முறையான கல்வித் தேர்ச்சியும் அதனோடு இயைந்த பிற சீலங்களும் இல்லாத ஒரு சந்ததியை நாமே உருவாக்கி வைத்து விட்டு, பிறகு பார்த்துக் கொள்ளுவோம் என்று கூறுவது ஒரு நூற்றாண்டுக்கு நாம் பின் செல்வதற்குச் சமன். ஏனென்றால், இவை பெரும்பாலும் பாரம்பரியமாகத் தொடர்ந்து வரவேண்டிய அருங்கலைப் பண்புகள். 5 வயது தொடக்கம் 18-20 வயதுள்ள ஆண்-பெண் பிள்ளைகள், பாடசாலைக்குப் போய்ப் படிக்க வேண்டிய பொன்னான கற்கும் பருவத்தைப் பாழாக்கிக்கொண்டு பொழுதைக் கழிப்பதைக் காணும் போது கண்ணீர் விட வேண்டியிருக்கிறது.

அரசியற் கொந்தளிப்புக்களும் போராட்டங்களும் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளும் பாடசாலைகளுக்கும் பரீட்சை மண்டபங்களுக்கும் உள்ளே நுழைய அனுமதிக்கலாகாது. இதற்காகத்தான் நம்மை அழிக்கத் துடிப்பவன் பாடசாலையையும், நூலகத்தையும் எரிக்கிறான் என்றால், நாமும் கூடிக் கல்வியைப் பகிஷ்கரிப்பது நம்மை நாமே அழிப்பதாகும் என்கிறோம்.

திட்டமிட்டுக் கருமம் ஆற்றுகிறவர்கள் தென்னிலங்கையிலே அவர்களுடைய எதிர்கால சந்ததியினர் ஏற்றம் பெறுவதற்கு என்னவெல்லாமோ செய்கின்றார்கள். ஆனால், நாம் இங்கே விழிகண் குருடர்களாகத் துப்பாக்கி முனையிலே பாழுங் கிணற்றில் வீழ்கிறோம். குழந்தைகளை வாழ விடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம்.

14.09.1984

**********

# பல்கலைக்கழக மாணவர்

பல்கலைக்கழக மாணவர்கள் என்று சொன்னவுடன் எத்தனையோ பேருடைய மனத்திரைகளில் விழும் படங்கள் விவிதமானவை: ஒருவருடைய சொல்லுக்கும் கட்டுப்படாத அடங்காப்பிடாரி இளைஞர் கூட்டம்; புத்தகம் படித்த ஏட்டுச் சுரைக்காய்கள்; படித்து உருப்பட ஆர்வமில்லாத தெருச்சுற்றிகள்; சூத்திரதாரிகளுடைய தாளத்துக்கு ஆட்டம் போடும் சொந்த அறிவற்ற பொம்மைகள்; பெற்றோருக்கும் தெரியாமல் 'பிழையான' தொடர்புகள் வைத்துக் கொண்டிருக்கும் ஒழுக்கமற்றவர்கள்; இளமை முறுக்கில் ஆகாயக்கோட்டை கட்டும் பகற் கனவுக்காரர் என்றிவ்வகையான பற்பல மனக்கருத்துக்கள் கொண்டுள்ள அவசர முடிவுக்காரர் அனேகர். நாளை நமக்கு விடிவைத் தேடித்தரப் போகிற அறிவுள்ள இளம் போராளிகள் என்று ஏற்றி நினைக்கிறவர்களும் பலர். ஆனால், மேடைப் பேச்சாளர்களோ நாளைய உலகின் சிருட்டி கர்த்தாக்கள், எதிர்காலத்தின் தலைவர்கள் என்று உச்சி குளிர வருணிப்பர்.

பல்கலைக்கழகத்தை எட்டிப்பிடித்துவிட்ட மாணவர்களின் இன்றைய சராசரி நிலை வெளியில் உள்ளவர்களாற் சரியாகக் கணிக்க முடியாத ஒரு புதிர் நிலையாகத்தான் காணப்படுகிறது. சமுதாயத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட கனிகளாகவேதாம் அவர்கள் பல்கலைக்கழகம் புகுகின்றனர். இக்கால-எதிர்காலச் சமுதாயத்துக்கு ஆக்கமும்-ஊக்கமும்-உயிரூட்டலும் கொடுக்கும் சக்திகளாகத் திகழத் தம்மைத் தயார் பண்ணிக்கொள்ளவே அவர்கள் கருதுகின்றனர். எத்தனையோ தருணங்களிற் சமுதாயத்தின் இன்ப-துன்பங்கள், ஏக்கங்கள்-கலக்கங்கள், நட்டங்கள்-இழப்புக்கள் நேர்ந்தவிடத்தெல்லாம் பல்கலைக்கழக இளைஞர்களும் யுவதிகளும் சமுதாயத்தின் "பாகைமானிக"ளாகவும், 'வழுக்கு நிலத்து ஊன்றுகோல்'களாகவும் விளங்கியமையை மறக்க முடியாது.

இன்றைய பல்கலைக்கழக மாணவர்கள் புத்தகப் படிப்பில்-பரீட்சைகளில் மட்டும் தம் பொழுதைக் கழிக்கும், புலனைச் செலுத்தும் மாணவர்களாக இருக்க முடிவதில்லை. அரசியல் அலைகள், இயற்கைக் கொந்தளிப்புக்கள், சமூகச் சூழலின் வீச்சுக்கள் அவர்களை நேரடியாகப் பாதிக்கின்றன. அந்தப் பாதிப்புக்களின் தாக்கத்துக்கு ஊரோடு சேர்ந்து அவர்களும் ஈடுகொடுத்துக் கொண்டுதான் - நிதர்சன உலகில் வாழும் இளைய சந்ததியினராகத் தாம் - இயற்கையோடிணைந்து படிப்பையும் தொடர முடிகிறது. சமுதாயம் பசி, அழுகுரல், உயிர்ப்பயம், பேரிழப்பு முதலியவைகளோடு எதிர் நீச்சலிட்டுக் கொண்டிருக்கையிற்

பல்கலைக்கழக மாணவர் அறையைப் பூட்டிக்கொண்டு படிக்க முடியுமா? 'படித்து ஆவதென்ன?' என்ற கேள்வியும் அவர்களிடையே தோன்றி நிற்பதில் ஆச்சரியம் இல்லை. இன்றைய பல்கலைக்கழக மாணவன் தன்னை மட்டுமல்லன், தான் வாழப்போகும் சமுதாயத்தையும் முன் வைத்தே படிக்கிறான். குடும்ப வறுமையைத் தெரிந்த பிள்ளையைப் போலச் சமுதாயத்தின் உண்மை உறுப்பினனாகப் படித்துப் பட்டம் பெற முடியுமா என்று பார்க்கிறான்.

எனவே, குறிப்பாக புதிய, அறிவறிந்த, கற்ற இளம் சமுதாயம, வாழத் துடிக்கும் உண்மை உலகில் தம்மை ஒன்றுபடுத்தி, அன்பிலும், உண்மையிலும், சமத்துவத்திலும், சுயநிர்ணயத்திலும் உரிமையோடு விழித்தெழ நாமனைவரும் நமது ஒத்துழைப்பை நல்குதல் அவசியம். பல்கலைக்கழக மாணவர்கள் அனைத்தும் அறிந்த அறிஞர்களல்லாவிடினும், அறிவிலும் வாழ்விலும் வளர முனைந்து நிற்பவர்கள். அவர்களை ஊக்குவித்து வழிகாட்டி, அவர்கள் அறிவிலும் சமூக நலன்களுக்கான உழைப்பிலும் முன்னேறி ஒளி நிறைந்த எதிர்காலத்தைக் காண எமது ஆதரவை நல்குவோம்.

20.07.1984

**********

## வாழ்க்கைக்கு உகந்த கல்வி

மற்றெல்லாவற்றுக்கும் மேலாகக் கல்வியானது மனித சமுதாயத்தை நிகழ் காலத்திற் சரியான பாதையில் வழி நடத்தி, வளமுள்ள எதிர்காலத்துக்கு இட்டுச் செல்கிறது என்பது உலகம் கண்ட முடிவு.

இந்த நாட்டிலே அந்நியர் ஆட்சிக் காலத்தில், குறிப்பாக ஆங்கிலேயர் காலத்தில், ஆங்கில மொழியும் பிறவும் 'குடியேற்ற நாட்டு' மக்களாகிய எம் முன்னையோருக்கு வழங்கப்பட்டன. இலிகிதர் முதலிய சிற்றூழியர்களைக் குறைந்த செலவில் உள் ஊரிலே உற்பத்தி செய்வது அவர்களது முதல் நோக்கமாயிருந்தது. மதமாற்றம், பணப்பலம் முதலிய சில காரணிகளால் மிகச் சிலர் உயர்கல்வி கற்றுப் பெரிய பதவிகளையும் அரச கௌரவங்களையும் பெற்றிருந்தனர் எனினும், மிகப் பெரும்பாலோருக்கு வழங்கப்பட்ட கல்வி, நாட்டினது எதிர்காலத்தைக் கட்டியெழுப்பவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

பல்லாண்டு காலமாகப் பழக்கப்பட்டுப் போய்விட்ட அந்த அந்நியச் சரக்கான கல்வித் திட்டம் எம்மவர் மத்தியில் ஊறி விட்டதனாலும், வெள்ளை உடைப் பதவிகளுக்கும் அதிகாரம் மற்றும் செல்வாக்குகளுக்கும் அ∴து இலகுவான குறுக்குப் பாதையாக அமைந்திருந்தமையினாலும், அதனை நாட்டுக்கு உபயோகமான முறையில் மாற்றியமைக்க அநேகர் விரும்பவில்லை. அன்றியும் பரீட்சை மண்டபங்களில் அமர்ந்து வெள்ளைக் கடுதாசிகளில் விடை எழுதிப் பட்டம் பெறும் 'சுகமான முறை'களையும் இழக்க விரும்பவில்லை.

படிப்பதும், பரீட்சை எழுதிப் பட்டம் பெறுவதும், உயர் பதவிகளை வேட்டையாடுவதும் ஓர் 'உயர்மட்ட சுகபோக மரபு முறை'யாக அமையும் விதத்திலே இந்நாட்டின் கல்விமுறை இன்னமும் அமைந்திருப்பது முன்னேற்றமடைந்த வெளி உலக மக்களுக்கு நகைப்பாகவும் இருக்கலாம்.

நாட்டினதும் மக்களினதும் நிகழ்கால-எதிர்கால சுபீட்சத்தை முன்வைத்து, காலத்தின் வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் ஏற்றவகையிற் கல்வித்திட்டத்தை மாற்றியமைத்தல் ஆட்சியாளரதும் கல்விமான்களினதும் தலையாய கடனாகும்.

விவசாயம், தோட்டத் தொழில், கடற்றொழில், கைத்தொழில் முதலாம் நாட்டின் அடிநாதமான துறைகளிலே அறிய வேண்டிய - செய்ய வேண்டிய கருமங்கள் பல துறைகளிற் பரந்து கிடக்க, கல்வித் துறையில் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருப்பது விவேகமற்றதும், சுயநலமானதும், பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கப் பார்ப்பதுமான குறுகிய நோக்குடைய செயலாகும்.

சுயசிந்தனையற்ற, 'ஏன்' என்ற பேச்சுக்கே இடமில்லாத, அனாவசியமான கட்டுப்பாடுகள் நிறைந்த வகுப்பறைக் கற்பித்தல் முறைகள் இன்று செல்லாக் காசாகிவிட்டன. அமைச்சல், ஒழுக்கம் என்ற பண்புகளைப் பாதுகாக்கிறோம் என்று கூறிக்கொண்டு, கல்விப் போதனைகளையும் அடக்குமுறையில் நடத்தி, ஏட்டுச் சுரைக்காய்களைத் தொடர்ந்து உற்பத்தி பண்ணுவதிற் பொருளில்லை.

பகிரங்க எழுத்துப் பரீட்சைகளிலே உயர்ந்த நூற்று வீதத்திலே மாணவர் சித்தியடைந்து விட்டால் அரும்பெரும் சாதனை புரிந்து விட்டதாகத் திருப்திப்படும் பாடசாலை நிர்வாகத்தினர், தாம் 'கற்பித்து' வெளியேவிட்ட மாணவ-மாணவியரின் எதிர்கால

வாழ்க்கை, ஆன்மீகநலம் முதலியன தம்மால் எந்த அளவிற் சீரமைக்கப்பட்டன எனப்பதில் கூறக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். மறைக்கல்வியும், சமய அனுட்டான - பழக்க வழக்கங்களும் மாணவர்களுடைய வாழ்க்கையிற் பிரதிபலிக்கத் தக்கதாக நாம் என்ன செய்கிறோம் என்று ஒவ்வோர் ஆசிரியரும் அதிபரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வாழ்க்கைக்கு உகந்த கல்விமுறை நாட்டுக்கு அவசியமான மூலநிதி என்பது அழியாத உண்மை!

19.07.1985

**********

# கண்ணின் மணியே

வீட்டுக்கு வெளியே தெரிந்தும் தெரியாமலும், இன்று பெரும்பாலான பெற்றோர் தங்கள் ஆண்-பெண் பிள்ளைகளுடைய போக்கைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள். இந்தப் பெற்றோரிற் பெரும்பாலார் தாம் விதைத்ததையே அறுவடை செய்கிறார்கள் அல்லது தங்கள் பிரதி பிம்பத்தையே பிள்ளைகள் உருவிற் காண்கிறார்கள் என்பதனை மறந்து விடுகிறார்கள் எனலாம்.

பாலூட்டும் பருவத்திலிருந்தே பிள்ளைகளுடைய பண்பு - பழக்க வழக்கங்களிற் கண்ணுங் கருத்துமாயிருந்து வளர்த்தெடுத்த பெற்றோர் கவலைப்பட நேருவது அரிது. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்', 'ஐந்தில் வளையாதது ....' என்ற தமிழ்ப் பொன்மொழிகள் சாகாவரம் பெற்றவை. மிகக் கூர்மை படைத்தவையும் ஒரு முகப்படுத்தப்பட்டவையுமான பார்வை, கேள்வி ஆகிய புலன்கள் படைத்த பாலகர்கள் தம்பெற்றோர் - மூத்த சகோதரர்கள் வீட்டிலுள்ள பெரியோருடைய ஒவ்வொரு சிறு சொல் - செயலையும் கிரகித்துக் கொள்ளுகிறார்கள். குழந்தை படமெடுக்கும் கருவி மட்டுமன்று: பெரியவர்களிலிருந்து உருவமுள்ள - உருவமற்ற அனைத்தையும் பிரதி பண்ணிக் கொள்ளும் அற்புதக் கருவி என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

குழந்தைக்கு அது வாழும் 'குடும்பம் பல்கலைக்கழகம்' என்பதன் பொருள் மிக விரிவானது. நல்ல பல்கலைக்கழகத்திலே குழந்தையைப் பயிலவைப்பதையே எவரும் விரும்புவர்.

இந்தக் காலத்து நம்முடைய வீடுகள் விஞ்ஞான சாதனங்களால் நிரம்பியுள்ளன. எங்கள் குழந்தைகள் பல்வேறு விடயங்களை - வயதுக்கு அப்பாற்பட்டவற்றையும் கூட - கிரகித்து அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கள் நிரம்ப உள்ளன. பள்ளிக்கூடம் போகாத பாலகரும் கூடப் பெற்றோருடன் வீற்றிருந்து பாகுபாடில்லாமல் தொலைக்காட்சி பார்க்கும் காலமாக மாறிவிட்டது. குழந்தைக்குப் பாலைத்தான் பருகக் கொடுக்கலாமே தவிர, சில விசித்திர புத்திக்காரரைப் போன்று மதுவைக் கொடுக்கலாமா? காலத்தின் கோலத்திற்கேற்ப அறிவு மலர்ச்சி சம்பந்தப்பட்டமட்டிற் குழந்தை கூடிய விடயங்களை அறிந்து கெட்டிக்காரனாக வளர்ந்து வருவதை அனுமதிக்க முடியுமாயினும், ''பிஞ்சிலே பழுக்க'' வைக்கப் பெற்றோரே கண்மூடித்தனமாக உடந்தையாயிருப்பதை என்னென்பது? பிறகு மனம் வருந்துவதின் பொருள் என்ன?

காலங் காலமாகவே குழந்தை ''ஏன்'' என்று பெரியவர்களிடம் கேள்வி கேட்டுத்தான் அறிவு முதிர்ச்சி பெற்றான். ஆனால், இன்று அந்த ''ஏன்'' என்ற வினா விபரித்துக் கூற முடியாத அளவுக்குப் பல்துறைப்பட்டுப் பெற்றோரே பிள்ளையிடம் ''ஏன்'' என்று கேட்டுப் பரிதவிக்கும் காலமாகிவிட்டது. எப்படியாயினும் தக்க பருவத்திற் பெற்றோர் பிள்ளையிடம் ''ஏன்'' என்று கேட்டு அடித்தும் அணைத்தும் வளர்த்திருப்பின் பின்னாலே கண்ணீர்விடப் பெரும்பாலும் நேராது.

அருமையாகப் பெற்றெடுத்த குழந்தையைக் கண்ணின் மணியாகப் போற்றி வளர்ப்பதும் வளர்க்க வேண்டியதும் பெற்றோரது கடமை யாயினும், "பொன்னின் கத்தியென்று வயிற்றிலே குத்திக் கொள்ளாமற்" பெற்றோர் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

"எனக்குச் சமயம் படிப்பிக்கிற ஆசிரியர் வேண்டாம்; சமயத்தை அனுஷ்டிக்கிற ஆசிரியர்தான் வேண்டும்": வாழும் பிள்ளையின்

கூற்று இது. அதுபோல 'எனக்குக் கட்டளைகள் இடுகிற அம்மா - அப்பா வேண்டாம், சொல்லுவதன்படி செய்துகாட்டுகிற பெற்றார்தான் வேண்டும்' என்று குழந்தை நமக்குச் சொல்லுகிறது என்று அனுதினமும் கருதி நடக்கிற பெற்றோர் பிள்ளைகளாற் பிற்காலத்திற் பெருமையடைவதற்குத் தடைவரக் காரணமில்லை.

அன்பு, அறிவு, ஆற்றல், இறைபக்தி, பணிவு முதலாம் நற் குணங்களைப் பிள்ளை பெற்றோரிடமிருந்து முதுசொத்தாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். வீட்டிலே பெற்றோரை மதியாத பிள்ளை வெளியிலே பெரியோரைக் கனம் பண்ணுவான் என்று எதிர்பார்ப்ப தெப்படி? வீட்டிலே தன் உடன் பிறப்புக்களுக்கு அன்பு செய்யும் - பகிர்ந்து வாழும் பிள்ளைதான் உலகத்திலே துன்புறும் மக்களுக்கு உதவிக் கரம் நீட்ட முன்வருவான்.

**24.02.1984**

************

## 'விடுதலை விடுதலை...'

அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறமுன்னரே விடுதலை கிடைத்துவிட்டதாகக் கற்பனை பண்ணி, நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றத் தாழ்வின்றி விடுதலையின் பலனை அனுபவிப்பதாகப் பாடிக் களித்தார் பாரதியார். விடுதலை பெற்ற பாரத நாட்டிலே இன்று எல்லா மக்களும் சமமான சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கின்றார்களா? என்பது வேறு கேள்வி.

நாம் இங்கு குறிப்பிடுவது அத்தகைய விடுதலையையன்று: பாடசாலை விடுதலையை. நடைபெறவிருக்கும் உயர்தரப் பரீட்சைகளைக் காரணங் காட்டி அரசாங்கப் பாடசாலைகள் நீண்ட நாள்களுக்கு மூடப்படவிருக்கின்றன. பாடசாலைப் படிப்பு, ஒழுங்குக் கட்டுப்பாடுகள், வேறு கெடுபிடிகளிலிருந்து விடுதலையாகிப் பிள்ளைச் செல்வங்கள் வீடுகளுக்கு வரப்போகிறார்கள். ஐம்பது நாள்களும் அல்லோலகல்லோலந்தானா? அல்லது பயனுள்ள வகையில் விடுதலை நாள்களைச் செலவிடப் பெற்றோரும் மற்றவர்களும்

பிள்ளைகளுக்கு வழிகாட்டுவார்களா? பிள்ளைகளும் பெரியோர்களது நல்லவழி காட்டுதலுக்கிணங்கி நடந்து நலம் பெறுவார்களா? பிள்ளைகள் விடுதலை காலத்தைப் பயனுள்ள முறையிற் கழிக்க என்ன செய்யலாம்? பிள்ளைகளுக்கு நாட்டமுள்ள சங்கீதம், நடனம், ஓவியம், தையல், மனையியல் முதலிய ஏதாவதொரு கலையிற், சிறப்பான பயிற்சியும் தேர்ச்சியும் பெற ஒழுங்குகள் செய்யலாம். உள் ஊரில் அல்லது வேறு இடங்களில், பேச்சு, கட்டுரை, சிறு கதை, கவிதைப் போட்டிகள் நடைபெறும் வாய்ப்பு இருப்பின் அவற்றிற் பங்குபற்றுமாறு தூண்டிவிடுதல் பயனளிக்கும்.

சுயமொழி மூலமான கல்வி நடைமுறைக்கு வந்த பின்னர் பிறமொழிகள் பயிலும் வாய்ப்பு அற்றுவிட்டதோ என இப்போது பொதுமக்களும் ஆட்சியாளரும்கூட வருந்துகின்றனர். அன்றியும் இளைஞர்களும் யுவதிகளும் வெளிநாடுகளுக்குப் போய்ப் பணம் சம்பாதிக்கப் போட்டிபோட்டுக் கொண்டு துடிக்கின்றனர். ''நீ O/L சோதனையைப் பாஸ் பண்ணு: நான் உன்னை வெளியாலை கூட்டிப்போவேன்'' என்று அண்ணன் தம்பிக்கு ஊக்கமளிக்கும் காலமிது. ஆங்கிலமும் சம்பந்தப்பட்ட பிறநாட்டு மொழியும் சிறப்பாகக் கற்று மொழியாட்சி பெறுவதற்கு இந்த நீண்ட விடுதலை பொன்னான சந்தர்ப்பமல்லவா? சுயமொழியிலோ, பிறமொழியிலோ தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சி பெறுவதற்கு ஆர்வம் உள்ள பிள்ளையொன்றுக்கு இந்த லீவு காலமே போதுமானதாயிருக்கும்.

நண்பர்கள் உறவினர்களான மேசன்மார், தச்சுத்தொழிலாளருடன் லீவு காலத்தில் உதவியாளராக வேலைக்குப் போய் நேரத்தைப பயனுறச் செலவிட்டுப் பணமும் சம்பாதிக்கும் மாணவர்கள் பலரை நாமறிவோம். அவர்கள் வருடமுடிவிற் பிரசித்த பரீட்சையிலும் சோடை போகவில்லை.

ஆர்வமும், செயற்றிறனும் உள்ள பங்குத் தளங்களிலே இத்தகைய நீண்ட லீவு காலத்தில் எவ்வளவோ பயனுள்ள பணிகள் நிறைவுபடுத்தப்படலாம். "பாலுமாயிற்று, அதுவே மருந்துமாயிற்று" என்றவாறு பிள்ளைகளைக் கொண்டு எதிர்பார்த்த கருமத்தை இலாபகரமாகச் செய்வித்து முடித்தலோடு, பிள்ளைகளுக்கும் பயிற்சியும் செயற்றிறனும், பொதுநலப் பணி புரிவதில் நல்மனப் பாங்கும் ஏற்படும். அதே வேளையில் தீமைகள் பல தவிர்க்கவும்படும்.

கிராமத்திலே உள்ள பெரியவர்கள் சங்கம், சனசமூக நிலையம், நூல்நிலையம், கிராமாட்சி மன்றம், கிராம முன்னேற்றச் சங்கம், கோவிற் சபை என்பவற்றுள் ஒன்றில் ஊருக்கு அவசியமான பொது

நலப்பணியில் லீவு நாள்களில் தங்கள் பிள்ளைகளை ஈடுபடுத்துவது நல்ல முறை. அவர்களுடைய மாபெரும் சக்தியைக் கொண்டு விளையாட்டு மைதானம், திறந்தவெளி அரங்கு, வேறு பொது நிலையங்கள் செப்பனிடப்படலாம்; பொதுப்பாதை சீரமைக்கப்படலாம்; எதிர்காலப் பெரியவர்களான பிள்ளைகள் தமக்குள் ஒற்றுமையும், சேவை மனப்பான்மை பெறவும் இச்சிரமதானப் பணிகள் உதவுவனவாகும்.

பிள்ளைகள் வளர்கிறார்கள்' என்று நாம் கூறுவதில்லை; 'நாம் பிள்ளைகளை வளர்க்கிறோம்' என்றுதான் சொல்கிறோம். பாடசாலைக் கட்டுப்பாட்டிலும் நேரசூசியிலும் நின்று விடுபட்டு லீவில் நிற்கும் பிள்ளைகளைச் சிறப்பாகக் கண்காணிக்கப் பெற்றோர் கடமைப்பட்டவர்கள். சில விடயங்கள் "தெரிந்த பழைய கதை" களாகப் போய்விடுவதில்லை. அதாவது நமது பிள்ளைகளுடைய நண்பர்கள், அவர்கள் புழங்கும் இடங்கள், கூர்த்து நிற்கும் அவர்களது நாட்டங்கள் - பழக்கங்கள் முதலியனபற்றிப் பெற்றோர் அக்கறையுடன் கண்காணிப்புச் செய்ய வேண்டும். வளர்ந்துவரும் பயிரை ஒருமுறை ஆடு கடிக்க விட்டால் அவ்வளவுதான்! நமது பிள்ளைக்குப் பின்னால் நமது ஆன்மா சுற்றிவரவேண்டும் என்று சொன்னாலும் பொருந்தும். பிள்ளைகளைப் பற்றிய பெற்றோரது கடமை இத்தகைய லீவு காலத்தில் மிகப் பொறுப்புள்ளது என்பதை மீண்டும் ஞாபகமூட்டுகிறோம்.

23.07.82

*************

# வாழ்ந்து காட்டும் ஆசிரியர்

...ஆசிரியர் கருத்தரங்குகள், ஒன்றியங்கள், சங்கங்கள், விழாக்கள், பயிற்சி முகாங்கள்... இவை மலிந்திருப்பதை நாம் அவதானிக் கின்றோம். இந்நாள்களில் யாழ்நகரில் வெவ்வேறு மறைமாவட் டங்களிலிருந்து வருகைதந்திருக்கும் மறை ஆசிரியர்களுக்குரிய பயிற்சி ஆரம்பித்துள்ளது.

எந்தவொரு வேலைக்கும் தொழிலுக்கும் பயிற்சி அவசியம். திட்டமிடப்பட்ட பயிற்சியோடு எந்தத் தொழிலையும் திறம்படச் செய்லாம். ஆனால், ஆசிரியத் தொழிலை எடுத்துக் கொண்டால், பயிற்சி மட்டும் போதாது என்பதை உணருகிறோம். அதனைத் "தொழில்" என்று கூறாமல், "பணி" என அழைக்கின்றோம். "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்றார்கள் எம் முன்னோர்.

ஆசிரியன் புத்தக அறிவைக் கொடுக்கும் நூல்நிலையமுமல்லன்; பரீட்சையிற் சித்தியடைய வைக்கும் இயந்திரமுமல்லன். ஆனால் வாழ வழிகாட்டும் குரு. அந்த ஆசிரியன் அறிவைக் கொடுக்கிறான்; நற் பண்புகளை வளர்க்கிறான்; வாழ்வில் வரும் மேடு பள்ளங்களைச் சமாளிக்கப் பழக்குகிறான்; பரம்பொருளில் நம்பிக்கை வைத்து ஓர் இலட்சியத்துடன் தன் வாழ்க்கைப் படகை ஓட்ட வழிகாட்டும் கலங்கரை விளக்காக விளங்குகிறான்.

இவற்றை வார்த்தைகளால் மட்டும் அவன் படிப்பித்தால் அ∴து "ஏட்டுச் சுரைக்கா"யாக முடியும். அவ்வாசிரியனால் மாணவருக்கு நிறைவான பலன் கிட்டாது. மாறாக ஆசிரியன் தனது வாழ்க்கை முறையினாலும் முன்மாதிரிகையினாலும் படிப்பித்தால் அது நிச்சயம் பயனளிக்கும். "எந்தவொரு மாணவனும் ஆசிரியன் காட்டும் வழியில் வாழ்கிறான் எனக்கண்டால், அவ்வாசிரியன் தான் கற்பிக்கும் வழியில் வாழ்கிறான்" எனக் கூறினார் மறைந்த திருத்தந்தை ஆறாம் சின்னப்பர். இவ்விதமான ஆசிரியர்கள் இன்றும் இருக்கிறார்கள். வேறு வேலை வாய்ப்பின்றி இத்தொழிலை ஏற்றுக்கொண்டவர்களும், இத்தொழில் மூலம் வாழ்க்கை நிலையை உயர்த்த வழியில்லை என்று வருந்தும் ஆசிரியர்களும் தம் அழைப்பைப் பணியாக ஏற்று, வாழ்வினாற் கற்பித்தால், உள்ளத்தில் நிறைவு பெறுவது மட்டுமன்று, வாழத் தொடங்கும் இளம் உள்ளங்களுக்கு அளப்பரிய நன்மை செய்தவருமாவர் என்பதில் ஐயமில்லை.

27.02.1981

*************

*யாழ்ப்பாணத்தில் பிரசுரமான சற்றடே றிவியு, (Saturday Review) என்ற வார இதழ் தடைசெய்யப்பட்டபோது.....*

## விமர்சனம் வேண்டாமா?

''எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்பது திருக்குறள். மற்றவர்களுடைய கருத்துக்களை நாம் கேட்டறிய வேண்டும். விருப்பு-வெறுப்பின்றி அக்கருத்துக்களைச் சீர்தூக்கி, பொதுநலனை முன்வைத்துச் செயற்பட வேண்டும். தலைமை தாங்குவோருக்கு இந்த அறிவுரை சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

இன்றைய உலகில் 'விமர்சனம் செய்தல்' என்பது பல துறைகளிலும் விரிவாக நடைபெறுகிறது. விமர்சனத்துக்கு உள்ளாகாதவர் எவருமிலர். ஒருவருடைய சொல்-செயல் என்பவற்றை மற்றவர்கள் ஏதோ ஒரு கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்து அபிப்பிராயம் வெளியிடுதல் வழக்கம். மனித சமூகத்தில் எத்துறையிலாவது பதவி வகிப்பவர்கள் - தலைமை தாங்குபவர்கள் இந்த விமர்சனத்துக்கு ஆளாகவேண்டியது தவிர்க்க முடியாதது. மனித வளர்ச்சிக்கும் நலனுக்கும் இது அவசியமாகும். பொறுப்புக்களைச் சுமப்பவர்கள் தமக்குச் சாதகமானவர்கள், பாதகமானவர்கள் ஆகிய இரு திறத்தாருடையவும் விமர்சனத்தைக் கருத்துடன் கேட்டுத் தமது செயற்பாடுகளை நெறிப்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகும்.

''வாய் மூடு. நான் சொல்லுவதைக் கேள். சொன்னபடி செய். அடுத்த கதை வேண்டாம்...'' என்பது போன்ற கர்ச்சனைகள் அந்தக் காலத்தில் தந்தைக்குப் பின் மைந்தன் என்ற உரிமையில் வந்த இராசாக்களுடைய ஆளுகை முறை. இப்படி இன்று வெளியே பகிரங்கமாகக் கூறாவிடினும், அந்த முறையில் நடக்கிறவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். அல்லது விமர்சனங்களைக் கேட்பதாகப் பாசாங்கு பண்ணிக்கொண்டு தான்தோன்றித்தனமாக நடக்கிறார்கள். ஜனநாயம் என்று வெளியே சொல்லிக்கொண்டு சர்வாதிகாரம் பண்ணுகிறார்கள். அதனால் தான் பதவியில் உள்ளவர்கள் தம்மைப் பொறுத்துச் செய்யப்படும் விமர்சனங்களுக்கு இடமளித்து அவற்றைக் கேட்டு ஆராய்நது செயற்படவேண்டும் என்பதை நினைவுட்டுகிறோம். இதனைச் செய்யாதவிடத்து மனிதகுல வளர்ச்சி தடைப்படும்; அழிவுக்கு வழியாகும்.

விமர்சனம் ஒருவரைக் கண்டிப்பதற்காக அல்லது பிழையைப் பறைசாற்றுவதற்காகச் செய்யப்படுகிறது என்று, தப்பர்த்தம் பண்ணிக் கொள்ளுகிறார்கள் மிகப்பலர். விமர்சனம் தீமையைத் சுட்டிக் காட்டுவதற்காக மட்டுமல்லாமல் நன்மை, வளர்ச்சி, ஆக்கம் முதலியவற்றை நோக்கமாகக் கொண்டு செய்யப்படுகின்றது என்பதை விமர்சிப்பவர்களும் விமர்சனத்துக்கு உள்ளாகிறவர்களும் நம்பவேண்டும்.

சமூகத் தொடர்புச் சாதனங்கள் இன்று விண்வெளி விஞ்ஞானத்துடன் தொடர்புடைய மிகச் சிக்கலானதும் பெரும் பணச் செலவுக்குமுரிய விடயமாக வளர்ந்துள்ளமையாற் பொருளாதார பலம் உடையவர் களுக்கே சாதகமானவையாக இருக்கின்றன. அதனால், பொருள் வளம் படைத்தவர்களும் அதிகாரத்தில் உள்ளவர்களும் மாத்திரமே எம்போன்ற நாடுகளிற் சாதகமான முறையில் இவற்றைப் பயன்படுத்துகின்றனர். இந்த வாய்ப்பினை ஆட்சியதிகாரத் திலுள்ளோர் வேண்டிய அளவுக்கும் மேலாகவே பயன்படுத்தி மக்கள் கவனத்தை ஈர்க்கவும், கருத்தை உருப்படுத்தவம், அவர்களைத் திசைதிருப்பவும் நன்கு பயன்படுத்துகின்றனர். ஜனநாயகம், நீதி, உண்மை, முதலிய பண்புகளுக்கு மேற்கூறிய செயல், கேடு விளைவிக்கும் பாதகமான செயல் எனபதை விளக்க வேண்டியதில்லை.

அதிகாரத்தில் இருப்போர் சமூகத் தொடர்புச் சாதனங்களைத் தமக்குச் சாதகமாக மட்டும் பயன்படுத்துவதிலும் பார்க்க, தமக்குச் சாதக மற்ற முறையில் இயங்குபவற்றை அழித்துவிடுதல் பெரும் அநீதியாகும். யாழ்ப்பாணத்திலிருந்து சிலகாலம் வெளிவந்த "சற்றடே றிவியூ" (Saturday Review) என்ற ஆங்கில சஞ்சிகையைத் தடை செய்தமையும், இதற்கு வாய்ப்பூட்டும் போட்டு வைத்துள் ளமையும் இதற்கு நல்ல உதாரணமாகும். "நான் சொல்லுவதைக் கேள்; பேசுவதானால் எனக்குச் சாதகமாகப் பேசு; விமர்சனம் வேண்டாம்" என்பது அதன் பொருள்.

விமர்சனத்தை வெறுப்பதும், கபடமாக விளம்பர விமர்சனங்கள் செய்வதும் மக்களுக்குச் செய்யப்படும் துரோகம் என்பதில் ஐயமில்லை.

1.06.1984

****************

# எங்கள் பாதுகாவலன்

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் காரணமாக வெகுஜன தொடர்புச் சாதனங்கள் எவ்வளவுதான் பெருகி வளர்ந்துவிட்ட போதிலும், வாழ்க்கையின் எல்லா மட்டங்களிலுமுள்ள மக்களைப் பொறுத்தமட்டிற் பத்திரிகைகளின் செல்வாக்குக் குறைந்து விடவில்லை.

நாளேடுகள், வார சஞ்சிகைகள், மாத இதழ்கள் இன்னபிறவும் புதிது புதிதாகத் தோன்றிக்கொண்டும் வளர்ந்து கொண்டும் தானிருக்கின்றன. அரசியல், பொருளாதாரம், சமயம், கல்வி, கலை கலாசாரம், வியாபாரம் முதலிய பல்வேறு நோக்கங்களை அடிப்படையாக வைத்து இலாபத்திலும் நட்டத்திலும் பத்திரிகைகள் வெளிவருகின்றன. எந்த நோக்கத்தின் அடிப்படையில் ஒரு பத்திரிகை நடத்தப்பட்டாலும் மக்களுடைய தேவைகள் - இரசனைகள் முதலியவற்றைக் கருத்திற் கொண்டு நானாவித அம்சங்களையும் உள்ளடக்கியே அதனை மக்கள் கையிற் கொடுக்கிறார்கள்.

எங்கள் பாதுகாவலன இந்த நாட்டில் வெளியாகும் ஒரேயொரு கத்தோலிக்க தமிழ் வார ஏடு என்பது யாவருமறிந்ததே. கிறிஸ்து சமயத்தை மக்கள் சரியான வகையில் வாழ்க்கை நெறியாகக் கொள்ளத் துணை செய்வது பாதுகாவலனின் அடிப்படை நோக் கங்களில் ஒன்று. ஆலயங்களிலும், இல்லங்களிலும், மற்றும் இடங்களிலும் நடைபெறும் வழிபாடுகள், வணக்கங்கள், வேதாகம விளக்கங்கள், சமய அறிவுரைகள் முதலியன எல்லாம் நமக்குக் கண்ணெனத் தகுந்தவையாயினும், தனியே அவை மட்டும்தான் மக்களின் மூச்சும் பேச்சும் என்று வாதிடுவது பரிசேயத்தனம். இறைவனால் ஆன்ம-சரீரத்துடன் படைக்கப்பட்ட மனிதன் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ வேண்டும். அவனுக்குரிய தேவைகள் - உரிமைகள்- மாண்புகள் சமத்துவமான முறையில் வழங்கப்படுதல் இன்றியமையாதது. உணவு, உடை, உறையுள் அத்தியவாசிய தேவைகளாயிருப்பது போல, சமய நெறிமுறை வாழ்க்கை தவிர்க் கப்பட முடியாதது போல, அரசியல், பொருளாதாரம், கலை, கலாச்சாரம், கல்வி, வேலைவாய்ப்பு முதலிய மனித மாண்பினுக் குரியன யாவும் ஒவ்வொரு மனிதனுக்கும் நீதியின் அடிப்படையிற் கிடைக்கப்பெற வேண்டும். இப்பொதுவான மானிட உரிமைக்கடுத்த விடயங்களிற் பௌத்தனென்றும், இந்துவென்றும், கிறிஸ்தவனென்றும் வேறுபாடு இல்லை; இருக்கமுடியாது.

கத்தோலிக்க ஏடான பாதுகாவலன தனியே சமய அறிவுரைகள், விளக்கங்கள் மட்டும்தாம் எழுத வேண்டும்; கோவில் திருவிழாக்கள், பக்திக் கூட்டங்களின் அறிக்கைகளைத்தாம் பிரசுரிக்கவேண்டும், மரண ஞாபகார்த்த விளம்பரங்களைப் போட்டு நிரப்பினாற் போதும் என்றபடியாகக் கருதுவது காலத்துக் கொவ்வாத கருத்து.

''எங்கள் பாதுகாவலனில் அரசியல் சம்பந்தமான கட்டுரைகள்-ஆசிரியத் தலையங்கங்கள் இப்போது எழுதுகிறார்கள், சினிமாப்பட விமர்சனங்கள் போடுகிறார்கள், அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படுதலைத் தட்டிக்கேட்டுக் கதை கவிதைகள் வெளியிடுகிறார்கள், வரவர வேத விடயங்களைக் குறைக்கிறார்கள், இ∴து என்ன அக்கிரமம்!'' என்று சிலர் சிந்திக்கிறார்கள்.

108 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த பாதுகாவலன் அரசியல், பொருளாதாரம், கலை-கலாசாரம், தேர்தல் தகிடுதத்தங்கள், கல்விக் கொள்கைகளிற் குளறுபடிகள் செய்தல் முதலியன பற்றி மக்கள் நலன்களுக்கும் சமய உரிமைகளுக்கும் அடுத்த நோக்கில் நேரிடையாகவும் குறிப்பாகவும் சொல்லிக் காட்டாமல் விடமுடியுமா? காலத்தின் கோலத்துக்குத் தக்கவாறு எழுகின்ற விடயங்கள் பற்றி எடுத்துரைத்து மக்கள் பத்திரிகையாக விளங்குவது பாதுகாவலனின கடமை என்பது மறுக்க முடியாதது.

சமயமும் அதன் படிப்பினைகளும் நமது வாழ்க்கைக்குரியன. பாடசாலையிற் படித்ததோடு பரீட்சைக்கு எழுதியதோடு சமயக் கொள்கைகளைக் கைவிட்டு, வெறும் உலக வாழ்க்கை வாழுவது தவறு. ''சமயத்தையும் அதனோடிணைந்த அனைத்தையும் கோவிலோடேயே வைத்துக் கொள்ளுங்கள்; எங்களை எங்கள்போக்கில் வாழவிடுங்கள்'' என்று எண்ணுகிறவர்களுக்கும், "பாதுகாவலனில் சமய சம்பந்தமான விடயங்களைமட்டும் எழுதுங்கள்" என்று கூறுகிறவர்களுக்கும் அதிக வேறுபாடு இல்லை. சமயக் கொள்கைகளின் அடிப்படையில் இவ்வுலகில் நல்ல உரிமைவாழ்வு வாழ்வதற்கு மற்ற விடயங்களைப் பற்றிய அறிவும் தெளிவான சிந்தனையும் அவசியம். எனவே, கிறிஸ்தவ வாழ்விற்குப் பரந்த அளவில், தேவை கண்டு கோவிலும் பாதுகாவலனும வழிகாட்டுவது அவசியம்.

13.08.1982

******************

# சமூகத் தொடர்புச் சாதனங்களும் நாமும்

சமூகத்தொடர்புச் சாதனங்கள் இன்று சமுதாயத்திற் பெற்றுள்ள ஆட்சியினை விளக்கவேண்டியதில்லை. காலையில் எழுந்தவுடன் வானொலியிற் செய்தி கேட்காவிட்டால் எதனையோ இழந்துவிட்டது மாதிரியான தவிப்பு; தினசரிப்பத்திரிகை படிக்காவிட்டாற் பெரிய பசி உணர்ச்சி; புதிதாக வந்துள்ள சினிமாவைப் பார்த்துவிட வேண்டுமே யென்று துடிப்பு. தெருவோரத்திற் கூட்டம் போட்டுநின்று மற்றவன் வீட்டு யன்னலுக்கூடாகவேனும் தொலைக்காட்சியைப் பார்த்துக் களிக்கும் ஆவல்.

படித்தவனும் பாமரனும், ஆணும் பெண்ணும், வளர்ந்தவர்களும் குழந்தைகளும் இந்தத் தொடர்புச் சாதனங்கள் மூலம் நல்லதையும் கெட்டததையும் உள்வாங்கிச் சீரணித்துக் கொள்ளுகிறார்கள். எவ்வளவோ நேரத்தையும் பணத்தையும் இதற்காகச் செலவிட இன்றைய சமுதாயம் பின்னிற்பதில்லை. உள்நாட்டுச் சரக்குகளுடன் வெளிநாட்டுச் சரக்குகளும் இன்றைய மனிதனுடைய ஆர்வத்துக்கும் ருசிக்கும் ஏற்ப நன்கு பதப்படுத்திய பண்டங்களாகச் சந்தையிலே கடை பரப்பப்பட்டுள்ளன. சட்டவிரோதமான இறக்குமதிகள்கூடக் கொள்ளை விலைபோகின்றன.

இந்தச் சமூகத் தொடர்புச்சாதனங்களால் நன்மைக்கு மேலாக நச்சு விதைகளே பெருமளவு விதைக்கப்பட்டுத் தீமையும் ஒழுக்கக் கேடுகளுமே அறுவடை செய்யப்படுகின்றனவென நம்மவர் பலர் ஏக்கப்படுகின்றனர்; என்ன செய்யலாமென்று தவிக்கின்றனர். கண்ணாலும் காதாலும் இன்றைய சமுதாயம் அள்ளிப்பருகிக் கருத்திலே பதித்துக்கொள்ளும் விடயங்கள் பல அறநெறிக்கு அப்பாற்பட்டனவாக இருக்கின்றனவேயென்று அங்கலாய்க்கின்றனர்.

தவிப்பும் அங்கலாய்ப்பும் மாத்திரமே காரியம் சாதித்ததாகிவிடா. கூட்டம் போட்டுப் பேசினோம், குழுக்களை நியமித்தோம் என்ற அளவோடு இன்னும் காலந் தாழ்த்திக் கொண்டிருப்பது அறிவுடைமையுமன்று; கடமையின் முடிவுமன்று. மாற்று வழிகளைக் கண்டு செயலில் இறங்குவதற்கு எவ்வளவோ காலந்தாழ்த்தி விட்டோம்.

இக்காலத்தவரின் இரசனைக்கும் தேவைக்கும் ஏற்றவாறு பத்திரிகைகளைப் பயனுள்ள வகையில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் அவசியம். மன்னார், மட்டக்களப்பு மறை மாவட்டங்களோடும் புதிய ஒழுங்குகளைச் செய்து கொண்டு, அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்றவாறு பத்திரிகைகளின் அம்சங்களையும் பக்கங்களையும் விஸ்தரிப்பதனால் வாசகர்களின் தொகையையும் பயனையும் பெருக்கிக் கொள்ளலாம்.

பேச்சு, உரையாடல், சங்கீதம், நாடகம் முதலியவற்றை இக்காலத்து உத்திகளுடனும் தராதரத்துடனும் வானொலி மூலம் தினமும் ஒலிபரப்ப என்ன முயற்சிகள் கையாளப்பட்டுள்ளன? இலங்கையில் மிகச் சிறுபான்மையினர்கூட விடாமுயற்சியுடன் குரலெழுப்பித் தினமும் எவ்வளவு நேரத்தை வானொலியில் தமக்கெனச் சுவீகரித்துக் கொண்டுள்ளார்களென நாமறிவோம்.

இலங்கையில் தொலைக்காட்சி மிகச் சமீபத்தில்தான் அறிமுகம் செய்யப்பட்டதெனினும், தமிழ்நாட்டிலும் அதற்கப்பாலும் உள்ளவர்கள் கூட ரூபவாஹினி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு ஆர்வம் காட்டுகிறார்களென்று எங்களுக்குத் தெரியுமா? நாமும் ஆரம்பத்திலிருந்தே ரூபாவாஹினியில் எங்களுக்குள்ள பங்கைச் செலுத்தி, தீமையைத்தடுத்து, நன்மையைச் செய்வதற்கு என்ன முயற்சிகள் செய்கிறோம்?

இந்தக் காலத்திலே மேடைநாடகங்கள் எத்தனை தூரம் முன்னேற்றம் கண்டுள்ளன என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? சினிமாவுடன் போட்டி போடுமளவுக்கு மக்கள் இரசனைக்கேற்றவாறு நடிப்பும் மற்றும் உத்திகளும் நமது இளைஞர்களினாற் செய்யப்படுகின்றன. இதனை நற்செய்தியறிவிப்புக்கும் சன்மார்க்கத்துக்குமாக நாம் சாதகமாக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டுமே.

சக்திபடைத்த சமூகத் தொடர்புச் சாதனங்களின் உபயோகம் என்ற துறையிலே நம்மிடம் என்னென்ன துறைகளிலே பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள்? இதன் அபிவிருத்திக்கான நிலையங்களும் உபகரணங்களும் நம்மிடம் போதியளவு உண்டா? சமூகத் தொடர்புச் சாதனங்களின் அபிவிருத்திக்கும் உபயோகத்துக்கும் செலவிடப்படும் பணம் நற்செய்தி அறிவிப்புக்குச் செலவிடப்படும் பணம் என்பது உறுதி.

21.05.1982

**********

# அழிவுக்கா? ஆக்கத்துக்கா?

இந்த ஆண்டு சமுகத் தொடர்புச் சாதனங்களின் ஆண்டாக ஐ.நா. சபையினாற் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வாழ்ந்து கொண்டிருக்கும் மானிட சமுதாயத்துக்கும், வரப்போகும் மக்கள் சமுதாயத்துக்கும் ஆக்கமளிக்கக் கூடிய வகையிற் சமுகத்தொடர்புச் சாதனங்களை எவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும் எனவும், அவற்றை என்னென்ன வழிகளில் உபயோகித்து எமது பிற்சந்ததியினரிடம் மனநிறைவுடன் ஒப்படைக்கலாம் எனவும், நாம் ஒவ்வொருவரும் எமது மட்டத்திற் சிந்தித்துச் செயற்படத் தூண்டுவதே மேற்படி பிரகடனத்தின் நோக்கமாகும்.

சமுகத்தொடர்புச் சாதனங்களில், உலகம் முழுவதும் இன்று மக்கள் மீது தம் ஆதிக்கத்தை மிக வேரூன்ற ஸ்தாபித்துக் கொண்டவை பத்திரிகை, சினிமா, வானொலி, தொலைக்காட்சி என்பனவையாகும். நன்னீர் பெற்று நலமுடன் வாழவெனக் "கிணறு வெட்டப்பூதம் புறப்பட்ட" கதையாக, மக்கள் சமுதாயத்தின் உபயோகத்துக்கும், பலதுறைப்பட்ட முன்னேற்றத்துக்குமெனக் கண்டறியப்பட்டு வளர்க்கப்பட்ட இச்சாதனங்கள், மக்கள் சமுதாயத்தின் உடல், உள, ஆன்மீக நலன்களுக்குப் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்துவனவாக மாற்றப்பட்டு வருவதைக் காண்கிறோம்.

மனிதனின் கீழ்த்தர இச்சைகளைக் கிளறிவிட்டு, சிற்றின்ப அனுபவங்களுக்கு விருந்திட்டு, பொழுது போக்கு என்னும் பெயரால் பழிபாவங்களைக் கற்பித்து, மானிட சமுதாயத்தைப் பாழடிப்பதால், பணம் சம்பாதிக்கும் தந்திர வித்தைக்காரருடைய மாயத்தை உணராமற் பெரியவர்களும் சிறியவர்களும் சீரழிவதைக் காணு கிறோம்.

இன்று தமது நாட்டில், அயலில், ஏன் வீட்டுக்குள்ளேயே வானொலியும் தொலைக்காட்சியும் செலுத்தும் ஆட்சி தெளிவாக எழுத்தில் வடிக்க முடியாதவை. அதிகாலை தொடக்கம் ஏறக்குறைய நடுநிசி வரை வானொலியில் ஒலிபரப்பப்படும் சினிமாப் பாடல்களில் பெரும்பாலானவையும், ஏனைய நிகழ்ச்சிகளிற் சிலவும் தந்தை - தாய் - பிள்ளைகள் உடனிருந்து கேட்டு அனுபவிக்கக் கூடியவை தாமா? என்பதை விளக்க வேண்டியதில்லை. மாலையானதும் தொலைக்காட்சியை முடுக்கிவிட்டால் இரவு நேரம் கழித்து

நித்திரைக்குப் போகும்வரை, அவசியமானவையும் மிகுந்த நலன் விளைவிப்பவையுமான மற்றெல்லாக் கருமங்களும் ஒதுக்கிவிடப் படுவதை யாவருமறிவர். இவற்றுக்கு அப்பால் நமது ஊர்களிலும் அயல்-சுற்று வட்டாரங்களிலும் வீடியோக் காட்சிகள் மலிந்து விட்டன. ஒரே தொடர்பாகவே இரண்டு, மூன்று சினிமாப் படங்களை இலவசமாக அல்லது குறைந்த கட்டணத்தில் காண்பிக்கிறார்கள். இளைஞர்களும் சின்னஞ் சிறுசுகளும்கூடப் பாடசாலைக்குப் போதல், பாடாயத்தங்கள் செய்தல், பரீட்சைக்குத் தயார் செய்தல், செபித்தல் முதலியவைகளையும், ஊண் உறக்கத்தையுமே மறந்து அந்த இடங்களிற் கூடிக்காலங் கழிக்கிறார்கள்.

இவற்றினால் ஏற்படும் உடன் கெடுதிகளும், குறுகிய கால - நீண்ட எதிர்காலப் பாதிப்புக்களும் சொல்லிலடங்காதவை: அவை அவரவர் அனுபவங்களையும் தேவைகளையும் பொறுத்தவையாகும்.

வானொலியைத் திறந்தால், வயதுவந்த பிள்ளைகளின் முன்னிலை யிற் பெற்றோர் நிற்கமுடியாத அளவுக்கு வரம்புகடந்த சொற்பிரயோ கங்களும், சங்கேத ஒலிக்குறிப்புக்களும் கொண்ட ''பாடல்''கள் என்ற பெயரில் வருணனைகள் முழங்குகின்றன. சின்னஞ்சிறிய பாலர்களுடைய வாயிலே பாலோடுகூட இந்தப் ''பாடல்''கள்தாம் வழிகின்றன. பிள்ளைகளுடைய படிப்பு, ஒழுக்கம், குடும்பப் பண்பு, பழக்கவழங்கங்கள், இறைவழிபாடுகள், உடல் - உள வளர்ச்சிகள் யாவும் நாள்தோறும், மேலும் மேலும் கெடுக்கப்படுவது கட்டுப்பாடு கடந்த விடயமாய்விட்டது. அந்தக் காலத்திலே விடிய விடிய ''நாட்டுக்கூத்துப் பார்த்துவிட்டு, அடுத்த சில நாள்களுக்குக் கண்ணும் காதும் உடலும் களைத்து, தொழிலும் படிப்பும் கெட்டு நம்மவர்கள் நிற்பார்கள் என்று கூறுவார்கள். இந்தக் காலத்திலே விடிய விடியத் தொடராக மூன்று சினிமாப் படங்களைத் தொலைக்காட்சியில் வாரந்தோறும் பார்த்துவிட்டு, கண்கெட்டு நிற்கும் பிள்ளைகள் படித்து உருப்படப் போகிறார்களா? என்று அங்கலாய்க்கும் பெற்றோர் களுடைய கண்ணறாவி பெரிது! வருடம் முழுவதும் படிப்பைக் கெடுத்துக்கொண்டு சினிமாக் கொட்டகைகளிலும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன்னாலும் காலம் போக்கிய மாணவன் வருட இறுதியில் பரீட்சைக்குத் தோற்றினால், வரப்போகும் பரீட்சை முடிபு எதுவாக இருக்கமுடியும்?

மாலைவேளைகளிலே தினந்தோறும் வானொலி, தொலைக்காட்சி என்பவற்றிற் காலம் போக்கும் குடும்பத்தினர் பலர் குடும்பச் செபவழிபாடு செய்வதைப் பற்றி அக்கறை கொள்ளுவதில்லை. குறிப்பாக, சனிக்கிழமை இரவு முழுவதும் தொடர் தொலைக்காட்சிப் படங்கள் பார்க்கும் பேர்வழிகள் ஞாயிறு பூசை காண்பார்களா? என்பது ஐயத்துக்கிடமான விடயமே.

எனவே, சமூகத்தொடர்புச் சாதனங்கள் நம் சமூகத்தை அழிக்கும் நச்சுக் கருவிகளாகப் போய் விடாமல் நமது விவேகம், பண்பாடு நல்லறிவு என்பவற்றை முன்வைத்து, அவற்றை நன்மைக்கு உபயோகித்து, நம்மையும் நமது பிள்ளைகளையும் அழிவிலிருந்து காப்போமாக.

7.10.1983

**********

## உண்மைதானா ?

உலகின் தொடர்புச் சாதனங்கள் தினம் சிலவாரங்களுக்கு முன்னர் நினைவுகூரப்பட்டது. மக்களினது முன்னேற்றத்துக்கும் சுபீட்சத்துக்கும் தொடர்புச்சாதனங்கள் எப்படியெல்லாம் உபயோகிக்கப்பட்டு வருகின்றன, எதிர்காலத்தில் எப்படி, எப்படியெல்லாம் அவை உபயோகிக்கப்பட வேண்டும் என்று அதே தொடர்புச் சாதனங்கள் மூலமாகவே முழக்கமிடப்பட்டது.

மானிட வாழ்வில் அனைத்துத் தேவைகளுக்கும் இந்தத் தொடர்புச் சாதனங்கள் இன்றியமையாதனவையாக இன்று விளங்குகின்றன என்பதை விபரிக்க வேண்டியதில்லை. குறிப்பாக, பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்பவற்றின் மூலமாக அரசாங்கமும் தனியார் நிறுவனங்களும் பொது ஸ்தாபனங்களும் மக்களுக்கு எத்தனையோ விடயங்களைத் தெரிவித்து வருகிறார்கள். உலகளாவிய முறையிலும் உள்நாட்டிலும் இத்தொடர்புச் சாதனங்கள் மூலம் மக்களுக்கு உண்மையான செய்திகள் தான் தெரிவிக்கப் படுகின்றனவா? என்பதுதான் மிக முக்கியமான கேள்வியாகும். அரசாங்கமும், அரசியற் கட்சிகளும், நிறுவனங்கள்-ஸ்தாபனங்களும், தனியாரும்கூடப் போட்டிபோட்டுக்கொண்டு தத்தமது நலன்களுக்கு எது உகந்தது? என்று காண்கிறார்களோ அதனையே மக்களுக்கு அறிவிக்கிறார்கள். தமக்குப் பாதகமானவற்றை மிகத் தந்திரமாகப் பொதுமக்களுக்கு மறைத்து விடுகிறார்கள்; அல்லது மாற்றித் திரித்து வெளியிடுகிறார்கள். உண்மைக்கு முழுதும் மாறான செய்திகளையும் தகவல்களையுமே திட்டமிட்டு வெளியிடுவதன் மூலம் பொதுமக்களை வஞ்சித்துத் திசை திருப்பிவிடுகிறார்கள். மிக நாசூக்கான சொற்பிரயோகங்களின் மூலம் உண்மையை ஒழித்து மாற்றித் திரித்துப் பொதுமக்களுக்குத் தருவதில் தங்கள் ஆற்றல் முழுவதையுமே செலவிட்டு வெற்றி காண்பதில் கருத்தாக இருக்கிறார்கள்.

தங்களது நலன்களையும் தங்களைச் சார்ந்தவர்களது நலன்களையும் பேணிக் கொள்வதற்காக, அல்லது ஆட்சி அதிகாரத்திலுள்ள தமது எசமானர்களது நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொள்வதன் மூலம் கொள்ளை இலாபமடித்து முன்னேறுவதற்காக பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி எனப்படும் தொடர்புச் சாதனங்கள் மூலம் பொதுமக்களை ஏமாற்றி வருபவர்கள் இக் காலத்தில் மிகவும் மலிந்து விட்டமையைக் கண்டு நீதி, சமாதானம் விரும்பும் நல்லோர் மலைத்து நிற்கிறார்கள். கட்டுக்கடங்காத பெருவெள்ளமாக இந்த ஏமாற்று வித்தை பெருகிவிட்டமையைக் கண்டு இந்தப் பொய்ம்மைகளைத் தடுத்து நிறுத்த வகையறியாது நல்லவர்கள் கலைப்படுகிறார்கள்.

திரும்பத் திரும்பப் பல முறையும் தொடர்புச் சாதனங்கள் மூலம் உண்மைக்கு மாறான செய்திகள் வெளியிடப்படும்போது, பெரும் பாலான பொதுமக்கள் பொய்யையே உண்மையென்று நம்பி, தவறான வழிகளிற் சிந்தித்துச் செயலாற்றத் தொடங்கி விடுகிறார்கள். இதனால், நாட்டிலும் உலகத்திலும் எத்தனையோ தப்பபிப்பிராயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்விதமான உண்மைக்கு மாறான செய்திகளை மக்கள் நம்பிச் செயற்படுகையில் ஈடுசெய்ய முடியாத அழிவுகளும், அறிவு-பண்பாடு-கலாசார நாசங்களும் உண்டாகின்றன. பொய்யான செய்திகள் இன-மத-மொழி-பிரதேச அடிப்படையில் திட்டமிட்டுப் பரப்பப்படும் போது மேற்கூறிய அழிவுகளும் இழப்புக்களும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் போய்விடுவது அனுபவத்தில் நாம் கண்டுவரும் விடயங்களே.

இலங்கையில் ஏதோ ஓரிடத்தில் நேற்று, முதல் நாள் நடைபெற்ற ஒரு சம்பவத்தை இன்றைய தினசரிப் பத்திரிகைகள் சிலவற்றை வாங்கி வாசித்துப் பார்த்தால் ஆசிரியர்களும் தத்தம் விருப்பு-வெறுப்புக்களுக்கும் அபிலாசைகளுக்கும் ஏற்பவும், தாம் சேவகம் செய்யும் எசமானர்களின் நலன்களுக்கு வாய்ப்பாகவும் வெவ்வேறு நிறக் கண்ணாடிகள் கொண்டு வெவ்வேறு கோணங்களிலிருந்து பார்த்து எழுதியிருப்பதைக் காணலாம். ஆனால், நூறுவீதமான உண்மையோ ஒன்றிலும் காணப்படாதிருப்பதும் உண்டு. இங்ஙனம் உண்மையை ஒளிப்பதும் திரிப்பதும் மாற்றுவதும் இன்று ஒரு கலையாகிவிட்டது என்று கூறலாம்.

...பத்திரிகை வானொலி தொலைக்காட்சி என்பன இன்று மக்கள் வாழ்விற் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளன. மக்கள் எல்லோருமே இந்தத் தொடர்புச் சாதனங்களின் உண்மை-பொய்மையை

உய்த்துணரக் கூடியவர்களல்லர். அதனால் தொலைத் தொடர்புச் சாதனங்கள் இன்று மக்கள் வாழ்வில் நன்மை எதுவும் செய்யாமல் தீமையை விளைவிக்கும் சாதனங்களாக முற்றுமுழுதாக மாறிவிடக் கூடாது என்பதே எமது கருத்தாகும். தொடர்புச் சாதனங்கள் மூலம் உண்மையை அறியும் உரிமை மக்களுக்கு உண்டு; அதனை அவர்களுக்கு மறுப்பது துரோகச் செயல் என்று கூறுவது பொருந்தும்.

17.06.1983

***********

## சமூகத்தொடர்புச் சாதனங்கள்

ஐ.நா. சபையினால் வருடாவருடம் பிரகடனப்படுத்தப்படும் 'சமூகத்தொடர்புச் சாதனங்கள் தினம்' இவ்வருடம் நாளைநின்று (15-05-1983) ஞாயிறு தினம் வருகிறது. இன்றைய உலகிலே சமூகத்தொடர்புச் சாதனங்களுக்குள்ள வல்லமையும் தேவையும் செல்வாக்கும் வேறெதற்குமே இல்லையென்று சொல்லக்கூடிய அளவுக்கு அவை இன்றியமைவனவாயுள்ளன.

அந்தக் காலத்திலே ஓலையிலும், சீலையிலும் எழுதித் தூதுவர்கள் மூலம் கொடுத்தனுப்பிச் செய்துகொண்ட செய்திப் பரிவர்த்தனைகள் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளினால் இன்று கணப்பொழுதில் உலகின் மூலைமுடுக்குகளிலெல்லாம் உள்ள கோடானுகோடி மக்கள் கண்டும் கேட்டும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில், மக்கள் சமூகத்தின் தொலைதொடர்புச் சாதனங்கள் வகையிலும் தொகையிலும் பெருகியுள்ளதை யாவருமறிவர். தொலைத் தொடர்புச் சாதனங்கள் மூலம் செய்திப் பரிவர்த்தனைகள் செய்து கொள்வதற்காகவும், கல்வி - கலை - கலாசாரம் - விஞ்ஞான - அரசியல்- பொருளாதார நோக்கங்களுக்காகவும், அரசாங் கங்களாலும் நிறுவனங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் செலவு செய்யப்படும் பணம் கணக்கிலடங்கா. இத்தனை முயற்சிகளும் ஏனென்று கேட்பின் கிடைக்கக்கூடிய பதில் என்னவெனில் "மக்களுக்குச் சுடச்சுட உண்மையை அறிவிப்பதற்காக" என்பதாகும்.

உண்மையானதும் நீதியானதும் சரியானதும் மக்கள் சமுதாயத் திற்கு நன்மை பயப்பதுமான செய்தி அறிவிக்கப்படுவதற்காகவே இந்த தொடர்புச் சாதனங்கள் உபயோகிக்கப்பட வேண்டும்.

பிறநாடுகளிலும் நம்நாட்டிலும் தனிப்பட்ட முறையிலும் பொது அளவுகளிலும் இந்தத் தொடர்புச் சாதனங்கள் நூறு வீதமான உண்மையைத்தான் மக்களுக்கு வழங்குகின்றனவா? என்பதற்குரிய விடை அனைவர்க்கும் தெரியும். தத்தமது நலன் களுக்கு ஏற்றவாறு எல்லா மட்டங்களிலும் உண்மைகள் பொது மக்களுக்கு மறைக்கப்படுவதும் திரித்துரைக்கப்படுவதும் கெட்டித்தனம் எனவும் இராஜதந்திரம் எனவும் வர்ணிக்கப்படுகின்றன. நாட்டின் அதி உயர் சட்டமன்றமாகிய பாரளுமன்றத்துக்குள்ளேயே உண்மைகளை எடுத்துரைத்துப் பேசவும், பொறுமையோடு உண்மையைக் கேட்டறியவும் மனப்பான்மையும் விருப்பமும் அற்றவர்களாகத் தமது நலன்களைப் பாதிக்கக்கூடியவை என்ற வகையான செய்திகளைக் கூச்சலிட்டு மழுப்பியடித்து, வசைபாடி, திரைமறைப்புச் செய்பவர்கள் சமூகத் தொடர்புச் சாதனங்கள் மூலம் மக்களுக்கு அப்பட்டமான உண்மைகளைத் துணிவுடன் தெரிவிப்பார்களென்று எதிர்பார்ப்பது எப்படி? பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்பவற்றுக்குச் செய்திகளைத் திரட்டியனுப்பும் நிருபர்கள் மட்டத்திலேயே விருப்பு-வெறுப்பு காரணமாகவும் உண்மைகள் உருமாற்றப்படுவதை உலகறியும். நடந்தது ஒன்றாயிருக்க, பத்திரிகை வானொலி முதலியன வேறொன்றாக மாற்றித் திரித்துச் செய்தி வெளியிடுவதை உண்மையறிந்த நேர்மை யாளர் கண்டு மனங்கலங்கிய சந்தர்ப்பங்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உதாரணங்கள் பல உண்டு.

அச்செழுத்திலே வாசித்ததை, வானொலியில் கேட்டதை அப்படியே வேதவாக்காக நம்பிக்கொள்ளும் அப்பாவி மக்கள் இன்றும் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். மக்களுடைய இந்தப் பலவீனத்தை நன்கறிந்த பிரசாரகர்கள் தமக்கு வாய்ப்பான முறையில் உண்மைகளைத் திரிப்பதை - மறைப்பதை ஒரு வித்தையாகவே கையாண்டு வருகிறார்கள். பெரிய பொறுப்பான பதவிகளிலே இருப்பவர்கள் கூடத் திரித்துரைக்கப்பட்ட செய்திகளை ஆதாரமாக வைத்து எத்துணை பெரிய தப்பபிப்பிராயங்களுக்கும் எதிர்காலத் தீயவிளைவுகளுக்கும் காரணமான நடவடிக்கைகளிலீடுபட்டு வருகிறார்களெனக் காணும் போது பாதிக்கப்பட்டவர்கள் நெருப்பிற் புழுவாகத் துடிக்கிறார்கள். காலங்காலமாக உண்மைக்கும் உறவுக்கும் ஒற்றுமைக்கும் உரைகற்களாக விளங்கிவந்த சமூகங்களும் அமைப்புக்களும்கூட, இத்தொலைத் தொடர்புச் சாதனங்கள் செய்துவிட்ட புரளியினால் இன்று உலகம் பார்த்து வியப்படையும் முறையில், அல்லது நகையாடும் விதத்தில் அபிப் பிராய பேதங்கொண்டு பிளவுபட்டுள்ளனவென்று பலரறிவர். சம்பந்தப்பட்ட புரளியைப்பற்றி எடுத்துக் காட்டினாலும்கூட அவர்கள்

தாம் கொண்டதே கோலமெனப் பிடிவாதமாக நடந்து கொண்டு வருதல் இந்தத் தொடர்புச்சாதனங்களின் தூய்மையை எத்துணை தூரம் பாதிக்குமென்பதை விளக்க வேண்டியதில்லை.

**13.05.1983**

*****************

## "சிறிய எம் சகோதரர்"

நிகழும் ஆண்டு "உலக ஊனமுற்றோர் ஆண்டு" என ஐந்து வருடங்களுக்கு முன்னரே ஐ.நா. சபை தீர்மானித்திருந்தது. எமது நாடும் இதனை வரவேற்று ஆதரித்தது.

ஊனமுற்றோர் நல்வாழ்வு மானிட சமுதாயத்தினது தவிர்க்கவும் பின்போடவும் முடியாத பிரச்சினை என்பதை உலக மக்கள் உணர்ந்து செயலாற்றத் தூண்டப்பட வேண்டும் என்பதற்காக இப்பிரகடனம் செய்யப்பட்டதென்பது தெளிபு.

ஊனமுற்றோர் ஊனமற்றவர்களின் கேலிக்குரியவர்களல்லர். மாறாக அவர்கள் அனுதாபத்துக்கும் அன்புக்கும் ஒத்தாசைக்குமுரியவர்கள் என்று கருதிய காலமும் மறைந்து விட்டது. ஊனமுற்றோர் மற்றவர்களது நன்கொடையை அல்லது பிச்சையை எதிர்பார்த்து வாழும் பரிதாபத்துக்குரிய மனிதப் பிறவிகளல்லர். கூன் குருடு நொண்டிக்கு இரங்கி உதவிசெய்வது புண்ணியம் அல்லது இறைவனுக்கு உவப்பான செயல் என்று கருதுவதுகூட முழுதும் சரியன்று என்று நாம் உணரவேண்டிய காலம் வந்துள்ளது.

உலக ஊனமுற்றோர் ஆண்டின் மையக்கருத்து: சமத்துவ உணர்வினையும் முழுப் பங்கினை ஏற்றுக்கொள்ளுதலையும் வலியுறுத்துவதாகும்.

ஊனமுற்றோர் சமுதாயத்தில் ஏனையவருடன் சமத்துவமாக இணைந்து வாழ உதவும் வழிகளைக் காணுதல், நாடளாவிய அல்லது அகில உலக ரீதியில் அவர்களுக்கு வேண்டிய கல்வி-தொழிற் பயிற்சிகளும் தொழில் வாய்ப்புக்களும் கிடைக்க ஆவன செய்தல், ஊனமுறுவதைத் தடுப்பதற்கு வேண்டிய பாதுகாப்புக்கள் தேடுதல், ஊனமுற்றோர் சமத்துவ நல்வாழ்வு பற்றிச் சமுதாயத்தில்

விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல் முதலியன மேற்சொல்லிய மையக் கருத்துச் செயலுருவம் பெற வகுக்கப்பட்ட குறிக்கோள்களாகும்.

இவ்வாண்டு ஊனமுற்றோர் ஆண்டாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள மையால், அவர்களுக்கு அவசியமான பொருளாதார-சமூகப்பாது காப்புக்கும், சட்டரீதியிற் பெறக்கூடிய உரிமைகளுக்கும் வாய்ப்புக்கள் உண்டுபண்ண அரிய சந்தர்ப்பமாகும்.

இவ்வாண்டின் பாதிக்காலம் ஓடி மறையப் போகிறது. நாடறிய மக்களறிய ...ஊனமுற்றோர் நலவுரிமைகள், பாதுகாப்பு, சமத்துவம், பொருளாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு முதலியனபற்றி என்ன முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன? என்பது கேள்வி. அரசும், சமூக அமைப்புக்கள், நிறுவனங்களும், தனிப்பட்டவர்களும் என்ன செய்துள்ளார்கள்?

அன்னை திரேசா ஊனமுற்றோரைக் கண்டதும் கடவுளின் செல்வங்களைக் கண்டதுபோல அரவணைக்கிறார்; அன்பு முத்திரை இடுகிறார் என்று படித்து வியப்பதோடு நம் பங்கு முடிந்து போகுமா!

மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தெய்வீகச் சாயல் உண்டு; விலையில்லாத மாண்பு உண்டு. இந்த உணர்வால் மக்கள் மனம் மாற வேண்டும்; ஊனமுற்றோர்பாற் கொண்டுள்ள கருத்திலும் அணுகுமுறைகளிலும் மாற்றம் ஏற்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, "சின்னஞ் சிறிய என் சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றைச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்ற யேசுவின் பொன்மொழிகள் எமக்கு ஒளியும் வழியும் காட்டவேண்டும்.

5.06.1981

***********

# அகதிகள் புனர்வாழ்வு

அண்மையில் இடம்பெற்ற பயங்கரமான வன்செயற் சம்பவங்களினால் உயிர்ச்சேதம் பொருட்சேதங்களுக்குள்ளாகி, வீடுவாசல்-தொழில் வாய்ப்புக்களை இழந்து, அரைகுறை ஆடைகளுடன் புகலிடம்தேடி, குண்டர்களின் கண்களுக்குத் தப்பி மறைந்து, அகதிகள் முகாம் களை நோக்கி ஓடி அடைக்கலம் புகுந்த நம் சகோதர சகோதரி களை எண்ணும்போது கண்ணீர் வடிகின்றது.

நிரம்பிய வசதிகளுடனும் குறைந்த வசதிகளுடனும் நாட்டின் நாலாபக்கங்களிலும் வாழ்ந்த இவர்கள், மேற்கூறிய அவல நிலைமைகளினால் 'அகதிகள்' என்ற பெயருக்குள்ளாகி உயர்வு-தாழ்வு போய்ச் சமத்துவ நிலை அடைந்தார்கள். அகதிகள் முகாம்களிலே ஏறக்குறைய இரண்டு வாரங்கள் இலவச உணவு முதலியவற்றைக் கையேந்தி வாங்கும் நிலைமைக்கு உள்ளா கினார்கள். பின்னர், அவர்களிற் பெரும்பாலானோர் சரக்கு ஏற்றும் கப்பல்களிலும், பஸ் புகைவண்டி முதலியவற்றிலும் ஏற்றப்பட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அவர்கள் விரும்பிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

இந்த 'அகதிகள்' புனர்வாழ்வுக்காக இந்தியா முதலிய பல நாடுகளும் உள்ளூர் ஸ்தாபனங்களும் தனியார்களும் உணவு, உடை, கூடாரம், மருந்து முதலாம் பல பொருள்களையும் பணத் தையும் வாரி வழங்கி உதவினார்கள். இந்த உபகரிப்புக்கள் எல்லாம் என்ன முறையில் அகதிகளுக்குப் பங்கீடு செய்யப்பட்டன என்பது கேள்விக்குரிய விடயம். காட்டுமிராண்டித்தனமான வன்செயல்களுக் குள்ளாகித் தன் மானம் முதலாக அனைத்தையும் இழந்து நிர்க்கதி யானவர்களுக்கென்று தரும சிந்தனையுடையவர்கள் கொடுத்த உதவிகள், எடுத்து வழங்கும் அதிகாரம் படைத்தவர்களினாலும், பின்னாலுள்ள "குட்டித் தேவதை"களினாலும் இலக்கு மாறி உப யோகிக்கப்பட்ட சம்பவங்கள் பலவிதம். சொல்லொணா அவதி களுக்குள்ளாகி இடம்பெயர்ந்த அகதிகளிலும் பார்க்க, அதிக அனு தாபமும் முக்கியத்துவமும் தொழிற்சாலைகள் சேதமுற்றமையால்

'தொழில் இழந்தவர்க'ளுக்குக் கொடுக்கப்பட்டது. நமது அனுப் வத்துக்கும் கற்பனைக்கும் அப்பாற்பட்ட வகையிற் பன்மடங்கு அழிவுகளுக்குள்ளானவர்களிலும் பார்க்க, மிகக் குறைந்த பாதிப்பு அடைந்தவர்களுக்கு அதிக துன்பம் நேர்ந்து விட்டதாகக் கற்பனை செய்து ஆதரவு வழங்கப்பட்டது. வெளியூர்களிலே அகதிகளுக்கு வழங்கப்பட்ட உடை பார்சல்களிற் பேராசை கொண்டவர்கள் 'கைவைத்து' இருந்தார்களென மக்கள் பேசிக்கொள்கிறார்கள். அகதிகளுக்கென அனுப்பப்படும் உணவுப்பொருள்கள், பால்மா முதலியன உண்மையான அகதிகளுக்குத் தவறாது சரிவரக் கிடைக்குமாறு போதிய விளம்பரம் செய்யப்படுவதில்லை என்றும் குறை கூறுகிறார்கள். அகதிகளாக வந்து, உறவினர் நண்பர்கள் இல்லங்களில் தங்கியிருப்போரிற் பலர் நிரந்தரமாக ஓரிடத்தில் தங்கியிருப்பார்களென எதிர்பார்க்க முடியாது. அதனால், போதிய விளம்பரம் செய்து, நீண்ட நாள்கள் அவகாசத்தில் உதவிப் பொருள்களை வழங்குதல் பயனளிக்கும்.

அரசு அலுவலகங்கள், கூட்டுத்தாபனங்கள், தனியார் துறைகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், சொந்த வியாபார ஸ்தலங்கள், முதலியவற்றிலிருந்து அகதிகளாக வெளியேறியவர்கள், திரும்பவும் உரிய இடங்களுக்கு அழைக்கப்படும் போது மிகுந்த மனிதாபி மானமும் பரிவிரக்கமும் ஆதரவும் காண்பிக்கப்படுதல் அவசியம். உணவு, உடை, இருப்பிடம், பொருளாதாரம், தன்மானம் என்பன மிகவும் இழந்த நிலையில் அவர்கள் இருக்கிறார்கள், அல்லது பழைய இடத்துக்கு வருகிறார்கள் என்பதை அதிகாரிகளும் சகஊழியர்களும் மற்றவர்களும் இனியாவது எண்ணிப்பார்க்க வேண்டும். 'வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது' போன்று, சொல்-செயல்கள் இருப்பின் அவற்றைத் தாங்கும் பலம் அந்த அப்பாவிகளிடம் இருக்காது என்பதை மனித உள்ளம் கொண்டவர்கள் உணர வேண்டும்.

சுருங்கக் கூறின் 'அகதிகள்' ஆக்கப்பட்டவர்களுக்குத் தற்காலிக, நிரந்தர புனர்வாழ்வு அளித்தலில் இன-மத-சாதி-பொருளாதார வேறு பாடுகள் தவிர்க்கப்பட்டு, மகோன்னதமான அறப்பணியாக அஃது ஆற்றப்படுதல் அவசியம். அவர்கள் தன்மானத்துடன் மீண்டும் தழைத் தோங்கி வாழ்வதற்கு ஒவ்வொருவரும் தம்மாலியன்றளவு உதவிபுரிய முன்வருதல் வேண்டும்.

சில ஆயிரக்கணக்கான காடையர்களும் குண்டர்களும் அக்கிர மங்கள் புரிந்த வேளையிற் பாதிப்புக்குள்ளான நம் சகோதர-சகோ

தரிகள் ஒவ்வொருவருக்கும் வேறு சிங்கள-முஸ்லிம் சகோதரர்கள் பலர் தங்கள் உயிரையும் மதியாத அளவிற்கூட ஆதரவும் பாது காப்பும் அளித்து மனிதாபிமானத்துடன் நடந்துள்ளார்கள். அவர் களுக்கு எம் இதயபூர்வமான நன்றி. அவர்களாலே தான் மழை பெய்கிறது எனலாம்.

**23.09.1983**

**********

# நோயாளர்

மனிதனுக்கு நோய் அவன் உடலில் ஓர் அம்சம்; ஒவ்வொரு வனுக்கும் ஏதோ ஒரு நோய் இருந்து கொண்டே இருக்கும். அந்த விதத்தில் வைத்தியனும் ஒரு நோயாளியே; வைத்திய ஊழியரும் நோயாளிகளே.

ஆனால், எமது வைத்தியசாலைகளிற் சில இடங்களில் நோயாளிகள் பராமரிக்கப்படும் விதம் வேதனையைக் கொடுப்பதாகவே அமைகின்றது. நோயாளர் பணி என்பது மனித அபிமானத்துடனும் அன்புடனும் செய்யப்படவேண்டியதாகும்.

கிறிஸ்து பெருமானும் இதே பணியைச் செய்தார்; நோயாளர் களுக்குச் செய்யவேண்டிய தன் கடமையைச் செய்ய வேண்டிய நேரத்திற் செய்தார். அவரது பணிக்கு ஏழை, செல்வர் என்ற பேதமோ, உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற பாகுபாடோ இருக்கவில்லை. ஓய்வு நாள் போன்ற சமூகச்சட்டங்கள் தடைவிதிக்க முடியவில்லை. மனித உணர்வுகளை மதித்துத் தன் கடமையைச் செய்தார்.

வைத்தியர்கள், ஊழியர்கள் பெறும் ஊதியம் என்றால் என்ன? நோயாளிகளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகள் மற்றும் வசதிகள் என்றால் என்ன? ஏதோ ஒரு நாளில் நோயாளர்களாக விழப்போகும். பொதுமக்களிடம் இருந்து வசூலிக்கப்படும் வரிப்பணத்தில் இருந்தே கொடுக்கப்படுகின்றது என்பதை அனைவரும் உணரவேண்டும். எனவே, இலவசமாகக் கொடுக்கப்படுகின்றவை என்கின்ற எண்ணத்தோடு அல்லாமல், 'எங்கள் சொத்துக்கள் எங்களுடை யவை' என்கின்ற எண்ணத்தோடு அவை கையாளப்படல் வேண்டும்.

தனியார் வைத்தியசாலைகள் பல இருந்தும் அவற்றில் வைத்தியம் செய்து கொள்ள முடியாத வசதியற்றவர்களே அரசினர் வைத்திய சாலைகளை நாடி வருகின்றனர். அத்தகைய நோயாளர்கள் மட்டில் வைத்தியத்துறையிற் பணி புரிபவர்கள் காட்டும் அசட்டை உண்மை யிலேயே மனிதாபிமானமற்ற செய்கை என்றே கூறவேண்டும்.

சில வைத்தியசாலைகளில் அன்பான உபசரிப்பும் நிதானமான கவனிப்பும் பெறவேண்டுமாயின் சிற்றூழியர்களுக்கு ''கைக்குள் வைத்தல்'' எனும் கைங்கரியம் நடைபெற வேண்டிய பரிதாபத்தைக் காணக் கூடியதாகவுமுள்ளது.

அசட்டைகள், வேலை நிறுத்தங்கள் போன்றவற்றால் ஏற்படும் உயிர் இழப்புக்களுக்குக் காரணமானவர்களைக் கொலைகாரர்கள் என்று கூறுவது எவ்விதத்திலும் தவறாகாது.

இன்று சில வைத்தியசாலைகளில் உள்ள சிலபகுதிகளை, கழகங் கள்சில பொறுப்பெடுத்துச் சீர்செய்வதாகக் கண்டு மகிழ்வடையும் அதே வேளையில், அவர்களது அந்தப் பணியைப் பாராட்டுகின்றோம். அக்கழகங்கள் செய்யும் நற்பணியை ஏனைய கழகங்களும் செய்ய முன்வரல் வேண்டும்.

மற்றவர்கள் பார்த்துப் புகழ்வதற்காக வெளி அலங்காரங்களிற் செலவு செய்யப்படும் பணம் - நேரம், வைத்தியசாலைகளிற் செலவிடப்படுவது மிக அவசியமானதாகும். வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு வேண்டிய கட்டில்கள், போர்வைகள், மலசலகூட வசதிகள், மின்சார வசதிகளைச் செய்வதற்குக் கழகங்கள் முன்வரல் வேண்டும்.

முன்னர் சங்கைக்குரிய சகோதரிகள் எமது நாட்டில் ஆற்றிவந்த மனிதாபிமானம் மிக்க வைத்தியப் பணியை இன்றும் பலர் நினைவு கூருகின்றனர். அத்தகைய பணி இன்று இல்லாமற் போனதின் காரணத்தை எம்மவர் ஆராய்ந்து உணர்தல் வேண்டும்.

நோயாளர்களுக்குச் செய்யப்படும் பணி கிறிஸ்துவுக்கே செய்யும் பணியாகும் என்று அன்று அவர் சொன்னதை நாம் உணருதல் வேண்டும். உயரிய புனித பணியாம் நோயாளர் பணி சிறக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.

25.07.1980

************

# பனையை வளர்ப்போம்

''பனையை வளர்ப்போம் பயனைப் பெறுவோம்''; பனை ''கற்பகதரு'' என்பன போன்ற சுலோகங்களை நாம் அடிக்கடி கேட்கின்றோம்.

இந்தக் கோஷங்கள் ஒரு பக்கமிருப்பினும் மறுபக்கம் பனையை அழிக்கும் கைங்கரியமும் தினமும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. புள்ளி விபரங்களின்படி 70 இலட்சம் பனைகள் வடக்கில் இருக்கின் றன என்று கூறப்பட்டது. ஆனால், பனைகள் அழிக்கப்படும் வேகத்தைப் பார்த்தால் அத்தனை பனைகள் இருக்கின்றனவா என்பது வினாக்குறியே.

பனை நீண்ட காலப்பயிர்; எமது மூதாதையர் என்றோ வித்திட்ட அவற்றின் பயனை இன்று நாம் அனுபவிக்கின்றோம். ஆனால் நாம் பனையின் பயனை எமது சந்ததியினர் அடைய முடியாதபடி அழிவு வேலைகளில் ஈடுபடுகிறோம்.

நமது நாட்டில் சீனித்தட்டுப்பாடு ஏற்பட்ட காலத்தில் எமக்குக் கைகொடுத்து உதவியவை பனைகளே. இன்னும் எம்மவரிற் பலர் பனையை நம்பியே வாழ்கின்றனர். வேலையில்லாப் பிரச்சினை பூதாகரமாக உருவாகிவரும் இக்கால கட்டத்தில், பனைகளை நாம் தறிப்பது இன்றைய, எதிர்காலப் பொருளாதாரச் சிக்கலை மேலும் அதிகரிக்கும் செயலாகும்.

கடந்த சில வருடங்களாக நமது நாட்டில் ஏற்பட்டு வரும் வரட்சியின் காரணங்களில் உயர்ந்த மரக்காடுகள் அழிக்கப்படுவதும் ஒன்று என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். வடக்குப் பகுதியில் உயர்ந்து வளர்ந்து நீண்ட காலம் உயிர்வாழ்ந்து பயன் கொடுக்கும் பனைகளை நாம் இல்லாமற் செய்வது எவ்வளவு ஆபத்தான காரியம் என்பதை எம்மவர்கள் உணர வேண்டும்.

பெண்பனைகளைத் தறிப்பது குற்றம் என்ற சட்டம் நமது நாட்டில் இருந்த போதும் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? இந்தச் சட்ட நடவடிக்கையின் காவலர்கள் இதன் மட்டில் பாராமுகம் செய்வதால் இந்தப் பாதுகாவலர்களுக்குப் பயன் ஏதும் கிட்டுகின்றது என்பதினாலா?

எது எப்படியிருப்பினும் பனை நமது நாட்டின் கற்பகதரு. அடி தொடக்கம் நுனிவரை மனிதனுக்கும் பயன்பயக்கும் மரம். இதனைப் பாதுகாப்பதும்-வளர்ப்பதும் எமது முக்கிய கடமைகளில் ஒன்று என்பதை எம்மவர்கள் மனத்திற் கொள்ளல் வேண்டும்.

10.10.1980

**********

## பணியாளர் பெருக

...இந்த நாள்களில் இளைஞர்கள் - யுவதிகள் குருத்துவ - துறவற வாழ்வை என்ன கண்கொண்டு நோக்குகின்றனர்? அவர்களுடைய பெற்றோரின் மனப்பான்மை எப்படிப்பட்டது? பாடசாலைகள் 'அழைத்தல்' வாழ்வுக்கு ஊக்கம் கொடுக்கின்றனவா? குருக்களும் துறவிகளும் தம் சிந்தனை - சொல் - செயல்களால் இளம் உள்ளங்களைக் கவருகின்றனரா? ஆவியால் நிரப்பப்பட்டு 'பணி புரியவே வந்தேன்' எனக் கூறி உலக மாந்தர் அனைவர்க்காகவும் தம்மையே பலியாக்கிய கிறிஸ்துவின் வாழ்வு இன்று உண்மையிற் பிரதிபலிக்கின்றதா? பொய்யினாலும் அதிகாரத்தினாலும், அடக்கு முறையினாலும், ஏமாற்று வித்தைகளினாலும் அல்லற்பட்டு அழுது நிற்கும் எம்மவர்க்கு இவர்களின் பிரசன்னம் எடுத்துக்காட்டாகவும், நம்பிக்கையூட்டுவதாகவும் அமைந்துள்ளது என மக்கள் மனமாரக் கருதவேண்டும். உரிமையோடும் பொறுப்போடும் வாழுவதற்குத் தம்முயிரையே தியாகம் பண்ணத் துணிந்து நிற்கும் இளைஞர்கள் 'அழைத்தல்' வாழ்வுக்குக் கவரப்பட நமது செபம் - செயற்பாடு யாவும் உளத் தூய்மையுடன் இணைந்தவையாக அமைதல் அவசியம்.

11.05.1984

***************

# புதிய அழிவுப் பாதை

பேரழிவுகளை உண்டுபண்ணி மனித வர்க்கத்தையே அதன் சகல நாகரிகங்களோடும் அழித்துவிடக் கூடிய போர் ஆயுதங்களின் உற்பத்தி, பொருளாதார ஏற்றத் தாழ்வுச் சிக்கல்கள், மனிதரின் அடிப்படைத் தேவைகளில், நாட்டுக்கு நாடு காணப்படும் பற்றாக்குறைகள், நோய்களின் பெருக்கம் முதலியவற்றுக்குச் சமமாக, அல்லது சில சந்தர்ப்பங்களில் அவற்றுக்கும் மேலாக, இன்று உலகைச் சீரழித்து வருவது போதைவஸ்துக்களின் உபயோகம் எனலாம்.

மனிதனின் நல்வாழ்வுக்குரிய அனைத்தையும் சிதைத்து விடும் அளவுக்குத் தனி வாழ்விலும் பொது வாழ்விலும், சகல நாடுகளிலும் புற்றுநோய் போல் மறைவாகப் பெருகி அச்சுறுத்தி நிற்பது போதைவஸ்துக்களின் உற்பத்தி, வியாபாரம், உபயோகம் என்பனவாகும்.

கொள்ளைப் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் பயங்கர ஆயுதங்களை உற்பத்தி செய்து, நாட்டுக்கு நாடு மோதல்களை உண்டு பண்ணி, அவற்றுக்குப் போர்க்கருவிகளை விற்பனை பண்ணி வரும் 'குள்ளநரிகளை' மற்றொரு வழியிற் பின்பற்றுகிறார்கள் போதை வஸ்துக்களின் உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும்.

மனித மூளையை மயக்கி, நரம்புகளை முறுக்கி, உடலை உருக்குலைக்கும் போதை வஸ்துக்களை உற்பத்தி செய்து ஒரு சாரார் பணம் சம்பாதிக்கின்றனர்.

சட்ட விரோதமான முறையிற் போதைவஸ்துக்களை இடத்துக்கிடம், நாட்டுக்கு நாடு கடத்திக் கொண்டு போய், "சுண்டக்காய் காற்பணம், சுமைகூலி முக்காற்பணம்" என்ற ரீதியிற் கொள்ளையடிப்பவர்கள் மற்றொரு சாரார், கடத்தல்களுக்கு உதவிபுரிந்து இலஞ்சத்தினாற் கொழுப்பவர்கள் பிறிதொரு சாரார்.

எப்படியிருப்பினும் விதம் விதமான போதைப் பொருள்களை இளஞ் சந்ததியினருக்கும் சபல மனம் படைத்தோருக்கும் அறிமுகம் செய்கிறவர்கள் ஆதாம் ஏவாள் கதையின் பாங்கில் ஆரம்பத்தில் ...அன்பளிப்பாகவே வழங்குகின்றனர். ஏனென்றால், சில நாள்களின் பின்னர் போதை ருசியில் மயங்கியவர்கள், விற்பனையாளரைத்

தேடி வந்து பொன்னை வைத்து மண்டியிடுவர் என்பது அவர்கள் அநுபவத்திற் கண்ட விடயம்!

போதையின் கொடூரத்தால் வெட்கம், பயம், நீதியுணர்வு யாவற்றையும் தூர எறிந்து விட்டு, சூது, களவு, கொள்ளை, கற்பழிப்பு, சோரம்போதல் முதலாய அக்கிரமங்கள் செய்து முடிக்கப்படுகின்றன. இன்று எமது சூழலில் இவை நடப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இன்று, திடீரென வடபகுதியிற் 'கள்ளக் கடத்தல்' மூலம் இலகுவாகத் 'தூள்' கொண்டு வரப்பட்டு, ஊர்களிலும் கிராமங்களிலும் நகரிலும் மறைமுகமாகவும் வெளியரங்கமாகவும் விற்பனை செய்வதைப்பற்றி நாம் அதிர்ச்சியும் கவலையும் கொள்ளாமலிருக்க முடியாது. இது பணத்திற்கு அவதிப்படும் 'குழுக்களின்' பசியைத் தீர்ப்பதற்காகவோ, அன்றேல் தமிழரின் நியாயமான விடுதலை உணர்வை அழிக்க அரசினாற் பயன்படுத்தப்படும் உபாயமோ என்று அறியமுடியவில்லை. எவ்விதமாயிருப்பினும் அ∴து எம்மவரை அழிக்கும் 'பேய்' என்பதை உடனடியாக இனங்கண்டு அதன் விநியோகத்தையும் பாவனையையும் தடுப்பது அவசியம்.

பிற நாடுகளின் அனுபவங்களைப் பார்த்த பின்னும், போதைவஸ்தின் பாவனையை எம்மத்தியிலிருந்து ஆரம்பத்திலேயே பூண்டோடு கிள்ளி எறிய நேரிய நோக்குடைய சமூக, மத, அரசியல் அமைப்புக்கள் அக்கறை காட்ட மறுக்குமாயின், அவர்களது உள்ளார்ந்த நோக்கை நாம் இனம்கண்டு கொள்ளலாம்.

25.10.1985

***********

## வெளிநாடு செல்லும் வேகம்

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பது முதுமொழி. சோம்பலுக்கும், கோழைத்தனத்துக்கும் இடம் கொடாமல், நேர்மையான வழியிற் பெருமுயற்சி செய்து பொருள் தேடிப் பெருவாழ்வு வாழ்தல் வேண்டும் என்ற கொள்கையை மேற்படி முதுமொழி கற்பிக்கிறது. அன்றியும், கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று தமிழன் மண்ணும் பொன்னும் தேடினான் என்பதும் வரலாற்று உண்மையே.

இக்காலத்தில் நமது இளைஞர்களும், யுவதிகளும், கற்றறிந்த

பெரியவர்களும் கூட "வெளியே" போய்ப் பெரு நிதியம் தேடத் துடிக்கிறார்கள். "எல்லாரும் பொன்பூண என் மகளோ பார்த்திருப்பாள்" என்றபடி, 'அவன்-அவள் எல்லாம் வெளிநாடு போய் ஒரு சில வருடங்களுக்குள் என்னென்னவெல்லாம் கொண்டு வந்து குவித்துவிட்டார்கள்; நானும் போக வேண்டும்' என்று விருதுக்கு வேட்டையாடப் பல்லாயிரவர் முயற்சிக்கிறார்கள். பணவீக்கம், பொருள் விலையேற்றம், வாழ்க்கைச் செலவு சமாளிக்க முடியாத அளவுக்கு உயர்ந்து விட்டமை முதலிய காரணங்கள் சாதாரண உள்நாட்டு உழைப்போடு காலத்தைக் கடத்த முடியாத நிலைக்குப் போய்விட்டன வென்பது மறுக்க முடியாத உண்மையே. ஆயினும், வெளிநாட்டுக்குப் போயேயாக வேண்டும் என்ற வேகம் "வாய்த் தவிடும் போய் அடுப்பில் நெருப்பும் போன" கதையாகக் கூடாதே என்பதுதான் நமது கருத்தாகும்.

தாய் சகோதரிகள், மனைவி மக்களுடைய நகை நட்டுக்கள், குடியிருக்கும் நிலம் ஆகியவற்றை ஈடுவைத்து, அல்லது விற்று எத்தர்களின் கையிற் கொடுத்துவிட்டு ஏமாந்து நின்று கலங்குகிறவர்களை வீதிக்கு வீதி காணக்கூடியதாக இருப்பதுதான் பெரும் பரிதாப நிலையாகும். உண்மையும், நேர்மையுமுள்ள முகவர் நிலையங்கள் எத்தர்களான தரகர்களைப் போல அதிகம் கதைக்க மாட்டார்கள். "மந்திரத்தாலே மாங்காய் விழுத்துகிறோம்" என்று புழுக மாட்டார்கள். ஆசை அறிவைக் கெடுத்து விடுவதாற் படித்தவர்கள், அனுபவம் பெற்றவர்கள்கூட இந்த விடயத்திற் குழந்தைகளைப் போல ஏமாந்து கண்ணீர் விடுவதைப் பார்க்க வேதனையுண்டாகிறது.

ஆண்கள் மட்டுமல்லர், விவாகமான இளம் மனைவியரும், யுவதிகளும் கூட மத்திய கிழக்கு நாடுகள், சிங்கப்பூர் என்று விமானம் ஏறுகிறார்கள். கட்டுநாயக்காவில் இவர்களை விமானத்தில் ஏற்றிப் பறக்கவிட்டுப் பெருமூச்சோடு வீடு திரும்பும் பெற்றோர், கணவன் பிள்ளைகள் பணத்துக்காக நெஞ்சிலே நெருப்பைக் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். பணம் வராமற் பிணம் வந்த கதைகளைக் கேட்டு ஏக்கம் கொள்ளுகிறார்கள். பிறநாடுகளுக்குச் செல்லும் நமது பெண்கள் ஆன்ம-சரீர நலன்கள் பாதிக்கப்படாமற் பாதுகாப்புடன் அங்கு வாழப் போதிய அக்கறை செலுத்தப் படுகிறதா? என்பது கேள்விக்குரிய விடயமாக இருக்கிறது.

எனவே, பிறநாடுகளுக்குச் சென்று பொருள் தேடும் வேகம் முதலுக்கே மோசமாக முடிந்து விடாதபடி நாம் மிக மிக நிதானத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டியது இன்றியமையாத கடமையாகும். 11.12.1981

************

## 'ஹர்த்தால்'

கடையடைப்பு: அதாவது அரச நடவடிக்கைக்கு எதிரான வேலை நிறுத்தம் என்பது இன்று எம்மத்தியிற் பாலகரும் அறிந்த விடயம். ஏனென்றால், கடைகளையும் தொழிலகங்களையும் பாடசாலைகளையும் நாட்கணக்கில் மூடச்செய்தல், போக்குவரத்துக்குரிய வாகனங்களைத் தெருவுக்கு வரவிடாது தடுத்தல், அரச அல்லது வேறு அலுவலகங்களை இயங்கவிடாது முட்டுக்கட்டை போடுதல் முதலியன இந்த நாட்டிற், குறிப்பாகத் தமிழர் வாழும் பகுதிகளில், சிறப்பாக யாழ்ப்பாணத்தில் வாராவாரம் நடைபெறும் சம்பவங்களாகிவிட்டன.

"மாணவர்களே/மாணவிகளே பாடசாலையைப் பகிஷ்கரியுங்கள்" என்ற வேண்டுகோள் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் வாயில்களின் அருகே நிரந்தரமாக எழுத்திற் காணப்படும் கோரிக்கையாக இருக்கிறது. ...பாடசாலைகளைப் பகிஷ்கரிப்புச் செய்வது என்பது மாணவர்களுக்குக் கரைத்துக் குடித்த பாடமாகத் தெரிந்த விடயம். ஏனென்றால், "பாடசாலைக்குச் சென்ற நாள்களைவிட, பகிஷ்கரிப்புச் செய்த அல்லது பாடசாலைக்குப் போகாத நாள்களே அதிகம்" என்று மாணவர்களே கூறுகிறார்கள். பாடத்திட்டத்தின் பத்திலொரு பங்கும் படிக்கவில்லை, பருவப்பரீட்சைகள் நடைபெறவில்லை: வகுப்பேற்றங்கள் தராதரம் பார்க்காமல் நடைபெறுகின்றன. இந்த இலட்சணத்தில் O/L, A/L பகிரங்கப் பரீட்சைகளில் தமிழ் மாணவர்களின் பரீட்சை முடிவுகள் ஏலவே யாவருக்கும் தெரிந்ததாகத்தான் இருக்கமுடியும். சாதாரண பாடசாலைகள் மாத்திரமா? பல்கலைக்கழகங்களிலேயும் கல்வி முன்னேற்ற நிலைமை அதிக வேறுபாடாக இருக்க முடியாது.

'பாடசாலைக்குப் போய்ப் படித்துப் பரீட்சைகளிற் சித்தி பெறுவது என்பது, காற்சட்டை மேற்சட்டை போட்டு உத்தியோகம் பார்ப்பதற்குத்தான்' என்ற குறுகிய நோக்குடையவர்கள் தாம் 'இந்த நாட்டிலே படித்துக் கண்ட பயனென்ன?' என்று தூர நோக்கற்ற விரக்தி வேதாந்தம் பேசி, பிற்காலச் சந்ததியையும் கல்வியறிவு, ஒழுக்கம், கட்டுப்பாடற்ற காட்டுமிராண்டிக் கூட்டமாக வளர்த்தெடுக்க முனைவார்கள். வாராவாரம் பாடசாலையைப் பகிஷ்கரித்தல் என்பது மேலே குறிப்பிட்ட முடிவுக்கு வந்துவிட்ட 'கல்விமான்களின்' கைங்கரியமாகத்தான் இருக்க முடியும். மாணவர் பாடசாலையைப் பகிஷ்கரிக்கச் செய்தல் எப்படியென்பதும் மேற்கூறியவர்களுக்குப் பலமுறை செய்து பழகிய சிறுநேரச் சண்டித்தன வேலையென்பதும் யாவருமறிந்தது.

சாதாரண நாட்டு நடப்பின் வேகத்தை ஒரு நாள் ஸ்தம்பிக்கச் செய்தல், அதாவது 'ஹர்த்தால்' என்பது அறிவறிந்த மக்கள் வாழும் இடங்களிற், செய்யக்கூடிய நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொண்டு பார்த்தபின், 'இனி ஆகாது' என்ற கட்டத்தில், மிகக் கடைசியிற் கையாளப்படும் பவித்திரமானதும் பயங்கரமானதுமான ஆயுதமாகும். சோற்றுக்கு உப்புக் காணாது என்ற காரணத்துக்காகவும், 'பொலிடோல்' குடித்து உயிரை மாய்க்கும் 'வீரப் பரம்பரைகள்' போல, வாரந்தோறும் 'ஹர்த்தால்' என்பது மற்றவர்கள் நம்மைப் பார்த்து நையாண்டி பண்ணும்படியான தற்கொலை முயற்சியாகும். உழைப்பும் உற்பத்தியும் பெருக வேண்டும், ...வளங்கொழிக்கச் செய்ய வேண்டும், கல்வியில் மேம்பட வேண்டும் என்ற உயர் இலட்சியங்களைக் கைகழுவி விட்டு, "உயர் மட்டத்திலல்லாமல் அடிமட்டத்திற் சமத்துவம் காண" விழைபவர்கள், உழைக்கும் மக்களையும் படிக்கும் பிள்ளைகளையும் வாரந்தோறும் வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடக்கச் செய்வதனால் "பனையாலே விழுந்தவனை மாடேறி மிதித்த" நிலைக்குத் தள்ளுகிறார்கள்.

தினந்தோறும் இ.போ.ச. வண்டிகளை எரித்து 'வீர எதிர்ப்பு'த் தெரிவிக்கிறார்களாம்! பஸ் வண்டிகளும் ரயில் வண்டிகளும் வேறோர் இன மக்களுடையவையுமல்ல; நம்முடைய எதிரி களுடையவையுமல்ல. எங்கள் பங்குக்கு நாமும் பணம் போட்டு வாங்கிய பொதுச்சொத்துக்கள் அவை. விரைந்து இயங்கும் இன்றைய உலகத்திலே விரைந்து செல்லும் போக்குவரத்துச் சாதனங்களை எரித்து முடித்து விட்டு, எந்த வாகனத்திலேறி எதிர்காலச் சந்ததியினரை வாழவைக்கப்போகிறார்களோ! "இ.போ.ச. வண்டிகளை எரிக்கிறவர்கள் அரச எதிர்ப்பாளர்களென்று பொதுமக்கள் தப்புக் கணக்குப் போடுவது தவறு" என்று "விஷயமறிந்தவர்கள்" இடித்துக் கூறுகிறார்கள். இ.போ.ச. வண்டிகள் வீதியில் ஓடாவிட்டால் இலாபம் யாருக்கு என்று அவர்கள் கேட்கிறார்கள். பொதுமக்கள் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும்.

பார்க்க வேண்டிய அலுவல்களும் வழிமுறைகளும் வேறுபல இருக்கும் போது, "வாலைவிட்டுத் தும்பைப் பிடிக்கும்" அர்த்தமற்ற முயற்சிகளால் தமிழ் மக்கள் பல்லாண்டுகாலத்துக்குப் பின்தங்கிவிடப் போகிறார்கள்!

அரசு தொடக்கம் வேறெந்த ஸ்தாபனமும் இயக்கமும் பொதுமக்கள் ஆதரவையும் அபிமானத்தையும் இழந்துவிட்டாற் செல்லாக்காசாகி விடும் என்பதும், வெறும் ஆயுதபலம் கொஞ்சக் காலத்துக்குத்தான

பயன்தரும் என்பதும் வீரத்துடன் விவேகமும் உடையவர்கள் கண்டனுபவித்த வரலாற்று உண்மைகளாகும்.

2.09.1983

***********

# வாந்திபேதி

வாந்திபேதி நோய்க்குப் பலியானவர்கள் தொகை - !
இக்கொடிய நோயாற் பீடிக்கப்பட்டிருப்பவர்கள் தொகை - !
இந்நோய் பீடித்திருக்கும் கிராமங்களின் பெயர்கள்......!

இவை பத்திரிகைச் செய்திகளில் அடிக்கடி இடம் பெறுவதை இந்நாள்களில் காணக்கூடியதாகவிருக்கிறது. இந்நிலைக்குக் காரணிகள் எவை?

ஒரு வினாடி கூடச் சிந்திக்காமற் பதில் கூறி விடலாம்: 'சுகாதாரச் சீர்கேடுகள்தாம்' என்று. இன்னும் தெளிவாகச் சொல்லுவதானால், மக்கள் நியாயமாகப் பெறவேண்டிய அடிப்படைச் சுகாதார வசதிகள் தாமும் இல்லாத விடத்து இந்நோய்கள் பரவுவதில் ஆச்சரியப்பட இடமேயில்லை.

இந்நிலை கிராமப் புறங்களிலும், நகரப்புறங்களிலும் கூட மிகவும் மோசமான நிலையிற் காணப்படுகின்றது.

மலசல கூடங்கள் சீரானவையாகவும் போதுமான அளவுக்கும் இல்லாமை, துப்புரவு செய்யப்படாத சாக்கடை, வடிகால்கள், தண்ணீர்த் தேக்கங்கள், குப்பைகள் அகற்றப்படாமை, குடிநீர் சுத்திகரிக்கப்படாமை. நோய்க்கிருமிகளின் உற்பத்திக்களங்கள் இவையே என அறிந்தும், பிரச்சாரம் செய்தும், போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையே நோய்க் காரணிகளாக உள்ளன.

இலங்கை எங்கணும் இலவச சிகிச்சை அளிக்கப்படுகின்றது என்று பெருமை பாராட்டுகிறோம். ஆனால், அஃது எந்த அளவுக்கு நிறைவாகக் கொடுக்கப்படுகிறது? சாதாரண மக்களைப் போய்ச் சேருகின்றதா?

வைத்தியசாலையிற் போதிய இடமில்லை, தளபாடமில்லை, மருந்தில்லை; வைத்தியர்கள் பற்றாக்குறை, தாதிகள் ஊழியர்கள் இன்மை, எத்தனை பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது!

இன்னும் சில இடங்களில் வைத்திய அதிகாரிகள், தாதிகள் ஊழியரின் பொறுப்புணர்ச்சி அற்றதன்மையாலும் அசட்டையாலும் பல அபாயங்களுக்கு ஆளாக வேண்டியுள்ளது.

வேறு சில இடங்களில் வைத்தியர்களுக்கு ஆர்வமிருந்தும் அவர்கள் சிறந்த பணியாற்றுவதற்குப் போதிய வசதியின்மை நிலவுகின்றது. உதாரணமாக, யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையை எடுத்துக் கொண்டால், அங்கு பல சத்திர சிகிச்சை நிபுணர்கள் இருந்தும், பல அறைகள் இருந்தும், ஒரே ஓர் அறையில் மட்டுமே சத்திரசிகிச்சை செய்யக்கூடிய வசதி இருக்கின்றது. தேவையான உபகரணங்களும் பயிற்றப்பட்ட தாதிகளும் இல்லாமையால் இருக்கும் வசதிகளையே பயன்படுத்த முடியாத நிலையைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், வைத்தியசாலைகளில் உள்ள மலசல கூடங்களின் நிலையைப் பார்த்தால், வாந்திபேதி முதலிய நோய்கள் எப்படி இங்கு இன்னும் ஆரம்பிக்காமல் இருக்கின்றன? என்று ஆச்சரியப்படவேண்டியுள்ளது!

இத்தகைய பல அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்து கொடுக்கப்படாத நிலையில் நோய் வந்த பின்னர் ஒரு குறிப்பிட்ட இடத்தை நோய்ப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்துவதும், மக்களைத் தடுத்து வைப்பதும், அளவுக்கு மீறிய பணத்தையும் உழைப்பையும் அதற்காகச் செலவிடுவதிலும் அர்த்தமில்லையென்றே தோன்றுகின்றது.

இதிற் பொதுமக்களும் தமக்குள்ள பங்களிப்புக்களைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் தம்மைத் தாம் காக்க வேண்டும் என்ற ஆகக் குறைந்த உணர்வையாவது பெற்றுச் சுத்தத்தைப் பேணி, அரசு தன் பணியைச் செய்யத் துணை நிற்க வேண்டும்.

வைத்தியசாலைகளும், அதன் அதிகாரிகள் ஊழியர்களும் பொது மக்களுக்கு வேண்டிய தொண்டைச் செய்வதிற் கூடிய கவனமெடுக்க வேண்டிய அதே வேளையில், அரசாங்கமும் அவர்களுக்கும், பொதுமக்களுக்கும் உள்ள குறைகளை தொகுதி-இன-மொழி வேற்றுமையின்றித் தீர்த்துவைக்க முன்வரவேண்டும்.

**30.01.1981**

*************

# இலஞ்சமும் ஊழலும்

அரசு திணைக்களம் ஒன்றில் நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றும் ஒருவர் சில நாள்களின் முன் பேருந்து வண்டியிலே பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கையில், ''ஜனவரி பன்னிரண்டாந் திகதி கந்தோருக்குப் போனதன் பிறகு நாளைக்குத்தான் போக இருக்கிறன். அதுவும் விடிஞ்சு எழும்பினப்பிறகு இருக்கிற 'மூட்'டைப் பார்த்துச் செய்வம்'' என்று தமது நண்பருக்குத் தமாசாகச் சொல்லிச் சிரித்தார். ''அப்ப இந்த வருசத்து லீவெல்லாம் முடிந்திருக்குமே?'' நண்பர் கேட்டார். ''இல்லையில்லை. எங்கடை கந்தோரிலே நாங்கள் ஆளுக்கு ஆள் ஒற்றுமையாகச் சமாளித்துக் கொள்ளுவோம்'' என்று சொல்லித் தங்கள் அலுவலகத்து ஒற்றுமையின் பெருமையையும் அதற்குள் அளந்து காட்டினார் அதிகாரி.

கல்லைப்போட வேண்டிய இடத்திலே மண்ணைப்போட்டுத் தங்கள் வங்கிக் கணக்கிலே பணத்தைப்போடும் ஆட்கள்' என்று ஒருவர் வருணித்தார். அரசாங்க அல்லது அரசு சார்ந்த அலுவலகங்களிலும் நிறுவனங்கள் கூட்டுத்தாபனங்களிலும் "என்ன முறையிலாவது" வேலைக்குச் சேர்ந்து விட்டாற் போதும்; அதன் பிறகு கடமை செய்யத் தேவையில்லை என்ற மனப்பான்மைதான் பெரும்பான்மை யானவர்களிடம் ஒளிவு-மறைவு இன்றிக் காணப்படுகிறது. மாதாந்த வேதனமாகக் கிடைக்கும் பணம் அரசாங்கம் மாதாமாதம் தமக்குச் செலுத்தக் கடமைப்பட்ட 'கப்பம்' என்பதாகக் கருதிக் கொள்ளுகிறார்கள். பின்கதவு வழியாக உள்ளே வந்தவர்கள் பின்கதவு திறக்கப்படுவதற்குச் செய்த செலவை வசூல்பண்ணுவதாக மனச்சாட்சி பூர்வமாக எண்ணிக்கொண்டு, சம்பளமும் "கிம்பளமும்" வாங்க முனைகிறார்கள். எந்தத் திணைக்களம், எந்த அலுவலகம் என்று இந்த விடயத்தில் ஏற்றத்தாழ்வு காணப்படுவதில்லை. அவரவருக்குக் கிடைத்த வாய்ப்புக்களையும் வசதிகளையும் பொறுத்து, சிறிய அளவிலும், பெரிய அளவிலும் இலஞ்சமும் ஊழலும் நடைபெறுகின்றன: "விரலுக்குத்தக்க வீக்கம்".

படிப்பறிவில்லாதவர்கள், 'விஷயம் தெரியாதவர்கள்' அப்பாவிகள் என்ற வகையான மக்களிடம்தான் முன்னொரு காலத்தில் இந்த 'உத்தியோகத்தர்கள்' கோழிமுட்டை தொடக்கம் வாழைக்குலை யீறாகவும், ஐம்பது சதம் தொடக்கம் அலுவலுக்குத் தக்கமட்டும் 'சம்திங்' வாங்கினார்களாம். ஆனால், இப்போது 'அன்ரி, அங்கிள்' முறையானவர்களிடமும் வாங்குகிறார்கள். அதற்கு அவர்கள் ஆளுக்குத் தக்கமுறைகளை வைத்திருக்கிறார்கள். இவ்வளவு தர

வேண்டும் என்று பேரம்பேசிச் செய்யத்தக்கவர்களைவிட, வேண்டியவர் களிடமும்கூட இலஞ்சம்பெற வழிகள் வைத்திருக்கிறார்கள். அலுவலகத்திலுள்ள சக ஊழியர் வேறு ஒருவருக்கோ, அல்லது ஒருசிலருக்கோ கொடுக்க வேண்டும் என்று இடை ஆளாகத் தன்னை வைத்துக் கைநீட்டி வாங்குவது ஒரு முறை. பணம் கறக்க வேண்டியவர்கள் மிக நெருங்கிய நண்பர்களாக உறவினர்களாக இருந்துவிட்டால், சம்பந்தப்பட்ட ஊழியர் குறித்த அலுவலைத் தாம் எத்துணை சிரமப்பட்டு மூளையை விட்டு, கந்தோரில் உள்ள பெரியவர்களுக்குத் 'தலையைச்சுற்றி'ச் செய்து முடித்ததாக வேண்டியவர்களுக்குச் சில நாள்கள் விளங்கப்படுத்துவர். இரண்டொரு தினங்களின் பின்னால் மிக அவசர தேவைக்காக, ஒரு வாரத்துக்கும் குறைந்த தவணையிற் கடன்கேட்டு வருவார். உதவியைப் பெற்றவர் எப்படியும் கடன் கொடுத்தேயாக வேண்டும். அந்தக் கடனைக் கொடுத்தவர் கேட்கப்போவதுமில்லை. ஆயினும் நன்றிக்கடன் இருந்து கொண்டேயிருக்கும். பிறகு வேறு சமயங்களில் அவர் அவசரக் கடன் கேட்டு வந்தாலும் கொடுக்கவேண்டியிருக்கும். இப்படி எத்தனையோ முறைகள் உள.

நோய்க்கு மருந்து தேடிப்போகும் வைத்தியசாலை தொடக்கம், வெளிநாட்டுக்குத் திரவியம் தேடப்போகும் குடிவரவு-குடியகல்வுத் திணைக்களம் ஈறாக இந்த இலஞ்சப் பேயின் ஆட்சி நடைபெறுகிறதை யார்தான் அறியமாட்டார்கள். சிற்றூழியர் தொடக்கம் மேல்மட்டத்தில் உள்ளவர்கள்வரை 'உருசி கண்டவர்'களாக இருப்பதனால் படிவங்கள் பெறுதல் போன்ற சின்னஞ்சிறு அலுவல்களுக்குக்கூடப் பொதுமக்கள் அல்லற்படுகிறார்கள்.

இதனை எழுதுகையிற் கடமையுணர்ச்சியுடனும் கடவுள் பயத்துடனும் மனச்சான்றுக்குப் பங்கமில்லாமல் கண்ணியத்துடன் கருமமாற்றும் பன்னூற்றுக்கணக்கான அரச ஊழியர்களை எண்ணி மனம் வாழ்த்திக் கொண்டே இருக்கிறது; அவர்கள் பொருட்டுத்தான் மழைபெய்கிறது.

இலஞ்சத்துக்கும் ஊழலுக்கும் அரசு தக்கமுடிவுகாண வேண்டும். சட்டத்தினால் மட்டுமன்று; தக்கவர்களைத் தெரிந்து வேண்டிய பயிற்சியளித்துக் கண்காணிப்பதனாலும், குற்றவாளிகளை மிகக் கடுமையான முறையில் தண்டிப்பதனாலும் வேறு உபாயங்களினாலும் இது செய்யப்படவேண்டும்.

18.02.1983

**********

# கோவில் இன்றியே வழிபடுவோம்

இலங்கை ஆயுதப் படையினரும் அவர்களது துணைவர்களும் 'பயங்கரவாதி'களையும் அவர்களது இருப்பிடங்களையும் கண்டுபிடித்து அழிக்கும் 'புனித கைங்கரிய'த்தின் ஒரு கட்டமாக இப்போது கோவில்களை நிர்மூலம்பண்ணும் பணியில் இறங்கியுள்ளார்கள்.

கோவில் அருகில் உள்ள பிரசித்த வீதியிற் குண்டொன்று வெடித்ததைக் காரணமாக வைத்துக் கொண்டு, யாழ்ப்பாணம் புனித அடைக்கலநாயகி ஆலயத்தைப் பீரங்கிக் குண்டுகளினால் சிதைக்கத் துணிந்ததைத் தொடர்ந்து, இப்போது அவர்களுக்கும் அவர்களது பெரியவர்களுக்கும் குளிர்விட்டுப் போயிற்று. கடந்த இரண்டு வருடகாலமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மட்டும் எத்தனை ஆலயங்கள் கோவில்கள் மசூதிகள் அவர்களுடைய அநாசாரமான நடத்தைக்கும், தீவைப்பு முதலிய அழிப்பு வேலைகளுக்கும், சூறையாடலுக்கும் இலக்காகியுள்ளன வென்பதைப் பெரிய பட்டியல் போட்டுக் காட்ட வேண்டியதில்லை,

இப்போது பழம்பெருமை வாய்ந்த தொண்டைமனாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில் வக்கிர புத்திகொண்டு தொடர்ந்து சிதைக்கப்படுகிறது மட்டுமல்லாமல், பக்தர்களும் அண்டி வாழ்வோரும் கொலை செய்யப்படுகிறார்கள். ஆலய வளவிலும் வீதிகளிலுமிருந்து அழுகி நாறும் மனித உடல்களை அப்புறப்படுத்த முதலாய் அவர்கள் அனுமதிக்காமல் கொடுமை செய்கிறார்களென்றால் ஆயுதப் படைகளுடையவும் அவர்களைக் கொண்டு நடத்துகிறவர்களுடையவும் கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு எந்த நிலையில் உள்ளன என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

உலக மகாயுத்தங்கள் நடைபெற்றபோதுகூட மனிதக் குடியிருப்புக்கள், கோவில்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்ற பொது இடங்களை எதிரிப்படைகள் குறிவைத்துச் சேதமாக்கியது அபூர்வம்.

ஆயினும், அதர்மப் போர்கள் நடந்த விடத்துக் கொடுங்கோலர்களான மன்னர்களும், வெறிபிடித்த படைகளும் கோவில்களையும், புனிதத் தலங்களையும் நிர்மூலமாக்கிய சம்பங்களை உலக வரலாற்று

ஏடுகள் கூறுகின்றன. ஆனால், அத்தகைய அக்கிரமச் செயல்களை இந்நாள்வரை மனித சமுதாயம் சரியென்று ஏற்றுக்கொண்டது மில்லை; அவ்வித செயல்களைப் புரிந்தவர்கள் நிலையான வெற்றி-நன்மை அடைந்ததுமில்லை என்பதை உலகு கண்டுள்ளது.

''கோவில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்'' என்ற தமிழ்ப்பழமொழியை ஸ்ரீலங்கா அரசின் சிங்கள ஆட்சியாளரும் சிங்கள மக்களும் நன்கு புரிந்துள்ளனர். அதனால், வாரந்தோறும் கட்டி முடிக்கப்பட்டுப் பாவனைக்குக் கையளிக்கப்படும் மாதிரிக் கிராமங்களிலும் வேறு புதுப்புது இடங்களிலும் பௌத்த வழிபாட்டுத் தலங்கள் திறந்து வைக்கப்படுகின்றன. ஆனால், அப்பாவித் தமிழர்களையும் அவர்களுடைய வீடுகள்-குறிப்பாகக் கோவில்களையும் தீயிட்டுக் கொழுத்துகிறார்கள். கோடிக்கணக்கிற் பெறுமதியுள்ள சரித்திரப் பிரசித்தி வாய்ந்த கட்டடங்களும் கலைப்பொக்கிஷங்களும் சாம்பலாக்கப்பட்டு தமிழருடைய பூர்வநாகரிகத்தின் சின்னங்கள் இல்லாதொழிக்கப்படுகின்றன. அந்த வகையிலும்கூட நமது வருங்கால சந்ததியினர் வெறுவிலிகளாக்கப் படுகிறார்கள்.

வானளாவிய கோபுரங்களைக் கொண்ட கலைக்கோவில்களில் இறைவனை வழிபடும் அதே கண்ணோட்டத்துடன், குடிசைக் கொட்டிலிலும் கடவுளை வணங்கத் தமிழன் அறிவான். ஆகையினால் எதிரி நம் கோவில்களை அழிக்கிறான் என்பதற்காக இறைவழிபாட்டை நாம் கைநெகிழப் போவதில்லை.

25.04.1986

*****************

# பொதுச்சொத்து

புகையிரதம், பேருந்து முதலிய பொதுப் போக்குவரத்துச் சாதனங்களின் விபத்துக்கள் பற்றிய செய்திகள் இப்போது சர்வ சாதாரணமானவையாகிவிட்டன. பல மனித உயிர்களின் இழப்புக்கள் பற்றியும் அவற்றின் பாதிப்புப் பற்றியும் நினைத்துப் பார்ப்பவர்களே மிகவும் குறைந்துவிட்டனர். விபத்துக்களின் பின்னால் நடைபெறும் விசாரணைகளின் பிறகு முடிவுகள் இருட்டடிப்புச் செய்யப்படுவதும் சாதாரண சம்பங்கள். ஊழியர்களின் கவனக் குறைவால் அல்லது மதுபோதை, கோபம் முதலிய வெறியாட்டங்களினால் விபத்துக்கள் நேர்ந்து, மனித உயிர்களும் மில்லியன் கணக்கிற் பெறுமதியான பொதுச் சொத்துக்களும் சேதமடைந்தாலும் சம்பந்தப்பட்ட ஊழியர்கள்

ஊழியர்கள் தொடர்ந்தும் பதவியிலிருப்பது ஆச்சரியமான விடயம் அன்று. இலஞ்சம், உறவு, நட்பு, அரசியல் செல்வாக்கு முதலிய கவசங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக வேலை செய்யும் சக்திகள் என்பது நடைமுறையில் உள்ள விடயம். மேலும் பொதுப் பணத்தைச் செலவு செய்து இறந்தவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும். தலைவர்கள் குறிப்பிட்ட மரணச்சடங்குகளுக்குப் பொதுவாகனங்களிற் போய் அஞ்சலி செலுத்தி அரசியல் மதிப்பை மேலும் உயர்த்திக் கொள்ளுவார்கள். அதே பொதுப்பணத்தில் புதிய இயந்திரங்கள், வாகனங்கள், உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்படும். கடுமையான குற்றமிழைத்த ஊழியர்களுக்குப் பதவி உயர்வும் வழங்கப்படக்கூடும். இதனாற் குற்றங்கள் தொடர்ந்து செய்யப்படுவதற்கும் சட்டம் துணிவுடன் பகிரங்கமாக மீறப்படுவதற்கும் ஊக்கம் அளிக்கப்படுகிறது என்று கூறுவதில் தவறிருக்கமாட்டாது.

தெருவிளக்குகள் உடைக்கப்படுதல், பஸ்வண்டி ஆசனங்கள் கிழிக்கப்படுதல் போன்ற சிறு விடயங்களிலிருந்து, பெற்றோல் ஊற்றிப் பொது உடைமைகளும் தனியார் உடைமைகளும் கொழுத்தப் படுவது வரையிலான சட்டம் மீறும் சம்பவங்கள் தினசரிக் கதைகளாவதற்குரிய காரணங்கள் என்ன? இவற்றைத் தடுத்து நீதி, சமாதானம், சட்டவரம்பு மீறாது வாழுதல் முதலிய பண்புகளை நிலைநிறுத்துவது எப்படி?

வீடு, பாடசாலை, தொழிற்பயிற்சி நிலையங்கள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள் முதலாம் இடங்களிற் பருவத்துக்கு ஏற்றவாறு பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது பற்றிய மனப்பான்மை மக்களுக்கு ஊட்டப்படுகிறதா? சிறப்பாக பொலிஸ், இராணுவம் போன்ற சீருடை அணியும் வகுப்பினர்க்கு இஃது எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குழந்தையும் அறியும். பொதுப்பணம், பொதுச்சொத்து என்பன மக்களின் சொத்து, அதைப் பாதுகாப்பது மக்களுடையவும், சட்டக் காவலர்களுடையவும் தலை மேற் சுமந்த கடமை என்பதை நம்மவர்கள் புரிந்து செயற்படும் நாள் எந்நாளோ? 1958, 1971, 1977, 1981 ஆகிய இந்தக் குறிப்பிட்ட வருடங்களில் வன்செயல்களால் அழிக்கப்பட்ட தேசப் பொதுச் சொத்துக்களையும், மனித உயிர்களையும் ஈடுசெய்ய எவரால் முடியும்.?

**26.06.1981**

*****************

# காலம் மாறிப் போச்சு

போத்துக்கேயர் ஒல்லாந்தர் போய் மறைந்து, பிரிட்டிஷார் இந்த நாட்டின் ஆட்சியிலே நிலைகொண்டு விட்டபின்னர், அவர்களது நிர்வாக இயந்திரத்தை மலிவான முறையிலே ஓட்டுவதற்கு உள் ஊர் உதிரிப் பாகங்கள் ஆரம்பத்தில் தேவைப்பட்டன. அதாவது எழுதுவினைஞர் முதலிய சிறு அரச ஊழியர்கள் தேவைப்பட்டனர். அதற்காகவும் வேறு பல உட்காரணங்களுக்காகவும் ஆங்கில மொழியும், ஆங்கில மொழிமூலம் கல்வியும் போதிக்கப்பட்டன. பிற்காலத்தில் ஆங்கிலத்தை ஆழக்கற்ற நிர்வாக உத்தி யோகத்தர்களும் அறிவுப்பசியை ஆங்கில மொழி அறிவினால் தீர்க்க விழைந்த பெரியோர்களும் மற்றவர்களும் நம் மத்தியிலே தோன்றினர். எனினும், ஆரம்பத்தில் உண்டான தேவை ஆங்கில ஆட்சியாளருக்குத் தேவைப்பட்ட சிற்றூழியர் தேவைதான் என்பது யாவருமறிந்த பழைய கதை.

ஆங்கிலம் கற்று, அரை வெள்ளையனாய் உடையணிந்து அரசகரும பீடங்களிலே அமர்ந்து 'கவுண்மேந்து உத்தியோகம்' பார்ப்பது கௌரவத்தின் இலட்சணமாக விளங்கிய காலம் மலையேறிப் போயுங்கூட, நம்மவர் மத்தியிலிருந்து இன்னும் அந்த நப்பாசை போகவில்லையே!

1948இல் ஆங்கிலேயர் போய்விட்டனர். விரைவிலேயே சிங்களம் அரச கரும மொழியாய்விட்டது. அதனால் நமக்குண்டான அசம் பாவிதங்களும், அசௌகரியங்களும், அகௌரவங்களும் அனை வரும் அறிந்தவை. 1958, 1977ஆம் ஆண்டுச் சம்பங்களும், அனேகானேக அனுபவங்களும் நமக்கு ஏற்பட்டன. இருந்தும் 'சுடலை ஞானம்' அவ்வப்போது நம்மைவிட்டு விரைவிலேயே அகன்றுவிட, இன்றும் அந்த "ஆங்கிலேயர் கால" மனப்பான்மை யுடன் உத்தியோக வேட்டையாடுகிறோம்; பிள்ளைகள் தங்களுக்காகவும், பெற்றோர் பிள்ளைகளுக்காகவும் வேட்டையாடித்திரிகிறோம். இந்த வேட்டைக்குத்தான் எத்தனை உள்-வெளி ஓட்டங்கள்! இலங்கைத் "தேசிய தொழிற் பயிற்றுனர் சபை" காலத்துக்குக் காலம் 25 வயதுக்குக் குறைந்த ஓரளவு கற்ற இளைஞரிடமிருந்து பல்வேறு விதமான தொழிற் பயிற்சிகள் அளிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது. பிரசுரிக்கப்படும் தொழில்களிலே நூற்றுக்கு 5 வீதம்கூட எழுத்தாளர் தொழில் சம்பந்தப்பட்டவையல்ல. ஆயினும் நம்மவர்களில் 95 வீதமானவர் களும் விண்ணப்பிப்பது அந்த 5 வீதத்திற்கும் குறைந்த வெள்ளைச்

சட்டை வேலைகளுக்கேயென்பது பலமுறை நேரடி அனுபவத்தி திற் கண்டது.

எழுத்து வாசனையில்லாமலே பலவிதமான தொழில்களைக் கற்ற நம் சகோதரர் பலர் ஆயிரமாயிரமாகச் சம்பாதித்து அந்தஸ்துடன் வாழுவதைக் கண்ணாலே கண்டு கொண்டும், காற்சட்டைக்கு காணாத காசு சம்பளம் தரும் "கிளாக்கர்" வேலைகளுக்குத் தானே இன்றைக்கும நம் இளைஞர்கள் அலைகிறார்கள்!

கல்வி முறைகளும், நம் மனப்பாங்கும் காலத்துக்கேற்ற முறையில் உடனடியாகத் தீவிர மாற்றம் பெற வேண்டும். "உனக்கு உயர் கல்வி வாய்ப்பும் இல்லை; அரச உத்தியோகங்களும் இல்லை" என்று ஊதாத சங்கில் உரத்துச் சங்கநாதம் பண்ணுவது காதில் விழவில்லையா? தொழிற்கல்வி ஒன்றே இனி நமக்குச் சோறு போடும் என்பதை நாம் உணர்ந்து, நமது பிள்ளைகளை ஆரம்பத்தி லிருந்தே தொழில் ஆற்றலும் நல் மனப்பாங்குடைவர்களுமாகத் திசைதிருப்பிடுவோமாக.

**21.08.1981**

***************

# சர்வஜன வாக்குரிமைப் பொன்விழா

பத்திரிகைகளும் வானொலியும் தம்மால் முடிந்தவரை விளம்பரம் செய்கின்றன. செல்லுமிடமெல்லாம் அரசியற்றலைவர்கள் சொல்லிப் பெருமைப்பட்டு மகிழ்கின்றார்கள்.

அது போதாதென்று பிரித்தானிய அரசியார் எலிசபெத் மகாராணியார் கூட வருகைதந்து சிறப்பிக்கப் போகின்றாராம். இன்னும் பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளனவாம்.

இவை யாவும் எதற்காக?

எமது நாடு சர்வஜன வாக்குரிமையை அமுல் நடாத்திய 50-வது ஆண்டுப் பொன்விழாவைக் கொண்டாடும் முகமாக என்கிறார்கள். இப்படியொரு சம்பவம் பெருமைக்குரியதுதான். ஆனாலும், இதய சுத்தியடன் எண்ணிப் பார்க்கையில், நமது நாட்டுக்கு இவ்விழாவைக் கொண்டாடும் தகைமை இருக்கின்றதா?

நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பான தோட்டத் தொழிலாளாருக்கு 1947இல் இருந்த வாக்குரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக! இந்நாட்டில்வாழும் உரிமையே அற்றவர்களாக! இங்கு என்ன, எந்தநாட்டிலும் உரிமையுடன் வாழத் தகைமையற்றவர்களாக ஆக்கிவிட்ட எம் நாட்டில் இந்த விழா எடுப்பதிற் பொருளுண்டா?

எந்தப் பிரித்தானிய ஆட்சியின் கீழ் 150 வருடங்களுக்கு முன்னர் இங்கு அடிமைக் கூலிகளாக இந்திய மக்கள் கொண்டுவரப் பட்டார்களோ! அதே அடிமை நிலைமை அவர்கள் வெளியேறிய பின்னரும்கூட அந்த மக்களைஅழுத்தி அழித்துக் கொண்டிருக்கும் இந்த நிலையில்-அந்தமக்களை இந்நிலைக்குள் தள்ளிவிட்ட அரசியல் வாரிசான எலிசபேத் அரசியார் வருவதிற்றான் என்ன பெருமை இருக்கிறது?

விண்வெளிக் கப்பலின் வேகத்தில் இன்று நம் நாட்டு விலைவாசி ஏற்றம். பஞ்சமும் பசியும் நாடெங்கும் தலை விரித்தாடுகின்றது. பதுக்கல்காரர்களின் வேட்டைக்களமாக நாடு மாறி நாசமாகின்றது. இந்நிலையிலும் அமைச்சர்களின் சுற்றுலாக்கள்-அவர்களுக்கென்ற அலங்கார வளைவுகள். மின்வெட்டுக்காலத்திலும் மின்சார வண்ண விளக்குச் சோடினைகள் உக்கிய கட்டிடங்களின் உதிர்வுகளை மறைக்க, வெள்ளை, பச்சை வண்ணப் பூச்சுக்கள். இந்த நிலையிலும் இப்படி ஒரு விழாவை உலகு மெச்சக் கொண்டாட வேண்டியது அவசியம்தானா? எம்நாட்டுப் பொருளாதாரம் இதைத் தாங்குமா?

தொழிலாளர்கள் உரிமை கோரிப் போராட்டம் நடத்த உரிமையில்லா எமது நாட்டில், வேலை பறிக்கப்பட்ட 40,000 பேரில் ஒரு சிலருக்கு மட்டும் நிபந்தனையோடு வேலை வழங்கி விட்டு, ஏனைய தொழிலாளரைப் பழிவாங்கும் இந்நாட்டில் குடியுரிமைக்காகக் கொண்டாட்டங்கள் நடத்துவதில் என்ன அர்த்தம் உண்டு? வேலையிழந்தோர் பலர் வேதனை தாங்காது, வறுமையைச் சகிக்க இயலாது தற்கொலை செய்து கொண்டசோகக் கதைகளையும் கேள்விப்படுகின்றோம். இந்த அநீதிகளை நாங்களும் மனிதாபிமான முள்ளவர்கள் என்ற நிலையில் வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

எனவே, சர்வஜன வாக்குரிமையின் ஆண்டுப் பொன் விழாவைக் கொண்டாடும் இக்கால கட்டத்திலாவது மலையகத் தொழிலாளர்கள் சகல உரிமைகளையும் பெற்ற மக்களாகவும் - தாயகம் செல்வோர் செல்லுமிடத்திற் புனர் வாழ்வு பெற்று உயரவும் நமது நாட்டில்

நமது மக்கள் சகல உரிமைகளையும் பெற்ற மக்களாக வாழவும் எமது தலைவர்கள் ஆவன செய்வார்களா?

20.03.1981

***********

## ஊனமுற்ற சிறுவர் ஆண்டு

... சிறுவர்கள்மேல் எமக்குள்ள பெரும் அக்கறை இந்த விதத்தில் காட்டப்பட்டாலும், உண்மையிலேயே சிறுவர்களுக்குத் தேவையானவை கிடைக்கின்றது என்பது எந்த அளவுக்கு உண்மை?

எமது நாட்டைப் பொறுத்தவரையில் சிறுவர்களின் கல்வி ஊக்குவிப்புக்காக அரசு இலவசப் புத்தகங்களை வழங்கியிருப்பதால் ஏழைச் சிறுவர்களுக்குப் படிக்க வாய்ப்பு இருப்பதாகக் கூறலாம்? ஆனால் அச்சிறுவர்கள் மீதும், பெற்றோர் மேலும் சுமத்தப்பட்டுள்ள ஏனைய பழுக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இலவசப் புத்தக வசதியைப் பயனற்றதாகவே கொள்ள வேண்டியுள்ளது.

இன்று எழுத்துப் பயிற்சி புத்தகங்களின் விலை என்ன? ஒரு பாடத் துக்கு எத்தனை பயிற்சி ஏடுகள்? முன்பு தனியே 'சிலேட்'களுடன் சென்று படிக்கும் ஆரம்ப வகுப்பு பாலர்களுக்கே எத்தனை பயிற்சிக் கொப்பிகள், பென்சில்கள்? வாழ்க்கைச் செலவு கூடி பிள்ளைகளுக்கு நேர உணவையே கொடுக்கமுடியாது தவிக்கும் பெற்றோர்கள் இந்நிலையில் தம் பிள்ளைகளின் கல்விக்காக எவ்வளவுதூரம் செலவழிக்கமுடியும்? போதாக்குறைக்கு சில பாடசாலைகளில் படிப்புக்கு வேண்டிய அத்தியவசிய தேவைகளுக்கு அப்பால் தம் பெருமைகளையும், தனித்துவத்தையும் காண்பிக்கவென்று பிள்ளைகளிடம் சேகரிக்கப்படும் நிதிகள், கோரும் உதவிகள், விதிகள், சட்டங்கள்கூட பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவைக்கத் தயங்கும் மனோநிலையைப் பெற்றோரிடம் ஏற்படுத்துகின்றன. இந்நிலையில் பிள்ளைகள், வீட்டில் குழந் தைகளைப் பராமரிக்கவும், தோட்டங்கள் தொழில்களுக்குப் பெற் றோருடன் போகவேண்டிய நிலைமைக்கும் தள்ளப்படுகின்றனர்.

எனவே இதுவும், இதுபோன்ற வேறு சூழ்நிலைகளின் தாக்கங்களும் பிள்ளைகளைச் சுமையாகக் கருதும் நிலைமையை எம்மவரிடையே ஏற்படுத்திவருகின்றது. பிறந்த பிள்ளைகளை நிறைவான மன,

பொருளாதார நிலையில் பராமரிக்காமையும், பிறக்கவிருக்கும் பிள்ளைகளை ஆர்வமோடு வரவேற்காமையும், அவர்களைக் குறைபாடுள்ள பிள்ளைகளாக உலகிற்குக் கொண்டு வருகின்றன.

இன்னுமொரு பக்கம், அரசு மேற்கொண்டுள்ள செயற்கை முறைக் குடும்பக் கட்டுப்பாட்டு விதிகளை மக்கள் பின்பற்றத் தொடங்கியதன் விளைவு ...!

பிறக்கவிருக்கும் குழந்தையை வெறுப்போடு எதிர்பார்க்கும் பெற்றோர் மனப்பான்மையாலும், செய்யப்பட்ட செயற்கை முறைக் குடும்பக் கட்டுப்பாடு பூரண வெற்றியைத் தராமையாலும் ஏற்படும் தாக்கங்களால் பிறக்கும் குழந்தைகள் குறைபாடுள்ள குழந்தை களாகப் பிறக்கின்றன. எனவே பெற்றோர் தாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், பிற சூழ்நிலைத் தாக்கங்களாலும் ஊனமுற்ற பிள்ளைகளை உலகில் ஆக்கிக்கொண்டே இருக்கின்றனர்.

இந்நிலையில் இந்த ஆண்டின் குறிக்கோள் கிறிஸ்தவ உலகத்துக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது எனலாம்.

குறைபாடுள்ள குழந்தைகளை, தமக்குக் கிடைத்த சுமையென்றோ, தம் பாவத்தின் தண்டனைகளென்றோ விரக்தியோடு புறக்கணிக்காது, அவர்களும் உயிரும். உணர்வும் உள்ள மனிதப் பிறவிகள் என்ற எண்ணம் ஏற்படவேண்டும், அவர்களுக்கு, ஏனையோர்க்குக் கொடுக்கப்படும் சமத்துவமும், அன்பும் வழங்கப்படவேண்டும். அவர்களை ஏற்றுக்கொள்வதுடன் இதே மனப்பான்மைகளை எமது சிறுவர்களிடையேயும் ஏற்படுத்தவேண்டும். அதன்மூலம் 'சிறுவர் சிறுவருக்கு உதவுதல்' என்னும் திருப்பாலத்துவ சபையின் குறிக் கோள் நிறைவேறப் பெற்றோர், ஆசிரியர், யாவரும் தமது உத்துழைப்பை வழங்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் வளர்ந்த பின்னரும், பிறர் அனபும், கருணை உள்ளமும், அடுத்தவருக்கு உதவும் மனப்பான்மையுள்ள பூரண மனிதர் களாகவும் உருவாக்கப்படுவார்கள்.

13.02.1981

*********************





